சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க

# நூற்றாண்டு நிறைவு விழா

சிறப்பு மலர்

1865 - 1965



சமரச சுத்த சன்மார்க்க சங்கம் தொரப்பாடி, வேலூர்

35118

## உடனே சந்தாதார் ஆகுங்கள்

சன்மார்க்க உலகிற்கு உறுதுணையாக-சமரசம் பரவச்செய்யும் தூதுவனாக சத்திய நெறியை பரப்பிடும் பணியாளனாக [illegible]பாடு தழைக்க உதவும் ஆசானாக,

நூலகத்திற்கு அன்பளிப்பு
முனைவர் இ. சுந்தரமூர்த்தி
மேனாள் துணைவேந்தர்
16, பாரதி தெரு,
திருமலை நகர் இணைப்பு,
பெருங்குடி, சென்னை - 600 096.

நமது தெய்வத் தந்தையர்

திவருட் பிரகாச வள்ளலாரின்

அருள் நெறியினை அன்பு மார்க்கத்தை, அறவழியினை உலகிற்கு அளித்திடும் அருள் ஏடாக புலை கொலையை அழித்து மனிதர்களை புனிதர்களாக்கும் மாமருந்தாக

### மே மாதம் (1-5-66) முதல் வெளிவருகிறது

# சுத்த சன்மார்க்கம்

சன்மார்க்க மாத இதழ்

கௌரவ ஆசிரியர் : திருக்குறள் நம்பி ஊ. வ. தட்சணாமூர்த்தி

ஆசிரியர் : பால்வண்ணன்

DR. U.V. SAMINATHAIYER LIBRARY
Besant Nagar
Chennai-90

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. | 5—00 |
| தனிப்பிரதி | ரூ. | 0—50 |

சன்மார்க்க அன்பர்கள் உடனே சந்தாதாரராக சேர்ந்து சுத்த சன்மார்க்கம் வளர, பரவ உதவுங்கள்

விவரங்களுக்கு :

சுத்த சன்மார்க்கம்
எண் 1. வாலர்ஸ் ரோட் முதல்சந்து
மவுண்ட் ரோட், :: சென்னை-2

# சிற்சத்தி துதி

## கொடி வணக்கம்

சோதிக் கொடியே யானந்த சொருபக் கொடியே சோதியுருப்
பாதிக் கொடியே சோதிவலப் பாகக் கொடியே யெனையீன்ற
ஆதிக் கொடியே யுலகுகட்டியாளுங் கொடியே சன்மார்க்க
நீதிக் கொடியே சிவகாம நிமலக் கொடியே யருளுகவே.

பொருணற் கொடியே மாற்றுயர்ந்த பொன்லங் கொடியே போதாந்த
வருணக் கொடியே யெல்லாஞ் செய்வல்லாரிடஞ்சேர் மணிக் கொடியே
தருணக் கொடியே யென்றன்னைத் தாங்கியோங்குந் தனிக் கொடியே
கருணைக் கொடியே ஞானசிவகாமக் கொடியே யருளுகவே.

நீட்டுக் கொடியே சன்மார்க்க நீதிக் கொடியே சிவகீதப்
பாட்டுக் கொடியே யிறைவர் வலப் பாகக் கொடியே பரநாத
நாட்டுக் கொடியே யெனையீன்ற ஞானக் கொடியே யென்னுறவாங்
கூட்டுக் கொடியே சிவகாமக் கொடியே யடியேற் கருளுகவே.

மாலக் கொடியேன் குற்றமெலா மன்னித் தருளி மரணமெனுஞ்
சாலக் கொடியை யொடித்தெனக்குட் சார்ந்து விளங்குந் தவக் கொடியே
காலக் கருவைக் கடந்தொளிர்வான் கருவுங் கடந்து வயங்குகின்ற
கோலக் கொடியே சிவஞானக் கொடியே யடியேற்கருளுகவே.

நாடாக் கொடிய மனமடக்கி நல்ல மனத்தைக் கனிவித்துப்
பாடாப் பிழையைப் பொறுத்தெனக்கும் பதமீந்தாண்ட பதிக்கொடியே
தேடாக் கரும சித்தியெலாந் திகழத் தயவாற் றெரிவித்த
கோடாக் கொடியே சிவதருமக் கொடியே யடியேற்கருளுகவே.

மணங்கொள் கொடிப்பூ முதனன்குவகைப்பூ வடிவுள் வயங்குகின்ற
வணங்கொள் கொடியே யைம்பூவு மலிய மலர்ந்த வான்கொடியே
கணங்கொள் யோக சித்தி யெலாங் காட்டுங் கொடியே கலங்காத
குணங்கொள் கொடியே சிவபோகக் கொடியே யடியேற் கருளுகவே.

புலங்கொள் கொடிய மனம் போன போக்கிற் போகா தெனைமீட்டு
நலங்கொள் கருணைச் சன்மார்க்க நாட்டில்விடுத்த நற்கொடியே
வலங்கொண் ஞானசித்தி யெல்லாம் வயங்க விளங்கு மணிமன்றிற்
குலங்கொள் கொடியே மெய்ஞ்ஞானக் கொடியே யடியேற் கருளுகவே:

வெறிக்குஞ் சமயக் குழியில் விழ விரைந்தேன் ற்ன்னை விழாத வகை
மறிக்கு மொரு பேரறிவளித்த வள்ள்ற் கொடியே மனக்கொடியைச்
செறிக்கும் பெரிய ருளத்தோங்குத் தெய்வக் கொடியே சிவஞானக்
குறிக்குங் கொடியே யானந்தக் கொடியே யடியேற் கருளுகவே

கடுத்த விடர்வன் பயங்கவலை யெல்லாந் தவிர்த்துக் கருத்துள்ளே
யடுத்த கொடியே யருளமுத மளித்தென்றனைமெய் யருட்கரத்தால்
எடுத்த கொடியே சித்தியெலா ।மிந்தாமகனே யென்றெனக்கே
கொடுத்த கொடியே யானந்தக் கொடியே யடியேற் கருளுகவே.

ஏட்டைத் தவிர்த்தென் னெண்ண மெலோ மெய்த வொளிதந் தியான்வனைந்த
பாட்டைப் புனைந்து பரிசளித்த பரமஞானப் பதிக்கொடியே
தேட்டைத் தனிப்பே ரருட்செங்கோல் செலுத்துஞ் சுத்தசன்மார்க்கக்
கோட்டைக் கொடியே யானந்தக் கொடியே யடியேற் கருளுகவே,



## சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க

## நூற்றாண்டு நிறைவு விழா



# வரவேற்புரை

**திருக்குறள் நம்பி ஊ. வ. தட்சிணாமூர்த்தி அவர்கள்**

**வரவேற்புக் குழுத்தலைவர்**

சன்மார்க்க சங்கத்தீர்! உமது தாள் வணங்கி வருக! வருக! என்று உள்ளும் புறமும் ஒத்து மகிழ்ந்து வரவேற்கிறேன் முதற்கண் இந்த நூற்றாண்டு நிறைவு விழா வின் முதல்வரான திருவருட் பிரகாசர் அவர்களை இந்த விழாவை செவ்வனே நடத்தித் தந்து நம்மையெல்லாம் ஆசிர் வதிக்குமாறு விண்ணப்பிக்கின்றேன்.

இங்கு பல மதங்களைச் சேர்ந்தவர்கள் பல மார்க்கங்களைப் பின் பற்றுபவர்கள், பல வருணத்தவரும், வெவ்வேறு வித மான பழக்க வழக்கங்களை உடையவர் களும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் கூடி இந்த விழாவை சிறப்பாக நடத்துவ தென்ற உறுதியோடு இருப்பதைக்காண எல்லையற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இன்று போல் எல்லா நாட்களும் வந்தி ருந்து மனந்தூயவர்களால் நடக்க விருக் கும் சொற்பொழிவுகளையும் கேட்டு, உணர்ந்து, அவ்வழி நின்று இறை யருளுக்கு உரியவர்களாகுமாறு விண்ணப் பித்துக் கொள்ளுகிறேன்.

இவ்விழாவுக்கு ஆதிமூலம் திருவருட் பிரகாச வள்ளலார் ஆவர். நிலமகளுக்குத் திருமுக மென விளங்கும் தில்லைப்பதியின் மருங்குள்ள மருதூர் என்னும் சிற்றூரிலே இராமையப் பிள்ளைக்கும், சின்னம்மைக் கும் கடைசிக் குழந்தையாக 1823ம் ஆண்டு புரட்டாசித் திங்கள் 5ம் நாள் சித்திரை நட்சத்திரம் கூடிய நன்னாளில்

''அகத்தே கறுத்து புறத்து வெளுத்திருந்த
உலகரனைவரையும்
சகத்தே திருத்தி சன்மார்க்க சங்கத்
தடைவித்திட''

அவதரித்தார்.

உலகில் அறம் குன்றி மறம் தலைவிரித் தாடும் போது இறையருளால் சான்றோர் தோன்றுவது மரபு. வள்ளற் பெருமான் தோன்றிய போது நம் நாடு இருந்த நிலை இரங்கத்தக்கது. பண்டைய தமிழர் மதம் மூலையில் கிடந்தது. சைவ வைணவ சண்டை. சைவர்களுக்குள்ளும் உட்பூசல் வைணவர்களில் வடகலை தென்கலைப்போர் இவற்றைப் பயன்படுத்தி வேற்று மதத் தாரின் ஊடுருவல், பணத்தாலும், பதவி யாலும், கல்வி, மருத்துவம் முதலிய போர் வையாலும் மத மாற்றம். வறுமை. இரந்து உயிர் வாழ வேண்டிய அவல நிலை பல ருக்கு. உடையவர்கள் சிலர் தங்கள் கட மையை மறந்து உண்டு களித்திருந்தனர். இந்நிலை மாறவேண்டும் என்று இறைவன் திருவுளம் எண்ணியது. வள்ளலார் தோன்றினார்.

''பேருற்ற உலகிலுறு சமயமத நெறியெலாம்
பேய்பிடிப் புற்றபிச்சு பிள்ளை விளையாட் டென
உணர்ந்திடா துயிர்கள்பல பேதமுற்
றங்கு மிங்கும்
போருற் றிறந்து வீண் போயினர் இன்னும்
வீண் போகாத படி விரைந்தே
புனிதமுறு சுத்த சன்மார்க்க நெறி காட்டி மெய்ப்
பொருளினை உணர்த்தி யெல்லாம்
ஏருற்ற சுகநிலை யடைந்திடப் புரிதி நீ,
என் பிள்ளையாத லாலேஇவ்வேலை புரிக என்
றிட்டனம் மனத்தில் வேறெண்ணற்க
என்ற குருவே
நீருற்ற ஒள்ளிய நெருப்பே நெருப்பினுள்
நிறைந்திருள் அகற்று மொளியே
நிற்குணநந்தபர நாதாந்த வரையோங்கும்
நீதிநட ராசபதியே''

என்பது வள்ளற் பெருமான் திருவாக்கு.

ஓதாதே உற்ற கலைகள் அத்தனையும் உணர்ந்தார்.

''முனைப் பள்ளி பயிற் றெருன்றனைக்கல்வி பயிற்றி
முழுதுணர் வித்துடற் பழுதெலாம் தவிர்த்தே''

''கல்வியெலாம் கற்பித்தாய்
நின்பால் நேயம் காண வைத்தாய்
இவ்வுலகம் கானலென்றே
ஒல்லும் வகை யறிவித்தாய்''

''சாகாக் கல்வியின் றரமெலாம் உணர்த்தி
சாகா வரத்தையும் தந்து (அகவல்)

இவைகள் அகச்சான்று.

''ஒருமைக்கண் தாங்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் யேமாப் புடைத்து'. (குறள்)

புறச்சான்று

பள்ளியில் பயில இச்சையில்லை. ஒரு நிலைக்கண்ணாடி அமைத்து பூச்சூடி தூப தீபம் ஏற்றி முன்னமர்ந்து உள்நாடி ஒன்பதாம் ஆண்டில் முருகப்பெருமான் காட்சியைக் கண்ணாடியில் கண்டார். அம்பலவாணரின் அருட் குழந்தை என்பதற்கு இக்காட்சி ஒன்றே சாலும்.

தம் பருவத்திற்கு இயலாத அளவில் உலகியலும் மெய்யுணர்வும் பெற்றிருந்தார் இளமையில் கந்த கோட்டத்திற்குப் போவது வழக்கம். பெருமான் பேரில் தெய்வமணிமாலையியற்றி மகிழ்ந்தார். அடிகள் பாடல் பெற்றதால் கந்த கோட்டம் மென்மேலும் சிறந்தோங்குகின்றது.

தெய்வமணி மாலையில் கருப்பொருளாய் விளங்குவது ஒழுக்கம். தீய குணங்கள் அத்தனையும் போய் நற்குணங்கள் பெற்றால்தான் இறையருள் வாய்க்கும் என்பதை பல கோணங்களில் விளக்குகின்றார்.

''ஈயென்று நானொருவ ரிடநின்று கேளாத
வியல்புமென் னிடமொ ருவரீ
திடுவென்ற போதவர்க் கிலையென்று சொல்லா
மல்
இடுகின்ற திறமு மிறையாம்
நீயென்று மெனைவிடா நிலையுநா னென்றுமுள்
நினைவிடா நெறியு மயலார்
நிதியொன்று நயவாத மனமு மெய்ந்நிலை
யென்று
நெகிழாத திடமு முலகிற்
சீயென்று பேயென்று நாயென்று பிறர்தமைத்
தீங்கு சொல் லாததெளிவும்
திரமொன்று வாய்மையுந் தூய்மையுந் தந்துநின்
திருவடிக் காளாக்குவாய்
தாயொன்று சென்னையிற் கந்த கோட்டத்துள்
வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

ஒருமையுட னினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசு
வார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும்
பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெரு நெறி பிடித்தொழுக வேண்டு மதமான
பேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டு
முனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டு நின்கருணை நிதிவேண்டு நோயற்ற
வாழ்வினில் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்ய மணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே

மேற்கண்ட பாடல்களால் அறியக்கிடப்பது ஒழுக்கமில்லாத வழிபாடு வெற்றுரவாரம் என்பது.

முதலாவது கொல்லாமை.

பிற உயிர்களை தந்நலம் கருதி கொல்லுதல், புசித்தல். புலால் உண்பதால் தாமத குணம் மிகுகிறது. இரக்க குணம் இல்லாமல் போகிறது.

அறத்தை விளக்க வந்த வள்ளுவரும்

''ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று''
''தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது னூண்
பான்
எங்கனம் ஆளும் அருள்'' என்றார்
'கொல்லா நெறியே குரு அருள் நெறி'
'புலையறியாப் பெருந்தவர்கள் போற்ற
மணி மன்றில் பொது நடஞ் செய் அரசே'
'புலை கொலை இரண்டும் ஒருவிய நெறியில்
உலகெலாம் நடக்க உளுற்றவும்

என்பவைகள் அருட்பிரகாச வள்ளலார் அருள்வாக்கு.

இரண்டாவது பொய்.

''பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று'' குறள்
'பொய் வந்த உள்ளத்தில் போகாண்டி அவன்
பொன்னடி போற்றி அடியுங்கடி'
'பொய்யை யொழித்து புறப்பட்டேன் மன்றுடும்
ஐயரைக் கண்டேனடி'

'உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்'

என்ற அருட்பாக்களால் பொய்யின் கேடு விளங்கும்.

மூன்றுவது காமம்.

காமம் என்பது ஆசை, மண்ணுசை, பொன்னுசை, பெண்ணுசை எனவிரியும். மண்ணுசையால் கெட்டவர் பலர் :— காட்டாக துரியோதனன், ஹிட்லர், முசோலினி முதலியவர்கள் மண்ணின் மேல் வைத்த பொருந்தா பேராசையால் மண்ணும் இழந்து உயிரும் அகாலத்தில் இழந்தனர். பொன்னுசை அல்லது பொருளாசை. இந்த ஆசையே மனிதனை அறம் செய்ய வொட்டாமல் தடுப்பது. கோபம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் முதலிய தீக் குணங்களுக்கு தாயகமாய் இருப்பது. ஒன்றெய்தி நூறிழக்கும் சூதுக்கு தந்தையாய் இருப்பது :

பெண்ணுசை:— பிறமாதர் மேல் வைக்கும் பொருந்தா காதல், கெட்டவர் எண்ணிலர் உலக சரித்திரத்தில் பரக்கக் காணலாம்.

''மருவு பெண்ணுசையை மறக்கவே வேண்டும்'

'காம மகற்றிய தூயனடி சிவ
காம சவுந்தரி நேயனடி'

'அருணைத்துக் கொளப் பெண் பேய் எங்கே'

என்பன அருள் வாக்குகள்.

பெண்ணுசையால் மனிதன் கடமையை மறக்கின்றுன், உடல் வலி குறைகிறது, பகை உண்டாகிறது. தீக்குணங்கள் சேர இடமுண்டாகிறது. ஆகவே பொருந்தா பெண்ணுசைக்கு மனிதன் ஆட்படக்கூடாது.

மொத்தத்தில் ஆசைதான் எல்லாத் துன்பத்திற்கும் பிறப்பிடம்.

'பற்றுக பற்றற்றுன் பற்றினை அப்பற்றினை
பற்று பற்றுக விடற்கு'' குறள்

பற்றற்றுன் பற்றினையே பற்றியிடல்
வேண்டும்

பற்றற்றுல் அன்றிப் பலியாதால்

பற்றறியா முத்தர்களை யெல்லாம் வாழைப் பழம்
போலே விழுங்குகின்ற பரமே'

'பற்றிய பற்றனைத்தும் பற்றற விட்
டருளம்பலப் பற்றினை பற்றுமினே என்றும்
இறைவீரே'

உலகப் பற்று விடுவதற்கு இறை பற்று வேண்டும். இறைபற்று உண்டாவதற்கு இவ்வுலகில் அனுபவிக்கும் துன்பங்களும் இந்த உடலின் நிலைபற்ற தன்மையும் உணர்ந்து உலக இன்பத்தில் வெறுப் பேற்பட வேண்டும். அடிக்கடி மனிதனுக்கு மறதி உண்டாவது இயல்பு அந்த மறதி ஏற்படாமல் எப்போது நல்ல சிந்தனை பிறர்க்கு உபசரித்தல். பிற உயிர்களுக்கு உறும் துன்பங்களை ஒல்லும் வகையில் விலக முயலல், இறைவன் அருளை நாடுதல் முதலிய நல்லொழுக்கங்களைப் பெறுதற்கே நல்லோர் கூட்டுறவுவேண்டும்.

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
மனத்தியல்ப தாகும் அறிவு

நல்லாரிணக்கமும் நின் பூசை நேசமும் என்றுர் பிறரும். ஆகவேதான் 1865ம் ஆண்டு அருட்பிரகாசப் பெருமான் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தை தோற்றுவித்தரர்.

சன்மார்க்க சங்கத் தொடர்பால் உயிரிரக்கம் ஏற்படும் அருளுடையவனுவான். பேருளை அடைய தகுதியுடையவனுவான் என்ற உண்மைக் கருத்தை மனத்திற் கொண்டு சத்திய தருமச் சாலையும் சத்திய ஞான சபையையும் தோற்றுவித்தார்கள்:

இந்தச் சங்கத் தொடர்பால் அருட் பண்பும் பேரருளும் சித்திக்கும் என்று கூறி

தங்கமே யனையார் கூடியஞான சமரச சுத்த
சன்மார்க்க
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம் சார் திருக்
கோயில் கண்டிடவும்

துங்கமே பெறுசற்சங்கம் நீடுழி துலங்கவும்
சங்கதிலடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி ஆடவும்
இச்சைகாண் எந்தாய்'

என்ற திருவருட் பிரகாச வள்ளலாரின் விண்ணத்தின்படி அருட்பா சங்கங்கள் எல்லா இடங்களிலும் தோன்றி நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்று கோரி என்னுரையை முடிக்கின்றேன்.

PRINTED AT

PAJVASS PRINTER
1, Wallers Road, 1st Lane
Madras-2

# நூற்றாண்டு நிறைவு விழாவும் சிறப்பு மலரும்

தா. பால்வண்ணன் (மலர் பதிப்பாசிரியன்)



நூற்றாண்டு விழா—நூற்றாண்டு நிறைவு விழா என்ற இரண்டு தொடர்களுக்கும் உள்ள வேற்றுமை உங்களுக்குத் தெரியும். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் தென்னாற்காடு மாவட்ட திருவருட்பா மாநாடு விழுப்புரத்தில் நடைபெற்றபோது அந்த மாநாட்டில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் நூற்றாண்டு விழாவை சென்னையில் சிறப்போடு கொண்டாட வேண்டும் என்பதை இந்த எளியேன் அறிவித்தேன். சன்மார்க்க அன்பர்கள் அதனை வரவேற்றனர். இந்த எண்ணம் நாளுக்கு நாள் சிறுகச் சிறுக ஆனால் வலுவுடன் வளர்ந்து வந்தது. இறுதியில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 9,10,11, ஆகிய நாட்களில் சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் திரு. நாரண — துரைக்கண்ணன் ஒத்துழைப்பால்சீரோடும்சிறப்போடும் நிகழ்ந்தது. தமிழ் நாட்டில் உள்ள தூய உள்ளம் படைத்த சுத்த சன்மார்க்க அன்பர்கள் வந்திருந்தனர். தமிழ் நாட்டின் அரசியல் — அறிவியல் தலைவர்கள் வந்து சிறப்புச் செய்தனர். அதுமட்டுமன்றி மேலைநாட்டு தூதுவர்கள் வந்திருந்து வள்ளல் பெருமானை புகழ்ந்து—சன்மார்க்க நெறியைப் போற்றியும் மகிழ்ந்தனர். மேல்நாட்டு தூதர்களுக்கு அருட்பா ஆறு திருமுறைகளும், ஆங்கிலத்தில் அடிகளார் வரலாறும் அளிக்கப்பட்டது. இந்த விழா எழுப்பிய சன்மார்க்க குரலை உலகமே கேட்டது; மகிழ்ந்து போற்றியது. அந்த நூற்றாண்டு விழாவினை யொட்டி ஒரு சிறப்பு மலரும் வெளி வந்தது. அந்த மலரை அலங்கரித்தவர்கள் தமிழ்த்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வர்கள். அதுமட்டுமன்றி ஆங்கிலம், பிரான்சு, இந்தி, ஆரியம், கன்னடம், தெலுங்கு, மலையாளம், வங்கம், மராட்டியம், உருது, பஞ்சாபி, குஜராத்தி, தமிழ் ஆகிய 13 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட அருட்பாக்களுடன் வெளிவந்தது. இன்றும் பெருமையோடு மிளிர்கின்றது.

இப்படி சென்னையில் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்ற பிறகு தமிழகம் முழுவதும் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடினார்கள். தமிழகத்திற்கு அந்த பம்பாய், கல்கத்தா, பெங்களூர் ஆகிய இடங்களிலும் சிறப்பாக நூற்றாண்டு விழாவினை கொண்டாடினார்கள். இந்தக் கொண்டாட்டங்கள் 1965 ஜூன் முதல் 1966 மார்ச் வரை இந்தியா உபகண்டம் முழுவதும் நடைபெற்றது. மலேயாவிலும் நடந்தது 1966 மார்ச் மாதம் 19 முதல் 27-ம் தேதி வரை அருட்ஜோதி இராமலிங்கா மிஷன் நூற்றாண்டு விழாவை சென்னையில் ராஜா ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் சிறப்பாக நடத்தியது. இத்தனை அமைப்புகளும் விழாவினை நடத்திய பிறகு நூற்றாண்டு விழாவினை நிறைவு விழாவாக - குறைவற்ற விழாவாக - நடத்தவேண்டும் என்கின்ற பேரவா வடஆற்காடு மாவட்டத்தின் சார்பில் வேலைமாநகர் தொரப்பாடி சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தார் மனதில் எழுந்தது. அந்த நல்ல உள்ளம் படைத்த தூயவர்களின் - எண்ண வலுவாலும் - உண்மைப் பொலிவாலும் உருவானது இந்த நூற்றாண்டு நிறைவு விழாவாகும்.

சங்கம் தோன்றி 100 ஆண்டுகள் கழிந்தன. சன்மார்க்க அமைப்புகள் பல தோன்றின—தோன்றுகின்றன - தோன்றும். ஆனால் துன்மார்க்கம் போகவில்லை — வளருகிறது. இந்த போக்கை ஒழித்து உண்மையான சன்மார்க்கத்தைப் பரப்புவதே நோக்கமாகக் கொண்டு இந்த விழாவினை ஏற்பாடு செய்யப்பட்டது. வடஆற்காடு மாவட்டம், அல்லது வேலைமாநகர் ஆகிய

குறிப்பிட்ட எல்லைக்குள் உண்மை சன்மார்க்கத்தை உருவாக்கவும், அப்படி உருவாக்க தொரப்பாடி சன்மார்க்க சங்கம் முதலில் தன்னை தகுதி படுத்திக்கொண்டு மற்றவர்களைத்தகுதிபடுத்தவும் முனைகிறது. தகுதி என்பது ஆரம்பநிலையில் புலால் உண்ணாமையும், பொய் பேசாமையும், ஆகும். இதைப் பின்பற்றுபவர்கள் மட்டும் தான் சங்கம் நடத்தவும் - மற்றவர்களுக்கு உபதேசம் செய்யவும் வேண்டும், என்பது மிக முக்கியமான கொள்கையாக கொண்டுள்ளது. இது பற்றிய இன்னும் ஆழ்ந்த கருத்துக்களை விரைவில் ஆராயப்படும்.

இது போன்ற தூயவர்களால் சங்கம் நடத்ததங்களை தயார் செய்து கொள்வதுடன் - இதனையே அடுத்த வர்களுக்கும் கூறுவது என்னும், உறுதியை இந்த நூற்ருண்டு நிறைவு விழா வலுப்படுத்துகிறது. இதற்காகவே இவ்விழா இத்தனை வைபவங்களுடன் கொண்டாடப்படுகிறது.

**மணக்கும் மலர்.**

மலரிடம் மக்களுக்கு மதிப்பிருப்பதற்கு முக்கிய காரணம் ஒன்று அழகு, இரண்டு மணம். இந்த இரண்டும் இல்லையென்ருல் மலர் மதிப்பாரின்றி போய்விடும்.

அதேபோல் மக்கள் உலகில் மரம் போல் வாழ்வது சரியல்ல - அதுவும். எட்டி போல் வாழ்வது கொடுமை நிறைந்தது. எனவே மலர்ந்து மணம்தரும் அழகிய மலர்களாக இருப்பது தான் வாழ்வின் பயன். அதிலும் சிறந்தது இந்த மலர் வாடாத மலராக அழகு குன்ருத மலராக - மணம் குறையாத மலராக இருந்தால் அஃது அற்புதம்.

அப்படிப்பட்ட வாழ்வு நடத்துபவர் தனது உள்ளமெனும் பூங்காவில் பூத்த புதிய கருத்து மலர்களை அறிவுக் கை கொண்டு கொய் தளித்தனர். அம்மலர்களைத் திரட்டி தரும் பாக்கியம் கிடைத்தமை குறித்து நான் பெரிதும் மகிழ்கின்றேன்.

இந்த மலர் அருள் மணம் வீசுவது - இதில் அருட்பாக்களின் ஆறு திருமுறைகளும் கட்டுரை வாயலாக பல அறிஞர்கள் ஆக்கி தந்துள்ளனர். அந்த கட்டுரைகள் திருமுறைகளைக் காட்டுவதுடன் - இறைவனை - இந்த மாயவுலகின் உண்மையை - உயிரின் தன்மையைக் காட்டி சுத்த சன்மார்க்கத்தைப் போதிக்கிறது.

இந்த நூற்ருண்டு நிறைவு விழா நமது வள்ளல் பெருமனரின் தெய்வத் திருவுருவை-பொன் வண்ணம் சூழக் காட்டுகிறது. மலருக்குள் உள்ள முதற் சிறப்பு - தனிச்சிறப்பு எதுவெனின். ஆறு திருமுறைகளின் கருத்து சுருக்கமே யாகும். ஒவ்வொரு திருமுறையையும் ஒவ்வொரு அறிஞர் எழுதியுள்ளதேயாகும். இது ஆறு திருமுறைகளையும் படித்துப் பயன் அடையத்தக்க வசதி – காலம் - வாய்ப்பு இல்லாதவர்களுக்கு அருட்பாவின் கருத்தையும் சன்மார்க்கத்தின் பெருமையையும் கற்பிக்கும். எனவே இப்பகுதி சிறப்புடையது மாண்புடையது. முதற் திருமுறையினை உயர் திரு. பாலூர் கண்ணப்ப முதலியார், M A. B OL. அவர்களும், இரண்டாம் திருமுறையை உயர் திரு. அ. திருமலை முத்து சாமி (M,A , M. Litt. B.T. Dip. Lib.) அவர்களும் மூன்ரும் திருமுறையை உயர்திரு க. த. திருநாவுக்கரசு M.A.M. Litt. அவர்களும் நான்காம் திருமுறையை உயர்திரு G. கண்ணபிரான் அவர்களும், ஐந்தாம் திருமுறையை உயர்திரு பண்டித V. நடேசனர் B.A. அவர்களும் ஆரும் திருமுறையை அடியேனும் (தா. பால்வண்ணன்) முறையே எழுதியுள்ளோம்.

இந்தச் சிறப்புமலருக்கு மாண்பு மிகு குடியரசுத் தலைவர் டாக்டர் S. இராதா கிருஷ்ணன் அவர்களும் சென்னை மாநில கவர்னர் : சந்திரா ரெட்டி அவர்களும், சென்னை மாநில முதலமைச்சர் M. பக்தவச்சலம் அவர்களும் மனம் கனிந்து வாழ்துரை நல்கியுள்ளது இந்தியாவின் பெருமையையும் சென்னையின் உயர்வையும் உயர்த்துகிறது. அடுத்து சென்னை மாநில அமைச்சர்கள் M. A. மஜீத் அவர்களும். உயர் திரு N S. S மன்ருடியார் அவர்களும் R. வெங்கட் ராமன் அவர்களும் B. பூவராகன் அவர்களும் வாழ்த்துக்கள் நல்கி சிறப்புச் செய்துள்ளனர். இன்னும் மத்திய மந்திரி C. R. பட்டாபிராமன், சட்ட மன்றத் தலைவர் S. செல்லபாண்டியன், உயர் நீதி மன்ற நீதிபதி R. சதாசிவம் டாக்டர் ரத்னவேலு சுப்பிரமணியம் டாக்டர் மு. வ., தெ. பொ. மீனுட்சி சுற்தரனர், Dr. T.M.P. மகாதேவன், டாக்டர் ராஜ மாணிக்கனர், டாக்டர் ந. சுப்பிரமணியம், M. A: Mitt. தவத்திரு. குன்றக்குடிகளரர், தவத்திரு அழகரடிகள், M.S. சாரங்கபாணி

முதலியார், A.S. ஞானசம்பந்தம், சைவப் பெரியார் S. சச்சிதானந்தம் பிள்ளை, கோ. மு. முத்துசுவாமி I.A.S. அ. திருமலை முத்துசாமி M. A. M. Litt. B. T. Dip. நா. மகாலிங்கம் B. Sc. M. I. E., M. L. A, அ.மு. பரமசிவானந்தம், திருமதி R. இராஜரத்தினம் அம்மையார், இரா. நடராஜன், தவத்திரு, சாந்தானந்த அடிகள், ஆத்துமானந்த அடிகளார், திருமதி கலைச்செல்வி அம்மையார், உயர் திரு. வ. பெருமாள், M.A.B.T., கலைஞர் T. K. சண்முகம், உயர்திரு வேலூர் கிருஷ்ணமூர்த்தி, ந. ரா. முருகவேள், M.A.M.O.L., உயர்திரு பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார். M.A.L.T., டாக்டர் V. ராகவன், M.A. PH.D. க. பெருமாள் அவர்கள் முதலிய பேரறிஞர்கள் பெருந் தலைவர்கள் எளியேனேன் விண்ணப்பம் ஏற்றருளி வாழ்த்துரைகளும், கட்டுரைகளும் வழங்கி மலரை மணம் பெறச் செய்துள்ளனர். அவர்களின் பெருங்கருணைக்கு எனது அன்பு கலந்த நன்றியும் வணக்கமும் செலுத்துகிறேன்.

மலரை பதிப்பிக்கும் பணியினை என்னிடம் ஒப்படைத்த வரவேற்புக் குழுவினருக்கு நான் எவ்வண்ணம் நன்றி செலுத்துவதென்றே தோன்றவில்லை. கல்லா அறிவில் கடைபட்ட என்னையும் பொருளென மதித்து இந்தப் பொருப்பை ஒப்படைத்த அவர்களின் தூய உள்ளங்களுக்கு எனது மனங்கனிந்த வணக்கத்தையும் மரியாதையையும் செலுத்துகின்றேன்.

வரவேற்புக் குழு தலைவர் திரு. திருக்குறள் நம்பி, ஊ.வ. தட்சிணாமூர்த்தி அவர்களின் தூய ஒழுக்கம், சங்கத் தலைவர் திரு. ஜோதி ஆறுமுகனார் அவர்களிடம் காணும் பற்றற்ற நிலை, எனது கெழுதகை நண்பர் பொதுச் செயலாளர் திரு. தொ. அ. வேலன் அவர்களின் அன்புகடந்த ஆர்வம் இவ்வளவும் எனக்குத் துணை செய்ய இவற்றிற்கு மேலாக எனது வள்ளல் பெருமானின் அருள் உதவி செய்ய இத்துணையும் என்னை இயக்க இயங்கினேன். சிறுவன் எழுதிய ஓவியத்தை பெரியவர்கள் குற்றம் பாராது கண்டு மகிழ்வது போலவும், குழந்தைகளின் கொச்சை மொழிகளில் குற்றம் காணாத குணமிகு கற்றவர் போலவும் இதில் குற்றம் குறைகள் இருப்பின் நீக்கி யேற்றருள்களென கற்ற பெரியோர்களையும், சன்மார்க்க அன்பர்களையும் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

மலர் வெளிவர கட்டுரைகள் வாங்கி உதவ வாழ்த்துரைகளை வாங்கித்தர என்னோடு ஒத்துழைத்து என்னை விட அதிக ஆர்வத்துடன் பேருதவி புரிந்த எனது மதிப்பு மிக்க நண்பர் R. நடராஜன் (ஸ்தாபகர், நடராஜா கல்விக்கழகம்) அவர்களுக்கும் மலருக்கு ஐயா அவர்களின் திருவுரு தீட்டித் தந்த ஓவியர் 'சித்திரலேகா' அவர்களுக்கும், ''சத்திய தருமச்சாலை'' 'சத்திய ஞான சபை' 'சித்திவிளாகத் திருமாளிகை' பிளாக்குகளை அச்சடித்துக் கொள்ள வழங்கிய நண்பர் நடராஜன் (அருட்பெருஞ்ஜோதி அச்சகம்) அவர்களுக்கும், பிளாக் செய்ய முடியாது என்ற நிலையில் வருந்திய போது நான் செய்கி தருகிறேன் என்று கூறி செய்துதந்த 'ராயன் & கோ' உரிமையாளருக்கும், ''மலட்டையை அழகுபட அச்சடித்து தந்த நாதன் பிரஸிற்கும், மலரை மிக நெருக்கடியான நேரத்தில் இரவு பகல் என்று பாராது அச்சிட்டு வழங்கிய பஜ்வாஸ் பிரிண்டர் உரிமையாளர் அவர்களுக்கும் எனது மனம் கனிந்த நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மலர் சிறப்புடையது மாண்புடையது. திருவருட்பா என்னும் தெய்வத் திருநூலுக்கு அடுத்து இடம் பெறுவது. எனவே இதனை தமிழக அன்பர்கள் வாங்கி படித்து உயிர்போல் பாதுகாத்து, தன் சந்ததியாருக்கும் ஒரு பொக்கிஷமாக விட்டு வைக்க வேண்டும் என்றும் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கின்றேன். அன்பர்கள் இதனைப் படித்து பயன் அடைந்ததன் அறிகுறியாக தன் வாழ்நாளில் தானும் தன் பின் சந்ததியவர்களும் புலாலை ஒழித்து புனித ஆகாரம் உண்ணத்தக்க வகையில் பணியாற்றுவதே சாலச் சிறப்புடையதும், சன்மார்க்கத்தை பரப்புவதற்கும் ஏற்ற ஓர் ஒப்புயர்வற்ற பணியுமாகும். இதனை செய்வீராக ! செய்யத் தூண்டுவீராக !

'கொலை புலை இரண்டும் ஒருவிய நெறியால்
உலகெலாம் நடக்கவு மூற்றவும் அம்பலம் தனிலே
மருவிய புகழை வழுத்தவும் நின்னை வாழ்த்தவும்
இச்சைகாண் எந்தாய் !

இந்தப்பணி ஒன்று மட்டும் சிறந்தோங்கினால் போதும். அதுவே நூற்றாண்டு நிறைவு விழாவின் முழு பயனாகும்.

# நூற்றுண்டு விழாவும் நமது கடமையும்

பொதுச் செயலாளர் தொ. அ. வேலன்



நூற்றுண்டு நிறைவு விழாவை தொரப்பாடி சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தார் நடத்த வேண்டும் என்கிற பேராசையின் அடித்தளம் எதுவென்றுல், பொய்யும், புளுகும் வஞ்சகமும், சூதும், கொலையும் கொள்ளையும், நிறைந்த இந்தவுலகை திருத்த வேண்டும் என்பதுதான். இந்த பெரிய முயற்சியில் அருளாளர்கள் பலர் ஈடுபட்டுத் தோல்வியுற்றதையும் அறிவேன். இருப்பினும் நல்வழியில் உலகை அழைத்துச்செல்லும் ஓர் அரும் பணியை செய்வது எப்படி தவருன தாகும்? எனவே உலகை திருத்த வேண்டும் என்ற அடிப்படையை மனத்தில் வைத்துக் கொண்டு, ஊருக்கு உபதேசம் செய்யுமுன் நான் திருந்த வேண்டும், பிறகு நான் ஈடுபாடு கொண்டுள்ள சன்மார்க்க சங்க அன்பர்கள் திருந்த வேண்டும். பிறகு எனது ஊர், நகர், வட்டம், மாவட்டம், என்று வளர்ந்து உலகம் முழுதும் பரவவேண்டும், என்பதே எமது பேராசை. எங்கள் சங்கத் தலைவர் ஜோதி ஆறுமுகனுர் தூய உள்ளம் படைத்த சன்மார்க்கியே ஆவர். எனது மதிப்பிற்குறிய ஆசிரியரும் இந்த விழாவின் வரவேற்புக்குழுவின் தலைவருமான உயர்திரு ஊ வ. தட்சிணுமூர்த்தி அவர்கள் அடக்கம், ஒழுக்கம், நற்பண்புகள் நிறைந்த ஓர் உத்தமர், இவர்களுடன் கூடி இருக்கும் நானும் மணமிகு மலர்களால் மணம் பெறும் நாரு போல் அவர்களைப் போல்கின்றேன். இப்படி ஒரு ஒழுக்க உணர்ச்சியை கடைபிடிக்கும் சங்கம்தான் தொரப்பாடி சமரச சுத்த சன்மார்க்க சங்கம் இச்சங்கம் இன்று நூற்றுண்டு விழாவினைச் சீரோடும் சிறப்போடும் செய்கிறது. பற்பல பேரறிஞர்கள் சொற்பொழி வாற்றுகின்றனர். இதனை நாடும், உலகமும் கேட்டுத் திருந்த வேண்டும். சன்மார்க்கப் பணி பரவவேண்டும்.

தொரப்பாடி சன்மார்க்க சங்கம், சிலரைக் கூட்டி பேசி களித்து பிறகு அடுத்த ஆண்டு விழாவைப் பற்றி கருதும் சங்கமல்ல, சங்கம், சிறு அளவில் இருந்து வளர்ந்த ஓங்கி வருகிறது. சென்ற ஆண்டு சங்கத்திற் கென்று தனிக் கட்டிடம் ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டது. அந்தச் சங்கத்தின் திருக்கோயிலில் ஞான விளக்கு வைக்கப்படும் ஒளி வழிபாடு நடைபெறுகிறது. நாள் தோறும் காலை 5 மணிக்கு எனது சங்கத் தலைவர் ஜோதி ஆறுமுனர் அவர்கள் குளித்துக் கடன் முடித்து திரு ஒளி பெருக்கி திரு நீறணிந்து அருட்பெருஞ் ஜோதி ஆண்டவன் திருமுன்னர் நின்று ஒலிபெருக்கி எதிரே நிற்க ''அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ்ஜோதி, தனிப் பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி'' ,என்னும் மகா மந்திரத்தை ஒன்பது முறை மந்திர உச்சாடணம் செய்து எழுப்பும் நாத ஒலி மக்களின் காதுகள் மூலம் உள்ளே சென்று அவர்களை எழுப்புகிறது. அடுத்து ''பொழுதுவிடிந்தது என் உள்ள மென் கமலம் பூத்தது'' என்று பள்ளியெழுச்சியை பாடும் போது சுற்றுபுறத்தில் உள்ள மக்கள் மன இருள் நீங்க அருள் ஒளி பெற்றவர் போல் எழுந்து இவ்வொலியை கேட்டுக் கொண்டே தங்கள் கடன் முடித்து காரியம் மாற்றப்போகின்ருர். இப்படி நாள்தோறும் நடத்தப் படுகிறது. பிறகு காலை வழிபாடு முறையுடன் செய்து முடித்து விட்டு பகல் பூஜை நடந்த பிறகு ஏழைகளுக்கு கஞ்சி ஊற்றல் நடைபெறுகிறது. மீண்டும் மாலை வழிபாடு. இப்படி முறை தவருமல் இறை வழி பாடு செய்து சங்கத் திருக்கோயிலின் அருள் தன்மையை அதிகப்படுத்தப்பட்டே வருகிறது. இன்றும் வாரத்தில் நான்கு நாட்கள் பாராணயம், திருவருட்பா, திருக்குறள் சிந்தனை வகுப்புகள் நடைபெறுகின்றன. இதனை எமது ஆசி

ரியர் உயர்திரு ஊ. வ. தட்சணுமூர்த்தி அவர்கள் செய்து வருகின்ருர். மேலும் தொரப்பாடி மக்களுக்கு சங்கம் குறைத் தீர்க்கும் கோயிலாகவே திகழ்கிறது. பலர் வந்து வழிபட்டு அருட்பெருஞ்ஜோதி இறைவனின் அருள் பெற்றுசெல்கின்றனர்.

மருத்துவமனை ஒன்று நிரந்தரமாக இலவசமாக நடத்த ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகிறது. கல்வி நிலையம் திருமண மண்டபம், ஆகியவற்றை உருவாக்கும் திட்டமும் உளது. இவற்றை எல்லாம் விரைவில் செயல்படுத்த இறைவன் அருள் புரிவான்.

இப்படிப்பட்ட நாங்கள் நூற்ருண்டு நிறைவு விழாவினை கொண்டாடுகிருேம் என்ருல் புகழுக்காக அல்ல, ஆடம்பர திற்காக அல்ல, மற்ற எதற்கும் அல்ல, மக் கள் உள்ளங்களில் சன்மார்க்கம், ஓங்க வேண்டும் என்ற பரந்த நோக்கத்துடனே இந்த நிறைவு விழாவைக் கொண்டாடு கிருேம். இதிலே ஈடுபாடு கொண்டு பேசும் பெரியோர்களும் நல்ல ஒழுக்க முள்ளவர் களே என்பது எங்கள் எண்ணம். அப்படிப் பட்டவர்கள் பேசினுல் தான் —கேட்டவர் உள்ளத்தில் பதியும். எனவே இந்த விழா உடல், பொருள், ஆவி ஆகிய திரிகரண சுத்தியோடு இறைவனின் பூரண திருவருள் பலத்தோடு நடத்தப்படுவதாகும் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள் கின்றேன்.

இந்த விழா சிறப்பாக நடைபெற உதவிய அனைவருக்கும் எனது மனம் கனிந்த நன்றி அறிதலை தெரிவித்துக்கொள் கிறேன். சிறப்பாக எங்கள் அழைப்புக் கிணங்கி வருகை தந்த சொற்பொழிவாளர் கள், தலைவர்கள், திறப்பாளர்கள், பாடகர் கள், ஆகிய அனைவருக்கும் எனது நன்றி உரியதாகுக.

மலருக்கு விளம்பரம் தந்து உதவிய நல்லவர்களுக்கும், கட்டுரை வழங்கிய பெரியோர்களுக்கும், நன்கொடை நல்கிய நல்லவர்களுக்கும், பந்தல், அமைத்துத் தந்த திரு. G. பாலசந்திர முதலியார் அவர் களுக்கும் ஒலி, ஒளி அமைப்பாளர் ஹை கிரேடு எலக்ட்ரிக்கல்ஸ் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன். பண்டங்கள் கள் வழங்கிய நல்லவர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன். என்னேடு உடனி ருந்து ஒத்துழைத்த வரவேற்புக் குழுவினர் அனைவருக்கும், நூற்ருண்டு விழாவிற்காக உதவி செய்தவர்கள் அனைவருக்கும் எனது மனங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். கடைசியாக இந்த பெரிய மிகப் பெரிய வேலையை எடுத்துக்கொண்டு எப்படி யாமுடித்துவிட்டோம். அதனை இந்த அளவு சிறப்பாக முடித்துத் தந்த எனது குருநாதன் வள்ளல் பெருமானை வையகத் திற்கு அனுப்பி எனக்கு குருவாக்கித் தந்த அருட்பெருஞ் ஜோதி ஆண்டவனுக்கும் எனது நன்றி உரியதாகுக!

இந்த நூற்ருண்டு நிறைவு விழா எதிர் காலத்தை ஏற்ற முள்ளதாக்க வேண்டும் —புதியதோர் சமுதாயத்தை அதுவும் புனிதம் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும். பொய்யும்— பொருமையும் அற்ற ஓர் புனித சமுதா யத்தை அமைக்க வேண்டும்- கடும் மனம் படைத்தவர்களின் மனத்தில் கருணை பொங்கியோடச் செய்யவேண்டும் நாகரீக நச்சுப் பாம்பு மீண்டும் மீண்டும் மக்களை தீண்டி கொல்லாமல் அதன் பிடியில் இருந்து மக்களை காக்க வேண்டும். உண்மையன்பு இயற்கை அறிவு, இயற்கை விளக்கம் எல்லா மக்களின் உள்ளத்திலும் பரப்பிடவேண்டும் என்று நாம் அனைவரும் பிராத்திப்போமாக

துன்மார்க்கம் ஒழிந்து சன்மார்க்கம் தழைத்து சூளுரைத் கொள்வோமாக!

புலாலை ஒழித்து மக்களைப் புனிதப் படுத்த நம்மை நாம் ஒப்படைத்துக் கொள் வோமாக!

இதற்கிய பேராற்றலும், வசதியும் வாய்ப்பும் இறைவன் அருள்புரிவராக!

வாழ்க! சன்மார்க்கம். வளர்க வள்ளலார் நெறி.

அன்புள்ள

**தொ. அ. வேலன்**

பொதுச் செயலாளர் ச.சு.ச.ச.ச

நூற்ருண்டு நிறைவு விழாக் குழு

தொரப்பாடி

வேலூர்

# சமரச சுத்த சன்மார்க்க சங்கம்

பதிவு எண். 73/65

தொரப்பாடி S. O. வேலூர் வ, ஆ,

## சங்க நிர்வாகிகள்

தலைவர் :

திருவருட் பிரகாச வள்ளலார்

செயல் தலைவர் :

ஜோதி ஆறுமுகனார்

ஆசிரியர் :

ஊ. வ. தட்சிணாமூர்த்தி

செயலாளர்கள் :

தொ. அ. வேலன்

தொ. வெ. சம்பந்தன்

பொருளாளர் :

சு. ப. வேதாசலம்

நிர்வாகக் குழு :

பு. ச. சின்மையானந்தம்

சண்முகம் (அரியூர்)

கி. துரைசாமி

கு. ம. நடராஜன்

ரா. கந்தசாமி

# வட ஆற்காடு மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க

## நூற்றாண்டு நிறைவு விழா

## வரவேற்பு குழுவினர்

தலைவர் :

**திருவருட் பிரகாச வள்ளலார்**

வரவேற்புக் குழுத் தலைவர் :

**திருக்குறள் நம்பி. ஊ வ. தட்சிணாமூர்த்தி**

துணைத் தலைவர் :

**திரு. S. A. இராசமன்னார்'**

**தலைவர், சர்க்கரை ஆலை, ஆம்பூர்.**

மலர் பதிப்பாசிரியர் :

**திரு தா. பாலவண்ணனார்**

**ஆசிரியர், சுத்த சன்மார்க்கம்.**

செயலாளர்கள் :

**திரு தொ. அ. வேலன்**

**திரு. பு. ப சின்மயானந்தம்.**

பொருளாளர் :

**திரு ப இரா நம்மாழ்வார், L.E E.**

தலைவர் ஊராட்சி மன்றம், அகரம்சேரி.

குழுவினர் ;

திரு. வி. எம். சுப்பிரமணிய முதலியார், தலைவர் ஊராட்சி மன்றம், தொரப்பாடி

திரு. டி. பி. இராமலிங்க முதலியார், & தொரப்பாடி தேவஸ்தான தர்மகர்த்தா குழுவினர்

திரு. ஏ. பி. வேதாசல முதலியார், உரிமையாளர் ரைஸ் மில்ஸ் , தொரப்பாடி

திரு. டி. நாகலிங்கம் பிள்ளை, நிலக்கிழார், தொரப்பாடி

திரு. வி. கெ. சுவாமி, உரிமையாளர், சாமி ரேடியோ ஹவுஸ், வேலூர்.

திரு, விநாயக முதலியார், இரும்பு பட்டரை, வேலூர்

திரு. டி. வி. கோவிந்தராஜ முதலியார், தொரப்பாடி.

திரு. சின்னப்ப கவுண்டர், தொரப்பாடி

திரு. வி கே. விநாயக முதலியார், உரிமையாளர் மெரினா கபே, வேலூர்

திரு. ஏ, எஸ் அருணாசலம் பிள்ளை, மெடிகல் ஸ்டோர், வேலூர்

திரு. இராமகிருஷ்ண முதலியார், சர்வீஸ் இன்டஸ்டிரீஸ், வேலூர்

திரு, தா. வே. அமிர்தலிங்கம் சரவணா ஸ்டோர், ஆற்காடு ரோடு' வேலூர்

திரு. ஜி. பாலசுந்திர முதலியார், கண்ட்ராக்டர் மரவாணிபம், தலைவர் சண்முகனடியார் சங்கம், வேலூர்

திரு. துரைசாமி ரெட்டியார், தலைவர் மார்க்கெட்டிங் சொசைட்டி வண்டறந்தாங்கல்

.திரு. ஆர். எஸ், துரைசாமி முதலியார், தலைவர் பிரம்மஞான சமரச சுத்த சன்மார்க்க சங்கம், அரக்கோணம்

திரு. ஏ. கெ. சுப்பிரமணிய முதலியார், மளிகை, அரக்கோணம்.

திரு. குப்புசாமி முதலியார் P. W. D, காண்ட்ராக்டர், சேயாறு

திரு. வெங்கண்ண செட்டியார், ஜெனரல் மெர்ச்சண்ட், சேயாறு

திரு. கெ. சந்தானம், P. W. D. காண்ட்ராக்டர், வந்தவாசி.

திரு. தனபால் முதலியார், சன்மார்க்க சங்க அமைப்பாளர், தெள்ளாரம்பட்டு.

திரு. ஆர். இரத்தினம் செட்டியார், தலைவர் சன்மார்க்க சங்கம் போளூர்

திரு. சிவராம ரெட்டியார், தலைவர் ஊராட்சி மன்றம், கொத்தண்டவாடி

திரு. வெங்கடாசல முதலியார், ஜெனரல் மெர்ச்சண்ட் தேரடித் தெரு. திருவண்ணாமலை

திரு. சுந்தர முதலியார், நிலக்கிழார் செங்கம்

திரு டி. பி. கோவிந்தசாமி நாயுடு, கால்டக்ஸ் ஏஜெண்ட், திருப்பத்தூர்

திரு. இராகவ முதலியார், B, A, B. L. திருப்பத்தூர்

திரு. இராசகோபால் B. A., M. L. A. ஆம்பூர்

திரு. மணியம் அப்பாவு முதலியார், வடச்சேரி

திரு, கோவிந்தராஜ முதலியார், பாப்பணப்பள்ளி

திரு. பரசுராம முதலியார், தலைவர் ஊராட்சி மன்றம், வடச்சேரி

திரு. டாக்டர் சுந்திர மூர்த்தி, விரிஞ்சிபுரம்

திரு. பி. எஸ். நடேச கவுண்டர், முத்துகுமரன்மலை, ஒடுக்கத்தூர்

திரு, இராசாபாதர் முதலியார், நிலக்கிழார், குளித்திகை

திரு. கெ. இராமலிங்கம் மயிலாப்பூர், சென்னை

திரு- ஆர். நடராஜன், ஸ்தாபகர், நடராஜா கல்விக் கழகம் சென்னை.

திரு ஏ. கெ. பாலசுப்பிரமணியம், துணைத்தலைவர் தமிழ்நாடு இராமலிங்கா மிஷன் சென்னை.

திரு. நடராசன், அருட்பெருஞ்சோதி அச்சகம்

திரு. டாக்டர் துரைசாமி முதலியார், முருகன் டிஸ்பென்சரி, சித்தூர்

திரு, கதிர்வேல் நாய்க்கர், தலைவர் சன்மார்க்க சங்கம் நவல்பூர்

திரு. புலவர் சுந்தர உடையார், சுந்தரர் நிலையம், ஆற்காடு

திரு. வாசுதேவ முதலியார், திருமகள் பிலிம்ஸ், குடியேற்றம்

திரு. பழனி முதலியார், தலைவர் சன்மார்க்க சங்கம், குடியேற்றம்

திரு. பா. சண்முகம் நிலக்கிழார், நெசல் ஆரணி



# சன்மார்க்கம் பரவவேண்டும்

ஜோதி ஆறுமுகனுர்
தலைவர், சமரச சுத்த சன்மார்க்க சங்கம்,
தொரப்பாடி



எங்கள் சங்கம் நூற்ருண்டு விழா விணக் கொண்டாட வேண்டும் என்று தீர்மானித்த போது எனக்கு மகிழ்ச்சி ஒரு பக்கம்-மாருத வருத்தம் ஒரு பக்கம் வந்து நின்று மாறிமாறித் தாக்கியது. மகிழ்ச்சிக்குக், காரணம் நாம் சன்மார்க்கப் பணி செய்வதும், அதுவும் நமது திருவருட் பிரகாச பெருமான் பெரு நெறியைபரப்பிட ஒரு கருவியாக இருக்கும். என்பதும் இந்த வாய்ப்பு கிடைத்ததை குறித்து மகிழ்ந்தேன். ஆனல் அந்த மகிழ்ச்சி அதிக நேரம் நிற்கவில்லை. இந்த உலகிலா சன்மார்க்கத்தைப் பரப்புவது? முடியுமா? தாயை மதியாத தனையன். கணவனை மதியாத மனைவி, ஆசானை மதியாத சீடன் ஆட்சியை மதியாத மக்கள்-ஆண்டவனை நினைக்காத மாந்தர் இவர்களையா நாம் திருத்த வேண்டும், முடியுமா? என்று மாருத வாட்டம் அடைந்தேன்.

என்ன செய்வது இவர்களை திருத்திடும் திறம் நம்மிடம் இல்லையென்ருலும், திருவருட்பா என்னும் தெய்வத் திருநூலுக்கு உண்டு - வள்ளல் பெருமானுக்கு உண்டு. எனவே நாம் மாந்தரை திருத்து முன் அவர்கள் கரங்களில் திருவருட்பாவை கொடுத்துவிடுவோம் வள்ளல் பெருமானை காட்டிவிடுவோம், என்று கருத வேண்டியதாயிற்று. அதனல் திருவருட்பாவில் உள்ள 100 திருப்பாடல்களை திரட்டி திருவருட்பா நூலை (தின வழிபாட்டு நூல்) ஒன்று வெளியிட்டோம். 100 பாடல்கள் கொண்ட நூலை நூற்ருண்டு நிறைவு விழாவின் நினைவாக வெளியிட்டு மக்களிடம் கொடுத்தால் அந்த அருட்பாடல்களை அவர்கள் நாள்தோறும் பாடி, தோத்திரத்தால் துன்மார்க்கம் நீங்கி சன்மார்க்கமடைவர் என்று கருதினேம். அதன்படியே வெளியிட்டுள்ளோம், இது ஒரு காரணம் நூற்ருண்டு நிறைவு விழா கொண்டாட.

தொரப்பாடி சன்மார்க்க சங்கம் உலகம் முழுவதும் சென்று உலகை திருத்த வேண்டும் என்று பலர் நினைக்கின்ருர்கள். ஆனல் என்னைப் பொறுத்த வரையில் நான் திருந்த வேண்டும். என் நண்பர்கள் திருந்த வேண்டும். பிறகு தொரப்பாடி மக்களை திருத்த வேண்டும் என்பது தான். இப்படியே ஒவ்வொரு சங்கமும் நினைத்தால் உண்மையான சன்மார்க்கம் நாடெங்கும் பரவும். இதுவே எனது ஆரம்ப ஆசை!

சங்கம் நடத்தும் அன்பர்கள் சன்மார்க்கத்தைப் பரப்ப வேண்டும் என்கின்ற இலட்சியம்-அன்பு நெறியைப் பின்பற்ற வேண்டும் என்கின்ற ஆசை மட்டும் கொண்டிருக்க வேண்டும். ஆராவாரம், படோடோபம் இவைகள் மனத்தை வளப்படுத்துவதற்குப் பதில் மாசுபடுத்தும். எனவே அடக்க உணர்ச்சியே நமது அடிப்படையாக இருக்கவேண்டும் இப்படிப்பட்ட சன்மார்க்கமே இனி தேவை. சன்மார்க்க சங்கத்தவர் மனத்திடம் உடையவர்களாக இருக்க வேண்டும் வள்ளலார் வகுத்த நெறியை மாற்றி அமைக்க வற்புறுத்தினுலும் மாறிவிடக்கூடாது. சன்மார்க்கம் உலகை உய்விக்க ஏற்பட்ட மார்க்கம் அதனை சிலர் தன்கருத்துக் ஏற்ற வகையில் பயன்படுத்தி பயன்பெற விட்டு விடக்கூடாது. இந்த விஷயத்தில் சன்மார்க்கிகர் திடமனத்துடன் விழிப்புடன் இருக்க வேண்டும். சங்கங்கள் எங்கெங்கு உளதோ அங்கெல்லாம் வாழும் மக்களிடம் சன்மார்க்க போதனைகள் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட பல உயர்ந்த ஒழுங்கு முறைகளை வகுத்துக் கொண்டு செயலாற்றவே வடஆற்காடு மாவட்டத்தின் சார்பில் இந்த நூற்ருண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிருேம். எனவே சன்மார்க்க சங்கங்கள் ஒருமித்து சன்மார்க்கத்தை பரப்பிட தங்களை தாயார் செய்து

கொள்ளுதல் வேண்டும். இப்படிப்பட்ட பணியினை செய்திட வாரீர் என்று சன்மார்க்க சங்கங்களை அழைக்கின்றோம் நாகரீகம் என்ற விஷப் போர்வையுடன் உலகை கெடுத்து வரும் துன்மார்க்கம் பரவிவரும் காலம் இது. இதனை எதிர்த்துப் போராட சன்மார்க்கிகளைத் தவிர வேறு எவரும் இலர். எனவே உங்களை கூவி அழைக்கின்றோம். புனிதநெறி—புன்மையை ஒழித்து புதுவாழ்வு தரும் பொது நெறி, சன்மார்க்க நெறி! அந்த நெறியில் நாம் நிற்போம்-நம்மவர்களை நிற்க வைப்போம் என்று கூறிக் கொள்வோம்.

ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமை உளராய் உலகியல் நடத்த வேண்டும். சாதி சமய, மதப்பூசல்கள் ஒழிய வேண்டும். அதற்காக சன்மார்க்கம் பரவ வேண்டும். பரப்பிட வாரீர் என்றும் மீண்டும் அழைக்கின்றோம்.

இந்த நூற்றாண்டு விழாவிற்கு வருகை தந்த பெருமக்கள்-கலந்து கொண்ட சங்கங்கள் உதவிய உள்ளங்கள் உழைத்த உத்தமர்கள் அனைவருக்கும் இறைவன் அருள் புரிந்து பெருவாழ்வு நல்க வேண்டும் என்று போற்றி எமது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.




# சாமிஸ் கபே

## கடைவீதி, ஆப்பூர். வ. ஆ.

சுவையான உணவிற்கும் சுவையான சிற்றுண்டிக்கும்

சிறந்த இடம்

**சாமிஸ் கபே**

எமது ஹோட்டலில் சகல விதமான சைவ உணவுச் சிற்றுண்டி வகைகளும்: தேனீர், காபி, முதலிய பானங்களும் சுவை மிக்கதாகவும், சுகாதார முறையிலும் தயார் செய்கின்றோம் உங்கள் நல்வரவை ஆவலுடன் எதிர்நோக்கும்

உரிமையாளர்,
சாமிஸ் கபே

Phone : Office 935 Resi : 135A.

# Selvam Electricals

**P.W.D. CONTRACTORS**

**Vellore, N. A. Dt.**

*

## செல்வம் எலக்டிரிகல்ஸ்

P.W.D. கண்டிராக்டர்ஸ்

(ஸ்டேட்பாங் சமீபம்)

வேலூர், வ. ஆ. ஜில்லா

- பிரிமியர் (Premier) மோட்டார், பம்பு, ஸ்டார்டர், சுச்சுகள் etc.,
- டயமண்ட் (Diamond) மற்றும் இரர ஒயர்கள்.
- Cromption, Kassels, Orient, Ganesh சீலிங் டேபில், எக்ஸாஸ்ட், கேபின்பேன்கள்.
- மற்றும் சகலவிதமான எலக்டிரிக் சாமான்கள்.

சாதனங்களுக்கும், ஒலி ஒளி அமைப்புகளுக்கும் சிறந்த இடம்

**Pro : S. K. G. P.** கந்தசாமி செட்டியார் & பிரதர்ஸ்.

## ஆம்பூர் கூட்டுறவு நில அடமான பாங்க் லிமிடெட்

ஆம்பூர் சாணுங்குப்பம்

தலைவர் : M. மணிவாசகன்

| | | |
|---|---|---|
| பங்கு பணம். | ரூ. | 1,66,198 |
| ரிசர்வ்கள். | ரூ. | 34,358 |
| கடன் லேவா தேவி. | ரூ. | 23,17,053 |

இவ்வங்கியில் வேலூர் தாலூக்கா ஆம்பூர் பிர்க்கா 28 கிராமங்களும், ஒடுக்கத்தூர் பிர்க்காவிலுள்ள மொதத 43 கிராமங்களும், துத்திபட்டு பிர்க்காவில் 32 கிராமங்களும் விவகார எல்லைக்குள் அடங்கி இருக்கிறது. இக்கிராமங்களிலிருந்து நீண்ட கால கடன் தவணைகளில் புதிய கிணறுகள் வெட்டவும், பம்பு செட்கள் அமைப்பதற்கும், டிராக்டர்கள் வாங்குவதற்கும் சீர்த்திருத்தம் செய்வதற்கும் ஒருவர் ரூ. 10,000 வரை கடன் பெறலாம்.

ரூ. 2,000 வரை நில அபிவிருத்தி காரியத்திற்காக நேரடியாக இப்பாங்கியில் கடன் கொடுக்கப்படுகின்றது. ஆகவே விபரங்களுக்கு தயவு செய்து விண்ணப்பிக்கவும்.

T. இராமச்சந்திரன்,
காரியதரிசி.

போன் : 702

அழகிய ஆடைகளுக்கும்

உயர்தர

டுவிட் சூட்டிங்ஸ்களுக்கும்

நவீன ஜவுளி ஷோ ரூம்

# சிவராம் டெக்ஸ்டைல்ஸ்

கமிசேரி பஜார், வேலூர்.

போன் : 202 ஸ்தாபிதம் : 1929

கல்யாண பட்டு சேலைகளுக்கு

"பனாரஸ் ஹவுஸ்"

# K. N. தாமோதரம் சன்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம், வேலூர்.

பென்னி, பம்பாய் மில் ஜவுளி,

பேன்ஸி ரக சேலைகளுக்கு விஜயம் செய்யுங்கள்.

Vist for Fancy Silk Sarees

## K. N. DAMODARAM SONS,

VELLORE, (S. India)

தலைமை காரியாலயம் : 266 பிராஞ்சு காரியாலயம் : 366

வட ஆற்காடு ஜில்லாவில்

பந்தல்கள் அமைப்பது என்றால்?

4 காரணங்கள்

- வேலைப்பாடுடன் அமைப்பது
- குறித்த நேரத்தில் வேலையை முடித்து தருவது
- நியாயமான தொகை பெற்றுக் கொள்வது
- மற்றவர்களின் பூர்ண திருப்திக்கு ஏற்ப அமைத்துக் கொடுப்பது.

இந்த 4 காரணங்களுக்காகவேதான் யாரும் எப்போதும்

- மஹாநாட்டிற்கு
- கலியாண காலத்திற்கு
- திருவிழாவிற்கு
- ட்ராமா, சினிமா, மற்றவகை பந்தல்களுக்கும்

அனைவரும் அணுகுகிறார்கள் எப்போதும்

G. பாலசுந்தர முதலியார்

மரம், மூங்கில் வியாபாரம் — பந்தல் அமைப்பாளர்

மரக்கடை தெரு, வேலூர் (வ.ஆ.மா.)

பிராஞ்ச் : ஆற்காடு ரோடு

எங்களிடம் தேக்கு ரோஸ்உட், வேங்கை, இருளை, கருமருது, புள்ள மருது தடி மரங்களாகவும், அரப்பு சயிஸ்களாகவும் சரசமான விலையில் குறித்த காலத்தில் கிடைக்கும்.

தேவையானவைகளை நேரிலும், ஆர்டரின் பேரிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Phone : 697 C. S. T. No. 777. Dt. 17-7-58

R. Krishnaswamy Mudaliar Sons

Timber, Bamboo, Tiles Merchants & Pandal Contractors,

Marakkadai Street, Vellore. (N. A. Dt.)

Branch : GOVERNMENT PENTLAND HOSPITAL ROAD, VELLORE. N.A.

*

**R. கிருஷ்ணசாமி முதலியார் சன்ஸ்**

மரம், மூங்கில், ஓடு வியாபாரம், பந்தல் அமைப்பாளர்கள்

மரக்கடைத் தெரு, வேலூர். (வ.ஆ.)

கிளை : கவர்ண்மெண்ட் பென்ட்லன்ட் ஆஸ்பத்திரி ரோடு,

வேலூர். (வ. ஆ.)

# அம்பீஸ் கபே

சிறந்த உயர்தர சிற்றுண்டி சாலை

ஆபீஸர்'ஸ் லைன்

**வேலூர். வ. ஆ.**

•

எங்களிடம் அப்பளம், பப்படம், வடவம் பொடி வகைகள்

ஊறுகாய் தினுசுகளும் கிடைக்கும்.

## இந்த தூய நன்னாளில்

## எங்கள் அன்பு கலந்த

## நல் வாழ்த்துக்கள்

# M/s. அறுமுகம் ஆயில் மில்ஸ்

எண்ணை வாணிபம்

**மணியக்காரர் தெரு**

**அரக்கோணம்**

உரிமையாளர்கள் :—

A. K. சுப்பிரமணிய முதலியார் & சன்

விஜயம் செய்யுங்கள்! வரவேற்கிறோம்!! மறவாதீர்கள்!!!

சுப விசேஷங்களுக்கு

பனாரஸ், டிஸ்யு, ஜங்கலா, புட்டா சேலைகளும், காஞ்சீபுரம், பெங்களூர், மைசூர், கொள்ளேகாலம் பட்டு சேலை ரகங்களும், பலவூர் நூல் ஜவுளி ரகங்களும் என்றும் எப்பொழுதும் விலை குறைவாகவும், நம்பிக்கையாகவும் கிடைக்கும்:

போன் நெ. 162

ராணி ஸ்டோர்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம்

லாங்கு பஜார், வேலூர். (வ. ஆ.)

முஸ்லீம்களுக்கு வேண்டிய எல்லாவிதமான கலியாண ஜவுளி ரகங்களும் நயமான விலையில் நாணயமாகவும் நம்பிக்கையாகவும் கிடைக்கும்.

*With the best compliments from:*

M/s CHANDRA PICTURES

FILM DISTRIBUTORS

5, THENNAMARAM STREET,

VELLORE-1. N.A. Dt.

Sole Proprietor:

K. VENKATESAN

*With best compliments of*

Phone: 33

MANI MEDICAL STORES

CHEMISTS & DRUGGISTS

61, BAZAAR STREET,

VANIYAMBADI, (N.A)

PROPRIETOR:

S. SUBBARAMANIYA CHETTIAR

# விவசாய பெரியோர்களுக்கு

## ஓர் நற்செய்தி!

அன்புடையீர் !

நெல், கம்பு, கேழ்வரகு முதலிய பயிர் வகைகளுக்கும், கரும்பு, தென்னை, வாழை மற்றும் பழ வகை மரங்களுக்கும் புஷ்ப செடிகளுக்கும், அதிக மாசூல் தரக்கூடிய

**பாரி கம்பனியின்**

சூபர் பாஸ்பேட், அமோனியம் பாஸ்பேட், பரம்பாஸ், பொட்டாஷ் அமோனியம் கிலோரைட் கலப்பு உறங்கள் முதலியவை எம்மிடம் கிடைக்கும் விவசாய பெருமக்கள் யாவரும் அநேக வருஷங்களாக இவைகளை வாங்கி பெருமிதமான பலனடைந்துள்ளார்கள். ஆதலால் ஷை உரங்களை வாங்கி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்

கிடைக்குமிடம்: **A. P. வேதாசலம்**

பாரி உரம் விற்பனையாளர்,

60, பெங்களூர் ரோட் வேலூர், (வ. ஆ)

(இன்டியன் ஓவர்சீஸ் பேங்கின் கீழ்)

வேலூர்
போன் நெ. 797

# பரமேஸ்வரி பவுண்டரி
&
# இஞ்சினீயரிங் ஒர்க்ஸ்

ஆபீஸர்ஸ் லேன், சித்தூர்

A. P. ST. RC. 1051 / 28-4-60. C. S. T. 541 / 63.

கரும்பு ஆலேகள் எலெக்டிரிக் வெல்டிங், மில் சம்பந்தமான ஸ்பேர் சாமான்களும், பம்பு செட், ஆட்டமொபைல்ஸ் சாமான்களும் ஆயில் என்ஜின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

உரிமையாளர் :

ஜி. கிருஷ்ணய்ய செட்டி

சித்தூர் A. P.

முக்கியமாக கல்கத்தா கரும்பாலேகள் சைஸ் வாரியாக எல்லா சைஸ்களிலும் விற்கப்படும். மற்றும், கரும்பு ஆலேக்கு பவரில் ஓடுவதற்காக வேண்டிய சாமான்கள் நாங்கள் தயாரித்து தருகிருேம்.

# S. R. H. QUALITY AND GUARANTEED PRODUCTS

1. Hi-Fi Amplifiers for Motion Picture and Public Addresses.
2. High Fidelity Loud Speakers for Motion Picture and Public Addresses - Permanent Magnet type and Field type.
3. High Frequency Driver Unit type Speakers.
4. High Frequency Tweeter (Cellular type) Horns for Motion Pictures.
5. Cross - over Dividing Network for H.F., / L.F. Loud Speakers.
6. Low Frequency reflex cabinet for L.F. Speaker for Motion Picture.
7. Motion Picture Slide Projectors.
8. Microphones.
9. Heavy Duty Motion Picture Are Rectifiers :

   Tunger valvetype ; High intensity ; Low intensity :
   High and low intensity combined,
   High intensity Metal Rectifier.
10. Battery Charges.
11. Driver Unit Diaphragms.
12. Voltage Regulating Transformers - Step - down and step - up.

Etc. Etc. Etc.

*Manufacturers :*

## SWAMY RADIO HOUSE

COMMISSARY BAZAAR.

VELLORE, SOUTH INDIA.

Phone : 455

எம்மிடம் எல்லா வகையான மரங்களும்

நியாய விலையில் கிடைக்கும்

# திரு முருகன் மரக்கடை

திருத்தணி நெடுஞ்சாலை

அரக்கோணம்

உரிமையாளர் : த. பஞ்சாட்சரம்

No. F.g. (3)–G./66

President of India
**Rashtrapathi Bhavan,**
New Delhi-4
March 21, 66

## PRESIDENT'S MESSAGE

The President sends his Best wishes for the success of the Ceremonies which will be held in April next to Mark the Completion of the Centenary Celebrations of the Samarasa Suddha Sanmarga Sathya Sangam, Thorapadi, Vellore.

Yours sincerely
Y. D. GUNDEVIA,
Secretary to the President of India

No. F.g. (3) - G/66

ராஷ்டரபதி பவன்
புதுடெல்லி-4.
மார்ச் 21-3-66

## குடியரசு தலைவர் வாழ்த்து

அன்புடையீர்,

வேலூர் தொரப்பாடியில் ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் நடைபெற இருக்கும் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் நூற்றுண்டு நிறைவு விழா வெற்றிகரமாக நடைபெற இந்திய குடியரசு தலைவர் தனது நல்ல வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்.

உண்மையுள்ள,
(Sd.) Y. D. குந்தேவ்யா
குடியரசுத் தலைவரின் செயலாளர்

# CHANDRA COFFEE WORKS

**21, BAZAAR STREET, CHITTOOR**

•

சோம்பலை நீக்கி சுறுசுறுப்பை அளித்து இன்பத்தை தருவது

யாவரும் விரும்பும், மணம் குணம் தரம் நிறைந்தது – சந்திரா காபி

நகர மக்கள் எப்போதும் ஆதரிப்பது – சந்திரா காபி

•

விஜயம் செய்யுங்கள்

# சந்திரா காபி ஒர்க்ஸ்

**21, பஜார் தெரு, சித்தூர்**

No. 2175/66

RAJ BHAVAN
Madras Governor's Camp,
P. O.
15th March 1966

# Governor's Message

Dear Sir,

With reference to your letter dated the 12th March, I am to convey the Governor's best wishes for the Success of the Centenary Celebration of the Samarasa Suddha Sanmarga Sathiya Sangam Thorapadi.

Yours Faithfully
(Sd.) K. V. SUBRAMANIAM,
P. A. to Governor.

---

எண் : 2175/66

ராஜ் பவனம்
சென்னை கவர்னர் கேம்ப்
15-3-1966

# கவர்னர் வாழ்த்துரை

அன்புடையீர்,

தங்களின் 12-3-66 கடிதத்தின் படி மாண்பு மிக கவர்னர் அவர்கள் "தொரப்பாடி சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க நூற்றுண்டு நிறைவு விழா வெற்றிகரமாக நடைபெற தனது நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்ருர் என்பதை தங்களுக்கு அறிவிக்கின்றேன்.

நன்றியுள்ள
(Sd.) K. V. சுப்பிரமணியம்
கவர்னர் அவர்களின் அணுக்கத் துணவர்.

**Minister of State**
Ministry of Law
India

5, SafdarJung Road,
New Delhi,
15th March 1966

Dear President,

I thank you for your letter and I am happy to note that the Samarasa Sudda Sanmarga Sathya Sangam has Completed 100 years of its existence and is Celeberating its Anniversary in Vellore. It is a tribute not only to the 'Sat Sangha' gathered in North Arcot District but also to the Great Power of Sri Ramalinga Swami. May the Samarasa Sudda Sanmarga Sathya Sangham grow from strength to Strength and may it be given to you all to carry on your good work many years to come.

With my regards.

Yours Sincerely
(Sd.) C. R. PATTABHIRAMAN

---

**சி. ஆர். பட்டாபிராமன்**
அமைச்சர் : மாநிலம், சட்டம்.
இந்தியா.

5, சாப்டர் ஜங்க்ரோட்
புது டெல்லி

## எனது நல்வாழ்த்துக்கள்

தங்களின் கடிதம் கிடைத்தது நன்றி! சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க நூற்ருண்டு நிறைவு விழா வேலூமா நகரில் சிறப்போடு கொண்டாடுவது அறிந்து மகிழ்கின்றேன்.

வடஆற்காடு மாவட்ட சன்மார்க்க அன்பர்கள் முயற்சியால் மட்டு மல்லாமல், திருவருட் பிரகாச வள்ளலாரின் பேரருளிஞல் எதிர் காலத்தில் சமரச சுத்த சன்மார்க்க சங்கம் மேலும் மேலும் வலுப்பெற்று பொலிவுடன் திகழும் என்பது உறுதி.

அனைவருக்கும் ஊக்கம் அளித்து, சங்கம் செழித்து வளர உங்களின் புனிதமான பணி பயன்படுவதாக!

விழா சிறப்புற்றேங்க எனது வாழ்த்துக்கள்

சி. ஆர். பட்டாபிராமன்
(அமைச்சர் மாநிலம், சட்டம்)

M. Bhaktavatsalam
Chief Minister

FORT ST. GEORGE
MADRAS-9
April 4. 1966

# முதல் அமைச்சர் வாழ்த்து



சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் நூற்றுண்டு நிறைவு விழா வட ஆற்காடு மாவட்டம், வேலூர், தொரப்பாடியில் இம்மாதம் 6ம் தேதி முதல் 12ம் தேதி வரை நடைபெற யிருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

விழா சிறந்த முறையில் நடைபெறவும், அதை யொட்டி வெளியிட யிருக்கின்ற சிறப்பு மலர் நல்ல முறையில் வெளிவரவும் எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்புள்ள,
**M. பக்தவச்சலம்,**
முதல் அமைச்சர்.

## சங்கர்ஸ் கபே

பழைய பஸ் நிலையம்

ஆம்பூர், வ. ஆ.

சுவையான உணவிற்கும், சுவையான
சிற்றுண்டிக்கும் சிறந்த இடம்

சங்கர்ஸ் கபே

எமது ஹோட்டலில் சகல விதமான
சைவ உணவுச் சிற்றுண்டி வகைகளும்:
தேனீர், காபி, முதலிய பானங்களும்
சுவை மிக்கதாகவும், சுகாதார முறை
யிலும் தயார் செய்கின்றோம் உங்கள்
நல்வரவை அவலுடன் எதிர்நோக்கும்

M. V. இராமசாமி
உரிமையாளர்

சுப விசேஷங்களுக்கு வேண்டிய

எல்லாவித நூல், பட்டு சேலைகள்,
பேன்ஸி மில் ஜவுளி தினுசுகள்
சில்க் ரகங்கள் புதிய டிசைன்களில்
ஏராளமாக தருவித்துள்ளோம்

இன்றே விஜயம் செய்யுங்கள்

## கிருஷ்ணா பேன்ஸி ஹால்

பனாரஸ் பட்டு ஜவுளி வியாபாரம்

174/1: லாங்கு பஜார்

வேலூர், வ. ஆ.

உயர்தரமான, சுகாதாரத்துக்கு
தகுந்தபடி தயார் செய்து மக்களுக்கு
உகந்த முறையில் நல்ல வகையில்
ருசிகரமான பிஸ்கெட்டுகள், கேக்
வகையராக்கள், கோதுமை ரொட்டிகள்
கிடைக்குமிடம்

## தேவராஜ பிள்ளை
## மாரிசன் பேக்கரி

பஸ் ஸ்டேன்ட் எதிரில்

ஆரணி

சிறந்த, உயர்தரமான சிற்றுண்டிகள்
கிடைக்கும்
சுகாதாரமான இடம்

பஸ் ஸ்டாண்டு எதிரில்

## மகா கணபதி விலாஸ்

சிற்றுண்டி சாலை

வாணியம்பாடி, வ. ஆ. ஜில்லா

உரிமையாளர்:

திரு. பரமேஸ்வரர்

எஸ். செல்லபாண்டியன்
பி.ஏ; பி.எல்.
சென்னை சட்டமன்றத் தலைவர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை-9

# நம்புகிறேன்

அன்புடையீர்,

தங்கள் சமரச சன்மார்க்க சங்க நூற்றாண்டு நிறைவு விழா 6-4-66 முதல், 12-4-66 வரை நடப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். அதற்கு நான் வர இயலாமைக்கு வருந்துகிறேன். விழா சிறப்பாக நடந்தேறி நாட்டு மக்கள் பண்போடு சமரச ஞானமும் பெற்று, தேசத்திற்கும், மக்களுக்கும் பணிபுரிவார்கள் என்று நம்புகிறேன்.

தங்களுடைய விழாவிற்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள்

**எஸ். செல்லபாண்டியன்**

(சென்னை சட்டமன்றத் தலைவர்)

**N. S. S. Manradiar**
(Pattagar of Palaya Kottai)
Minister for Food

Fort St. George
Madras.
18-3-66

# உணவு மந்திரி வாழ்த்துகிறுர்

அன்பு நெறியும் ஆன்மநேய ஒருமைப்பாடுமே அருட்பிரகாச வள்ள லாரின் உயிர்மூச்சாக விளங்கின: மக்கள் எந்த :விதமான பேதமும் இன்றி, ஒற்றுமையோடும் ஒழுக்கத்தோடும் வாழ அவர் வழிகாட்டினுர். இறையரு ளால் அவரது உள்ளத்தில் ஊற்றெடுத்த ஞான கங்கை அனைவருக்கும் அருள் சுரந்தது. மக்கள் அறியாமையும் பசியும் பிணியும் நீங்கி ஒப்பற்ற வாழ்க்கை நடத்துவதற்கு உறுதுணையாக, சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தை அவர் நிறுவினுர்.

இச்சங்கம் கடந்த நூற்ருண்டுக் காலமாகச் சீரிய முறையில் பணி யாற்றி வந்துள்ளது. அண்மையில் நூற்ருண்டு விழா சிறப்பாகக் கொண் டாடப்பட்டது. மகிழ்ச்சிக் குரிய விஷயமாகும். வள்ளலாரின் கொள்கைகள் தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல், பாரதத்தின் பிற பகுதிகளிலும் வெளி நாடு களிலும் பரவும் வகையில் தொண்டாற்ற வேண்டியது. அவரது வழியில் நடக்கும் அன்பர்களின் தலையாய கடமையாகும். இதனை நிறைவேற்றும் வகையில் திருவருட்பாவில் ஆழ்ந்த அறிவும் அனுபவமும் நிறைந்த அறிஞர் களைக்கொண்டு விரிவுரைகளுக்கு ஏற்பாடு செய்திருப்பதை வரவேற்கிறேன். விழா இனிது நடந்தேறவும், அதனை யொட்டி வெளியிடப்படும் மலர் சிறப்பாக அமையவும் எனது நல் வாழ்த்துக்கள்.

என். எஸ். எஸ். மன்ருடியார்,
உணவு அமைச்சர், சென்னை.

R. VENKATARAMAN,
Minister for Industries

Fort St. George,
Madras-9
1-4-66

# தொழில் அமைச்சர் வாழ்த்து

ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செயல்வேண்டும் என்ற குறிக்கோளை எங்கும் பரப்பிய பெருமான் வள்ளலார், ஜீவகாருண்ய நெறி நின்று, பகைமை, பிணக்கு, பூசல், போர் ஆகியவற்றை ஒழித்து, மக்கள் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்பதற்காகவே, சமரச சன்மார்க்க நெறியை அவர் கண்டார். இவர் அருளிச் சென்ற திரு அருட்பா வையத்திற்கே வழிகாட்டும் ஒளி விளக்காகத் திகழ்கிறது,

வள்ளலாரின் நெறியை மறவாமல், சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் வளர்ச்சியில், அன்பர்கள் ஆர்வம் காட்டி வருவது பெரிதும் பாராட்டத் தக்கதாகும். அந்த வகையில், வட ஆர்க்காடு மாவட்டம், தொரைப்பாடி, சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினர் கொண்டாட இருக்கும் நூற்றுண்டு நிறைவு விழா வெற்றிகரமாக நடைபெற என் நல் வாழ்த்துக்கள்

(ஒப்பம்) ஆர். வெங்கட்டராமன்
தொழில் அமைச்சர்

வ. ஆ. மாவட்ட

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க

நூற்றுண்டு நிறைவு விழாவில்

எங்கள் அன்பு கலந்த வாழ்த்துக்கள்

## V. பாலு செட்டியார் & பிரதர்ஸ்

சௌந்தர் ஆயில் மில்ஸ்,

திருவண்ணுமலை : : வ. ஆ. ஜில்லா.

**கோ. பூவராகன்**
செய்தி விளம்பரத் துறை அமைச்சர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை-9

4—4—1966

# நல் வாழ்த்துக்கள்

சமரச சுத்த சன்மார்க்க நெறியைத் தழைத்தோங்கச் செய்த வள்ளலார் சமய அன்பர்களின் உள்ளங்களில் நிறைந்திருக்கிறார். அவர் விளக்கொளி போல அருள்நெறி ஒளியை எங்கும் பரப்பி அழியாத புகழைப் பெற்று விட்டார். அவர் காட்டிய வழியில் சென்று, எல்லாரும் இன்புற்றிருக்கும் வகையில், தூய தொண்டாற்றும் தொரப்பாடி சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினர் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவைச் சிறப்பாக கொண்டாட முன் வந்திருப்பதை வரவேற்கிறேன். விழா வெற்றிகரமாக நடைபெற என் நல் வாழ்த்துக்கள்.

அன்புடன்,
(ஒப்பம்) **கோ. பூவராகன்**

போன் : 742

# ஜோதி & கம்பெனி

**ஸ்டாக்கிஸ்ட்: டால்மியா போர்ட்லண்டு சிமெண்ட்**

பாரி அண்டு கம்பெனி லிமிடெட்., ''கில்பர்ன்'' கித்தான்களும் நவநாகரிகமான சுகாதார சம்பந்தப்பட்ட சாமான்களும் கிடைக்கும்.

**No.** 27/28, லாங்கு பஜார், வேலூர், (வ. ஆ.)

**ஏஜண்டுகள் :**

டால்மியா சிமெண்டு (பாரத்) பிரைவேட் லிட்.,
பாரி அண்டு கம்பெனி லிட்., கில்பர்ன் கித்தான்கள்
டிஸ்டிரிபூட்டர்ஸ் வடஆற்காடு & செங்கல்பட்டு
இந்துஸ்தான் டைபோர்டு சானிட்டரிவேர்ஸ்

**சப்ளேயர்ஸ் :**

சி. எம். சி. ஆஸ்பத்திரி, வேலூர்.
எஸ். எல். ஆர். ஸானிடோரியம், கனிகேரி.
கவர்ண்மென்ட் பாலிடெக்னிக், வேலூர்.
கவர்ண்மென்ட் டிரான்ஸ்போர்ட் ஹவுஸ், வேலூர்.
ஜெர்மன் லெப்ரஸீ சென்டர், சேத்துப்பட்டு.
மற்றும் எலக்ரிஸிடி போர்டு முழுவதும் சப்ளை செய்கிறோம்

அறுசுவை உண்டிக்கும், ருசிகரமான
சிற்றுண்டிகளுக்கும் எல்லோரும்
விரும்பும் சிறந்த இடம்

●

## மணீஸ் கேப்

மார்க்கட் ரோடு

ஆரணி

சுகாதாரமான இடம்
உயர்தரமான சிற்றுண்டிகள்
கிடைக்குமிடம்

●

## முரளிஸ் கேப்

மார்க்கட் ரோடு

ஆரணி

S. M. A. MAJID
Minister for Local
Administration

Fort St. George
Madras
18—3—1966

# MESSAGE

I am glad to learn that the Samarasa Suddha Sanmarga Sathiya Sangam is celebrating the completion of the 100th Year of the advent of Lord **RAMALINGAM** into the Spiritual arena from 6th to 12th April 1966 at Thorapadi, Vellore and convey my Prayers for the success of the celebrations.

(Sd.) S. M. A. MAJID
Minister for Local
Administration

---

S. M. A. மஜீத்
ஸ்தலஸ்தாபன அமைச்சர்

போர்ட் செயின்ட் ஜார்ஜ்
சென்னை

# வாழ்த்துச் செய்தி

பேராற்றலுடன் நிலவுலகில் தோன்றிய அருளாளர் அருட்திரு இராமலிங்க அடிகளார் நிறுவிய ச. சு. ச. ச. சங்க நூற்றுண்டு நிறைவு விழாவினை சிறப்போடு வேலூரில் உள்ள தொரப்பாடியில் 6-ந்தேதி முதல் 12-ந்தேதி வரையில் கொண்டாடுவது கேட்டு மகிழ்கின்றேன் விழா சிறப்புடன் நடைபெற வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

S. M. A. மஜீத்
ஸ்தலஸ்தாபன அமைச்சர்

மு. வரதராசன்
தலைமைத் தமிழ்ப் பேராசிரியர்

சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை-5

# டாக்டர், மு. வ. வாழ்த்து

இரக்கமே வடிவாக வாழ்ந்த பெருவாழ்வு "இராமலிங்க வள்ளலாரின் விழுமிய வாழ்வு." தெற்சபை உயிர்க்கெலாம் இன்பம் செய்வதென் இச்சையாம் எந்தாய்" என்று முறையிட்ட அருளாளர் அவர். அன்பும் அறமும் ஓங்கினால்தான் உலகில் அமைதியும் இன்பமும் தழைக்கும் என்ற பேருண்மையைப் பல ஆயிரம் பாட்டுக்களில் பாடியருளிய சான்றோர் அவர். அத்தகைய வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க நூற்றாண்டு நிறைவு விழாவை வேலூரில் கொண்டாடுதல் பற்றி அறிந்து மகிழ்கிறேன். விழா இனிது நடந்து பலருடைய உள்ளத்திலும் சன்மார்க்கம் தழைக்க உதவுமாறு விளங்கப் படுவதாக.

மு. வரதராசன்

ஆனந்த ஆஸ்ரமம்.
சென்னை

## R. சதாசிவம் அவர்கள்

### சென்னை உயர்மன்ற நீதிபதி



பிறவிப் பெருங்கடலை நீந்தும் தெப்பமாகிய பெருநெறி பிடித் தொழுக வழிகாட்டிய திருவருட் பிரகாச வள்ளலார் நிறுவிய சமரச சன்மார்க்க சத்திய சங்கத்தின் நூற்றாண்டு விழா பல இடங்களில் நடைபெறுவதைப் பார்க்கும் பொழுதும், கேட்கும் பொழுதும் உருவமின்றி வள்ளலார் உலகமெங்கும் உள்ளார் என்ற கருத்து புத்துயிர் பெறுகிறது. உலகம் தழைக்க, சென்ற நூற்றாண்டில் அவதரித்த திரு. இராமலிங்க சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு நமது வாழ்க்கையைப் புனிதமாக்கப் பயன்படுகிறது. ஆலய வழிபாட்டை மக்களுடைய மடமை என்று கருதுபவரும் உண்டு. சுவாமிகளின் வாழ்க்கையும் அவரியற்றிய திருவருட்பாவும் திருக்கோயில் வழிபாட்டிலே அவருக்கிருந்த உறைப்பையும் நன்கு விளக்குகின்றன. ஜாதி, மத, சமய வேற்றுமைகளால் ஏற்படும் சச்சரவுகளை நீக்கி ஒருமைப்பாட்டை நிறுவ சுவாமிகள் திருவாய் மலர்ந்த உபதேசங்கள் சில சமயவாதிகளுக்குப் பொருத்தமாக தோன்றவில்லை அவர்களிலொருவர் வள்ளலாரியற்றிய பாடல்களுக்கு திருவருட்பா என்ற பெயரிட்டது பொருந்தாதென்று வழக்கும் தொடுத்தார். இவ்விதம் தெய்வீக மனிதனையும் நீதிமன்றத்தில் வரும்படியாக கட்டளை பிறப்பிக்க முடியுமென்பது, நீதிமன்றத்தில் பெரியோர் சிறியோர், நல்லார் பொல்லார், கற்றவர் கல்லாதவர், மதிப்பவர் மதியாதவர், செல்வந்தவர் வறிஞர் என்ற வேறுபாடு கருதாமல் நடுநிலைமை ஸ்தாபனம் நீதி வழங்குமிடமென்ற மேன்பட்ட கருத்தை விளக்கினும் இவ்வித வீண் வழக்குகளைத் தடுக்க வழியில்லையே என்பதை நினைக்கும் பொழுது மனக்கவலை ஏற்படுவதியற்கை. எனினும் நீதிமன்றத்தில் சுவாமிகள் நுழைந்ததும் அமைதி ஏற்பட்டு, வாதியுட்பட எல்லோரும் கை கூப்பி வணங்கி, வரவேற்றனரென்றும், முடிவில் சுவாமிகளால் பாடப்பெற்ற பாக்களை 'அருட்பா' வென்று பெயரிட்டதில் தவறில்லையென்று வழக்கு தள்ளிவிடப் பட்டதென்றும் கேட்கும் பொழுது சுவாமிகளின் தெய்வீக நிலையும், நீதிஸ்தலத்தின் உயர்ந்த நிலையும் நமக்கு நன்கு புலப்படுகின்றன.

''ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமை யுளராகி உலகியல் நடத்தல் வேண்டும்''

என்ற சுவாமிகளின் அருங்கருத்து தற்சமயம் நமது சமுதாயத்திற்கு மட்டுமல்ல, உலக சமுதாயத்திற்கும் கலங்கரை விளக்கு போல் வழி காட்டும் தத்துவம் ஆகும். இந்த வாழ்த்துரையினை சுவாமிகளின் இறுதி வாக்குடன் முடிப்பது பொருத்தமென்று கருதுகிறேன்.

''புணைந்துரையேன் பொய்புகலேன்
சத்தியம் சொல்கின்றேன்
பொற் சபையிற் சிற்சபையிற் புகுந் தருண
மிதுவே.

திரு. கோ. மு. முத்துசாமி I. A. S.
முன்னுள் கலெக்டர், தனி அலுவலர்,
தமிழ் மொழி பெயர்ப்பு ஆட்சி மொழிக் குழு சென்னை.

# வாழ்த்துரை

திருவருட் பிரகாச வள்ளலார் வகுத்தருளிய சமரச சன்மார்க்கத்தில் அன்பும் அருளும் மிகவுண்டு. அணுகியவர்யாவருக்கும் கனிவுண்டு. சாதி மதச் சண்டையில்லை. மக்கள் யாவரும் ஓரினம். இத்தகைய

''சமரச சன்மார்க்ம் மடைந்த வருடன்
கூடித் தெருளுடைய அருள் நெறியில்
களித்துவிளை யாடிச் செழித்திடுக வாழ்க''

என வாழ்த்தியவர் சற்குருவாகிய ''மணிப் பொதுவில் வயங்கி நடத்தரசு'' என நமக்கு எடுத்துக் காட்டி அவ்வாழ்வை மேற்கொள்ளுமாறு நமக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார். தற்காலத்திய சூழ்நிலைகளையெல்லாம் சீர்தூக்கி அலசிப் பார்ப்போம் எனில் இச்சமரச மார்க்கம் உடனடித் தேவை என்பது நன்கு புலனாகும். நம் நாட்டில் அன்றி பிறநாடுகளிலும் எழுந்துள்ள எத்தனை எத்தனை துன்பங்களுக்கெல்லாம் பரிகாரம் தேடிக்கொடுக்கும் உயிர் நாடியாக விளங்குகிறது. இத்தகைய மாபெரும் பேற்றைப் பல்லோருக்கும் எடுத்துக் காட்ட அப்பெருமான் நிறுவிய சத்திய சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழா நடைபெறுகின்றது. இதே நோக்கில் இது சமயம் ஓர்சிறப்பு மலரும் மிளிர்கிறது. இறைவன் அருளால் வள்ளலாளர் கருணை கொண்டு இத்திட்டம் சிறப்புற வெற்றி காண்பதாக.

''மார்க்க மெலாம் ஒன்றாகும் மாநிலத்தீர் வாய்மையிது
தூக்க மெலாம் நீக்கித் துணிந்துளத்தே-ஏக்கம்விட்டுச்
சன்மார்க்கச்சங்கத்தைச் சார்த்திடுமின் சத்தியநீர்
நன்மார்க்கஞ் சேர்வீர் இந்நாள்''

# MADURAI UNIVERSITY

**T. P. MEENAKSHISUNDARAN** — Vice-Chancellor

**UNIVERSITY BUILINGS** — MADURAI-2

## கழகம் உழைக்குமாக

"திருவருட் பிரகாச வள்ளலார் ஆன்ம நேய ஒருமைப்பாட்டின் அடிப்படையில் உலக குடும்பத்தை உருவாக்க முயன்ற சித்தர். அவர் எண்ணிய எண்ணத்தை இனியதாக உலகமே ஒப்புக்கொள்கிறது. அவருடைய பாடல்களைப் பல மொழிகளிலும் மொழிபெயர்த்துக் கொடுத்தால் அதனை வேண்டி நிற்கும் உலகம் வரவேற்கும். அந்தத் தொண்டில் தங்கள் கழகம் உழைக்குமாக."

தங்கள் அன்புள்ள,

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

துணைவேந்தர்.

# University of Madras

**Dr. T. M. P. MAHADEVAN**
M.A., Ph. D.,
Director:
Centre for Advanced Study in
Philosophy
University of Madras, Madras-5.

UNIVERSITY BUILDINGS,
CHEPAUK, MADRAS-5

அன்புடையீர்,

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் நூற்றுண்டு நிறைவு விழா மலர் வெளியிடுவது பற்றி மிக்க மகிழ்ச்சி. தங்கள் தொண்டு அருள் நெறியில் ஈடுபாடுடையவர்கள் அனைவராலும் பாராட்டத் தக்கதாகும். நூற்றுண்டு விழா நன்கு நடைபெறவும் விழா மலர் சிறப்புற வெளிவரவும் இறைவன் அருள் முன்னிற்பதாக !

டி. எம். பி. மஹாதேவன்.

உ

முருகா

அருட் பெருஞ் சோதி ! தனிப் பெருங் கருணை ! !

காஞ்சிபுரம்

# இராமலிங்க மிஷன்

(பதிவு எண். 86/63.)

# சத்திய ஞான சபை திருப்பணி

எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம்வல் லான்றனையே ஏத்து

சமரச சன்மார்க்க நெறி உலகெங்கும் பரவினால் நாடும் நகரமும் சமாதானமாக வாழும். ஆதலால் முத்தித்தலம் ஏழனுள் முதன்மையான காஞ்சிமா நகரில் சத்தியஞான சபை புதுக்க முயன்றுள்ளோம். திருப்பணி தொடங்கி யிருக்கின்றோம்.

அன்பர்கள் அனைவரும் இந்த நற்பணிக்கு தாராளமாக உதவி யருளுமாறு வேண்டுகின்றோம்.

P. D. கமலம்மாள்
ஸ்தாபகர்.

திருப்பணிக் குழுத் தலைவர்,
கிருபானந்த வாரியார்

M. லோகநாத முதலியார்
தலைவர், இராமலிங்க மிஷன், காஞ்சிபுரம்.

**Dr. V. RAGHAVAN, M.A., PH.D.**
Professor of Sanskrit
UNIVERSITY OF MADRAS
MADRAS-5.

7, SRI KRISHNAPURAM STREET
ROYAPETTAH, MADRAS-14
Phone : 85091

In the reawakening of its soul that the country witnessed in the last century, there were several manifestations of the "Supreme Light of Grace", and among the **Mahatmas** who thus appeared at that time, Sri Ramalinga Swamigal holds a high place. Coming in the line of the Alwars and Nayanmars of the ancient times and of Arunagiri and Thayumanavar of the later times, Sri Ramalinga Swamigal was of special significance as he, like Ramakrishna Paramahamsa, appeared in modern times and by his life and teaching, he bore a special message to modern India. He was an inspiration through his life and contact, as well as through the spoken word, his lectures and his songs.

The large body of the "Poetry of Divine Grace" **(Arutpa)** which flowed from him is itself remarkable for its special literary quality and the ideas and teachings of the Saint and the truths of spiritual experience that they embody. The language of his poems, at which, it appears, Pandits of the time pricked their ears, is remarkable for its simple spoken form, flow and appeal; and we may say that in this respect, it heralded a new form which Bharati handled later. One finds in **Arutpa** not only gems of thought but very happy, compact and striking expressions of them. Some of the phrases in which God or phases of spiritual experience are described or characterised are most effective in their pithiness and brilliance. His religion of the Spirit rose above all distinctions and aimed at a path of pure harmony **(suddha-samarasa-san-marga).** In the modern age of growing materialism, he aimed at the manifestation of the spiritual powers latent in every one, so that a universal brotherhood may be established. By these as well as by his other teachings of unity, equality, vegetarianism etc., he may be held to have been a fore-runner or Gandhiji.

"All paths are towards the one goal", "Let the world flourish through unity" — such are some of his exhortations which are most relevant in the present times. Sri Ramalingaswamigal declares also that he had attained the status of the eternal **(narum nittiyan anen)** and that God sent him on his mission to establish His Kingdom here itself. In one of his last utterances, he said "We spread out our shop, none came to take the goods, we are now closing!" It behoves every one of us to take as much of the goods as possible for oneself; his great 'shop' is not closed, it is still open and spread before us in his **Arutpa!**

டாக்டர் V, ராகவன், M.A., PH.D.
சமஸ்கிருத பேராசிரியர்
பல்கலைக் கழகம் சென்னை
சென்னை-5

7, ஸ்ரீ கிருஷ்ணபுரம் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14
போன்: 85091

சென்ற நூற்றாண்டு முதல் நாட்டில் மாபெரும் ஆத்மீக கருணை ஒளி தோன்றியுள்ளது. அத்தகைய அருளொளி வீசி வந்த மகாத்துமாக்களில் திரு ஜோதி இராமலிங்க அடிகளார் ஓர் உன்னத இடம் பெற்றுள்ளார். பண்டை நாள் தோன்றிய நாயன்மார், ஆழ்வார் வழியிலேயும், பிற்கால மகான்களாகிய அருணகிரியார், தாயுமானர் வழியிலேயும் வந்த இராமலிங்க அடிகளார் நவீனகாலத்தே தோன்றிய ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரைப் போல, சிறப்பான அவதாரா புருஷராவார். தனது வாழ்க்கையிலும் உபதேசங்களிலும் நவ இந்தியாவிற்குத் தனியான வழிகாட்டியுள்ளார். தன் வாழ்க்கையாலும் நேரிடையான உதாரணத்தாலும், உபதேசங்களாலும், பாடல்களாலும் அவர் இக்காலத்தவர்க்கு ஓர் ஆதர்ச புருஷராக விளங்கினர்.

எண்ணற்ற அருட் பாடல்களை அவர் அள்ளி வழங்கினர். அவை இலக்கிய மேன்மையும், உயர் கருத்துக்களையும், மேலான உபதேசங்களையும் வெளியிடுவதோடு ஆத்மீக சுய அனுபவங்களையும், வாரி வழங்குகின்றன. அவரது பாடல்கள் பேச்சு வழக்கங்களாலும் தனது எளிமையாலும், நீரொழுக்கம் போன்ற ஓட்டத்தினலும் அக் காலப் பண்டிதர்களின் கண்ணையுங் கருத்தையும் கவர்ந்ததோடு ஆழ்ந்த பொருளாழத்தில் திளைக்க வைத்தது. இந்தத் தமிழ் நடையே பின் நாளில் பாரதியைக் கையாளத் தூண்டியது.

அருட்பாவில் நாம் மணியான கருத்துக்களைக் காண்கிறோம். சுருங்கக் கூறி விளங்க வைக்கும் பொன்மொழிக் குவியல்களைக் காண்கிறோம்; இன்பமூட்டும் உபதேசங்களைப் பார்க்கிறோம்.

ஆண்டவனையும், தெய்வீகத்தையும் தன் ஆத்துமானுபவத்தையும் குறிப்பிடும் தனிச் சிறப்புள்ள பல புதுமையான சொல்லோவியச் சுடர்களைக் காண்கிறோம். அவரது ஆத்துமீக மார்க்க பல வேறு பாடுகளையுங் கடந்து உயர்ந்தோங்கி நிற்கிற சுத்த சமரச சன்மார்க்கமாய்-ஆன்மீக ஒருமைப்பாடாய் விளங்குகிறது.

உலகாயதத்தில் மூழ்கியுள்ள இன்றைய உலகில், ஒவ்வொருவனிடத்தும் மறைந்து கிடக்கின்ற ஆத்தும சக்தியை வெளிப்படுத்துவதையே அவர் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்; அதன் வழியிலேயே, உலக சகோதரத்துவத்தை நிலைநாட்ட முயன்றுள்ளார். இத்தகைய உபதேசங்களாலும், மற்றுமவரது ஒற்றுமை. சமத்துவம், சைவ உணவு போதனை முதலியவற்றால், காந்தியடிகளுக்கு இவரே வழிகாட்டியவர்.

“பொங்கு பல சமயங்களெல்லாம் ஓரே பரம் பொருளையே காட்டுகின்றன” “ஒற்றுமை வழி ஒன்றே உலகமுய்யுயர்ந்த வழி”—என்பன இக்காலத்தாரைத் தட்டி எழுப்பும் சில உபதேச வாக்குகள், மேலும் அவர் “நானும் நித்தியன் ஆனேன்”—என்ற வாக்கிற்கேற்றபடி மரணமிலாப் பெருவாழ்வை இம்மண்ணுலகிலேயே விண்ணுலக வாழ்வைக் காணச் செய்வதே அவர் திருப்பணி.

இறுதி நாளிலே அவர் கூறினர் “கடையை விரித்தேன்; கொள்வாரில்லை; சுருட்டிக் கொள்கிறேன்,” என்று.

அவர் விரித்து வைத்த கடைச் சரக்கை நாம் ஒவ்வொருவரும் கூடிய வரை கொள்ள வேண்டும். அவரது சிறந்த ‘கடை’—மூடப்படவில்லை; அது இன்னும் திறந்து வைக்கப்பட்டு நம்முன் அருட்பா மூலம் அள்ளிக் கொள்ளத் தயாராக இருக்கிறது.

# நற் செய்தி

வாணியம்பாடி நகர சுற்றுப்புற பொது மக்களின்

பிரயாண வசதியை முன்னிட்டு

**25-2-66 முதல் வாடகைக்கு**

**ஓர் வசதியான**

# கார் (டாக்ஸி)

வாணியம்பாடி பஸ் நிலையத்தில் கிடைக்கும் என்பதை

மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

●

விபரங்களுக்கு அணுகுக :

# ஓட்டல் எவரெஸ்ட்

**பஸ் நிலையம் :: வாணியம்பாடி**

இங்ஙனம்,

**P. M. கோவிந்தராஜ்**

Phone : 61527

# Dr. R. SUBRAMANIAM

B. Sc., M.D., M.R.E.P. (London)

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க நூற்றுண்டு நிறைவு விழாக்குழு பதிப்பிக்க போகும் சிறப்பு மலருக்கு வாழ்த்து அனுப்பும்படிக் கேட்டுக் கொண்டதற்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன். இம்மாதிரியான மலர்கள் மேலும் மேலும் வெளிவரவேண்டும்.

தற்காலத்தில் உலகத்தில் பலபாகங்களில் சண்டையும் சச்சரவும் மலிந்து கிடக்கும் பொழுது இம்மாதிரியான சிறந்த மலர் ஜனங்களுக்கு அருள்திரு இராமலிங்க அடிகளார் போதித்த சமரச சன்மார்க்க கொள்கைகளை எடுத்துக் காட்டி, அவைகளை கடைபிடிக்கும்படு செய்யும் என்று தம்புகிறேன்.

அருட்பா அநேகமாக எளிய நடையில் இருந்தாலும் சில இடங்களில் தமிழில் அதிகப் பாண்டித்தியம் இல்லாதவர்கள் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது. கூடிய வரையில் பதம் பிரித்து வார்த்தைகளுக்கு அர்த்தம் போட்டால் என்னைப்போல் உள்ளவர்க்கும் உபயோகப் படும். அதோடு ஆங்கிலத்திலும் மொழி மொழிபெயர்த்தால் உலகத்திற்கே பயன்படும்,

இங்ஙனம்

இர. சுப்பிரமணியம்

*Srimathi :*

**R. RAJARATNAM** M. A., L. T.,
Retired Lecturer,
Lady Willingdon Training College,
MADRAS-5.

195 B. B., Lloyds Road,
MADRAS-5
15—3—66

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க நூற்றாண்டு நிறைவு விழாக் குழுவின் அமைப்பாளர்களுக்கு எழுதுவது,

ஐயன்மீர்! வணக்கம் மக்கள் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று இருக்கும் இந்நாளில், பாமரமக்களையும் நல்லதையே நினைக்க, சொல்ல, செய்யத் தூண்ட வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் நீங்கள் இவ் விழாவினைக் கொண்டாடுவது குறித்து உங்களை வியந்து பாராட்டுதல் வேண்டும்

எவ்வுயிரையும் தன் உயிர்போல் நினைத்து அன்பு செலுத்திய அருள் பிரகாச வள்ளலாரின் சமரசக் கொள்கைகளைப் பரப்ப முன்வந்த உங்கள் முயற்சி வெற்றி பெற்றதாகுக!

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய ஞானியைப் பற்றி அறிந்து கொள்ளாதவருக்கு அவருடைய அருள் வாக்கின் மூலமாகவே அவரது கனிந்த உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்ட வந்த உங்கள் தொண்டு சிறப்ப தாகுக!

வாழ்க வையயம்
வாழ்க சமரசம்
வாழ்க சுத்த சன்மார்க்கம்.

இங்ஙனம்

**இராஜரத்தினம்.**

15-3-1966

அழகிய

ஜன்னல்கள், வென்டிலேட்டர்கள், குளோசபல் கேட், பென்சிங் வேலைகள்

மற்றும்

கடைசல் வேலைகள் சுத்தமாகவும், குறித்த விலையிலும் குறித்த நேரத்திலும் செய்யப்படும்.

இரும்பு சம்பந்தமான எல்லா வேலைகளுக்கும் எம்மிடம் அனுகவும்.

போன்: 686

**ஆறுமுகம் இன்ஜீனிரிங் ஒர்க்ஸ்**

(கவர்ன்மெண்ட் கான்ட்ராக்டர்ஸ்)

120/2, லாங் பஜார், : : வேலூர் (வ. ஆ.)

அழகிய

அச்சு வேலைகள், பலவித கலரில் சிறந்த முறையில்,

குறித்த நேரத்தில் சுத்தமாக செய்யுமிடம்.

போன், 1117

**சௌந்தர் பிரஸ்**

(கவர்ன்மெண்ட் கான்டிராக்டர்ஸ்)

120/2, லாங்பஜார் & 15/2, சுண்ணும்புகார வீதி

**வேலூர் (வ. ஆ.)**

# வாழ்த்துச் செய்தி

திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கள் B. A. B. L.

அறநிலைய ஆணையர், சென்னை-34.

நம் தமிழ் நாட்டில் வாழையடி வாழையாகத் தோன்றியருளிய சான்றோர்களுள், திருவருட் பிரகாச வள்ளலார் ஆகிய இராமலிங்க அடிகள் தலை சிறந்த ஒருவர் ஆவார்.

அடிகளார் அருளிச் செய்துள்ள திருவருட்பா. தேனினும் இனிய செந்தமிழ் நடையில், ஓதுபவர் உள்ளமெலாம் கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

உடல்குளிர உயிர்தழைக்க உணர்ச்சி ஓங்க
உளங்கனிய மெய்யன்பர் உள்ளத் தூடே
கடல்அனைய பேரின்பம் துளும்ப நாளும்
கருணைமலர்த் தேன்பொழியும் கடவுட் காவே!
விடல்அரிய எம்போல்வார் இதயம் தோறும்
வேதாந்த மருந்தளிக்கும் விருந்தே. வேதம்
தொடல்அரிய வெளிமுழுதும் பரவி ஞானச்
சோதிவிரித் தொளிர்கின்ற சோதித் தேவே!

என இராமலிங்க அடிகள் இறைவனைப் பற்றிப் பாடிப்பரவுகின்றார்.

அம்முறையில் திருவருட்பாப் பாடல்களை, நாம் அன்புடன் ஓதுந் தோறும் நம் உடல் குளிர்கின்றது; உயிர் தழைக்கின்றது; உணர்ச்சி ஓங்குகின்றது; உள்ளம் கனிகின்றது; உள்ளத்தின் ஊடே ஒரு பேரின்பம் துளும்புகின்றது.

திருவருட்பாவின் சிறந்த பாடல்களை, நாம் முறையாக அன்புடன் ஓதிப் பாராயணம் செய்து வருவோமாகில், இறைவனுடைய கருணை மலர்த் தேனும் நம்மீது பொழிகின்றது. நம் இதயத்திற்கு வேதாந்த மருந்து அளிக்கும் விருந்தாகவும், ஞானச் சோதி விரித்து ஒளிர்கின்ற சோதியாகவும் இராமலிங்கரின் திருவருட்பா மிளிர்கின்றது.

எல்லாம் வல்ல இறைவன், உலகம் நல்வழிப்பட்டு உய்யும் பொருட்டு அவ்வப்போது தக்க அருளாளர்களை விண்ணுலகத்தினின்று இம்மண்ணுலகத்திற்கு அனுப்பி வைத்தருள்கின்றான் என்று எல்லாச் சமயங்களும் கூறுகின்றன. அவ்வருளாளர்களையே ''அவதார புருஷர்கள்'' என்கிறோம். இராமலிங்க அடிகள் அத்தகைய ஒரு சிறந்த அவதார புருஷர்.

இராமலிங்கர் சாதி சமயப் பூசல்களை நீக்கிச் சமய சமரச ஞானத்தைப் பரப்பியருளினார். ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உணர்வினை அறிவுறுத்தினார். எவ்வுயிர்க்கும் இன்னா செய்யாமை ஆகிய ஜீவகாருண்யச் சந்நெறியினை வலியுறுத்தினார். ''ஆருயிர்கட்கு எல்லாம் அன்பு செய்தல் வேண்டும்'' என்றும் அரும்பெருங் கொள்கையினையும் போதித்தருளினார்.

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்உயிர்போல
எண்ணி உள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார் யாவர்?
அவர்உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடம்எனநான்
தெரிந்தேன்; அந்த
வித்தகர்தம் அடிக்குஏவல் புரிந்திட என்
சிந்தை மிக விழைந்த தாலோ

என்னும் ஒரு பாடலில், இராமலிங்கரின் சிறப்புக்களையெல்லாம் விளக்குதற்குப் போதிய சான்றாக அமையும்.

இத்தகைய பெருஞ் சிறப்பினர் ஆகிய இராமலிங்க அடிகளார் இறைவனருள் திருக்குறிப்பின்படி நிருவியருளிய ''சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்'' தழைத்து வளர்ந்து நூறாண்டுகள் நிரம்த விழாக் கொண்டாடப் பெறுவது, மகிழ்ச்சிக்கு உரிய சிறப்பு நிகழ்ச்சியாகும்!

விழா நன்கினிது நடைபெறுக!

'சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்' மேன்மேல் தழைத்து வளர்ந்து, உலகம் எங்கனும் பரவுவதாக!

இராமலிங்கரின் இறையருள் நெறியினை நாம் அனைவரும் நன்கு இனிது போற்றி நலமுற வாழ முயலுவோமாக!


வாழ்த்து

இத்தூய நன்னாளில்

எங்கள் நல்வாழ்த்துக்கள்

T. M. இரத்தினம் பிள்ளை

எண்ணை, மளிகை வியாபாரம்

காந்தி ரோடு, பழனி பேட்டை

அரக்கோணம்

இத்தூய நல் விழாவின்போது

எங்கள்

நல் வாழ்த்துக்கள்

•

# M/s. நடராஜா ஆயில் மில்ஸ்

எண்ணெ வாணிபம்

சுவால்பேட்டை

அரக்கோணம்

உரிமையாளர்கள் :—

A. K. சுப்பிரமணிய முதலியார் & சன்

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B. A. L. T.

# வாழ்த்துரை

உலகில் விஞ்ஞான அறிவாராய்ச்சி வேகமாய் வளர்ந்து வருகிறது. அது மனிதனுக்குப் பல வசதிகளைச் செய்து தந்து, அவன் அறிவாற்றல்களையும் அதிகப் படுத்தியுள்ளது. ஆனால், அச்சமும் கவலையும் கூடவே பெருகி வருகின்றன. இதற்கு மூலகாரணம், மனிதன் தன் ஆரும் அறிவை முற்றிலும் பயன்படுத்தித் தன் வாழ்க்கைக்குச் சீரியதோர் குறிக்கோளை அமைத்துக் கொள்ளத் தவறியதேயாகும். புலன் வழியோடும் புன்னெறியே நன்னெறி என மயங்கி, இக்கால மனிதர்கள் பலர் பண்ணாத தீமைகள் பண்ணத் தலைப்பட்டு விட்டனர். இதனால் மனித குலத்திற்கே அழிவு நேரிடவும் கூடும் என்றுணர்ந்து நல்லோர் நடுங்குகின்றனர். திருவருளின் துணையை நாடுகின்றனர்.

அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்தி...இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற் கென்றே'' சென்ற நூற்றாண்டில் சிலமகா புருஷர்கள் அவரித்தனர், அவர்களில் முன்னனியில் பிரகாசிப்பவர் இவர் உலகுய்ய வேண்டிச் செயற்கரிய செயல்கள் பல செய்தருளினர்கள்,

இவற்றுள் கி. பி. 1865ல் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்னும் தனிப்பெரும் சிறப்புடைய சங்கத்தைத் தயாரித்தது குறிக்கத்தக்கது.

அச்சங்கத்தின் நூற்றாண்டு விழா 1965ம் ஆண்டு ஜூன் மாதத்தில், மூன்று நாளாக சென்னை மாநகரில்—தேனாம்பேட்டையில் பெருஞ்சிறப்புடன் நடைபெற்றது. அப்போது அழகிய சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது பின்பு, 1966ல், மார்ச்சு மாதத்தில், சென்னையின் மற்றொரு பகுதியாகிய மயிலையில் — இராஜேசுவரி கலியாண மண்டபத்தில் சென்னை அருள் ஜோதி இராமலிங்கா மிஷன், தொடர்ந்து ஒன்பது நாள் வரையில் தனிப்பெரும் பொலிவுடன் இவ்விழாவை நடத்தி பல்லாயிர மக்கள் உளங்களில் சன்மார்க்க சங்க வளர்ச்சியை பெருகச் செய்தது.

இவற்றைத் தொடர்ந்து இப்போது இராயவேலூரைச் சார்ந்த தொரப்பாடி சமரச சுத்த சன்மார்க்க சங்கமும் இந்த நூற்றாண்டு நிறைவு விழாவை ஏழு நாள் கொண்டாட ஏற்பாடு செய்திருப்பது மகிழ்வுடன் வரவேற்கத்தக்கதாகும். இதன் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக விளங்குவது இச்சிறப்பு மலரின் வெளியீடாகும். இன்னும் மகிழ்ச்சியுடன் வரவேற்கத்தக்கதே.

இம் மலரில், வள்ளற் பெருமான் வாய்மலர்ந்தருளிய அருட் பாடல்களின் ஆறு பெரும் பகுதிகளும், சிறந்த அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளுடன் காட்சியளிக்கின்றன. இவற்றுடன், வேறு பல அறிஞர்கள் அளித்துள்ள தமிழ்க் கட்டுரைகளும், அணிசெய்கின்றன.

புது நல்யுகம் ஒன்று பிறக்கவேண்டும் என்று நல்லோர் யாவரும் விழைகின்றனர். வாய்மையும் தூய்மையும், ''எங்கும் உளன் ஒருவன் காணுங்கொல் என்றஞ்சி அங்கம் குலை''யும் அறிவும், அன்பும் அருளும் சீவகருணைத் தொண்டும் பெருக வேண்டும். இத்தகைய உலக சகோதரத்துவ உணர்ச்சி பெருகும். புதுயுகம் விரைவில் தோன்றுவதற்கு, இம்மலரும் பெருந்துணைசெய்ய வல்லதாய்த் திகழ்வதாக!

அருட் பெருஞ்ஜோதி ! தனிப்பெருங்கருணை !

# ருஷ்ய தமிழ் மாணவர் வாழ்த்து

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க நூற்றுண்டு விழா சிறப்புடன், வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென விழைகிறேன். உலகசமாதானம் மக்களிடை ஒற்றுமை சமரசம் நேசம் மக்கள், உள்ளங்களில் நற்பண்புகள் ஆகிய வற்றை எல்லாம் நிலைநாட்டிப் பரப்புவதில் வெற்றி பெருவீராக!

அன்புள்ள

செம்பியன்

லெனின் கிரேட் ருஷ்ய தமிழ் மாணவன்

(S. G. ரூதீன்)

**A. S. GNANASAMBANDAN,**
Special Officer for Tamil Development,
Secretary, T. D. R. C. and
Ex-officio Secretary, B. T. P.
Public (Tamil Development) Dept.,
Govt. of Madras, Madras-9.

PHONE: 74071
6-F, WARREN ROAD,
MADRAS-4.

# பரவ வேண்டும்

அன்புடையீர்,

வணக்கம். சமரச சுத்த சன்மார்க்க சங்கம் நூற்றுண்டு நிறைவு விழா மலர் ஒன்று கொணர்வது அறிந்து மிகவும் மகிழ்வு எய்துகிறேன். இன்றைய நிலையில் வள்ளலாரின் தீர்க்கதரிசனம் நிறைந்த கொள்கைகள் அகில உலகிற்கும் பரவ வேண்டும். இக்கொள்கைகள் பரவினலன்றி இன்று உலகைப் பிடித்து ஆட்டும் பேயாட்டம் தவிர வழியே இல்லை. 'எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி' வாழும் அன்பர் கூட்டம் நிரம்ப வேண்டும். அன்றே இந்நாட்டிற்கும் உலகிற்கும் நன்னுளாகும்.

தங்கள் தொண்டு அப்பணியை நிறைவேற்றும் ஓர் உறுப்பாக அமைய வேண்டுகிறேன்.

அன்புள்ள,

**அ. ச. ஞானசம்பந்தன்.**

வெளி நாட்டுச் செய்தி—தென் ஆப்ரிக்கா டர்பன்

# மகிழ்ச்சி அடைகின்றோம்

வே. கோவிந்தசாமி
செயலாளர், சத்திய ஞான சபை, டர்பன், தென்ஆப்ரிக்கா

அன்புள்ள ஐயா,

வணக்கம் பல.

கொள்கை வேறுபாட்டினுல் பலவாறு பிரிந்தமைந்துள்ள நமது இந்து சமூகம் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்ருயமைந்ததே என்னும் உண்மையை அறிவுறுத்தும் பொருட்டு பரந்த நோக்கம் கொண்ட அருட்பிரகாச வள்ளலார் வடலூரில் தொடங்கி வைத்த சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் நூற்ருண்டு நிறைவு விழா தமிழகத்தில் ஆரம்பமாகி யிருப்பது அறிந்து அளவிலா மகிழ்ச்சி அடைகிறோம்.

திருவருள் துணேக்கொண்டு நாடெங்கும் வள்ளலாரின் சன்மார்க்கப் பிரசாரம் செம்மையாக நடைபெறவும், அதனுல் பல்லாயிரக் கணக்கான மக்கள் முப்பொருள்களின் உண்மை யறிந்து ஈடேறவும் முழுமுதற் கடவுளின் திருவடிகளே வேண்டுகிறோம்.

இங்ஙனம்
அன்பு மறவாத
வே. கோவிந்தசாமி

# வாழ்க சன்மார்க்க நெறி

தி. ஷண்முகம் அவர்கள், தென் ஆப்பிரிக்கா

தலைவர் : நெட்டால் தமிழ் வைதீக சபை
ஊழியர்: ஆப்பிரிக்கா அருட்பா கழகம்

இருள் என்னும் அஞ்ஞானத்தை ஓட்டி அறிவு என்னும் ஒளியை எங்கும் வீசச் சிலரே இவ்வுலகத்தில் அவதாரம் செய்தனர். அவர்களில் பெரும்பாலோர் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட" தமிழ் நாட்டில் உதித்தார்கள். அவர்களில் தலைமை நிலை தாங்கத்தக்கவர் நமது இராமலிங்க பெருமான்.

சமயத்துக்கு அடிப்படை அன்பே என்றும் மானிடதேகமே நடமாடும் கோவில் என்றும், மேனியை வாய்மையால்தான் தூய்மையாக்க முடியும் என்றும், மானிட தேகத்தில் குடிகொண்டுள்ள ஆன்மாகவே உண்மைக் கடவுள் என்றும், எல்லா உயிர்களிடத்தில் அன்பாயிருத்தலே சிறந்த தெய்வபக்தி என்றும் வள்ளலார் அருட்பா வாயிலாக உலகத்திற்கு போதிக்கின்றார். அவருடைய வாழ்நாள் முழுவதும் அறத்திலும் — அன்பிலும் — அருளிலும் — ஒழுக்கத்திலும் வாழ்ந்து வந்தார். தேனினும்— பாலினும்—மிக்க தீஞ்சுவையுடையதாய் சிந்திக்குந்தோறும், சித்தத்தில் தித்திக்கும் தெள்ளு தமிழ் பாடல்களாக உலகம் உய்யப் பாடியருளிய திருப்பாடல்களின் தொகுப்பு "திருவருட்பா"

அடிகளார் தமிழ்த்தாயின் தவப்புதல்வர் பதவிப் பட்டம் நாடாப் பண்பாளர் பயன் கருதாப் பணியாளர்—தியாகத்தின் தீப மங்கள ஜோதி. தன் இளமை பருவம் முதல் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமல், தீமை செய்தவர்க்கும் தான் தீமை செய்யாமல் வாழ்ந்தார்.

இறைவனுடைய திருமேனியில் அணிந்துள்ள மலர் மாலைகட்குத் தெளிக்கும் பன்னீராகத் திகழ்ந்து நறுமணங் கமழச் செய்வது திரு அருட்பா (அருள் பெற்ற பாக்கள்)

சமரச சுத்த சன்மார்க்க குருமூர்த்தியாகிய அடிகள் அகத்தே கண்ட தாம் அருட் பெருஞ்சோதியை புறத்தே அனைவரும் கண்டு உய்ய வேண்டும் என்று கருதி அளவிலாத கருணையினுல் வடலூரில் சத்திய ஞான சபையை நிறுவி அருள் புரிந்தார்.

அருட்பா திருமுறைக்குப் பின் எழுந்த அருமறை. தணிகை முருகன் அளித்த சொல்லும் தில்லைக் கூத்தன் அளித்த பொருளும் அதில் ஞான நடனம் புரிகின்றன.

வள்ளலார் பேரானந்த நிஷ்டையால் ஞானவுடல் பெற்ற பரமயோகி அவர் சிறந்த சீர் பெருஞ் சித்தர். ஓதாது சகல கலைகளையும் உணர்ந்தவர்—சிறந்த சொற் பொழிவாளர் சரமாரியாக கடவுள் மீது பாமாலை தொடுக்கவல்லவர். அருட்பெருஞ் சோதி தரிசனம் கிடைக்கப் பெற்றவர். ஆண்டவனின் திரு அமுது உண்டவர்.

உலக மக்களிடம் உண்டாகும் குற்றங்களை தன் மீது ஏற்று இறைவனை வேண்டுவார். கசிந்து கசிந்து உகுருவார், அழுவார். ஆண்டவன் அருள் பெற்றுர் இன்புற்றுர்.

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது, இன்னுயிர் நீக்கும் வினை"

என்ற குறள் நெறியின்படி மனிதன் பிறர் நலங் கருதும் அருளாளனுக வாழ வேண்டும் என்று அறிவுறுத்திப் போந்தார் நமது வள்ளலார்.

இவரிடம் அன்பு—இரக்கம்—அடக்கம்—ஈகை—சாந்தம்—இன்சொல்—அறிவு— பக்தி—ஒழுக்கம் நிறைந்து இருந்தன.

வாழ்க சன்மார்க்க நெறி,
வாழ்க திரு அருட்பா,
வாழ்க மெய்ஞ்ஞான சபை
வாழ்க இவ்வையகம் மகிழ்ந்து

இப்படிக்கு
**தி. ஷண்முகம் பிள்ளை**

# இன்பம் நிலைபெற்று விளங்குக

வை. அநவரத விநாயக மூர்த்தி

கல்வி இலாகா, இலங்கை

நீர்வளம், நிலவளம், தெய்வ மணம் பெற்றுத் திகழ்வது சோழ நாடு. அந் நன்னாட்டில் நடு நாயகமாக விளங்குவது தில்லையம்பதி, அங்கு, சிற்சபை பொலியத் திருநடம் புரியும் அற்புதக் கூத்தன் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறான். அப் பதிக்கு அண்மையில் உள்ள மருதூர் என்னும் ஊர் வரலாற்றுப் புகழ் பெற்றதாகும். அன்பு நெறியை அவனிக்கு உணர்த்திய அருந்தவச் செல்வராம் இராமலிங்க அடிகளாரை- சாதி, சமயப் பூசல்களால் சிதறுண்டு கிடந்த மக்கள் சமுதாயத்தை சுத்த சன்மார்க்க நன்னெறியில் வாழ வைப்பதற்கென அவதரித்த மகானை- மாந்தருக்குள் ஒரு தெய்வத்தை எமக்கு அளித்துப் பெருமை படைத்தது அத்திரு நகர்.

மருதூரில், சிவபக்தியும் செந்நெறி மாண்பும் பொருந்திய இராமைய பிள்ளையும் சின்னம்மையும் நடத்திய இல்லறம் என்னும் நல்லறத்தின் பயனாக, 1823- ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐந்தாம் நாள் அடிகளார், அகிலம் அனைத்தையும் அன்பு நெறியால் ஆட்கொள்ள அவதரித்தார். கருவிலே திருவுடையராக விளங்கிய அடிகளார் தமது இளமைப் பிராயத்திலே இன்சுவை மிக்க பாடல்களைப் பாடத்தொடங்கினார், கல்வி கற் பதில் நாட்டம் கொள்ளாது கடவுளைக் காண்பதிலே கருத்தைச் செலுத்தினார்.

பக்திச் சுவை சொட்டும் பாடல்களைப் பாடுவதும், அறிவுரைகளை மக்களுக்கு வாரி வழங்குவதுமே தமது பெரும் பணியாகக் கொண்டார். தமது இன்சொல்லால், அன்பர் மனத்திலெல்லாம் இடம் தேடிக்கொண்ட அடிகளார், ஆங்காங்குச் சென்று உரை நிகழ்த்துவார். பிறருக்குத் தொண்டு புரிவதையே தமது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டார். உலகம்முழுதும் வியாபித்திருப்பவனும் அன்பே சொருபமானவனும்நித்திய ஒளியும் இன்பமுமான இறைவனை உலகிலுள்ள சகலருக்கும் ஒரே தந்தையாகிய இறைவனை சகல ஜீவராசிகளிடத்தும் கண்டு, சகல ஜீவராசிகளிடத்தும் அவனை நேசித்தும், சகல ஜீவராசிகளிடத்தும் அவனுக்குப் பணிசெய்வதே வாழ்வின் குறிக் கோள் என்பது வள்ளலாரின் கொள்கை.

'அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லம் நான் அன்பு செயல் வேண்டும்

என்னும் அடிகள் அவரது உள்ளத்தை தெளிவாக உணர்த்துகின்றது.

அடிகளார் பாடல்கள் ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டு அருட்பா என வழங்கப்பட்டு வருகிறது. கல் மனத்தையும் கரையச் செய்யும் ஆற்றல் படைத்த அவரது அருட்பாக்கள் பிறவிப் பெருங்கடலைக் கடக்கத் துணை செய்யவல்லன. மாசு படிந்த மனத்தை தூய்மையாக்கும் சக்தி பெற்றன· பொய், களவு, காமம், கோபம், புறங்கூறுதல், முதலிய தீயகுணங்களை அகற்றும் ஆற்றல் அருட்பாவிற்கு நிரம்ப உண்டு சொற்சுவை, பொருட்சுவை நிறைந்து கற்குந்தோறும் இன்பம் பயப்பன.

'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
குளிர் தருவே தருநிழலே நிழல் கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளை சுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனை மணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசே என் அலங்கல் அணிந்தருளே

என்னும் பாடலைப் பாடிப்பரவசமடையாத வரும் உளரோ! இன்சுவை மிக்க இத்தகைய பாடல்களே அடிகளாரது அருட்பாவில் இடம் பெற்றுள்ளன.

அன்பே சொருபமான ஆண்டவன் பெயரால், உயிர்க் கொலை புரியும் மக்களைக் கண்டு மனங்கலங்கிய அடிகளாரது உள்ளத்தின் தன்மையை கீழ்வரும் பாடல்கள் உணர்த்துகின்றன.

,நலி தரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பல பெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிக்குக் குடங்கள்
பலிக் கடா முதலிய வுயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே
புந்தி நொந்துள நடுக்குற்றேன்.
கலியுறு சிறிய தெய்வ வெங்கோயில்
கண்ட காலத்திலும் பயந்தேன்.

துண்ணகை கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெலாம் பயந்தேன்
கண்ணினுலோ பிறவுயிர் பதைக்கக்
கண்ட காலத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையுந் தூண்டிலுங் கண்ணி
வகை களுங் கண்ட போதெல்லாம்
எண்ணியென் னுள்ள நடுங்கிய நடுக்கம்
எந்தை நின் திருவுள மறியும்''

அடிகளார் அருளிய அறிவுரைகளோ அளப்பரியன. அப்பெருந்தகை கூறிய அறிவுரைகளின் படி நடத்தலே யன்ரூே நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறு. பொருள் ஆழம் படைத்த 'மனுமுறை கண்டவாசகம்' என்னும் நூல் இவரது சிறந்த உரை நடைக்கு ஒரு எடுத்துக் காட்டு. அநஞ் செயல்கள் பலபுரிந்த அடிகளார், நம்மிடையே இன்றும் வாழ்கின்ருர். என்றும் வாழ்வார்.

உலகில், இந்நாளில் எப்பக்கம் நோக்கினும் புரட்சிகளும், கோரமான கொலைகளும் தாண்டவமாடுதலைக் காணலாம். சாதி மதப்போர்களும், வீண் வாதங்களும் பல்வேறு கட்சிகளும் இன்ன பிறவும் உலக அமைதியைப் பாழாக்குவதோடமையாது மனித சக்தியையும் வீணுக்குகின்றன. ஒன்று கூடி ஒருகுடும்பமாக வாழவேண்டிய மனித சமுதாயத்தில் அநேகம் சாதிகள். உலகில் சீதோஷ்ண நிலைமை முதலிய மாறுபாடு களினுல் மக்கள் வர்க்கத்தினர் எல்லோரும் ஒரே நிறந்தவர்களாக இல்லை. அப்படி இருந்த போதிலும், நிறவேற்றுமையைக் கொண்டு மனித சமுதாயத்தில் பிரிவினையை உண்டு பண்ணுவது பேதமை. ''எல்லாரும் ஓர்குலம்; எல்லாரும் ஓர்இனம்'' என்ற மனப்பான்மை மக்களிடையே நன்கு பரவுதல் வேண்டும். சுத்த சன்மார்க்க நன்னெறி என்னும் அன்புநெறியே உலகில் நிரந்தரசமாதானத்தையும் சகோதரத்தையும், என்றும் நிலவச் செய்யும். இந்தச் சீரிய நெறி ஒன்றுதான் இவ்வுலகில் வாழும் பல்வேறு நாட்டினரும், பல்வேறு மொழியினரும் ஏற்றுக் கொள்ளத்தக்கது, பரிசுத்த தன்மை வாய்ந்தது.

மேற் கூறிய அன்புவழியை வற்புறுத்திய பெரியார்களுள், அடிகளார் சிறந்து விளங்குகிருர் மக்களுடைய மனத்தை அன்புவழியில் செலுத்தும் அரும் பணிக்கு தம் வாழ்வையே அர்ப்பணித்தார். அமிழ்தினுமினிய இன்பத்தமிழில், கல்நெஞ்சையும் கரையச் செய்யும் அருட்பாக்களை அள்ளிச் சொரிந்து, தமது அன்பு கனிந்த பேச்சினுலும் உறங்கிக்கிடந்த நம் சமுதாயத்தைத் தட்டியெழுப்பி சுத்த சன்மார்க்க நன்னெறி என்னும் இலட்சியப் பாதையில் செல்லுவதற்குப் பெரிதும் துணைபுரிந்தார். அருளெனும் வடிவமுள்ள ஆண்டவனை அன்பால் காணலாம்'' என்ற பேருண்மையை அகிலத்துக்கு உணர்த்தினுர்.

அடிகளாரின் சமரச சுத்த சன்மார்க்க போதனைகள் சகல மதத்தினரும் நாட்டினரும்,மொழியினரும் ஏற்றுக் கொள்ளத்தக்கவை. இந்த நன்னெறி உலகெங்கும் பரவவேண்டும். அப்போது தான் இவ்வுலகில் நிரந்தர சமாதான, நிலவும் இன்பமும் நிலைபெற்று விளங்கும்.

# அகிலம் வாழப் பிரார்த்திப்போமாக.

எம். கே. ஆர்.

சன்மார்க்க சங்கம், பர்மா.

திருவருட் பிரகாச வள்ளலார், அவர்கள் இப்பூவுலக மக்கள் உய்யும் பொருட்டு அவர்கள் அனுபவித்த பேரின்பத்தை மற்றவர்களும் அடைவதற்கான வழித்துறைகளைக் காட்டுவான் வேண்டி, கருணை உள்ளத்துடன் நிறுவிய சமரச சுத்த சன்மார்க்க சங்கம் தனது நூற்றாண்டு நிறைவை வெகுவிமரிசையாக கொண்டாட விருப்பதறிந்து பர்மாவாழ் தமிழ்மக்கள் எல்லோரும் குறிப்பாக, சங்க சன்மார்க்கத்தினர்களும் மிக்க மகிழ்ச்சியடைகிறார்கள்.

வரலாறுகண்ட ஆத்மஞானிகள் வரிசையில், கடைசியாகத் தோன்றி முதன்மையாக முத்தியடைந்தவர்கள் நமது அடிகளாரே. ஆத்மார்த்திகம் என்பது என்ன. அதன்மூலம் அருட்பெருஞ்சோதியாக விளங்கி, ஆசையினாலுண்டான அழுக்கையும், இருளையும் போக்கிக் கொண்டிருக்கும், ஆண்டவனை அடைவது எப்படி. அதை இந்தப் பிறவிலேயே சாதித்துக் கொள்வது எவ்விதம், என்பதைப் படித்தவர்களும் படியாதவர்களும், எளிதில் புரிந்து கொண்டும், கையாளக்கூடிய விதத்திலும் அள்ளி, அள்ளி, வாரி, வாரித்தந்து, அதனால் 'வள்ளல்' என்ற சிறப்புப் பெயரும் பெற்றவர் அடிகளார்.

சாதி, மதம், சமயம், ஆசாரம், உயர்வு, தாழ்வு, மற்றும் மனிதனுக்குண்டான சங்கற்ப விகற்பங்கள் அத்தனைக்கும் அப்பாற்பட்டு, ஆன்ம நேய ஒருமைப்பாட்டை ஆழப்பதித்து வேரூன்றவைத்து, அதன்மூலம், எல்லோரும் ஆண்டவன் முன் சமமே என்ற அறியதத்துவத்தைப் போதித்து, இகத்திலே பரத்தையடைந்தவர் நமது அடிகளாரே.

ஆண்டவனை வழிபடுவதற்கு, ஆடம்பரம், ஆகமம், எதற்கு என்று கேட்கிறார். எல்லாமே தானாகி, ஆகமமே அவனாகி நிற்கும் அருட்பெருஞ் சோதியான ஆண்டவனுக்கு அபிஷேக ஆராதனை எதற்கு, இது எல்லோராலும் சாத்தியமா, அன்றாடப் பிழைப்புக்கே அவஸ்தைப்படும் மக்கள் இவ்வித ஆகமங்களுடன் ஆண்டவனை அணுக முடியுமா? அப்படி முடியாத நிலைக்காக, ஆண்டவன் அவ்வேழைகளைக் கைவிடுகிறானா? இப்படி எல்லாம் தனக்குள்ளே கேள்விகளைப் போட்டுக் கொண்டு தீவிரவிசாரணை செய்து கருணை என்ற ஒரே ஆகமத்தால் கடவுளைக் காணமுடியுமென்று கண்டறிந்தவர், நமது கருணை வள்ளல் இராமலிங்கம். மனிதன் எந்த நிலையில் உள்ளவனானாலும்சரி, ஆண்டவன் யாரையும் கைவிடமாட்டான். அடிகளின் ஒவ்வொரு அருட்பாவும் ஆண்டவனின் இந்த அளப்பரும் கருணையை ஆணித்தரமாக அறைகின்றது "கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே," என்ற ஒரு அருட்பாவே இதற்குப் போதிய சான்றாகும்.

கருணைக் கடலாகிய இராமலிங்கவள்ளல், இப்படியாக ஆகமம், ஆடம்பரம் மற்றவை, கள் தேவையில்லை என்று கூறுமிடத்து, சில சமயவாதிகள். அடிகளாரின் கொள்கைகள் சைவசமயத்துக்கு முரண்பட்டவைகளென்று, வாதிக்கிறார்கள். மிகப்பெருந் தவறுதலான கூற்று. இக்கூற்றானது சங்கவளர்ச்சிக்கே ஒரு பெருந்தடையாக இருந்து வந்திருக்கிறதென்று சொல்லுவோமாயின் அது மிகையாகாது' முரண்பாடு எங்கு தோன்றுகிறதென்பதை யாரும் இதுவரை விளக்கியதாக இல்லை. வள்ளலாரவர்கள் யாரையும் எந்த சமயத்தையும் எந்த இடத்திலும் குறைகூறியதாக இல்லை. குறைகூறுவதை முழுமூச்சுடன்

கண்டிக்கும் அவர், தானே அக்குற்றத்தைச் செய்திருப்பாரா? அதிலும், கருணையே வடிவெடுத்த வள்ளல் இராமலிங்கமா அப்படிச் செய்வார், ஒரு போதும் இருக்க முடியாது: இறைவனை வணங்குவதற்கு எல்லோருக்கும் சாத்தியப் படும்படியான எளிய முறையைப் போதிப்பது ஒரு சமயத்தின் கோட்பாடுகளுக்கு முரணு இருக்கிறதென்று வாதித்தால், அதைச் சமய கர்வத்தின் விளைவு என்றுதான் கூறமுடியும். இவ்வித தகாத குணங்கள், மனிதன் உள்ளத்தில் தோன்றுவதைத் தவிர்க்கவே, சாதி, சமயம், போன்ற பேதங்கள் அனைத்தையும், அடிகளார் அகற்றி விட்டார்கள். எல்லாம் சமம், அனைத்தும் ஆண்டவன் தோற்றம், என்ற மூலமந்திரத்தைப் போதிக்கலானுர்கள்.

இறைவனை இகத்திலேயே அடையலாமென்று அடிகளார் சொல்லுகிருர்களே அது எப்படி? அதுதான் ஜீவகாருண்யம் உயிரினங்களிடத்து நாம் காட்டும் அன்பு, கருணை இவைகள் மூலம், இவைகளையே உருவாகக் கொண்டுள்ள ஆண்டவனை இப்பிறவியிலேயே அடையலாமென்பது வள்ளலார் அவர்களின் வளமான வாக்கு. ஏன், அவர்களின் சொந்த அனுபவமும் அதுதானே ஜீவகாருண்யம் என்பதர்க்கு எத்தனையோ அநேகம் பொருள்கள் உண்டு. அவற்றில் முக்கியமான சிலவற்றை வரிசைக் கிரமமாக விவரிப் போம்''

புலால் உண்ணுமை
கோபம் தவிர்த்தல்-கடுஞ்சொல் நீக்குதல்.
பசி, தாகம், பிணிதீர்த்தல்.
'இல்லை, என்பதையும் இனிமையுடன் சொல்லுதல்.

இவைகளை மனஉறுதியுடன் அனுஷ்டிப்பதற்கு, உள்ளச் சுத்தமும் உள்ளக்கனிவும் வேண்டும். அதற்கு ஒருவர் உட்கொள்ளும் உணவு சுத்தமாக இருக்க வேண்டும். சுத்த உணவுக்குப் புலால் நீக்கம் அவசியமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. சுத்த உணவிஞல், உள்ளம் சுத்தமடைகிறது. உள்ளம் சுத்தமானுல், கனிவு உண்டாகிறது. கனிவு உள்ளம் கருணையைத் தோற்றுவிக்கிறது. கருணையினுல், கடவுளைப் பார்க்க முடிகிறது அல்லது கடவுட் தன்மையை அடைய முடிகிறது. அடிகளாருக்குஏற்பட்ட உள்ளக் கனிவிஞல், கடவுளைக் கனியக் கனிய, இனிக்க இனிக்க, தேன் மணக்கப்பாடியிருக்கிருர். கருணையினுல், தான் அடைந்த பேரின்பத்தை மக்களுக்குச் சுலபமான முறையில் எடுத்துக் காட்டியிருக்கிருர். ஆகவே, மனிதன் கடவுட் தன்மையைப் பெறுவதற்கு முக்கிய முதல் படியாக புலாலை அறவே மறுக்க வேண்டியது அவசியத்திலும் அவசியமாகிறது.

பொதுவாக எல்லோருக்கும் கடவுள் நம்பிக்கை அவசியம். ஆனுல் இந்த நம்பிக்கை உண்மையானதாக இருக்க வேண்டுமானுல், மனிதனுக்கு உண்டான மூன்று பிறப்புக்களிலும் நம்பிக்கை இருத்தல் வேண்டும். அதாவது, முன்பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு, முன்பிறப்பில் விதைத்த வினையைத்தான் இப்பிறப்பில் அறுக்கிரேம் இப்பிறப்பில் விதைப்பதை மறு பிறப்பில் அறுப்போம் இது ஆண்டவனின் நியதி இது தான் விதிரூபத்தில் நம்மை ஒவ்வொரு பிறவியிலும் ஆட்டிப்படைக்கிறது. இந்த நியதியில் நம்பிக்கை கொள்ளாத எவரும் கடவுள் நம்பிக்கை கொண்டவரென ஆகமாட்டார் சிலர் இதை நம்புவதில்லை. ஆனுல், ஆண்டவனை அடிக்கடி பிராத்திக்கிருர்கள். இப்பிறப்பில் அன்ருட வாழ்க்கையில், சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் என்ற மூன்று காலங்களையும் வழுவாது அனுஷ்டிக்கிருர்கள். ஆனுல் மூன்று பிறப்பை மட்டும் ஒப்புக் கொள்ள மறுக்கிருர்கள். இவர்கள், கடவுளைக் கும்பிடுவதின் நோக்கம் தான் என்னவோ; மறுபிறப்பில் நம்பிக்கையில்லாதவர் களுக்குக் கடவுள் பக்தி அவசியமாவென்பது சந்தேகத்திற்கு இடமளிக்கிறது. இப்பேர்ப் பட்டவர்கள், திருஅருட்பாவை அவசியம் படித்துப் பயன் பெறவேண்டும்.

வள்ளலாரின் கண்கண்ட அனுபவம் நிறைந்த சன்மார்க்கக் கொள்கைகளை உலகெங்கும் பரப்பி, மக்களனைவரும் ஆத்ம இன்பம் அடையச் செய்வதற்கும் விஞ்ஞான மேம்பட்டால் மனிதன் தன் இனத்தையே அழித்துக் கொள்ளும் நிலைக்கு வந்திருப்பதை உரிய காலத்தில் தடுக்கவும் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்திற்குப் பல விவேகானந் தர்கள் கிடைக்கவேணும். இதுவரை கிடைக்காதது உலகத்தின் துரதிஷ்ட மென்று தான் கூறவேணும். ஏனெனில், வள்ளலாரின் ஆன்மநேய ஒருமைப்பாட்டின் சமரசக் கொள்கை

உலகம் அனைத்தையும் ஒரு நொடியில் கவர்ச்சி பண்ணக் கூடியவை. ஆனால் அதை எடுத்துப் போதிப்பதற்குத் தகுந்த, பலமுள்ள நாடோடித் தூதர்கள் இல்லாதது தான் பெருங் குறையாகவிருக்கிறது. அருட்பெருஞ்சோதி ஆண்டவன் கிருபையால் அந்தக்குறை சீக்கிரம் நீங்கி உலகம் சமாதான சுகவாழ்வு கொண்டு உய்யவேணும்.

பர்மியப் பொன்னாட்டின் தலைநகரான, இரங்கோனில் சமரச சுத்த சன்மார்க்க சங்கம் தோன்றி இன்று ஏறக்குறைய பதினான்கு ஆண்டுகளாகின்றன. ஆரம்பத் தலைவர் ஆன்ம நேய ஒருமைப்பாடுடைய திரு கங்காப்பிரசாத் அவர்கள் சங்கத்துக்குப் பல அரிய சேவைகள் செய்து சிறப்பித்தார்கள் அதன்பின் சென்ற ஏழு ஆண்டுகளாகச் சித்தாந்த நன்மணி திரு. பழ. சண்முகம் அவர்கள் தலைமை தாங்கி ஓயாத உழைப்புத்தந்து, அருட்பா வகுப்பு நடத்தி, மற்ற விழாக்காலங்களில் ஆங்காங்கு தண்ணீர்ப் பந்தல் வைத்து மக்களுக்காக சாந்தி செய்து, உயிர்பலி கொடுக்கும் கொடிய பழக்க வழக்கங்களைக் கணிசமான அளவுக்குப் போக்கி சங்கத்தின் உயர்ந்த சேவையை மக்கள் மனதில் பதியும்படி செய்து, ஸ்தாபனத்திற்குப் பெருமை தேடித் தந்து, தாய் நாடான இந்தியாவிற்குத் திரும்பியுள்ளார்கள். இப்போது அவர்கள் படத்தை அலங்கரிப்பது அன்பர், அ. கா. கணபதி அவர்கள். அன்பு, பண்பு, அடக்கம், ஆன்மநேய ஒருமைப்பாடு, ஜீவகாருண்யம், ஒழுக்கம் இவைகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கும் இவர்கள் தலைமையில், சங்கம் மேன் மேலும் வளர்ச்சியடைந்து, மக்கட்தொண்டில் பிரதான இடம்வகித்து ஆத்மீக ஞானம் வளரப்பாடு படுமென்பதில் கொஞ்சமும் ஐயமில்லை.

இறுதியாக, சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் நூறுவது நிறைவு விழாக் கொண்டாடுவதன் பயனாக உலக மக்கள் யுத்தமின்றி நிம்மதியான வாழ்வு பெற்று உலக மெங்கும் சன்மார்க்கம் தழைத்தோங்கி வள்ளலார் பெயரில், பள்ளிக்கூடங்கள், மருத்துவ மனைகள், வாசகசாலைகள் பிரச்சாரக் குழுக்கள், ஏற்பட்டு, அதன்மூலம் ஆன்மநேய ஒருமைப்பாடு வளர்க்கப்பட்டு அகிலமும் அல்லலற்று அன்புடனும், வாழப் பிரார்த்திப்போமாக.


புனிதமான இந்த நூற்றாண்டு

நிறைவு விழா நன்னாளில்

எங்கள் வாழ்த்துக்கள்

# சரவணா ஸ்டோர்ஸ்

ஜெனரல் மர்ச்சன்ட்ஸ்

106-107, ஆற்காட் ரோடு

வேலூர், வ. ஆ. [ஜில்லா]

# நல்லவர்களாக மாற முயற்சிப் போமாக.

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்.]

தமிழகம் பத்தொன்பதாம் நூற்ருண்டில் வறுமையும் சிறுமையும் பொருந்தி இருண்டு கிடந்த போது ஒரு மழை பொழிந்தது— தொடர்ந்து பொழிந்தது. அது தமிழ் மழை- அருள் மழை- அருட்பா மழை. இம் மழையினுல் தமிழகம் தழைந்தது. வள்ளலார் என்ற புயல் பெய்த மழை தமிழ் மழை- அருள் நலங்கனிந்த மழை. உயிர்தொடும் இனிய பாடல்கள்! 'ஊன் படிக்கும் உயிர் படிக்கும் என்ற அடிகள் அருட்பாவிற்கே பொருந்தும். ஆட்சியில் இருந்த ஆங்கிலத்தாலும் மதத்தில் கொலுவீற்றிருந்த சமஸ்கிருதத்தாலும் தமிழ்மொழி நெருக்குண்டிருந்த போது தமிழுக்கு இனிய ஏற்றம் தந்து மக்கள் மன்றத்தில் உலவச் செய்த பெருமை வள்ளாருக்கே உண்டு, தமிழுக்கு அமுதென்றுபேர் என்று புரட்சி கவிஞர் பாடினர். தமிழ் அமுதமாக விளங்குவதைத் திருவருட் பாவினுலேயே உணர முடிகிறது. அமுது சுவையில் சிறந்தது- இனிமை தருவது . மரணம் தவிர்ப்பது இன்ப அன்பிணை வளர்ப்பது திருவருட்பா ஆராத் தமிழ்ச் சுவையுடையது. உயிர் வாழ்க்கைக்கு இனிமை கூட்டுவது- மரணமிலாப் பெருவாழ்வை அளிக்கும் இயல்பானது.

மனிதாபிமானத்தில் மிகச் சிறந்து விளங்கும் படைப்பு திரு அருட்பா. துன்பத்திற்கு மாற்று அருள். பிறர் துன்பம் கண்டு வருந்தாதார் நெஞ்சம் அருளினை அறியாது- பெறமுடியாது அனுப விக்கவும் முடியாது. வள்ளல் பெருமான் நடமாடும் அருட்கோயில் எனத் திகழ்ந்தார். உயிர் வர்க்கத்தின் துன்பத்திணைக் கண்டு துணுக்குற்ருர். வாடினர்- வருந்திஞர். துன்பத்திணை மாற்றி இன்பம் காண முயன்ருர் தம்முடைய சீடர்கள் சரளைக் கற்களில் உட்கார்ந்து நோகக் கூடாது எனத் தாமே மண் எடுத்துப் பரப்பினுர் அன்று ஆலவாய் அண்ணல் தமது பக்தை வந்திக்காக மண் சுமந்தார். அதற்குப் பின் வள்ளலார் தமது சீடர்களுக்காக மண்சுமந்தார். நெஞ்சு நிறைந்த—அருள், கருணை நிறைந்த செயலாக வெளி மலரும் இதுவே இயற்கை.

இறைவனை நோக்கி வள்ளல் பெருமான் இரந்து கேட்பதே ஆருயிர் கட்கெல்லாம் அன்பு செய்யும்' பண்பாட்டையே யாகும் 'உள் நாடி உயிர்கள் உறும் துயர் தவிர்தல் வேண்டும்' என் கின்ருர்; உயிர்கள் உறும் துன்ப உணர்வுகள் உடனுக்குடன் தவிர்க்கப்படாது போனுல் பின் அவை நஞ்சாக, நானிலத்தை அழிக்கின்றன. இதனை அருளுணர்வுடன் உலகியல் நடத்த விரும்பிய வள்ளல் பெருமான் அறிந்து வலியுறுத்துவது சிறப்புடையதாகும். 'ஒத்தாரும் உயர்ந் தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒற்றுமையுடையவராகி, உலகியல் நடத்தவேண்டும்' என்ற அருட்பா அடிகள் நிணைந்து நிணைந்து இன்புறத்தக்கன. 'ஒருமையுடையாராகி' என்று குறிப்பிடுகின்ருர். ஒற்றுமை புறத்தோற்றம்; ஒருமை அகஉணர்வு, ஒற்றுமை உண்மையானதல்ல. ஒருமை உண்மை யானது. அதனுலேயே ஒருமை கூறல் வள்ளலார் பெருமானுக்கு அதிக ஈடுபாடுடையதாயிற்று. இறைவனை ஒருமையுடன் நிணைக்க வேண்டும் என்பார் வள்ளல் பெருமான். வள்ளலார் புகழ் வாழ்த்தி-ஒருமையுடையவராக உயிர்களின் நலன் பேணி-நல்லவர்களாக வாழ முயற்சிப்போ மாக!

Estd. 1944

Phone : H. O. 244
B. O. 344

# HI-GRADE RADIO Co.,

GOVERNMENT PENTLAND HOSPITAL ROAD, VELLORE. N. A.

**PHILIPS Authorized Dealers for North Arcot**

Radios and Lamps, Amplifiers, Battery Chargers,

Hearing-Aids, Crompton Fans, Orient Fans,

Electrical Dealers and Contractors

Illumination for Marriage and Public functions undertaken

Branches at :-

**74, LONG BAZAA,R VELORE. N. A.**

**PHILIPS HOUSE, ARCOT. N. A.**



சத்திய தருமச்சாலை



# முதல் திருமுறை

…AMI…AIYER LIBRARY
Besant Nagar

வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், M.A., B.O.L.,
தமிழ்த்துறைத் தலைவர், புதுக் கல்லூரி.

அருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்த பாடல்கள் ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதல் திருமுறையைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். முறை என்பதற்குப் பல பொருள்கள் இருப்பினும் ஈண்டு இறைவன்பால் முறையிட்டுக் கொள்ளுதல் என்னும் பொருளில் அமைந்துளது. முதல் திருமுறையில் எட்டு நூல்கள் அடங்கி உள்ளன. அவை முறையே திருவடிப் புகழ்ச்சி, விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், சிவநேச வெண்பா, மகாதேவமாலை, திருவருள் முறையீடு, வடிவுடை மாணிக்கமாலை, இங்கிதமாலை என்பன. இனி ஒவ்வொரு நூலில் அமைந்த கருத்துக்களை முறையே ஆய்வோமாக:

1. **திருவடிப் புகழ்ச்சி** இந்நூலில் ஒரே பாடல்தான் உண்டு. அச்சிட்ட பகுதியை உற்று நோக்கும்போது முப்பத்திரண்டு பாடல்கள் உள்ளன போல் காணப்படும். உண்மையில் நான்கடிகளைக் கொண்ட ஒரே செய்யுளாகும். ஒவ்வோர் அடியிலும் நூற்றுத் தொண்ணூற்றிரண்டு சீர்கள் அமைந்துள்ளன. இவ்வாறு இத்தனைச் சீர்கள் ஓர் அடியில்வருமாறுஅமைத்துப்பாடிய புலவர்கள் ஐயாவுக்கு முன்பு இலர். அவர் காலத்திலும் இலர். அவர்களுக்குப் பிற்பட்ட காலத்திலும் இதுவரை தோன்றியவர்களும் இலர் இஃது ஐயாவின் தனிப்பெரும் புலமைக்கு ஒரு சிறந்த சான்றாகும்.

திருவடிப்புகழ்ச்சி என்னும் இப்பகுதி முழு முதற்பரம்பொருளாம் முக்கண் மூர்த்தியின் திருவடியின் மாண்பைப் புகல்வதாகும இறைவனது திருவடிகட்குத் தனிச்சிறப்புண்டு. இதனைத் திருமூலர்

திருவடி ஞானம் சிவம்ஆக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே

என்று புகழ்ந்தனர்.

திருவள்ளுவரும் திருக்குறள் கடவுள் வாழ்த்தில் திருவடிச் சிறப்பினையே எடுத்து மொழிந்துள்ளனர். அப்பர் பெருமானும், திருவதிகை விரட்டானப் பதிகத்திலும், திருவையாற்று பதிகத்திலும் அம்மை அப்பனது பொன்னார் திருவடிகளையே போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

இப்பகுதியில் சிவபிரான் எம்பிரான், தம்பிரான் செம்பொற்பதம் எத்தகையது என்பதைப் பலப்படப் புகழ்கையில் சமரச சுத்த பரமானுபவ விலாசம் என்றும், மால்கொள் அவதாரங்கள் பத்தினும் வழிபட்டு வாய்மைபெற நிற்கும்பதம். என்றும் பலகோடி உருத்திரர் சூழ்பதம் (இதனால் சிவபரம்பொருள் வேறு உருத்திரர்கள் வேறு என்பதை நன்கு உணரவும்) என்றும், எழுமனம் உடைந்து உடைந்து உருகிநெகிழ் பத்தர்கட்கு இன் அமுதம் ஆகும் பதம் என்றும் ஈறிலாப் பதம் எல்லாம் தருதிருப்பதம் அழிவில் இன்புதவுகின்ற பதம் என்றும் திருவடியின் சிறப்பை இனிது எடுத்து ஓதியுள்ளனர்.

சைவ சமயாசிரியர்கள் நால்வர்கட்கும் அரும்பெருந் துணையாய் இருந்தபதம் சிவபதமே என்பதை நம்மனோர் நன்கு அறிய பலபட எடுத்து மொழிந்துள்ளார். நம் வள்ளலார். இதனை சம்பந்த வள்ளல்மொழி இயல்மணம் மணக்கும் பதம். நாவரசர் சொற்பதிக இசை பரிமளிக்கும் பதம். நாவலூரர் புகல் இசை திருப்பாட்டுப் பதம் வாதவூர் எங்கோவினின்சொல் மணி அணியும் பதம் என்றும் பாடி நால்வரும் பாமாலைசூடி இறைவனது திருவடிகளில் சூட்டி வழிபட்டதை மொழிந்தனர். இத்துடனின்றிக் கண்ணுதல் பெருங் கடவுள் அப்பர் பெருமானுக்கும், நம்பி ஆரூரருக்குத் திருவடியினால் சிறப்புச் செய்ததை, நல்லூரின் அப்பர்முடி இடைவைகி அருள் மென்பதம், என்றும், அன்பர் பொதிசோறு அருந்த முன் இருந்து பின் நடக்கும் பதம் என்றும் தொண்டர் முடிமேல் மறுத்திடவும் இடை வலிந்து ஏறும் பதம், எழில் பரவை இசைய ஆரூர்மறுகின் அருள் கொண்டிரா முழுதும் உலவும் பதம் இன்தொண்டர் பசிஉறக் கச்சூரின் மனை தொறும் இரக்க நடைகொள்ளும் பதம் என்றும் பாடியுள்ளதைக் காண்க.

திருநாவுக்கரசர் சமண சமயத்தில் சில காலம் இருந்த சழக்கு நீங்க இறைவர் அப்பரின் திருமுடியில் திருவடி சூட்டிய வரலாறும் வாகீசனுக்கு இறைவர் பொதிசோறிட்ட குறிப்பும் திருவீரட்டானேசுரர் சுந்தரர் திருமுடியில் திருவடி நீட்டிப்படுத்திருந்த வரலாறும், பரவை நாச்சியார் சுந்தரரிடம் கொண்ட சிறு பிணக்கு ஒழியத் திருவாரூர் தியாகேசர் பரவையார் பால் தூது சென்ற செய்தியும், சுந்தரர் திருக்கச் சூரில்

களைத்து இளைத்து இருந்தபோது அவரது இளைப்பு நீங்கத் திருக்கச்சூர் இறைவன் வீடுதோறும் சோறு இரந்துவந்து சுந்தரருக்கு இட்ட செய்தியும் மேலே காட்டிய வரலாறுகளாகும்.

பாணபத்திரர் பொருட்டு ஏமநாதனை மதுரையை விட்டுத் துரத்த விறகாளாய் வீதியில் திரிந்ததை எறி விறகு விற்க வளர்கூடல் தெருத்தொறும் இயங்கிய இரக்கப் பதம் என்றும் வைகைக் கரையில் வந்தி என்னும் முதியவரர் பொருட்டு மண் சுமந்து நின்றதை வைகையங்கரை யின்மண் படப்பலகால் எழுந்து விளையாடும் பதம்என்றும் புகழ்ந்து போற்றியுள்ளனர். மேலும் பரசிவப் பெருமானின் திருவடி ஏனை யோர்க்கும் தமக்கும் அருள் செய்யும் சிறப்பை,

எங்கே மெய் அன்பர் உளர் அங்கே நலந்தர
எழுந்தருளும் வண்மைப்பதம்
எவ்வணணம் வேண்டுகினும் அவ்வண்ணம் அள்றே
இரங்கி ஈந்தருளும்பதம்
என்போன்றவர்க்கு மிகு பொன்போன்ற கருணைதந்
திதயத் திருக்கும்பதம்
என் உயிரை அன்னபதம் என் உயிருக் குயிராய்
இலங்குசெம் பதுமப்பதம்

என்று பாடிப் பரவிப் பணிந்துள்ளார்.

2. விண்ணப்பக் கலிவெண்பா: வெண்பா என்னும் பெயரில் பலவகை உண்டு. அவை, குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, கலி வெண்பா வெண்கலிப்பா என்பன. இங்குள்ளது கலிவெண்பா; இதுவும் ஓரே பாட்டு இதில் எண்ணூற்று முப்பதுநான்கு வரிகள் உள்ளன. விநாயகர் காப்புச் செய்யுளாக ஒரு வெண்பாவும் உளது. இதல் மூவர் முதலிகள் பாடல் பெற்ற எல்லாத் திருத்திலங்களில் உள்ள. சிவ பெருமானிடம் வள்ளலார் தம் குறைகளைக் கூறி விண்ணப்பித்துக் கொண்டு தமக்கு அருள் செய்யுமாறு கலிவெண்பாப்பாடி அதன் மூலம் வேண்டுதலின் இது விண்ணப்பக் கலிவெண்பா எனப்பட்டது.

இதன் மூலம் காவிரியாற்றின் வடகரை, தென்கரை, ஈழநாடு, பாண்டியநாடு, சேரநாடு, கொங்குநாடு, நடுநாடு, தொண்டைநாடு, துளுவ நாடு, வடநாடு ஆகிய இந்நாடுகளில் பாடல் பெற்ற தலங்களைப் பற்றிய குறிப்புக்களைக் காணலாம்.

வள்ளலார் தம்மிடத்தில் குற்றம் இல்லாதிருந்தும், மக்களிடம் உள்ள குற்றங்களை தம்மீது ஏற்று அவற்றைக் குறிப்பிட்டுத் தமக்கு திருவருள் புரியுமாறு விண்ணப்பித்துக் கொள்ளும் விண்ணப்பத்தை ஒவ்வொருவரும் படித்துத் திருந்திக் கூத்தப் பெருமானின் திருவருளுக்கு உரியவர் ஆதல் வேண்டும். குற்றம் எனக் கொண்டன வற்றுள் சிலவற்றை மட்டும் ஈண்டுக் குறிப்போமாக.

பொல்லா விரதத்தைப்போற்றி உவந் துண்பதல்லால்
கொல்லா விரதத்தைக் கொண்டதிலை

வன்னிதியோர் முன்கூப்பி வாழ்த்தினேன் அன்றி உன்தன்
சன்னதியில் கைகூப்பித் தாழ்ந்ததிலை

பண்ணீர்மை கொண்டதமிழ்ப் பாமாலை யால் துதித்துக்
கண்ணீர்கொண் டுன்பால் கனிந்ததிலை

ஈபத்தா என்றிங் கிரப்போர் தமைக்கண்டு
கோபத்தால் நாய்போல் குரைத்ததுண்டு
நேசிக்கும் நல்ல நெறியாம் சிவாகமநூல்
வாசிக்க என்றால் வாய்நோகும்

ஏறுடையாய் நீறணியா ஈனர்மனை ஆயினும் வெண்
சோறுகிடைத் தால்அதுவே சொர்க்கம்காண்
இல்லெனினும் சும்மாநீ ஈகின்றேன் என்றொரு சொல்
சொல்லெனினும் சொல்லத் துணிவு கொளேன்

உளளறியா மாயைஎனும் உள்பகையால் காமம் எனும்
கள் அறியா துண்டு கவல்கின்றேன்
மீன் போலும் மாதர் விழியால் வலைப்பட்ட
மான்போலும் சோர்ந்து மடங்குகின்றேன்

என்னும் இவ்வரிகளைக் காண்க

ஐயா அவர்கள் இறைவனிடம் விண்ணப்பித்துக் கொள்ளும் விண்ணப்பம்

ஆனேன் பிழைகள் அனைத்தினையும் ஐயாநீ
தானே பொறுக்கத் தகும்கண்டாய்—மேனேற்ற
மாற்றனுக்கும் எட்டா மலர்க்கழலோய் நீ என்னைக்
கூற்றனுக்குக் காட்டிக் கொடுக்கற்க—பால்தவள
நந்தக் கடல் அழுந்தப் பண்ணற்க—மூந்தைநெறி
நின்றே உன் பொன்தாள் நினையாதார் பாழ்மனையில்
சென்றே உடல்ஓம்பச் செயற்க—நன்றேநின்
றோங்கு நெறியோர் உளத்தமர்ந்தோய் என்தன்னைத்
தீங்கு நெறியில் செலுத்தற்க
மட்டுவிடேன் உன்தாள் மறக்கினும் வெண்ணிற்று நெறி
விட்டுவிடேன் என்தனைக் கைவிடேல்—துட்டன் என
மாலும் திசைமுகனும் வானவரும் வந்துதடுத்
தாலும் சிறியேனைத் தள்ளிவிடேல்—சால் உலக
வாதனைகொண் டோன்என்று மற்றெவரானாலும் வந்து
போதனைசெய் தாலும்எனைப் போக்கிவிடேல்—நீ தயவு
சூழ்ந்திடுகஎன்னையும்நின் தொண்டருடன்சேர்ந்தருள்க
வாழ்ந்திடுக நின்தாண் மலர்.

என்பன.

இறைவனது கருணையின் இயல்பைப் பல்லாற்றனும் இப்பகுதியில் பாடியுள்ளனர். மாணிக்க வாசகர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர்க்கு அருள்செய்து ஆற்றலை புலப்படுத்தியுள்ள நிலையில் இருந்து அறியலாம்.

மாவகம் சேர் மாணிக்க வாசகருக் காய்க் குதிரைச்
சேவகன் போல் வீதிகளில் சென்றனையே,
ஆறடுத்த வாகீசர்க் காம்பசியைக் கண்டு கட்டு

சோறெடுத்துப் பின்னேசுமந்தனையே—கூறுகின்ற
தொன்மைபெறும் சுந்தரருக்குத் தோழன் என்று
பெண் பர்வை
நன்மணக்குத் தூது நடந்தனையே

என்று முறையே அடியார்கட்கு அருள் செய்த குறிப்பைக் காண்க.

அஃறிணை உயிர்கட்கும் இறைவன் திருவருள் புரிந்து அவற்றை அடுத்த பிறவியில் அரச இன்பத்தை நுகரச் செய்த தன்மையினை

வில்வக் கிளை உதிர்த்த வெய்ய முசுக்கலையைச்
செல்வத் துரைமகனுச் செய்தனையே—சொல் அகலின்
நீளுகின்ற நெய் அருந்த நேர் எலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனுய் ஆக்கினையே—கோள் அகல
வாய்ச்சங்கு நூல் இழைத்த வாய்ச் சிலம்பி தன்னை
உயர்
கோச் செங்கட் சோழன் எனக் கூட்டினையே

என்று சுட்டிக் காட்டினர். முசுக்கலை என்பது குரங்கு.

வில்லாலுல் கல்லாலும் அடித்தவர்கட்குத் தண்ணருள் புரிந்த தயாளன் சிவபெருமான் என்பதை,

மாவிசயன், வில்அடிக்கு நெஞ்சம் விரும்பியதல்
கல் அடிக்கும் உள்ளம் கனித்தனையே [லால் எறிந்த

என்று எடுத்து மொழிந்துள்ளனர்:- வில்லால் அடித்தவன் அர்ச்சுனன் கல்லரல் அடித்தவர் சாக்கியர்

3. நெஞ்சறிவுறுத்தல்:- இதுவும் கலி வெண்பாவில் ஆனநூலே. இதில் காப்புச் செய்யுட்களாக இரண்டு குறள் வெண்பாக்கள் உள்ளன. ஒன்று விநயகரைப் பற்றியது மற்றென்று முருகப்பெருமானைப் பற்றியது. நெஞ்சிற்கு அறிவுறுத்தும் முறையில் அமைந்த வரிகள் ஆயிரத்து நானூற்று ஆறு உள. நெஞ்சிற்கு அறிவுறுத்தும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது என்பதனைத் தொடக்கத்தில் வள்ளலார் நெஞ்சை நோக்கி,

பொன்னுர் மலைபோல் பொலிவுற்றசையாமல்
எந்நாளும் வாழிய நீ என்னெஞ்சே—பின்னுன
இப்பிறப்பிேைடிங் கெழுபிறப்பும் அன்றிஎனை
எப்பிறப்பும் விட்டகலா என்நெஞ்சே—செப்பமுடன்
செவ்வொருசார் நின்று சிறியேன் இசைக்கின்ற
இவ்வொரு சொல் கேட்டிடுக என்நெஞ்சே

என்று அதனை விளித்திருப்பதைக் கொண்டு உணரலாம். இறைவனது நிலைகளை இந்நூலில் பதிசொரூபம், சித்தன், கள்வன் சதுரன், தலைமைத்தேவன் என்னும் பெயரால் உணர்த்தியுள்ளனர், கணேசரையும், முருகப்பெருமானையும் அறிவித்துள்ளனர். சிவபெருமானது வடிஅழகும், அவன் எறும்பு முதல் யானை ஈருக உள்ள அஃறிணை கட்கும், உயர்திணைகளாகிய மக்கள் தேவர்கட்கும் அருள் செய்ததையும் உலக ஆசை, பெண்ணுசை, பொன்னுசை மண்ணுசை, கோபம் இவற்றை ஒழிக்க வேண்டும் என்பதனையும் உடம்பு அழியும் தன்மையது, உயிர் பல பிறப்புக்களை எடுக்க வல்லது என்பதையும் அஞ்ஞானத்தால், ஆணவம், கன்மம், மாயை ஆகிய முக்குண வயத்தால் நேரும் தீங்குகளையும், சிந்தாந்த சைவ மதச்சுகமே, சுகம்தரவல்லது என்பதையும் சாதுக்கள், அசாதுக்கள், இன்னுர் என்பதையும், சிவபோகம் இத்தகையது என்பதையும் எடுத்து மொழிகிருர். பலவகை நெஞ்சிற்கு உபதேச மொழிகளையும் எடுத்து இயம்புகிருர்.

இனி இந்நூலில் எடுத்து இயம்பியுள்ள தலைப்புக்களில் அமைந்த கருத்துக்களைச் சிறிது ஆய்வோமாக.

பதிசொருபத்தில் பதியின் சொரூபம் பலபடியாய் மொழியப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று,

நித்தியமாய் நிர்க்குணமாய் நிற்சலமாய் நின்மயமாய்ச்
சத்தியமாய்ச் சத்துவமாய்த் தத்துவராய்

என்பது, இப்பதி கொல்லா விரதம் பூண்பவருக்கு இன்பம் தருவது என்பதையும் ஈண்டே

இல்லாதாய் என்றும் இருப்பதாய் யாதென்றும்
கொல்லாதார்க் இன்பம் கொடுப்பதாய்

என்று கூறியுள்னனர். சித்தன் என்று கூறுமிடத்து,

“சத்தெல்லாம் ஆகிச் சயம்புவாய் ஆனந்த
சித்தெல்லாம் வல்லசிவ சித்தன்”

கள்வன் என்று இறைவனைக் கூறுகையில்

“வண்டாலும் கொன்றைமலரோய் எனமறைகள்
கண்டாலும் காணுத கள்வன்

என்றும், சதுரப்பாடுடையான் என்பதை,

மாரியதனைக் காட்டி மறைப்பித்தும் மாயையில்தன்
சாயைதனைக் காட்டும் சதுரன்

என்றும், தலைமைத் தேவன் என்பதை,

தற்சகசம் என்றே சமயம் சமரசமாம்
சிற்சபையில் வாழ்கின்ற தேவன்

என்றும் அம்பலவாணன் தன்மைகளை நெஞ்சிற்கு அறிவித்துள்ளனர்.

பரமசிவம் என்னும் தலைப்பின் கீழ் அப்பரமனது இயல்புகளை அவனது கருணை வாயிலாக எடுத்து இயம்பியுள்ளனர். இந்த இடத்தில் இறைவர் ஒரு செட்டிப் பெண்ணிற்குத் தாயாக வந்ததையும் கண்ணப்பரது எச்சிலை உண்டதையும், தம்தந்தையின் தாளை வெட்டிய சண்டே

சுரர்க்குத் தாமே தந்தையாகத் திருவருளை புரிந்ததையும், சம்புமுனிவர்க்கு நாவல் பழம் ஈந்ததையும், திருமாலுக்குச் சக்கரம் தந்ததையும் எடுத்து மொழிந்துள்ளனர்.

சமயாசிரியர்கள் நால்வர்க்கு இறைவன் பேரருள் புரிந்த நிலைகளை.

முத்துச் சிவிகையின் மேல் முன்காழி ஓங்கு முழு
முத்தைத் தனிவைத்த முத்தன்

என்று திருஞானசம்பந்தர்க்கு முத்துப் பந்தல் ஈந்ததையும்.

நா நன்றரசர்க்கு நாம் தருவேம் நல்லூரில்
வாஎன்று வாய் மலர்ந்த வள்ளல்

திருநாவுக்கரசரை நல்லூரில் வரவழைத்துத் திருவருள் புரிந்ததையும்,

நல்தொண்டர் சுந்தரரை நாம் தடுக்க வந்தமையால்
வன்தொண்டன் நீ என்ற வள்ளல்

என்று சுந்தரரைத் தடுத்தாட் கொண்டு கருணை புரிந்ததையும்,

காணிக்கையாகக் கருத்தளித்தார் தம்மொழியை
மாணிக்கம் என்றுரைத்த வள்ளல்

என்று திருவாதவூரரது, வாசகத்தை மாணிக்க வாசகம் என்று கூறிப் பெருமைப்படுத்தியதையும் குறிப்பிட்டு வள்ளலார் குதூகலிக்கின்றார்.

பரமசிவத்தைப் பற்றிப் பேசும் இப்பகுதியில் பரமேஸ்வரியைப் பற்றியும் பேசிப் பரவச முறுகின்றனர் நம் ஐயா, உமா மகேஸ்வரியின் திருவருள் பெருக்கை

நாம் தேடா முன்னம் நமைத் தேடிப் பின்புதனை
நாம் தேடச் செய்கின்ற நற்றாய்
வெம்பிணியும் வேதனையும் வேசறிக்கையும் துயரும்
நம்பசியும் தீர்த்தருளும் நற்றாய்
வெந்நீரில் ஆட்டிடில் எம்மெய்நோகும் என்றருளாம்
நன்னீரில் ஆட்டுகின்ற நற்றாய்,

என்றும் பாடி நமக்கு அறிவித்துள்ள கருணையினைக் காண்மினோ காண்மின்.

இந்தப் பரசிவப் பகுதியில் நமக்கு ஐயாவின் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சிக் குறிப்புக் காணப்படுகிறது. அதாவது இறைவி இவருக்கு ஓர் இரவு அன்னமிட்டதாகும் அதனை நம்வள்ளலார்.

அன்றொருநாள் நம்பசிக் கண்டந்தோ தரியாது
நன்றிரவில் சோறளித்த நற்றாய்

என்று விதந்து கூறியுள்ளனர்.

நெஞ்சறிவுறுத்தலில் விநயகப் பெருமானைப் பற்றியும் முருகப் பெருமானைப் பற்றியும் குறிப்பிடுகையில் முறையே.

பூமி எங்கும் வாழ்த்திப் புகழ்வார் விரும்பும் இட்ட
காமியங்கள் ஈயும் கணேசன்
முந்த மறையின் முழுப்பொருளை நான் முகற்குத்
தந்த அருட்கடலாம் சாமி

என்று போற்றியுள்ளனர்.

சிவபெருமான் பேரழகு படைத்தவன் அவன் அழகு அள்ளிக் கொள்ள விரும்பும் அத்த கையில் இருக்கும், திருப்பூவணத்தில் வாழ்ந்த பொன்னனையாள் அவ்வாறே இறைவரின் கன்னத்தை அள்ளி முத்திக் கொண்டவள். ஆகவே அத்தகைய பெருமானது அழகை ஐயா பலப்படி இதில் குறிப்பிட்டுள்ளார். இதனைக் கீழ்வரும் வரிகளில் ஒரு சிறிது காண்க.

நாட்டில்உயர் சைவ முதலாய்த் தழைக்க அருள்சுரக்கும்
தெய்வ முகத்தின் திருவழகு
வாழ்ந்தொளிரும் அன்பர் மனம் போலவும்
வெணணீறு
சூழ்ந்தொளி கொண்டோங்கு திருந்தோள் அழகு
ஏங்கும் பரிசுடைய எம்போல்வார் அச்சம் எலாம்
வாங்கும் அபயமலர் அழகு
செம்மை மணிமலையைச் சேர்ந்த மரகதம் போய்
அம்மை ஒரு பால் வாழ்ந்தருள் அழகு.

என்பன. அவ்வழகைக் குறிக்கும் வரிகள் இவ்வாறு பற்பல வகையில் அழகை நாம் பார்த்திருந்தாலும் நம்பசிபோம் என்பதையும் நம் ஐயா,

சீர் நிகழ் செம்பவளச் செம்மேனியின்
அழகும் பார்த்திருந்தால் நம்முன் பசி போம் காண்

என்று பகர்ந்துள்ளனர்.

வள்ளலார் தம்நெஞ்சை நோக்கி நெஞ்சமே இறைவரை பலருக்குப் பலவாறு திருவருன் புரிந்துள்ளார். அவற்றையும் கேள், என்று கூறும் முகத்தால் பால் வேண்டி உபமன்யு முனிவர் அழுதனர். அவர்க்குத் திருப்பாற் கடலையே தந்துவிட்டனர் தம்மலையைத் தூக்கி இசைத்ததுட்டனுன இராவணனை மன்னித்து வாழ்நாளும் வாளும் தந்துள்ளார், தன்னைப் பெற்றதாயைப் புணர்ந்து இன்புற்ற மகாபாதகனை ஒரு பிராம்மணனது மகாபாதகத்தையும் ஒழித்தனர், பன்றிக் குட்டிகட்குப்பன்றித்தாயராகி அவற்றைமந்திரியாகவும் செய்தமைத்தனர். பாணபத்திரர்க்காக விறகுக்காரனாக வீதியில் திரிந்தனர். அணையும் விளக்கைத் தூண்டிய எலியை அரசனாகப் பிறக்கச் செய்தனர் என்று கூறியுள்ளார்.

இறைவனுக்குப் பூசை செய்வதில் எவருக்கும் உரிமை உண்டு. அஃறிணை உயிர்களும் இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றுள்ளன ஆகையினால் நீயும் பூசைபுரிக என்பாராய் அதனை நோக்கி

ஆடும் கரியும் அணிலும் குரங்கும் அன்பு தேடும் சிலம்
பியொடு சிற்றெறும்பும் —நீடுகின்ற

பாம்பும் சிவார்ச்சனைதான் பண்ணிய தென்றால் பூசை
ஓம்புவதற் கியார்தாம் உதவாதார்

என்று அறிவுறுத்து வாராயினர்.

ஐயா நால்வர் இடத்தில் கொண்டிருந்த அன்பிற்கு அளவே இல்லை, அவர்கள் மீது தனித்த முறையில் பாடல்களைப் பாடி இருப்ப தோடின்றி; இடை இடையே அவர்களது புகழைப் பாடாமல் இருப்பதில்லை. நெஞ்சறிவுத்தலிலேயே முன்பும் நால்வர்களைப் பற்றிக் குறிப்பிட்டனர். மீண்டும் தம் நெஞ்சிற்கு அவர்களது பெருமைகளை

சுந்தரர்க்குக் கச்சூரில் தோழமையைத்தான் தெரிக்க
வதிரப்புச் சோறளித்த வண்மை,
நற்றுணைஎன் றேத்தும்அந்த நாவரசர்க் கன்றுகடல்
கற்றுணையோர், தெப்பமெனக் காட்டி
நுதல், கண்சுமந்தான் அன்பன்கலங்காவகை வைகை
மண் சுமந்தான் என்றுரைக்கும் வாய்மை
பித்தா எனினும் பிறப்பறுப்பான் நம் உடையான்
அத்தோ உனக்கி தறைகின்றேன்

என்று சுட்டிப் புகழ்ந்திருப்பதைக் காண்க.

உலகாசை என்னும் பகுதியில், மனத்திற்குப் புலவிதமான அறிவுறுத்தியுள்ளார், அவற்றுள் ஒன்று.

இப்பார் வெறும்பூ இதுநயவேல் என்றுனக்குச்
செப்பாமுனம் விரைந்து செல்கின்றாய்

என்றும் பெண்ணாசையைப் பற்றி பேசுகையில்

பேய் பிடித்தால் தீர்ந்திடும் இப்பெண்பேய் விடாதேசெந்
நாய் பிடித்தால் போலும், என்று நாடிலையே
வெற்பென்றால் ஏற விரைந்தறியாய் மாதர் முலை
வெற்மென்றால் ஏற விரைந்தனையே
பாம்பென்றால் ஓடிப் பதுங்குகின்றாய் மாதர் அல்குல்
பாம்பென்றால் சற்றும் பயந்திலையே

என்று எடுத்து மொழிந்து பெண்ணாசையை வெறுக்குமாறு வேண்டுகின்றார், இங்குப் பெண்களின் உறுப்புக்களின் மீதுள்ள ஆசையை ஒழிக்குமாறு பலவிதமாகப் புகன்றுள்ளார். பொன் மீதுப் பற்று இருத்தல் கூடாது என்பதை நம்வள்ளலார்.

நாள் கொல்லி என்றால் நடுங்குகின்றாய் நாள் அறியா
ஆள் கொல்லி என்பர் இதை ஆய்ந்திலையே

என்றும் மண்ணாசையும் இருத்தல் கூடாது என்பதனை

மண்ணாசை கொண்டவனை நீ மண்ணாளும் மன்னர்
எலாம்
மண்ணால் அழிதல் மதித்திலையே

என்றும் கோப குணம் மிகக் கொடுமை வாய்ந்தது அதனை அறவே தகர்த்து எறியவேண்டும் என்பார்.

பாபக் கடற்கோர் படுகடலாம் பாழ்வெகுளிக்
கோபக் கடலில் குளித்தனையே

என்று வருந்திப்பாடுகின்றார்.

இளமை நாளடைவில் முதுமை உறும் ஆகவே அதன் மீதும் பற்றுவையாதே என்பதனைப் பாட எடுத்துக் காட்டுக்களால் எடுத்து மொழிகையில்

கூனெடும் கைக் கோல் ஊன்றிக் குந்தி நடை
தளர்ந்து
கால் நடுங்க நிற்பவரைக் கண்டிலையோ

என்று விளக்கமாகப் பகர்ந்தனர்

உடம்பும் நிலையற்றது அதனையும் நம்பி வாழ்தல் நன்றன்று என்பார்,

பொய்என்று அறவோர் புலம்புறவும் இவ்வுடம்பை
மெய்யென்று பொய் மயக்கம் மேவினையே

என்றும்

உயிர் பல பிறவிகளில் சென்று பிறக்கும் ஆகவே. அவ்வாறு பிறக்கும் வகையைத் தேடுக என்பதனை வெறுப்புணர்ச்சியால் உணர்ந்த வேண்டி ஒரு பிறப்பில் ஒருவனுக்கு மனைவியாக இருந்தவள், அடுத்த பிறவியில் மற்றொருவனுக்கு மனையாள் ஆவாள் என்னும் கருத்தில்.

தன்மனையாள் மற்றொருவன் தன்மனையாள் ஆவாள்
எனில்
என்மனையாள் என்பது நீ எவ்வணமே

என்று இடித்துரைத்துள்ளனர்.

உயிர் அஞ்ஞானத்தில் மூழ்கி இருக்கும் நிலையைப்பற்றிப் பேசுகையில் நகைச்சுவை தோன்ற,

கோமுடிக்கண் தீப்பற்றிக் கொண்டதென்றால்
மற்றதற்குப்
பூமுடிக்கத் தேடுகின்றோர் போன்றனையே

என்றும், உயிர்களை ஆணவம் கன்மம் மாயை என்அம் முக்குணங்களும் பற்றி அலக்கழிக்கின்றன என்பதை,

வாடுகின்றேன் நின்னைமதித்து ஒருநாள் நீமலத்தை
நாடுகின்றாய் ஈதோர் நலம் அன்றே

என்று இரந்து வேண்டுகின்றார். ஈண்டு மலம் என்பது மேலே கூறிய மும்மலங்கள் ஆகும். மும்மலங்களுள் ஆணவ மலமே மிகக் கொடியது. உயிரை என்றும் விடாது பற்றி நிற்பது. ஆகவே அதன் தன்மையினைத் தனித்து எடுத்து இயம்பியுள்ளனர் வள்ளலார் இதன் கொடுமையினை,

விண் அவத்தை எல்லாம் விளக்கும் திறன்மூல
ஆணவத்தினாலே அழிந்தனையே

என்று கூறுமாற்றால் தெளியலாம்.

உலகில் பல்வேறு மதங்கள் உள்ளன. அவற்றிலும் சுகம் உண்டு ஆனால் அவை சுகம் ஆகா என்பதனை

வெல்லுகின்றோர் போன்று விரிநீர் உலகிடையே
சொல்லுகின்றோர் சொல்லும் சுகம்அன்று

என்றனர். ஆனால் சைவ சித்தாந்த சுகம் என்பதை வற்புறுத்த

வாழும் பரசிவத்தின் வன்னிவெப்பம் போல முற்றும்
சூழும் சுகமே சுகம்கண்டாய்

என்று உறுதியிட்டு அறுதியுடன் பேசியுள்ளனர்.

சாதுக்கள் யாவர், அசாத்துக்கள் யாவர் என்பதனையும் உள்ளத்திற்குணர்த்திச் சாதுக்களையே நாடி உய்ய வேண்டும் என்னும் உண்மையை உணர்த்தி சாதுக்களைப் பற்றிப் பேசுகையில்

அன்பே வடிவாய் அருளே உயிராய்ப்பேர்
இன்பேஉண வாய் இசைந்தார்

என்றும், மேலும் இவர்கள் மூவர் முதலிகளின் மொழிகளிலும், திருவாசகத்திலும், திருவிசைப்பா விலும் ஈடுபட்டவர்கள் ஆவார் என்பதை

பொற்பதிகம் என்றெண்ணிப் போற்றிஒரு மூவர்களின்
சொற்பதிகம் கொண்டு துதிப்போரும் சொற்பனத்தும்
மாசகத்தில் சேர்க்காத மாணிக்கம்என்ற திரு
வாசகத்தை வாயால் மலர்வோரும்—வாசகத்தின்
மன்னிசைப்பான் மேலோர் வகுத்தேத்தி நின்றதிரு
இன்இசைப்பா ஆதி இசைப்போரும்

என்று அறிவுறுத்தியும் அசாதுக்கள் இயல்பு இத்தகையன என்பதை விளக்க வந்தபோது அவர்கள் வெண்ணீறு அணிந்தறியாப் பாழ் முகத்தோர், வாயாடுவோர் வாதித்திடுவோர் நிந்தைசெய் சிறு தேவர்களைப்பற்றி பிதற்றுவார்.

சிவபூசை செய்யார் பொய்ந் நூல் பதறிப் புலம்புகின்ற பித்தர்' சைவநெறி நாடாதவர் என்றெல்லாம் அவர்களைப் பற்றி மொழிந்துள்ள னர். மேலும் இவர்களைப்பற்றி எடுத்து மொழிந்து அத்தகைய அசாதுக்களை மனமே நாடாதே என்று வேண்டும் முறையில்,

சைவம்எங்கே வெண்ணீற்றின் சார்பெங்கே
மெய்யான
தெய்வம்எங்கே என்பாரைச் சேர்ந்துறையேல்
நாம்என்றும் நம்மைஅன்றி நண்ணும் பிரமம்இல்லை
யாம்என்றும் சொல்பவர்பால் ஆழ்ந்துறையேல்
மெய்ஒழுக்கத் தார்போல் வெளிநின்றகத் தொழியப்
பொய்ஒழுக்கத் தார்பால் பொருந்தியுறேல்
கொல்லா விரதமது கொள்ளாரைக் காணில்ஒரு
புல்லாக எண்ணிப் புறம்பொழிக

என்று வற்புறுதத்தி உபதேசம் செய்துள்ளார்.

இறுதியில் சிவயோகியர்களின் தன்மை பேசி அவர்களுடன் சார்ந்து இன்புறுக என்று நெஞ்சிற்கு அறிவுறுத்தியுள்ளனர் சிவயோகியர் தன்மைகள்

தீதும் சுகமும் சிவன்செயல்என் றெண்ணிவந்த
யாதும்சமமாய் இருப்போர்
யாவும் அறிந்து அறியார்போன் றெப்பொழுதும்
சாவும் பிறப்பும் தவிர்ந்தோர்
வைதிடினும் வாழ்கஎன வாழ்த்தி உபசாரம்
செய்திடினும் தன்மை திறம்பார்

என்று நிலைநாட்டினர் இவர்கட்குக் குற்றேவல் புரிந்து வாழ்த்தல் வேண்டும் என்பதனை

நீதுக்க, நீங்கி அன்னோர் சங்கத்தில் நின்று மகிழ்ந்து
ஏத்திநிதம்
அங்கவர்தாள் குற்றேவல் ஆய்ந்து இயற்று

என்று கூறியுள்ளனர்.

உபதேச முறையில் உணர்த்துகையில் தம் மனத்தை நோக்கி,

ஓங்குசிவ
பஞ்சாட் சரத்தைப் பகர்அருளே நாவாக
எஞ்சாப்பரிவுடனே எண்ணி அருள்செஞ்சோதித்
தாதொன்று தும்பைமுடித் தாணுஅடிஒன்றி மற்றை
யாதொன்றும் நோக்கா தமைந்திடுக—தீதென்ற
பாழ்வாழ்வு நீங்கப் பதிவாழ்வில் எஞ்ஞான்றும்
வாழ்வாய்என் னேடு மகிழ்ந்து

என்று உணர்த்தி நல்வழிப்படப் போதித்துள்ள னர்.

4. சிவநேசவெண்பா உலகில் உள்ள மக்களையும் பொருள்களையும் நேசிப்பதை விட, சிவபெருமானை நேசிப்பதே சாலச் சிறந்தது. நம் கடமையும் ஆகும். என்னும் கருத்தில் இது பாடப்பட்டிருத்தலினுலும் வெண்பா என்னும் பாட்டினுல் அமைந்திருப்பதனுலும் சிவநேச வெண்பா எனப்பட்டது. இதில் கணபதிக்கும் முருகனுக்கும் உரிய காப்புச்செய்யுட்கள் இரண் டும், சிவபெருமானுக்குரிய வெண்பாக்கள் நூற்றிரண்டும் உள்ளன.

இந்நூலில் நாம் கைகால் முதலான உறுப்புக் களைப் பெற்றிருப்பதன் சாரணம் இறைவனைத் தொழுதற்கும் திருக்கோயில் வலம்வருதற்குமே ஆகும். இவ்வாறு செய்திலோம் எனில் அத் தகைய உறுப்புக்களைப் பெற்றும் பயன் இல்லை என்பது நன்கு விளக்கப்பட்டுள்ளது இதற்கு ஓர் எடுத்துக்காட்டு

ஏசும் பிறர்மனையில் ஏங்கஅவர் ஈயும்அரைக்
காசும் பெறவரிக்கும் கைகண்டாய்–மாசுந்த
விண்டும் சிரம்குனிக்கும் வித்தகனே நின் தலத்தைக்
கண்டும் சிரம்குவியாக் கை

என்பது,

சிறுத்தொண்டர், பிள்ளைக் கறி இட்டதும் அரிச்சந்திரன் தன்னையும், தன் மனைவியையும் தன் மகனையும் விற்று உண்மைப் பண்பை நிலை நிறுத்தியதும் தருமி என்னும் பிராமணச் சிறுவ னுக்கு மதுரையில் பொன் முடிப்பு கொடுத்தும், கண்ணப்பருக்கு அருள் செய்ததும் இதில் பேசப் பட்டுள்ளன.

நால்வரைப் பற்றிய குறிப்பையும்

பண்ணால்உன் சீரினைசம் பந்தர்சொல வெள்எலும்பு
பெண்ணுன தென்பார் பெரிதன்றே–அண்ணவச்
சைவவடி வாஞான சம்பந்தர் சீர்உரைக்கில்
தெய்வவடி வாம்சாம்பர் சேர்ந்து.

எங்கோவே யான்புகலி எம்பெருமான் தன்மணத்தில்
அங்கோர்பொருட்சுமைஆள் ஆனேனேல்–இங்கேநின்
தாள்வருந்த வேண்டேன் தடைபட்டேன் ஆதலின்இந்
நாள்வருந்த வேண்டுகின்றேன் நான்

பூவுக் கரையரும்வான் புங்தவரும் போற்றுதிரு
நாவிக் கரையர்எனும், நல்நாமம்–மேவுற்ற
தொண்டர்க்கு நீகட்டுச் சோறெடுத்தாய் என்றறிந்தோ
தொண்டர்க்குத் தொண்டன் என்பார் சொல்

எம்பரவை யோமண், ணிடந்தலைந்தான் சுந்தரனுர்
தம்பரவை வீட்டுத்தலைக் கடையாய்—வெம்பனையாய்
வாயில் படியாய் வடிவெடுக்க தேர்ந்திலனே
மாயப்பெயர் நீண்டமால்

வேத முடிவோ விளங்கா கமமுடிவோ
நாத முடிவோ நவில் கண்டாய்—வாத முறும்
மாசகற்குள் நில்லா மணிச் சுடரே மாணிக்க
வாசகர்க்கு நீ உரைத்தவாறு

முன்மனத்தில் சுந்தரரை முன் வலுவில் கொண்டது போல்
என்மனத்தில் நீ வந்திடாவிடினும்—நின்கணத்தில்
ஒன்றும் ஒரு கணம்வந் துற்றமைக்கில் செய்த தன்றி
இன்றும் ஒரு மணம் செய்வேன்.

என்று குறிப்பிடுதல் காண்க.

காரைக்கால் அம்மையாரைப் பற்றி வியந்து,

நண்ணித் தலையால் நடக்கின்றோம் என்ப தெங்கள்
மண்ணில் பழைய வழக்கம் காண்—பண்ணில் சொல்
அம்மையார் வாமத்தோய் ஆயினும் முன் காரைக்கால்
அம்மையார் போல் நடந்தார் ஆர்

என்று பாடிப் பரவியுள்ளதைப் படித்தறியவும்.

இறைவன் தனது இயல்பான கருணைப் பண்பால் விடத்தை உண்டு தேவர்களைக் காத்தார் என்பதை

மால் எங்கே வேதன் உயர் வாழ்வு எங்கே இந்திரன்செங்
கோல் எங்கே வானோர் குடி எங்கே—கோலம் சேர்
அண்டம் எங்கே அவ்வவ் அரும்பொருள் எங்கே நினது
கண்டம் அங்கே நீலம் உருக்கால்

என்றுபாடி உணர்த்தியுள்ளார்.

நம் ஐயா இறைவனை நோக்கி விடுக்கும் விண்ணப்பம்,

ஏசொலிக்கும் மானிடனாய் ஏன் பிறந்தேன் தொண்டர்கள்தம்
தூசொலிப்பான் கல்லாகத் தோன்றிலனே—தூசொலிப்பான்
கல்லாகத் தோன்றுவனேல் காள கண்டா நாயேனுக்
கெல்லா நலம் உளதே
பொன்னின் றெளிரும் புரிசடைபோய் நின்னை அன்றிப்
பின்னொன் றறியேன் பிழை நோக்கி என்னை
அடித்தாலும் நீயே அணைத்தாலும் நீயே
பிடித்தேன் உன் பொற்பாதப்பேறு

என்பதும் ஆகும்.

தூசொலிப்பான் என்பது ஈண்டு திருக்குறிப்புத்தொண்டார் நாயனாரைக் குறிப்பதாகும்.

5. மகாதேவமாலை:- இந்நூலில் நூற்றொரு விருத்தங்கள் உள்ளன தேவர்கட் கெல்லாம் தேவனாக விளங்குபவன் சிவபெருமான் ஆதலின் அவனை மகாதேவன் என்பது சைவமரபு. அத்தகைய மகாதேவனுக்குப் பாமாலையாக பாக்களை அமைத்தமையின் இது மகாதேவமாலை எனப்பட்டது.

இப்பகுதியில் பரமசிவத்தின் அருவ உருவ அருவுருவத் திருமேனிகள் சிறப்பிக்கப்பட்டுள்ளன. இறைவன், வேதம், உபநிடதம், ஆகமம் ஆகியவை போற்றும் நிலையில் விளங்குதல்.

"முந்தனந்த மறைகள் எல்லாம் வழுத்த நின்ற
முழுமுதலே அன்பர்குறை முடிக்கும் தேவே"

என்றும்

"சான்றஉப நிடதங்கள் எலாம் வழுத்த நின்ற
தன்மயமே சின்மயமே சகசத் தேவே"

என்றும்

"தரிக்கரிதென் றுகமங்கள் எல்லாம் போற்றத்
தனிநின்ற பரம்பொருளே சாந்தத் தேவே

என்றும் குறிப்பிடுமாற்றால் விளங்கிக் கொள்ளலாம்.

திருவாதவூரராம் மாணிக்க வாசகரைத் தில்லைக் கூத்தப்பிரான் தன்னுள் கலக்கச் செய்து திருவருள் புரிந்த நிலையினைப் பேசுகையில்,

"மெய்உணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த
வெளியாக்கிக் கலந்து கொண்ட வெளியே

என்று பேசப்பட்டுள்ளது.

சமரசத்திற்கும் சன்மார்க்கத்திற்கும் நிலைக்களன் மகாதேவனே என்னும் அறிய குறிப்பை

பொங்கு பலசமயமெனும் நதிகள் எல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே"

என்று குறிப்பித்து இம்மாலையில் பேசப்பட்டுளது

இறைவன் அன்பர்களை ஏற்று இன்புறுபவன் என்பதை,

பற்றறியா முத்தர்தமை எல்லாம் வாழைப்
பழம் போல விழுங்குகின்ற பரமே

என்பர் வள்ளலார்.

இந்த மாலையின் வழி நம் ஐயாவின் வாழ்க்கைக் குறிப்பு ஒன்று வெளியாகிறது இறைவன் இவரை இளமையிலேயே ஆட்கொண்டு அருள் புரிந்ததே அந்த வாழ்க்கைக் குறிப்பு இதனை வள்ளலார்.

எனைஅறியாப் பருவத்தே ஆண்டு கொண்ட
என் அரசே என்குருவே இறையே

என்று வெளிப்படுத்திப்பாடி இருப்பது கொண்டு தெரிக.

முருகப்பெருமானுக்கு ஆறுமுகங்கள் உண்டு என்பதை நாம் நன்கு அறிவோம். இந்த ஆறுமுகங் கட்குமூலம் மகாதேவனே என்பதை மகாதேவமாலையில்

" கோதன்ற போகர்மனக் குகையில் வாழும்
குருவே சண்முகம் கொண்ட கோவே

என்று குறிப்பிட்டுள்ளனர்.

மகாதேவன் உயிர்களுக்கு உடலாதிவற்றை தந்து அவற்றை ஆட்டி வைக்கும் இயல்பு ஒரு திருவிளையாட்டே ஆகும் என்பதைத் தம்மீது ஈற்று எவர் நெஞ்சும் இளகும் வகையில்

எம்பெருமான் நின்விளையா டென்சொல் கேன்நான்
ஏதும்அறி யாச்சிறியேன் என்னைத்தான் இங்கே
செம்புனலால் குழைத்தபுலால் சுவர்சூழ் பொத்தைச்
சிறுவீட்டில் இருட்டறையில் சிறைசெய்தந்தோ
கம்பம்உறப் பசித்தழலும் கொளுந்த அந்தக்
கரணமுதல், பொறிப்புலப்பேய் கவர்ந்து சூழ்ந்து
வம்பியற்றக் காமாதி அரட்டர் எல்லாம்
மடிபிடித்து வருத்தவன்றோ வளர்த்தாய் எந்தாய்

என்று பாடி இருத்தலைப் பாடிப் பரவுவோமாக.

உடல் நிலையற்றது. ஆகவே அழியா நிலையை எனக்கு அளித்து அருள் செய்க இறைவா என்று வேண்டும் பாடல்.

ஒருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோயிந்த
மலக்கூடுஎன்று அறிஞர்எலாம் வருந்தக் கேட்கும்
ஒருகணத்துக் கொளப்பெண்பேய் எங்கே மேட்டுக்
கடைத்திடவெண் சோறுஎங்கே ஆடைஎங்கே
இருகணுக்கு வியப்பெங்கே வசதியான
இடம்எங்கே என்றுதிரிந் திளைத்தேன் அல்லால்
ஒருகணத்தும் உனைநினைந்த துண்டோ என்னை
உடையானே எவ்வகைநான் உய்யுமாறே.

என்பது.

6. திருவருள் முறையீடு இதுவும் ஒரு நூலே கட்டளைக் கலித்துறையால் அமைந்த இதில் இருநூற்று ஐம்பத்திரண்டு பாடல்கள் உள்ளன இறைவனைத் திருவருள் என்று குறிப்பிடுதல் சமய மரபு. கருணையே உருவமாகிய என்பர் சேக்கிழார் அருள் எனினும் கருணை எனினும் ஒன்றே. ஆகவே அத்தகை தெய்வத் திருவருள் முன் முறையிட்டுக்கொள்ளும் நிலைகளை இந்நூல் அறிவித்தலின், இதுதிருவருள் முறையீடு எனப்படுகிறது. இந்த அருள் தெய்வ அருளே என்பதை உறுதிப்படுத்தற்கே அருளுக்கு முன் திருஎன்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது.

இப்பகுதி முறையீடு என்பதற்கு ஏற்ற முறையில் சிவபெருமானிடம் முறையிட்டுக் கொள்ளும் பாடல்கள் கல்லும் கரையும் தரத்தக் கனவாகவே உள்ளன. அவற்றுள் ஒரு பாட்டு.

நான்படும் பாடு சிவனே உலகர் நவிலும் பஞ்சு
தான்படு மோசொல்லத் தான்படு மோஎண்ணத் தான்
படுமோ
கான்படு கண்ணியின் மான்படு மாறுகலங்கி நின்றேன்
என்படுகின்றனை என்றிரங் காய்என்னில் என்
செய்வேனே

என்பது.

இதில் நெஞ்சிற்கு அறிவுறுத்திய பாடல்கள் உள்ளன. அவையாவும் மனத்திற்கு நெஞ்சை நோக்கி, "ஏ மனமே, சிவாய நம எனச் சிந்தை செய்" என்றும், "அம்மைபங்கன் நல் உணவு உடை, பொன்பணம் முதலானவற்றைத்தருவார்" என்றும்,

கான்போல் இருண்ட இவ்வஞ்சக வாழ்க்கையில்
கல்நெஞ்சமே
மான்போல் குதித்துக்கொண் டோடேல் அமுதமதி
விளங்கும்
வான்போல் குளிர்ந்த சிவானந்த வாழ்க்கையின்
வாழ்வுறச்செந்
தேன்போல்இனிக்கும் சிவாயநமஎனச் சிந்தை செய்யே

என்றும், மற்றும் பலவாருக உபதேசித்திருப்பதை இதில் காண்க.

இறைவனது பெருங்கருணைத்திரத்தைத் திருவிளையாடல் புராண வரலாறுகளை எடுத்துக் காட்டி மொழிந்துள்ளனர்.

மதுரையில் வாழ்ந்த தளபதி என்னும் செட்டியார் தம்சொத்தனைத்தும் தங்கையின் மகனுக்குக் கொடுத்துத் தவமேல் செல்ல, அவரது உறவினர்கள் அச்சிறுவனது தாயை மோசம் செய்து அச்சொத்துக்களை அபகரித்த போது சொக்கலிங்கப் பெருமான் மாமனாக வந்து வழக்கில் வென்றதை 'ஒருமாது மகன் பொருட்டாக உவந்து முறை வருமாமனாகி வழக்குரைந்தோய்' என்றும்,

"சுந்தரேச பெருமான் தமக்குத் தினமும் யாழ் வாசித்து இன்புறுத்திய பாணபத்திரர்க்குப் பொருள் கொடுத்து உதவச் சேரமான் பெருமான் நாயனார்க்கு கடிதம் எழுதித் தந்ததை பாணனுக்கே கனகம் கொடுக்க திருமுகம் (கடிதம்) சேரர்கு அளித்தோய்,' என்றும் ஏழையாகிய தருமி பாண்டிய மனம் விரும்பும் வகையில் ஒரு கவிபாடி அவன் அமைத்த பொற்கிழியைப் பெற அருளிச் செய்த கருணையினை,

"மாணிக சூட பிராம்மணச் சிறுவனான தருமிக்கு
மன்னர் மனம் அறிந்தோர் திருப்பாசுரம்
செய்து பொற் கிழி ஈந்த நின்சீர் நினைந்தே
விரும்பா நினை அடுத்தேன்"

என்றும்,

நடராசப் பெருமான் எப்போதும் ஒரு காலில் நின்று நடனமாடுவதைக் கண்ட இராஜசேகரன் என்னும் பாண்டியன் கூத்தப் பெருமானை நோக்கி, "பெருமானே ஒரே காலில் நடனமாடின் கால் நோகுமே. ஆகவே கால்மாறி ஆடுவீராக" என்று வேண்ட அவ்வாறே தாண்டவ மூர்த்தி கால்மாறி ஆடினார். இக் காட்சியை இன்றும் மதுரையில் காணலாம். இதனை,

"வான்மாறினும் மொழி மாருத மாறன் மனம் களிக்க
கால் மாறி ஆடிய கற்பகமே"

என்றும்

மதுரையில் வீரபாண்டியன் இறந்தபோது அவனது வைப்பாட்டியர் மக்கள் அரசமுடி முதலானவற்றை கவர்ந்து கொள்ள வேறுமுடி அமைத்து அவனது வாழ்வரசியின் பிள்ளைக்கு முடிசூட்ட மந்திரிகள் முயல, அதுபோது இறைவன் நவமணிகளை விற்கும் வணிகனாக வந்து மாணிக்கம் விற்றனன். "இதனை ஒரு காலமணியை திண்மணிக் கூடலில் விற்றுஓங்கு தெய்வ சிகாமணியே" என்றும் வாணியின் பொருட்டுப் பிட்டுக்கு மண் சுமந்து பாண்டியனால் பிரம்படி பட்டதை "முன் மாறன் பிரம்படியால் புண் கொண்ட மேனி" என்றும், திருவாலவாயில் அடியார்க்கு நல்லான் என்னும் வேளாளர் இருந்தார். அவர் சிறக்க வாழ்ந்தவர். அத்தகையவர்க்கு வறுமை வந்துற்றது. இவ்வறுமையைப் போக்க மதிமுடிச் சொக்கன் எடுக்க எடுக்கக் குறையாத நெல் கோட்டை அருளினன். இதனை அன்று உலவா, நெற் கோட்டை ஈந்தவன் நீ அல்லையோ மூக்கன் நின் மலனே, என்றும் பாடி இருத்தலைக் காண்க.

நால்வரைப் பற்றிப் பாடாத பகுதி முதல் திருமுறையில் காண்டல் அரிது. சுந்தரருக்கு திருக் "கச்சூரிலே பிச்சை எடுத்து வந்து உண்பித்ததை கச்சனில் பிச்சைச் சோறெடுத்துக் கொடுத்தாய் என்றும், ஆரூரது பாட்டை இறைவன் நனி விரும்பலை என்பதை "நாவலன் வாய்த்திருப்

பாட்டை நயந்திட்ட நீ'' என்றும், இறைவர் வன்தொண்டருக்கு செங்கற்களைப் பொன்னுக்கித் தந்த கருணையை வியந்து, ''வன்தொண்டர் விரும்புறச் செங்கல்லைப் பொன்னுக்கிக் கொடுத்தாய்'' என்றும், திருவதிகையில் இறைவர் சுந்தரர் முடிமேல் திருவடியைச் சூட்டியதை எண்ணி மகிழ்ந்து, 'பித்தன் என்ற மருமுடி ஊரன் முடிமேல் மறுப்பவும் வந்தவர் திருமுடி மேல் என்ன ஆசை கண்டாய், நின் திருவடிக்கே'' என்றும், சுந்தரர் பொருட்டுப் பரவை நாச்சியார் பால் இறைவர் தூது சென்றது, அப்பெருமானது இரக்கத்தைக் காட்டுகிறது என்ற தன்மையை,

சடையவ நீ முன் தடுத்தாண்ட நர்பிக்கு சற்றெனினும்
கடையவ னேன்செயும் கைம்மாறறிந்திலன்
காலவருந்தி
நடையுற நின்னைப் பரவைதன் பாங்கர் நடத்தி அன்பர்
இடைவரும் உன்தன் இரக்கத்தைத்தான் வெளி
இட்டதற்கே

என்றும் பாடினர்.

மதுரைச் சொக்கேசர், மதுரை மாறன் பிரம்பால் அடிபட்டது குறித்து வாதவூரர் நெஞ்சம் என்ன பாடுபட்டதோ என்று கவலை கூர்ந்து

பொன்பட்ட மேனியில் புண்பட்ட போதில் புவி
நடையாய்
துன்பட்ட வீரர்அந் தோவாத வூர்தம் தூய நெஞ்சம்
என்பட்ட தோஇன்று கேட்ட என் நெஞ்சம்
இடிபட்டதே

என்று பாடித், தாமும் இறைவனது பிரம்படி புண் குறித்து வருந்தியதையும் உடன் இணைத்துப் பாடினர்.

வள்ளலார் இறைவர் தம் முன்னே காட்சி அளிக்க விரும்பி, கனவிலேனும் காட்சி அளிக்க விழைகின்ருர், இதனை மணிமொழியாரது வரலாற்று இணைப்புடன் வேண்டுகின்ருர். அவ்வேண்டுகோள்:

திருவாத வூரர்எம் பெருமான் பொருட்டன்று
தென்னன் முன்னே
வெருவாத வைதிகப் பாய்பரி மேற்கொண்டு மேவி
நின்ற
ஒருவாத கோலத் தொருவாஅக் கோலத்தை உள்
குளிர்ந்தே
கருவாதம் நீங்கிடக் காட்டுகண்டாய் என் கனவினிலே

என்பது. திருஞானசம்பந்தர் திருமயிலையில் எலும்பைப் பெண்ணுக்கிய செயலை, எங்கள் பிரான வளம் சூழ்மயிலை சிவாமுதம் திகழ பெண்ணுக என்பை எழுப்பிய நாள்'' என்ருர். அப்பரது பதிகத்தை வேதம் என்பர். இதனை சொற்றுணை வேதியன் என்னும் பதிகச் சுருதி என்று குறிப்பிட்டதனுல் உணரலாம். அவரை சீர் திருநாவுக்கரையர் என்று போற்றுவர், அப்பருக்கு திருநல்லூரில் திருவடி தீட்டை புரிந்ததை, நல்லூரில் நின்தூமலர் பொன் அடி வைத்தபோது எங்கள் அப்பர் தம் சென்னியது குளிர்ந்தது என்று உணர்த்தினர்.

நால்வர் பாடிய பாடல்கள் இவைகள் தரும் இன்பத்தினும் சிறந்த இன்பம்தரவல்லன என்பதே அறுதி இட்டு உறுதியாகக் கூற முன்வந்து,

சொல்வரும் கன்னி இடத்தோய் நின் சீர்த்தியைச்
சேர்த்தி அந்த
நால்வரும் செய்தமிழ் கேட்டுப்புறத்தில் நடக்கச் சற்றே
கால்வருமாயினும் இன்புறு வாகிக் களிமனம் அப்
பால்வரு மோஅதன் பால்பெண் களைவிட்டுப்
பார்க்கினுமே

என்று பாடி நால்வர் பாடல்களின் சிறப்பை எடுத்து ஓதியுள்ளனர்.

இறைவன் தமக்கு வேண்டிய வற்றை எல்லாம் ஈயக் காத்திருத்தலின், அவனிடமே சென்று கேட்பேனே அன்றி வேறு யாரையும் கேளேன் என்னும் தம் மன உறுதியை

ஏட்டாலும் கேள்அயல் என்பாரை நான்சிரித் தென்னை
வெட்டிப்
போட்டாலும் வேறிடம் கேளேன்என் ஆணைப் புறம்
விடுத்துக்
கேட்டாலும் என்னை உடையான் இடம் சென்று
கேட்பன் என்றே
நீட்டாலும் வாய்உரைப் பாட்டாலும் சொல்லி
நிறுத்துவனே

என்ற பாட்டால் விளக்கினர்.

நம் ஐயாவுக்கு நம் உடல், உறுப்புக்களை இறைவன் பணிக்கே பயன் படுத்த வேண்டும் என்பது எண்ணம். அவ்வாறு பயன்படாத உறுப்புக்களை வெறுத்தே பேசுவர். இதனை,

விட்டுத் தலைவனின் தாள்வணங் கார்தம் விரிதலைசும்
மாட்டுத் தலைபட்டி மாட்டுத் தலைபுன் வராகத்தலை
ஆட்டுத் தலைவெறி நாய்த்தலை பாம்பின்நெடுந்தலை கல்
பூட்டுத் தலைவெம் புலைத்தலை நாற்றப் புழுத்தலையே

தெண்ணீர் முடியனைக் காணுர்தம் கண்இருள்சேர்
குருட்டுக்
கண்ணீர் சொரிந்தகண் காசக்கண் புன்முலைக்கண்
நகக்கண்
புண்ணீர் ஒழுகும் கொடுங்கண் பொருமைக்கண்
புன்கண் வன்கண்
மண்ணீர்மை உற்றகண் மாமணி நீத்தகண் மாலைக்
கண்ணே

கண்ணுத லான்புகழ் கேளார் செவிபொய்க் கதை
ஒலியும்
அண்ணுற மாதரும் மைந்தரும் கூடி அழும் ஒலியும்
துண்எனும் தீச்சொல் ஒலியும் அந்தகண் தூதர்கண்
மொத்
துன்னுறவாஎன் றுரைப்பொலியுள்புகும் ஊன்செவியே

மணிகொண்ட கண்டனை வாழ்த்தார்தம்
வாய்த்தெரு மண்ணுண்ட வாய்
பிணிகொண்ட வாய்விடப் பிச்சுண்ட வாய்வரும்
பேச்சுற்ற வாய்
துணிகொண்ட வாய்அனல் சூடுண்ட வாய்மலம்
சோர்ந்திழிவாய்
குணிகொண்ட உப்பிலிக் கூழ்வுண்ட வாய்எனக்
கூறுபவே

என்ற அருட்பாக்களைக் கொண்டு தெளிக.

இப்பகுதியில் சில பழமொழிகள் எடுத்து ஆளப்பட்டிருக்கின்றன. சூடுண்ட பூனை ''மர மத்திலுல் சுழல் வெண்தயிர் போன்று'' வெறு வாய் மெல்கின்றேர்க்கு ஒரு நெல் அவல் வாய்க்கில் வடுவர் என்றே'' பாலுக்கும் காவல் வெம் பூனைக்கும் தோழன் என்பர்''

திருவருள் முறையீடு சிவபெருமானிடம் முறையிட்டுக் கொள்ளும் முறையில் அமைந்திருந்தும், கணபதி முருகனைப் பற்றியும் பாடிய

பாடல்களையும் கொண்டுள்ளது. இதனை கடம்பா நல் பண்ணிரு கண்ணு இனியேனைக் காத்தருளே என்றும், கணபதி நின்பண்ணுலும் மாமறை மேல் தாளை என்னுள் பதித்தருளே'' என்றும் வரும் தொடர்களால் அறியலாம். இங்ஙனம் சிவ பெருமான் தொடர்புடைய பகுதியில் முருகனை இணைத்து பாடினாலும் முருகனும் சிவபெருமானும் ஒருவரே என்னும் அறிய குறிப்பையும் ஈண்டே பண்ணிரு கண்ணும் விடைமேல் கொண்ட செஞ் சுடர் மேனியும்'' என்றும் பாடி அமைத்துள்ளார்.

இப்பகுதி நம் ஐயாவின் வாழ்க்கை வரலாற்றை அறிதற்கும் துணை செய்கிறது. இறைவர் இவரைச் சிறுவயதிலேயே ஆட் கொண்டு தம்மைப் பாடச் செய்தார் என்பதை—

உருவத்தி லேசிறி யேனுகி ஊகத்தில் ஒன்றும்
இன்றிக்
தெருவத்தி லேசிறு கால்விசி ஆடிடச் சென்ற அந்ந
பருவத்தி லேநல் அறிவளித்தே உனைப்பாடச் செய்தாய்
அருவத்தி லேஉரு ஆனேயநின் தன்அளி ஆர்க்குளதே

என்று உணர்த்தி இருப்பதால் அறியலாம்.

## வடிவுடை மாணிக்க மாலை :

முதல் திருமுறையின் இந்தப் பகுதி. திருவொற்றியூர் வடிவாம்பிகை மீது பாடப்பட்ட மாலையாகும். இதற்கு வள்ளலார் வடிவுடை மாணிக்க மாலை என்று பெயர் தந்தனர். இது காப்புச் செய்யுள் உள்பட நூற்றிரண்டு பாடல் களைக் கொண்டது. பாடல்கள் கட்டளைக் கலித் துறை யாப்பினுல் அமைப்பினுல் ஆனவை. தேவி யின் திருவருள் பெற இப்பாடல்கள் துணை செய்யும். செய்யுள் வடுவுடை மாணிக்கமே என்று முடியும்.

இதில் திருஞானசம்பந்தப் பற்றிய குறிப்பும் கண்ணப்ப நாயனுர் பற்றிய குறிப்பும் காணப்படு கின்றன. தேவியார் சீர்காழிப்பதியில் ஆறுடைப் பிள்ளையார்க்கு ஞானப்பால் தந்து அவரைத் திரு ஞான சம்பந்தர் எனச் சீரிய பெயராய் திகழச் செய்த தாயே என்ற கருத்தை

மாநந்த மார்வயல் காழிக் கவுணியர் மாமணிக்கன்
ருநந்த இன்அமு தூற்றும் திருமூல ஆரணங்கே

என்று பாடியருளினுர்.

திருக்காளத்தி மலை கண்ணப்பரால் போற்றப்பட்ட சிறப்புடையது. என்பதை ''கண்ணப்பன் ஏத்து நல காளத்தி'' என்பது குறித்துள்ளனர்.

வடிவுடை நாயகியின் திருநாமத்தை எண்ணிப் போற்றுகின்றனர். பெறும் பேறு இன்ன என்பதை ஒரு பாட்டால்

வானுள் அடைவர் வறுமை உருர்நல் மனைமக்கள் பொன்
பூண்ஆள் இடம்புகழ் போதம் பெறுவர்பின் புன்மை
ஒன்றும்
கானுர்நின் நாமம் கருதுகின் றோர்ஒற்றிக் கண்ணுதல்
பால்
மானுஆர்வம் உற்ற மயிலே வடிவுடை மாணிக்கமே

என்று பாடி அறிவித்துள்ளார்

திருஒற்றித்தியாகேசர் கிழித்த ஆடை உடுத் தப்பட்டும், வடிவாம்பிகை பட்டு உடுத்தப்பட்டும் இருந்பது கண்ட. நம் ஐயா, படம்பக்க நாதனும் பட்டுடன் திகழ வேண்டும், இதனைக் கோயில் நிர்வாகிகள் உணர்தல் வேண்டும் என்ற கருத்தில் பாடிய பாட்டு நம் உள்ளத்தை உருக்க வைப்பதாக இருக்கிறது. இதோ அந்தப்பாட்டைப் பாருங்கள்''

காமட் டலர்திரு ஒற்றிநின் நாயகன் கந்தைசுற்றி
யேமண் தரையோடு நிற்பது கண்டும் இரங்கலர் போல
நீமட்டு மேபட் டுடுக்கின் றனைஉன்தன் நேயம்என்னே
மாமட் டலர்குழல் மானே வடிவுடை மாணிக்கமே.

நகைச்சுவை ததும்ப வேடிக்கையாகப் பாடிய பாடல்களும் இப்பகுதியில் உண்டு. நம் ஐயா, தேவியை நோக்கி, ''தாயே! ஊரோ ஒற்றிவைக்கப்பட்ட ஊர். நீ மணந்த நாயகர் சுந்தரருக்கு பணி ஆள் அவர் போ என்ருல் போவார், உடலில் போர்த்திக் கொள்ள ஆடை இல்லாமையால் யானைத் தோலை போர்த்தவர். வேலை ஒன்றும் கிடையாது எந்நேரமும் ஆட்டம் தான். இத்தகையவரை ஏன் மணந்தாயோ'' என்று பாடியுள்ள பாடல் சிரிப்பைத்தான் வரு விக்கும். அப்பாட்டையும் பார்மினே பார்மினே

சோலையிட் டார்வயல் ஊர்ஒற்றி வைத்துத் தொண்டர்
அன்பின்
வேலையிட் டால்செயும் பித்தனை மெய்இடை மேவுகரி
தோலையிட் டாடும் தொழில்உடை யோனைத் துணிந்து
முன்னுள்
மாலையிட் டாய்இஃ தென்னே வடிவுடைமாணிக்கமே

இதுதான் அப்பாடல்

தேவிக்கு இரண்டு பிள்ளைகள். அவர்களே கணபதியும் குமரனும் ஆவர். விநாயகர் மூத்த வர். முருகப் பெருமான் இளையவர். உலகில் தாய்மார்கட்கு மூத்தபிள்ளையிடத்து வைக்கும் அன்பினும் இளைய பிள்ளையிடத்து வைக்கும் அன்பு பெரிது என்பர். ஆனுல் இறைவி கணபதியினிடத்தில் பேர் அன்பு கொண்டிருந்தா ராம். இந்த உண்மை இளைய பிள்ளையாகிய முருகப் பெருமான்தான் அசுரர்களைக் கொல்லப் போருக்கனுப்பினுளாம். இதனை நம் வள்ளலார்,

பின்ஈன்ற பிள்ளையின் மேல் ஆர்வம் தாய்க்கென
முன்ஈன்ற பிள்ளையின் மேல் ஆசை உள்ளவர் மொய்
அசுரர்
கொன்ஈன்ற போர்க்கிளம் பிள்ளையை ஏவக்கொடுத்த
தென்னே
மன்ஈன்ற ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே

இலக்குமி பொருளைத் தருபவள் சரசுவதி கல்வியைத் தருபவள் இவ்விருவருக்கும் இத் தகைய வாய்ப்பு கிடைத்தமைக்குக் காரணம் இறைவிக்கு குற்றேவல் செய்து வருவதால்தான் இதனை இங்கே,

செய்யாளும் வெண்ணிற மெய்யாளும் எத்தவம்
செய்தனரோ
கையாளும் நின் அடிக்குற்றேவல் செய்யக்
கடைக்கணித்தாய்

என்பர்.

இதனை நன்கு அறிந்திருந்தும் அறியார் போல.

''வடிவுடை மாணிக்கமே. அலைமகளும் கலைமகளும் பொன்னையும், கல்வியையும் வழங்கு கின்றார்களே அப்படி வழங்குதற்குரிய நிலையினைப் பெற்றிருப்பது உனக்கு தொண்டு செய்யத் தொடங்கிய பிறகுகோ அன்றித் தொண்டில் ஈடுபடாதிருந்ததற்கு முன்னோ என்று வினவுவார் ஆயினார். இந்த கருத்தையே

பொன்னோடு வாணிஎன் போர்இரு வோரும்
தன்னோ டருளும் திறம்நின்றாற் றேவலைத் தாங்கிநின்ற
பின்னோ அலததன் முன்னோ தெரிந்திடப் பேசுக நீ
மன்னோ டெழில்ஒற்றி யூர்வாழ் வடிவுடை மாணிக்கமே

என்று பாடிக் காட்டினார்.

இப்பதியில் இறைவியை வேண்டும் வரங்கள் பல உள. அவற்றுள் ஒன்று.

முப்போதும் அன்பர்கள் வாழ்வொற்றி யூர்எம் முதல்
வர் மகிழ
ஒப்போது தருமலைப் பெண்அமு தேஎன்று வந்துனை
எப்போதும் சிந்தித் திடர்நீங் கிவாழ எனக்கருள்வாய்
மைப்போ தனையகண் மானேவடிவுடை மாணிக்கமே

என்பது.

8. இங்கிதமாலை : இதுவே அருட்பாவின் முதல் திருமுறையில் கடைசியில் அமைந் திருப்பது. இதில் காப்புச் செய்யுள் உள்பட நூற்று அறுபத்தாறு பாடல்கள் உள்ளன. இப் பாட்டுக்கள் அனைத்தும் அறுசீர்க்கழி நெடிலடி விருத்தத்தால் ஆன பாடல்கள்.

இப்பகுதியில் அமைந்த பாடல்கள் இப்பொருள் பட அமைந்து படுத்து இன்புறத் தக்க நிலையில் அமைந்துள்ளன. சிற்றின்பக் கருத்தில் சுவைபட அமைந்திருக்கின்றன. இங்கிதம் என்பதற்குப் பொருள் விளக்கம் நம்ஐயா செய்த போது, குறிப்பால் நிகழும் உறுப்பின் தொழில் என்றனர். இதற்குரிய துறையைக் கூறும்போது தலைவிபாங்கிக் குரைத்தல் என்று கூறினர். இதில் இறைவர் தலைவராகவும். ஆன்மசிற்சத்தி தலைவி யாகவும் பராசக்தி உயிர்ப்பாங்கி (தோழி)யாக வும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இனிச் சிலபாடல்களைப் பார்ப்போமாக இறைவ ராம் தலைவர் அன்னம்தர வேண்டினார் அன்னம் தர ஆன்ம சிற்சத்தியாகிய தலைவி பராசத்தி யாகிய தோழியை அன்னம்தர அழைத்தாள். உடனே தலைவர் பசி போயிற்று என்றனர். தலைவி நடந்து சென்றனள். அதுபோது தலைவர் இவ்அன்னம் இன்னும் தருவாய் என்று வேண் டினர். அதாவது அன்னம் (சோறு) வேண்டா நடந்து காட்டிய (அன்னம்) அன்னம் போன்ற நடை) அன்னத்தைத் தருக என்றனர். இவ் வினிய கருத்துக்களை,

தன்னம் தனியாய் இங்கு நிற்கும் வள்ளல் இவர் ஊர்
ஒற்றிய தாம்
அன்னம் தருவீர் என்றார் நான் அழைத்தேன் நின்னை
அன்னமிடா
முன்னம் பசிபோ யிற்றென்றார் முன்நின்ற கன்றேன்
இவ்வன்னம்
இன்னம் தருவாய் என்கிறார் இதுதான் சேடி என்னேடி

என்ற பாட்டில் அமைந்துள்ளார்.

தலைவர் தலைவியின் வாய் எச்சில் விருப்பதை (முத்தம்தர வேண்டியதை) அழகுபட

அள்ளப் பழகை திருஒற்றி அழகர் இவர்தம் முகம்
நோக்கி
வெள்ளச் சடையீர் உள்ளத்தே விருப்பே துரைத்தால்
தருவேன் என்றேன்
கொள்ளக் கிடையா அவர்குமுதம் கொண்ட அமுதம்
கொணர்ந்தின்னும்
என்அத் தனைதா என்கிறார் இதுதான் சேடி என்னேடி

என்று பாடினர்.

தலைவர் தமக்கு நீர்தர வேண்டினார். தலைவி குளநீர் தருவதாகக் கூறினாள். ஆனால் தலைவர் குளநீர்: பருக மறுத்து இளநீர்ற் (இளநீர் போன்ற சொங்கையே) வேண்டும் என்றனராம். இந்த இன்பச் சுவையை,

வளநீர் ஒற்றி வாணர்இவர் வந்தார் நின்றார்
மாதே நாம்
உளநீர்த் தாகம் மாற்றுநீர் உதவ வேண்டும்
என்றார் நான்
குளநீர் ஒன்றே உளதென்றேன் கொள்ளேம்
இடைமேல் கொளும் இந்த
இளநீர் தருக என்கின்றார் இதுதான் சேடி
என்னேடி

என்ற பாட்டில் அமைத்தனர்.

நீர் வேட்கையைக் குறித்துப் பாடிய மற்றொரு பாட்டிலும் சிலேடை நயம் அமைந்து இன்பம் தருவதைக் காணலாம். இறைவர் தாகம் மிகக் கொண்டோம் என்றார். தலைவி கடிதடம் நீர் கண்டீர் (அதாவது நாவலையுடைய குளநீரைக் கண்டீர்) ஏற்பீராக என்றனள். இறைவராம் தலைவர் கடிதடநீர் உளது என் கின்றாய், (கடிதடம் என்பது பெண்குறி என்றும் பொருள்படும்) ஆகவே அந்தப் பொருள் கொண்ட இறைவர்,) அதை நான் காண முடிய வில்லையே நீ கலையை (ஆடையை) நீக்கினால் காண்பேன் என்றனர். இந்த நயத்தை

அடுத்தார்க் கருளும் ஒற்றிநகர் ஐயர் இவர்
தாம் மிகத்தாகம்
கடுத்தாம் என்றார் கடிதடநீர் கண்டீர் ஐயம்
கொளும் என்றேன்
கொடுத்தாய் கண்ட திலைய ஐயம் கொள்ளும்
இடம் சூழ்ந்திடுங்கலையை
எடுத்தால் காண்பேம் என்கின்றார் இதுதான் சேடி
என்னேடி

என்னும் இப்பாட்டில் காண்க.

இந்தப் பாடல்களைப் படித்துச் சுவைக்கின்ற போது. நம்மைச் சிற்றின்ப நிலைக்கு இழுத்துச் செல்வதாகக் கருதக் கூடாது. திருவாதவூராரின் திருக்கோவையார் பாடல்களும், நம்மாழ்வாரின்

திருவிருத்தப் பாடல்களும் சிற்றின்பச்! சேற்றில அழைத்துச் செல்லும் ?

திருவுந்தியார்,

பெற்றசிற் றின்பமே பேர்இன்ப மாய்அங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முனையாது மாயைஎன் றுந்தீபற என்றும்,

சிவஞான சித்தியார்,

நாடுகளில் புக்குழன்றும் காடுகளில் சரித்தும்
நாகமுழை புக்கிருந்தும் தாக முதல்
தவிர்ந்தும்
நீடுபல காலங்கள் நித்தராய் இருந்தும்
நின்மலஞா னத்தைஇலார் நிகழ்த்திடுவர்
பிறப்பில்
ஏடுதகு மலர்க்குழலார் முலைத்தலைக்கே
இடைக்கே
ஏறிவிதியின் படுகடைக்கே கிடந்தும் இறை
ஞானம்
கூடுமவர் கூடரிய வீடுமதுக் கூடிக்
குஞ்சித சேவடியும் கும்பிட்டே இருப்பர்

என்னும் பாடல்களையும் படித்தால் உண்மை தெரியவரும்.

இங்கித மாலையிலும் நால்வர்களைப் பற்றிய குறிப்புக்கள், வருதலைக் காணலாம் திருநாவுக்கரசர் ஐந்தெழுத்தை ஓதிக் கடலைக் கடந்ததை,

தனிநான் மறையீர் ஒற்றிநகர் தழைக்க வாழ்வீர்
தனிஞான
ஒளிநா அரசை ஐந்தெழுத்தால் உவரி
கடத்தினீர்

என்று பாடியுள்ளார்

இன்னோரன்ன அரிய பெரிய கருத்துக்களை அறிந்து இன்புற அன்பர்களை வேண்டுகின்றேன் அருள்பாவின் முதல் திருமுறையைப் பற்றிவிழாக் குழுவினர் வேண்டிதால், பரந்த பட்ட அப்பகுதியை ஒரு சிறிதாகிலும் படிடுதுணர வேண்டும் என்னும் கருத்தில் ஒவ்வொரு பகுதியின் கருத்தை எழுத நேர்ந்தமையின் கட்டுரை பக்கங்கள் கொண்டு விட்டன. என்றுலும் கருத்தை உணர வேண்டும் என்னும் உணர்ச்சி இருக்குமானல் பக்கங்களைப் பற்றி எண்ணம் வரானெ எண்ணுகின்றேன்.




A VISIT TO :

DHAYALAN

Ready Wear House

1/5, GOVT PENTLAND HOSPITAL ROAD,

VELLORE. N. A.

Will Convince You !

FOR

BANIANS

Ready Made Garments

Brassiers, Etc., Etc.,

Thank You !



# இரண்டாம் திருமுறை

பேராசிரியர் அ. திருமலைமுத்துசுவாமி
M.A., M. Litt., B.T., D.Lib. Sc.,

உலக வரலாற்று ஏடுகளை நாம் புரட்டுவோமேயானால், பிறஉயிர்களின் துபன்ங்கண்டு இரங்கி, அத்துன்பத்தைத் துடைத்தற்காகவே வாழ்ந்த பெரியவர்களை நாம் காணலாம் பிணி, மூப்பு, இறப்பு ஆகியவற்றால் ஏற்படும் துயரினைத் துடைத்தற் பொருட்டு இனிய இல்லாளையும், அருமை மகனையும் ஆட்சி பீடத்தையும் அறவே துறந்து அறநெறியிலே, அன்பு நெறியிலே திளைத்த புத்தர், அவனி எங்கணும் வாழும் மக்களின் துன்பம் துடைத்தற் பொருட்டு அருளுபதேசம் ஆற்றிய இயேசு பெருமான், மக்களின் உரிமைக்கும், நிற இன சமய வெறியினைக் களைதற்கும் போராட்டங்கள் பலவற்றை அறநெறியோடு நடத்தி அதற்காகவே உயிர் நீத்த உத்தமர், உலகப் பேரொளி காந்தியடிகள், அடிமை வாழ்வைத் துடைக்க முனைந்து நின்று ஆவி நீத்த ஆபிரகாம்லிங்கன், உலக அமைதிக்காகப் பாடுபட்டு அதன் பொருட்டு அண்மையில் உயிர் நீத்த கென்னடி, லால்பகதூர் சாஸ்திரி முதலியோர் மனித இனத்தின் துன்பம் துடைத்தற் பொருட்டு பல இன்னல்களை எல்லாம் ஏற்று, இறுதியில் தியாகச் சின்னங்களாக மாறி, உலக வரலாற்றில் நிலைத்த இடத்தைப் பெற்றுள்ளனர். இவர்களெல்லாரும் மக்களுடைய துயரினைக் களைதற் பொருட்டே அரும்பாடு பட்டனர். ஆனால் விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் அருந் துயரினை ஆற்றியவர்களும் இவ்வுலகில் வாழ்ந்தனர்; வாழ்கின்றனர் தனது கூடாரத்தில் புரு முட்டையிட்டிருந்த காரணத்தால், குஞ்சு பொறிக்கும் வரை அக் கூடாரத்தினை அகற்ற வேண்டாம் என்று கூறிய போர்ப் படைத் தலைவர் அம்ரு இப்னுலாஸ், புருவின் பொருட்டுத் தனது தசையினையே அறுத்து அளித்த மாமன்னர் சிபி ஆகியோர் இவ்வரிசையைச் சேர்ந்தோர் ஆவர். இவர்களை விட ஒருபடி உயர்ந்து விளங்குகின்ற ஒரு சிலரும் உண்டு. காரணம் அவர்கள் செடி கொடிகளுக்கு அருள் சுரந்தமை ஆகும். நீரினுமினிய சாயலனுகிய பறம்பு மலைத் தலைவன் பாரி முல்லைக் கொடி ஒன்று படர்வதற்குக் கொழு கொம்பில்லாது வாடி நிற்பதைக் கண்டதும் தான் ஏறி வந்த பொற்றேரினை அதற்கு ஈந்தமையை யார்தான் மறக்க இயலும்? கொடி தழைத்துப் படர்ந்து பூத்துக் குலுங்கி மணம் பரப்ப வேண்டும் என்பதற் பொருட்டு இரங்கிய இளகிய மென்மையான உள்ளத்தைப் பெற்ற பார்புகழ் பாரியைப் போன்றவர் பலர்உண்டு. நாம்இன்றுநூற்றுண்டு விழா எடுத்துப் போற்றிப் புகழ்கின்ற சமரச சன்மார்க்கச் சங்கத்தின் தந்தை சிதம்பரம், மருதூர் இராமலிங்க சுவாமிகள். காலம் 1823-1584 ஆகும்.

சமய உணர்விழந்து, அதன் காரணமாய் பண்பிழந்து, கலையிழந்து, அன்பிழந்து, அறமிழந்து, சாத்திரச் சண்டையிலும், கோத்திரப் பூசலிலும், சமய வெறியிலும் மக்கள் ஈடுபட்டிருந்த நேரத்தில், இருள் மாளச் செய்யும் பேரொளி போன்று இராமலிங்க அடிகள் தோன்றி, தூய உள்ளம், அன்புள்ளம், பேருள்ளம், அதாவது தொல்லுலக மக்கள் எல்லாரும் ஒன்றே என்று எண்ணக் கூடியதான உள்ளத்தை நாம் பெற்றால் தான், இவ்வுலகத்தில் அமைதி நிலவும், மறம் மாய்ந்து அறம் தழைக்கும், அன்பு செழித்து இன்பம் பொங்கும் என்று தம் கருத்திலே கொண்டு, இந்துக்களும் முஸ்லீம்களும் சண்டையில்லாது சகோதரர்களாக வாழ வேண்டும் என்பதற்காக 'டீன் இலாகி' என்னும் புதிய நெறியினை வகுத்த அக்பர் போன்று கடவுள் அருளுருவங் கண்டு, காமவெகுளி மயக்கங்களை மாய்த்து, யாண்டும் இறைவன் நீக்கமற நிறைந்திருத்தலை நினைந்து, பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாதிருத்தலே சிறந்த அறமாகும் என்பதை அனைவர்க்கும் எடுத்துக்காட்டி, அவ்வருளறத்தை வளர்த்து, அவ்வருள் நெறியே அனைவர்க்கும் உகந்த நெறியாகும் அதாவது நல்ல வழி யாகும் என்பதை உலகமக்களுக்கு உணர்த்தி இறுதியில் பெருவாழ்வு பெற்றார். நமது பிறவிப் பிணியினை நீக்குதற்கு மாமருந்தாய் விளங்கும் திருமந்திரத்தினை யாத்துத் தந்த திருமூலரால் தரப் பெற்றதும், தமிழ்ச்சான்றோர் தாயுமானவரால் புத்துயிரூட்டப் பெற்றது ஓர் பொதுமை நெறி இராமலிங்க சுவாமிகள் போற்றிப் புரந்தது சமரச சன்மார்க்கம். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் மந்திரத்தினை இறைவனுக்கு தாம் எடுத்த சமரசக் கோயிலுக்கு அடிக்கல்லாக அமைத்துதவினர் திருமூலர். அதாவது சமரசக் கோயிலுக்கு அடிப்படைக் கல் நாட்டியவர் திருமூலர் ஆவார். அதன் பின்னர் தாயுமானர் அக்கோயிலை நிறுவினர். அவ்வாறு தாயுமானர் எடுத்த கோயிலுக்கு, முன் மண்டபம், மதில், திருச்சுற்று மாளிகை,

கோபுரம் முதலியன கட்டி அக்கோயிலை கவின் மிக்கதாக விளங்கச் செய்தார். இராமலிங்க சுவாமிகள். திருமூலர், தாயுமானுர் வழிவந்த இராமலிங்கர் அவர்கள் காட்டிய வழியிலே நின்று, அவ்வழியினை விரிவு படுத்தி, அதனை விளக்கமுறச் செய்தார். உயிர்தொறும் இறைவன் திரு நடம் புரிவதால், சீவகாருண்யத்தை அனைவரும் மேற் கொள்ள வேண்டும் என்றும்; 'இறைவன் சோதிவடிவினன்; திருவிளக்கு முனையிலும் அவனைக் காணலாம்;' எனவே 'அருட்பெருஞ் சோதி—தனிப் பெருங் கருணை' என்ற அருள் வாக்கினை நாம் அடிக்கடி கூறி இறைவனுக்கு அஞ்சலி செய்ய வேண்டும் என்றும் அடிகளார் கூறிவந்தார். மேலும் தாம் கண்ட உண்மைகளை, பெற்ற அநுபவங்களை, பிறருக்கு தெரிந்து நல்வாழ்வு பெற வேண்டும் என்று கருதி, தமது உரைநடை நூல்களின் வழியாகவும். தாம்பாடிய, ஏறத்தாழ எண்ணாயிரத்திற்கும் மேற்பட்ட பாக்களின் வழியாகவும், அவற்றை நமக்கு அவர் அருளிச் செய்துள்ளார். அவர் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பாக்கள் அனைத்தும் அவர் வாழ்ந்த காலத்திலேயே தொகுத்து 'திருவருட்பா' என்னும் பெயரிலேயே வெளியிடப் பெற்றன. தித்திக்கும் திருவருட்பா நூலிலே காணப்பெறும் பாக்கள் அனைத்தும் உருகிப்பெருகி உளங் குளிர முகந்து கொண்டு பருகுதற்கு இனியதாய், படிக்குந் தொறும் படிக்குந்தொறும் பரவசமூட்டுவதாய், உணர்ச்சி என்னும் ஒளி ஊடுருவப் பெற்றதாய், உண்மையை உணர்த்துவதாய், இறையன்பினை எடுத்துக் காட்டுவதாய் இலங்குகின்றன. ஆயிரக்கணக்கான பாக்களை அடிகள் பாடிய காரணத்தால், அவரது பாக்கள் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 'திருவருட்பா' என்னும் பெயரிலே வெளியிடப் பெற்றன. ஒவ்வொரு பகுதியும் திருமுறை என அழைக்கப் பெற்றது. எனவே திருவருட்பா ஆறு திருமுறைகளைக் கொண்டு விளங்குகின்றது.

இரண்டாவது திருமுறையில், புண்ணிய விளக்கம், அருள்நாமம் விளக்கம், நற்றுணை விளக்கம், போற்றித் திருப்பதிகம், அறநிலை விளக்கம், அருள்நிலை விளக்கம் காதல் விண்ணப்பம், நாடக விண்ணப்பம் முதலிய 106 தலைப்புகளில் ஏறத்தாழ 1089 பாக்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ஆனுல். கீர்த்தனைகள் இப்பாக்களோடு சேர்க்கப் பெறவில்லை. இப்பகுதியில் முதலில் காணப்படும் 'புண்ணிய விளக்கம்' என்னும் தலைப்பில் காணப்பெறும் பதினேறு பாடல்களும் தேடற் கினிய சீரளிப்பதும், திருமாலயனுந் தொழுதேத்தக் கூடிய பெற்றியினைப் பெற்றிருப்பதும், சீலம் திரு. திறல் ஆகியவற்றைத் தருவதும், முனிவர். சுரர் செஞ்சொற் புலவர் ஆகியோரால் போற்றப் படுதற்குரிய பெற்றியினைப் பெற்றிருப்பதுமாகிய திருநீற்றினை இறைவனது திரு நாமமாகிய "சிவாய நம" என்பதனைக்கூற நாம் நெற்றியில் அணிந்தால் எதற்கும் நாம் அஞ்சாது, இனிது வாழலாம். இறைவனது அருளைப் பெறலாம் என்று கூறுகின்றன. அஞ்சி அஞ்சி வாழும் நமது நெஞ்சத்திற்கு அறிவுரை கூறுவது போன்று அடிகள் அப்பாக்களைப் பாடியிருப்பது மிகவும் சுவை பயப்பதாய் விளங்குகின்றது, "ஓம் சிவாய" என்று மனம் அடிக்கடி உன்னினுல் ஒருவன் உயர்வுடன் விளங்கலாம், 'சண்முக சிவசிவ' எனத் துதித்தால் அவன் அருள் பெறலாம், நமச்சிவாயத்தை நா மறவாதிருக்க வேண்டும் என்பன அடுத்த மூன்று பகுதிகளின் உட்பொருள்களாகும். நமச்சிவாயத்தை மறவாதிருத்தலே தமது தலையாய பணி என்பதைக் கூறுமிடத்து, பெற்ற தாயினை மறந்தாலும், உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும் அன்றி உயிரை உடல் மறந்தாலும், கற்ற நெஞ்சம் கலையினை மறந்தாலும், கண்கள் இமைப்பதை மறந்தாலும் நான் நமச் சிவாயத்தை மறக்க மாட்டேன் என்று கூறியுள்ளார். அப்பாடல் வருமாறு :

"பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை யுயிர்மறந் தாலும்
உயிரை மேவிய வுடல்மறந் தாலுங்
கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலுங்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவ ருள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே."

இப்பாடலை பலதடவை பலர்பாடக் கேட்டு நாம் மகிழ்ச்சி வெள்ளத்தில், இறையன்பு வெள்ளத்தில், இசை வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்ருேம் என்பதை அறிவோம்.

நமச்சிவாயமே நமக்குச் சிறந்த துணை, கண்ணப்பர். சாக்கியர், சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய அடியவர்களுக்கு அன்பு செலுத்துதலே இறைவனின் அருள் உள்ளத்தின் எண்ணம், தன்னருமைத் தெய்வம், குரு, தன்னருமை அப்பா இறைவனே, கோயிற்றிருப்பணியே சிறந்த பணி, முத்தி முதலாகிய முக் கண்ணானிடம் பக்தி செலுத்தினுல் பரம சுகமுண்டு, முதலியன அடிகளால் இப்பகுதியில் பேசப்படும் பிற பொருட்களில் ஒரு சிலவாகும்.

அடிகளார் எளிய தமிழிலே இனிய வகையிலே தம் பாடல்கள் அனைத்தையும் பாடியுள்ளார் மேலும் தாம் சொல்ல விரும்பிய கருத்துக்களை சிறந்த, எளிய. உவமைகளின் மூலம் தெளிவாக, படிப்போர் மனங்கொள்ளும் வகையில் எடுத்துக் கூறியுள்ளார். அதற்கு ஒரு சான்று காட்டுவாம்,

வேம்பினது பூ. இலை, காய், பட்டை ஆகிய அனைத்தும் மிகவும் கசப்பாக இருப்பதை அறிந்திருந்தும், அதற்குத் தண்ணிய நீரினை நாம் விடுகின்ருேம் அவ்வாறே வெவ்விடம் பொருந்திய பாம்பிற்கு பாலுணவு நாம் கொடுக்கின்ருேம், இவ்வுலகில் வாழ்கின்ற நாம் வீம்புக்கும் தீம்புக்

கும் ஆளாகி அலேகின்றோம். எனினும் நாம் இறைவனது கருணைக்காக ஏங்கி நிற்கின்றோம். இறைவனும் அவனது அருளை நமக்கு அளிக்கின்றான். அதாவது நம்மை மன்னித்து ஏற்றுக் கொள்கின்றான், நம்மை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுதல் நமது தலையாய கடமையாகும். இதனை,

"வேம்புக்குந் தண்ணிய நீர்விடு நின்றனர் வெவ்விடஞ்சேர்
பாம்புக்கும் பாலுண வீகின் றனரிப் படி மிசையான்
வீம்புக்குந் தீம்புக்கு மானே னெனினும் விடேலென்னை நீ
தேம்புக்கும் வார்சடைத் தேவே கருணைச் சிவக்கொழுந்தே"

என்று அடிகளார் சீரிய முறையில் பாடி உள்ளார். இத்தகைய சிறந்த கருத்துக்களின் கருவூலமாக அடிகளாரின் இரண்டாம் திருமுறை விளங்குகின்றது. விரிவஞ்சி அவற்றை எல்லாம் இங்கு கூறுது விடுத்து, இரண்டாம் திருமுறையில் இறுதியாகக் காணும் 'முன்ன முடிவு' என்ற தலைப்பில் காணப்பெறும் பாடல்களில் ஒரு பாடலின் கருத்தை மாத்திரம் இங்கு கூறலாம்.

மனிதர்கள் தவறு செய்வது இயற்கையே. ஆனால் அதற்குக் கழுவாய் உண்டு. அவர்கள் செய்யும் தவறுகளை உணர்ந்து, வருந்தி, உண்மையாகவே இறைவனிடம் முறையிடுவார்களேயாயின், இறைவன் அவர்களது பிழைகளை எல்லாம் பொறுத்துக் கனிந்து அருள் புரிவான். கருணை நெடுங்கடலாக விளங்கும் இறைவன் நாம் வெறுத்துரைத் தவற்றை எல்லாம், மிகுந்துரைத்தவற்றை எல்லாம் சகித்து நம்மை ஆட்கொண்டு மனத்துயர் நீங்கும் வண்ணம் வழிகாட்டி, இவ்வியனுலகில் நாம் விளைத்திட்ட மிகைகளெல்லாம் அழற்கு இறைத்த பஞ்செனவே ஆக்கி இறுதியில் தன் அடிக்கீழ் வாழும் நிலைத்த பேற்றினை நமக்கு அருள்வான். எனவே நாமும் அடிகள் காட்டிய வழி நின்று நமது பிழைகளை எல்லாம் உணர்ந்து உணர்ந்து, பின்னர் இறைவன் திருமுன் நின்று ஊற்றெழும் கண்ணீர் ஒழுக, உள்ளம் உருகப் பாடிப் பரவினால் பாரினைப் படைத்துக் காத்தளிக்கும் அப்பரமனும் நமக்கு அருள் புரிவான். இனி அடிகளார் எவ்வாறு இறைவனிடம் தனக்கு அருள் பாலிக்கும்படி முறையிடுகிறார் என்பதை அவர் சொற்களாலேயே காணலாம்.

"முன்னவனே சிறியேனுன் சிறிதுமறி யாதே
முனிந்துரைத்த பிழைபொறுத்துக் கனிந்தருளல் வேண்டும்
என்னவனே யென்றுணையே யென்னுறவே யென்னை
யீன்றவனே யென்றாயே யென்குருவே யெனது
மன்னவனே யென்னுடைய வாழ்முதலே யென்கண்
மாமணியே மணிமிடற்றோர் மாணிக்க மலையே
அன்னவனே யம்பலத்து ளாடுகின்ற வமுதே
ஆறணிந்த சடையாயான் வேறுதுணை யிலனே."

இவ்வாறு நாமும் நாள்தோறும் எல்லாம் வல்ல இறைவனிடம் முறையிடுவோம். நமது பாவங்கள் எல்லாம் பஞ்சாய்ப் பறந்து போகும். பாவங்கள் தொலைந்தால் அறம் வளரும்; அன்பு பெருகும்; அமைதி ஓங்கும்; இவ்வவனி செழிக்கும்.


நல் வாழ்த்துக்கள்

P. R. நம்மாள்வார் பிள்ளை

கலா எலக்ட்ரிகல் & இன்ஜினியரிங் கான்ராக்டர்ஸ்.

அகரஞ்சேரி, வ. ஆ.

PHONE No: 345

**ASA Bakery**

*pure*

**BUTTER & GHEE**



L.V. PRESS, VELLORE.

88, LONG BAZAAR, VELLORE. N.A.

*A. S. Arunachalam Pillai.*

எமது பிஸ்கட் பாக்டரியில் கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு

நல்லமுறையில் ரொட்டி, பிஸ்கட், கேக் வகையராக்கள்

அசல் நெய்யினுலும், வெண்ணெயினுலும்

தயார் செய்யப்படுகிறது.

**A. S. அருணுசலம் பிள்ளை,**

பிஸ்கட் பாக்டரி

**88, லாங்கு பஜார், வேலூர். வ. ஆ.**



# மூன்றும் திருமுறை


க. த. திருநாவுக்கரசு, எம் ஏ., எம். லிட்.

துணைப்பேராசிரியர்

தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி. சென்னை


## 1. முன்னுரை,

மக்கள் உள்ளத்தைத் தூய்மைப் படுத்தும் மாண்புமிக்க பக்தி இலக்கியங்கள் பல நம் தமிழ் மொழியில் உள்ளன. இவ்விலக்கியங்களைப் போன்று உலகில் வேறு எம்மொழியிலும் பக்தி இலக்கியங்கள் சிறப்புற்று விளங்கவில்லை. இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. இன்றைய உலகம் இதை நன்கு உணர்ந்துள்ளதை நாம் காணுகின்றோம். தமிழ் மக்கள் உலக நாகரிக வளர்ச்சிக்கு உதவியுள்ள பொருள்கள் பல. அவற்றுள் தமிழ்மக்கள் உலகப் பண்பாட்டின் கருவூலம் நிறைவு பெறுவதற்கு வழங்கியுள்ள பக்தி இலக்கியம் தந்நிகரற்று விளங்குகிறது.

கி. பி. ஆறும் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பெருக்கெடுத்தோடிய பக்தி வெள்ளம், நிலையாக அதன் பயனை உலகிற்கு அளித்துள்ளதைக் காணுகின்றோம். சைவ, வைணவ பக்தி இயக்கத்தினால் தமிழ்ப் பூங்காவில் மலர்ந்த முல்லைமலர்களே பக்திப் பாடல்களாகும் அவை முழுமுதற் பொருளைக் காண்பதற்கு மக்களினம் ஆர்வத்தோடு முயன்ற முயற்சிகளுள் தலைசிறந்த ஒன்றைஅழியாது போற்றிக்காத்து வருகின்றன

இத்தகைய அருள்மொழிகளை அருளிய அருளாளர்கள் "இறைவன் அன்புமயமாக இருக்கிறான், இறைவனுடைய அன்புதான் இப்பேரண்டம் முழுவதையும் உண்டாக்கியது. அவ்வன்பே உயிர்களிடத்திலும் நிறைந்து இருக்கிறது. அவ்வன்பைப் பாழாக்கி விடாமல் பேணி வளர்ப்பவர்கள் அன்புமயமாய், தெய்வமயமாய் ஆகிவிடுவார்கள்" என்னும் உண்மையை ஓலலும் வகையெல்லாம் ஓயாது உலகிற்கு உணர்த்தினர். அவர்கள் உணர்த்திய நெறியே 'பக்தி நெறி' என்று போற்றப்படுகிறது. 'ஊன்வாட வுண்ணாது, உயிர் காவலிட்டே உடலிற் பிரியாமல் புலனைந்தும் நொந்து தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா' என்பது அவர்களுடைய கொள்கையாகும். அன்பினால் உருகி அழுதால், அரற்றினால், என்பும் உருக இராப்பகல், ஏத்தினால் இறைவனைக் காணலாம் என்பது அவர்கள் அனுபவத்தில் கண்ட உண்மையாகும். எனவே அன்பைப் பேணி வளர்க்கும் பெருமைமிக்க அன்பு நெறியை-பக்தி நெறியை- அவ்வருட் செல்வர்கள் உலகிற்குக் காட்டிச் சென்றனர்.

அவ்வன்பு நெறி இன்றுவரை நமது நாட்டில் சிறப்புற்று விளங்கி வருகிறது. அவ்வன்பு நெறியைத் தழைத்தோங்கச் செய்த பெரியார்கள் பலர். அவர்களுள் சென்ற நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கியவர் அருள்நெறிச் செல்வராகிய இராமலிங்க அடிகளாவர். உலகிலே அன்புநெறி தழைக்க, அருளாட்சி ஓங்க அண்ணலவர்கள் ஆற்றிய அரும்பெருந் தொண்டுகள் பல. அடிகளுடைய அன்புள்ளம் 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல்' போற்றியது; உலகத்து உயிர்க்கெலாம் அன்புப்பணி செய்வதில் ஆர்வம் கொண்டது அவ்வன்புப் பணியினை அடிகள் சொல்லாலும் செயலாலும் செய்து வந்தார். சொல்லால் அவர் செய்த அரும்பெரும் பணியே 'திருவருட்பா' எனும் தெய்வத் தமிழ் மணங் கமழும் பக்தி இலக்கியமாகும். அருட்பாக்கள் அவருடைய அனுபவத்தினின்று மின்னிப் பறந்த பொன் மணிகள்; கல்லார்க்கும் கற்றார்க்கும் களிப் பருளும் களிப்பு; மக்கள் உள்ளத்தின் மாசகற்றும் மாமருந்து; அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் வடிக்கும் ஆன்மாக்களுக்கு அமைதியளிக்கும் அன்புக்கனி.

## 2. மெய்யுணர்வுக் காதல் நெறி :

'திருவருட்பா' எனும் தெய்வத் திருமறையின் மூன்றாவது திருமுறையை உலகிற்கு அடிகளார் வழங்கிய அன்புக்கனியின் தீஞ்சுவையாகும். வாழையடி வாழையென வந்த அருளாளர் திருக்கூட்டத்தில் ஒருவராகிய அடிகளார், அன்பு நெறியை அறிவுறுத்துவதற்கு முன்னோர் காட்டிய வழியினைப் பின்பற்றியுள்ளார். இராமலிங்கர் இறையன்பில் மூழ்கித் திளைத்த மெய்யுணர்வாளர். அவ்வின்பத்தை உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் அனுபவிக்க வேண்டும் என்னும் அருள்நோக்குடன் அவர் அவ்வின்ப வெள்ளத்துள் பிற உயிர்கள் மூழ்கித் திளைப்பதற்குரிய வழிவகைகளை நாடி ஆராய்ந்தார். அவ்வாராய்ச்சியின் முடிவாக அவர் இறைவனை அடைவதற்கு உரிய வழிகளுள்

சிறந்ததாகக் 'காதல் நெறியைப்' போற்றத் தொடங்கினர்.

அடிகள் இறைவனை அடைவதற்குரிய நெறிகளுள் 'காதல் நெறி'யாகிய அகப்பொருள் இலக்கண நெறியை ஒன்றாகக் கொண்டார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. கடவுளைத் தலைவனாகவும், ஆன்மாவைத் தலைவியாகவும் வள்ளலார் உருவகப் படுத்தியுள்ளார். இவ்வாறு 'தலைவன்-தலைவி'யாக இறைவனையும் ஆன்மாவையும் உருவகப் படுத்திக் கூறுவது தமிழகத்தில் தொன்று தொட்டு இருந்துவரும் மரபாகும் இறைவனுக்கும் ஆன்மாக்களுக்கும் இடையே இருந்துவரும் தொடர்பினை ஒன்பது வகையாக நம்முடைய முன்னோர்கள் வரையறுத்துள்ளனர் அவற்றுள் ஒன்று நாயகன் நாயகி' தொடர்பு என்று கூறுவர் உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் மகளிர் எனவும், இறைவன் ஒருவனே ஆண்மகன் எனவும், அவ்வாண் மகனை அறிவழகிகளாகிய ஆன்மாக்கள் அடைய விரும்பி, அரும்பெரும் முயற்சிகள் செய்து அவனை அடையும் எனவும் கூறப்படும் கொள்கையே 'நாயகன்-நாயகி' பாவம் அல்லது "மெய்யுணர்வுக்காதல் நெறி" என்று போற்றப்பட்டு வருகிறது.

இக்கொள்கை உயிர்களையெல்லாம் செயற்படுத்தித் தன்னிடத்தே ஆட்கொள்ளும் ஆண்மையுடையவன் இறைவன் ஒருவனே என்பதையும், தோற்றமோ ஒடுக்கமோ இல்லாத நிலையில் தன் தொழிலை நடத்தும் தலைவன் அவன் ஒருவனே என்பதையும், ஆண்மையுடையவனும் தலைமையுடையவனுமாகிய அவனே ஆணாக விளங்கத் தகுதியுடையவன் என்பதையும், மற்ற உயிர்களெல்லாம் அவனுக்கு அடிமைப்பட்டு—வாழ்க்கைப் பட்டாக வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. இவ்வாழ்க்கைப்படும் பெருநிலை பெண்மனத்துக்கே உரியது. வாழ்க்கையையே அன்பாக மாற்றிக் கொள்ளும் பெருமனம் பெண்மைக்கே உரியது. ஆண்களுள் தலைமையானவனாகிய இறைவனே அன்றி, மற்றவரெல்லாம் ஆண்கள் என்று அழைக்கப்படுவது உபசார வழக்காகும். இறைவனிடத்தில் மக்களுக்கு உண்டாகும் காதலே மெய்யான காதலாகும். ஆண் பெண்களுக்கிடையே உண்டாவது போலிக் காதலாகும். நாடக மேடையில் நடிக்கும் ஆண் வேடம் பூண்ட பெண்ணின்மீது மற்றொரு பெண்ணிற்கு உண்டாகும் காதல் போன்றதே இம்மண்ணுலக மக்களின் காதல் என்பர் மெய்வுணர்வுக் காதல் நெறியினர்.

பெண் அன்பின் ஊற்று; அழகின் பிறப்பிடம்; அமைதியின் உறைவிடம் என்பர். பெண்மை எனப் போற்றப்படுவது அன்பு, அழகு, அமைதி எனும் இம்மூன்று பண்புகளின் கலவை என்பது உலகறிந்த உண்மை. அமைதியே பேரழகு வாய்ந்தது; அமைதியே அன்பை வளர்க்கும் இயல்புடையது ஆற்றலும் செருக்கும் உடைய உள்ளத்திலே தெளிவோ, அமைதியோ, அன்போ சிறந்து விளங்க முடியாது. ஆகையால், **அமைதிபெற** வேண்டுமென்றால் பெண்ணுள்ளம் பெற வேண்டும் என்பர். செருக்குற்ற மனநிலை அழிந்தால்தான் 'தான்' என்னும் ஆணவமும் அழியும் ஆணவம் அழிந்தால்தான் இறைவனே தலைவன் எனும் மெய்யுணர்வு கைவரப் பெறும்; இத்தகைய நிலையில் 'தன்'னையழித்துக் கொண்டு இறைவனாகிய தலைவனுக்கு ஆட்படும் இன்ப உள்ளத்தைப் பெற வேண்டுமென்னும் வேட்கை கொண்ட பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் "மெய்யுணர்வுக் காதல் நெறி" முறையைப் பெரிதும் போற்றினர்.

இக்காதல் நெறியைப் 'பிரேம பக்தி' என்றும், 'பக்தி நெறிக் காதல்' (Devotional love) என்றும், 'மெய்யுணர்வுக் காதல்' (Erotic Mysticism) என்றும் பிற மொழியாளர்கள் பலரும் பலவாறாகக் கூறுவர். இதை நம் தமிழகத்துப் பெரியார்கள் 'நாயக-நாயகி பாவம்' என்றும், 'பேரின்பக் காதல்' என்றும் போற்றி வருகின்றனர். இதனை "அவனே தானேயாகிய அந்நெறி" என்று மெய்கண்டார் கூறும் இரண்டறக் கலக்கும் நெறியுடன் ஒப்புமையுடையதாகக் கூறலாம்.

சிவஞான போதத்தின் பத்தாம் சூத்திரம்

"அவனே தானே யாகிய வந்நெறி
ஏகனாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னோடு வல்வினை யின்றே

என்பதாகும்.

இந்நூற்பா,

"அதுவே, தானே யவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி யிருவயி னொத்தல்"-சூ. 2

எனும் இறையனார் களவியல் நூற்பாவின் கருத்தினைப் பேரின்பப் பொருளில் விளக்குகிறது என்று பெரியோர்கள் கூறுவர்.

அன்பின் ஐந்திணை ஒழுக்கமாகிய களவு ஒழுக்கத்தில் 'தானே அவள்; அவளே தான்' என்று கூறும் வகையில் வேற்றுமையற்று தலைவனே தலைவியாகவும், தலைவியே தலைவனாகவும் அன்பினாலும், பண்பினாலும், கல்வியினாலும், உருவினாலும் திருவினாலும் வேற்றுமையில்லாமல் ஈருடலும் ஓர் உயிருமாய் இரண்டறக் கலந்த இன்ப அன்பு நிலையினை இவ்வகப் பொருள் சூத்திரம் குறிப்பிடுகின்றது.

இக்கருத்தினையே ஆன்மா மெய்யுணர்வினால் கண்டறிந்த அம்முழுமுதற் பொருளாகிய இறைவன்தான் உடனாய் நின்று அறியவும், உயிர் அம்முதல்வனோடு உடனாய் நின்றறியினும் தானென வேறு காணப்படுமாறின்றி அவனோடு ஒற்றுமைப்பட்டு அவ்விறைபணியின் வழுவாது நிற்பின், மலமாயையென்னும் இரண்டனோடு வலிய கன்மமலமும் இல்லையாய் ஒழியும், என்று சிவஞான போதம் குறிப்பிடுகிறது.

இதை மெய்யுணர்வுக் காதல் நெறியினர் 'ஆன்மாவின் அடைக்கலம்' அல்லது 'பிரபத்தி' என்றும் கூறுவர். நான் ஒன்றினையும் செய்வதற்கு ஆற்றலுடையவன் அல்லன்; என்னைக் காத்தருள வேண்டிய பாரம் இறைவனுகிய உன்னையே சார்ந்தது. ஆதலால் உன்னை எதிர்பார்த்திருப்பது தவிர என்னல் ஆவது ஒன்றும் இல்லை என்னும் உறுதியான உள்ள உணர்வுடன் இறைவனுடைய திருவடிகளையே அடைக்கலமாக அடைதல்தான் 'ஆன்மாவின் அடைக்கலம்' என்னும் முத்தி நெறியின் இலக்கணமாகும்.

இவ்வான்மாவின் அடைக்கலத்தையே, நாயகி நாயகனை நாடிச் சென்று அவனோடு இரண்டறக் கலக்கின்ற இன்ப அன்பு நெறியாக பின் வருமாறு உருவகப்படுத்திக் கூறுவர்

"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்;
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!"

—திருமுறை 6:25:6.

இவ்வப்பர் தேவாரப் பாடல் மெய்யுணர்வுக் காதல் நெறியினைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது. ஆன்மாவாகிய தலைவி இறைவனுகிய தலைவனைக் கண்டாள்; காதல் கொண்டாள்; மயக்குற்றாள்; அவனை அடைய வேண்டும் எனும் தீரா வேட்கையுற்றாள் எனவே, 'அவன் யார்?' 'எந்த ஊர்?' என்பதையெல்லாம் அவள் கேட்டறிந்தாள். அவனைப் பற்றிய செய்திகளைக் கேட்குந்தோறும் அவள் அவனிடத்துக் கொண்ட காதல் அணை கடந்த வெள்ளம்போல் பெருக்கெடுத்தோடலாயிற்று. எனவே, அவள் அவனிடத்து தீராக்காதல் கொண்ட பைத்தியக்காரியானாள். அவனை அடைவதற்குரிய நெறிமுறைகளையே எந்நேரமும் எண்ணிக் கொண்டிருக்கும் அவள் பெற்றோர்களை விட்டகன்றாள்; உயிரினும் சிறந்த நாணினைத் துறந்தாள்; உலகத்தார் பெரிதாக மதித்துப் போற்றும் பழக்க வழக்கங்களைப் பற்றிய கவலைப்படவில்லை; அவற்றையெல்லாம் அவள் புறக்கணித்தாள் அவள் தன்னை மறந்த அவள் புறக்கணித்தாள் அவள் தன்னை மறந்த நிலையில், கன்னிப் பெண்ணின் இயல்பிற்கு ஊறுதேடும் வகையில்தானே ஆரூருக்குச் சென்று அங்குள்ள தலைவனின் தாள்களில் அடைக்கலம் புகுந்தாள் என்பதை இப்பாடலில் நாம் காணுகின்றோம்.

இப்பாடல் சீவாத்மாவாகிய அப்பர் எனும் தலைவி, பரமாத்மாவாகிய 'ஆரூரரை'க் கண்டு காதலித்து தன்னையும் இவ்வுலகையும் மறந்து இறைவனுகிய பேரின்பக் கடலிலே மூழ்கித் தோய்ந்த வரலாற்றை 'பக்தி நெறிக் காதல்' சுவை ததும்ப எடுத்துரைக்கின்றது. இத்தகைய 'ஆன்மீகக் காதல்' நெறியினை எடுத்துரைக்கும் பாடல்களும் இலக்கியங்களும் நம் தமிழ் மொழியில் மிகப் பலவாக உள்ளன.

## 3. அகப்பொருளும் பக்திநெறியும்:

நம்முடைய பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் பொருளினை 'அகம்' எனவும், 'புறம்' எனவும் பாகுபாடு செய்துள்ளனர். இப்பாகுபாடு உலகில் வேறெந்த மொழிகளிலும் காண முடியாத சிறப்பு மிக்க பாகுபாடாகும். "ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக் கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக் கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார். எனவே, அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகம் என்றது ஓர் ஆகுபெயராம்; இதனை யொழிந்தன ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லார்க்குந் துய்த்துணரப் படுதலாலும் இவை இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலாலும் அவை புறம் எனவேபடும்*"

இதனுல் நாம் அகம் என்பது தலைவனும் தலைவியும் அமுதமும் அதன் கண் கரந்த சுவையும் போல உள்ளத்தால் கலப்புடைய காரணத்தால் வேறுபாடிலர். ஆயினும், இவ்வின்பந் துய்த்தற் பொருட்டு ஓருயிரே ஈருருவெடுத்து நின்றாற்போல அவனென்றும் அவளென்றும் வேறுபட்டுத் தோன்றி அன்பின் வழிச் செல்லும் இன்ப வெள்ளத்துத் திளைக்கும் பேரழகு அதனை அனுபவிக்கின்ற அவர்களுடைய உள்ளத்தான் உணரப்படுவதேயன்றி அவருள்ளும் ஒருவருக் கொருவர் வாயினுல் இத்தன்மையது எனக்கூற இயலாத இயல்பினையுடையது என்பதனை அறிகிறோம்.

**இம் மண்ணகக் காதலை விண்ணகக் காதலாக** மெய்யுணர்வுக் காதலாக மாற்றிய பெருமை நமது சைவ, வைணவ அடியார்களையே சாரும். இம்மெய்யுணர்வுக் காதல்நெறியின் கருமுதல் தொல்காப்பியத்திலேயே காணப்படுகின்றது.

"காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினு மென்மனார் புலவர்"

—தொல். பொரு. 83

இப்பாடாண்திணை நூற்பாவில் தொல்காப்பியர் தெய்வீகக் காதலைக் குறிப்பிடுகிறார் என்று கொள்ளுவதே பொருத்தமுடையதாகும். இந் நூற்பாவிற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் பக்கு நின்ற (பிரிந்து நின்ற) புணர்ச்சி வேட்கை கட்புலனாகிய கடவுளிடத்தும்

* தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல், நச்சினார்க்கினியர் உரை

நீக்கார்' என்று கூறி, 'காமப் பகுதி' என்பதனை 'அது, கடவுண் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயப்பனவும், அவர் மாட்டு மானிடப் பெண்டிர் நயப்பனவும், கடவுண் மானிடப் பெண்டிரை நயப்பனவும் பிறவுமாம்' என்றும் உரை விளக்கம் தந்துள்ளார். இங்குக் குறிப்பிடப்படும் 'கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயப்பனவும், கடவுள் மானிடப் பெண்டிரை நயப்பனவும்' என்னும் பகுதியே நம்முடைய ஆராய்ச்சிக் குரியது. பக்தி நெறியில் ஆன்மாக்கள் எல்லாம் பெண்களாகவே கருதப்படுகிறது ஏனெனில் ஆன்மாக்களுக்கு இல்லாத தலைமைச் சிறப்பும், பிறரை ஆட்கொள்ளும் திறமும் இறைவனுக்கே இயல்பாக உள்ளமையால் இறைவனே உண்மையான 'ஆண்மகன்' எனவும், உலகில் பிறந்து சின்னாள் பல்பிணி சிற்றறிவுடன் அல்லற்பட்டு அழிந்தொழியும் ஆடவரெல்லாம் ஆடவரல்லர் எனவும் கூறுவர். இக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு 'கடவுள் மாட்டு மானிட பெண்டிர் நயப்பன' என்பதனைக் 'கடவுளிடத்து மானிட வடிவிலேயுள்ள ஆன்மாக்களாகிய பெண்கள் கொள்ளும் காதல்' எனவும் கடவுள் மானிடப் பெண்டிரை நயப்பன' என்பதற்கு, 'இறைவன் மானிடவடிவிலுள்ள ஆண்மாக்களாகப் பெண்டிரைக் காதலிப்பது' என்றும் பொருள் கொள்ளலாம். இவ்வாறு இச்சதுரத்திற்குப் பொருள் கொள்ளுவதைப் 'பேரின்பக் காதல் நெறியின்' அடிப்படைக் கருத்தினை அறிந்தவர்கள் தவறுகக் கருதார்.

சங்க இலக்கியத்துள் இக்காதல் நெறிக்குச் சான்றுகள் ஒன்றும் காணப்படவில்லை: திருக்குறளின் மூன்றும் பகுதியாகிய 'காமத்துப்பால' மண்ணுலக மக்கள் காதலைக் கூறுது. மெய்யுணர்வுக் காதலையே சொல்லோவியமாக்கிக் காட்டுவதாகக் கூறுவோரும் உளர்.

தேவாரக் காலத்தில்தான் இந்நெறி போற்றி வளர்க்கப்பட்டதாகக் காணுகின்றோம். திருஞான சம்பந்தருடைய பாடல்களிலும் திருநாவுக்கரசருடைய பாடல்களிலும் இத்தெய்வீகக் காதல் மணம் கமழுவதைக் காணுகின்றோம். மணிவாசகரின் திருக்கோவையார்.

''அருள்வயிற் சிறந்த அகத்தினை மருங்கின்
இருளறு நிகழ்ச்சி இவை யென''

மொழிகின்றது.

மணிவாசகப் பெருமான் இறைவனைத் தலைவியாகவும், தம்மைத் தலைவனாகவும் கொண்டு, திருக்கோவையாரை இயற்றியுள்ளார் என்று சொல்லத்தக்கதாகும். ஆன்மாவாகிய தலைவன், இறைவனாகிய தலைவியளிக்கும் இன்பவெள்ளத்தில் மூழ்கித்திளைக்கும் நிலையினைச் சித்தாந்தத்தின் நெறிநின்று விளக்கியுள்ளார், இறைவனே பரமாத்மா, அப்பரமாத்மாவின் ஒரு கூறே சீவாத்மா. சீவாத்மாவும், பரமாத்மாவும் வேறுபட்டு விளங்குவதற்குக் காரணம் இன்பவெள்ளத்துள் மூழ்கித் திளைப்பதற்காகவேயாகும் என்பதனை

'' ஆனந்த வெள்ளத் தழுந்துமோர்
ஆருயிர் ஈருருக்கொண்(டு)
ஆனந்த வெள்ளத் திடைத்திளைத்
தாலொக்கும் ''

என்னும் திருக்கோவையார் பாடலால் (307) அறியலாம்

மேலும், தெய்வப் புணர்ச்சி புரிந்த தலைவன் புணர்ச்சி இன்பத்தின் இயல்பினைக் கூறுகின்ற

''சொற்பா லமுதிவள் யான்சுவை
யென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று
நானிவ ளாம்பகுதிப்
பொற்பா ரறிவாரி......''

என்னும் கோவைச் செய்யுளுக்கு 8 பேராசிரியர் தந்துள்ள உரைவிளக்கம் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்

''நல்வினைத் தெய்வம் களவின்கண் கூட்ட அமுதமும் அதன்கண் கரந்து நின்ற சுவையுமென்ன என்னெஞ்சமும் இவள் கண்ணே யொடுங்க, யானென்பதோர் தன் காணுதொழிய, இருவருள்ளமும் ஒருவேமாமாறு கரப்ப, ஒருவேமாகிய ஏகாந்தத்தின் கண் பிறத்த புணர்ச்சிப் பேரின்ப வெள்ளம் (இதனை அனுபவிக்கின்ற யானே யறியினல்லது) யாவரானறியப்படுமென்று மகிழ்ந்துரைத்தான்'' என்பதனால் மெய்யுணர்வுக் காதல் நெறி அகப்பொருள் காதலை அடிப்படையாகக் கொண்டு தோன்றி வளர்ந்தமை தெளிவாகத் தோன்றுகின்றது.

இக்காதல் நெறியினைச் சிறப்பிக்கும் மற்றொரு இலக்கியம் சேரமான் பெருமாள் நாயனர் இயற்றியருளிய 'திருக்கயிலாய ஞான உலா வாகும்' உலகிற்கு முதல்வனாகிய இறைவன் விழாக் கோலத்துடன் உலாவருகின்றான். பரிபக்குவநிலையினை அடைந்து கொண்டிருக்கும் ஆன்மாக்கள் அவனைக் கண்டு காதல் கொள்ளுகின்றன. அவனே பேதை முதல் பேரிளம் பெண் ஈருக உள்ள ஆன்மாக்க அடையத் துடிகின்றன. ஆன்மாக்களின் பரிபக்குவ நிலைக் கேற்ப அவற்றைப் பேதையாகவும், பெதும்பையாகவும், பேரிளம் பெண்ணாகவும் ஆசிரியர் உருவகப் படுத்தியுள்ளமை கற்போக்கு இன்பம் பயப்பதாகும்.

உயிர்களெல்லாம் பெண்மையன: பரம்பொருள் ஒருவனே ஆண்மையுடையவனாவான். அப்பரம்பொருளைக் கண்ட உயிர்கள் எல்லாம் அவனிற் கலக்க அரும்பாடுபடும் செய்தியே இவ்வுலாவின் உட்பொருளாகப் பாடப் பெற்றுள்ளது. ஆன்மாக்கள் எல்லாம் பெண்மையெனக் கொண்டு பார்க்கும் பொழுது சேரமான் பெருமாள் நாயனரே எழுதுவாகப் பருவ மகளிராக இருந்து மாறி மாறி நடிக்கும் மனக்காட்சியே இந்நூலாக உருக்கொண்டது என்பர் சான்றோர்.

இறைவனை அடையவிரும்பும் ஆன்மாக்கள் தம் காதலனாகிய தலைவனிடம் தம் அன்பிற்கும் நம்பிக்கைக்கு முரியவரையும் அஃறிணைப் பொருள்களையும் தூது அனுப்புவதாகப்பாடும் இலக்கிய மரபும் பக்தி நெறிக் காதலை வளர்க்கப் பேருதவி புரிந்தது எனலாம். தமது உள்ளத்தைக் கவர்ந்த காதலனிடம் (இறைவனிடம்) தம் மன நோயை எடுத்துரைத்து அதனைப் போக்க அருள் புரியுமாறு தமது அன்பிற்குரிய எப்பொருளையாகிலும் தூது சென்று, கூறிவருமாறு வேண்டும் முறையில் பாடப்படும் பாடல்கள்பல மெய்யுணர் வாளர்களின் அருட்பாடல்களில் இடம் பெற்றுள் ளன. அஃறிணைப் பொருள்கள் தூதுபோவதற்கும், செய்திகளைச் சொல்லுவதற்கும் உரியன வல்ல. எனினும், அவற்றை விளித்துக் கூறுதலுக்குத் தலைவன் தலைவியின் மன மயக்கமே காரணம் என்பர். இவ்வாறு வரும் செய்திகள் அகத்திணையிற் 'காமம் மிக்க கழிபடர் கிளவி' யின்பாற்படும். இவ்வகையில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடியுள்ள பாடல்கள் மிகப்பல வாகும். இவற்றுள் திருவாசகத்துள் காணப்படும் 'திருக்கோத்தும்பி' என்னும் பதிகமும், 'குயிற் பத்து' என்னும் பகுதியும் குறிப்பிடத் தக்கன வாகும்.

நம்மாழ்வார் இயற்றியருளிய திருவாய்மொழியும் திருவாசிரியமும், திருமங்கை மன்னன் பாடியருளிய சிறுத்திருமடலும், பெரிய திருமடலும் மெய்யுணர்வுக் காதல் நெறியை வளர்த்த பேரின்ப இலக்கியங்களாகும். இவர்களுடைய அடிசுவட்டைப் பின்பற்றிப் பிற்காலத்தில் தோன்றிய புலவர்களும் அருளாளர்களும் பக்திநெறிக் காதல் இலக்கியத்தைப் போற்றி வளர்த்து வந்துள்ளனர்.

தமிழகத்தில் தோன்றிய நாயக-நாயகி பாவமாகிய மெய்யுணர்வுக் காதல் நெறிக் கோட்பாடு வட இந்தியாவின் பலபகுதிகளில் கி. பி. பத்தாம் நூற்றுண்டு முதல் பரவிவந்திருப்பதைக் காணுகின்றோம். அங்கு வைணவ சமயத்தினர் இந் நெறியினைப் 'பிரேம-பக்தி' என்னும் பெயரால் போற்றி வளர்த்து வந்துள்ளனர்.

சென்ற நூற்றுண்டில் தமிழகத்தில் தோன்றிய அருட்பிரகாச வள்ளலாரும் இப்பண்டைத் தமிழ் நெறியாகிய 'தெய்வீகக் காதல் நெறியினைப்' போற்றிப் பின் பற்றியுள்ளார். அவர் உலகிற்கு உதவியருளிய திருவருட்பா வெனும் திருநூலில் 'மெய்யுணர்வுக் காதல் நெறி' வீறுடன் விளங்குகிறது. திருவருட்பாவின் மூன்றும் திருமுறையில் இப்'பேரின்பக் காதல்' கனிந்துள்ளதைக் காணலாம்.

## 4. மெய்யுணர்வுக் காதல் நெறி :

ஆண், பெண் இருவர் உள்ளத்திலும் காதல் அரும்புகிறது. அக்காதல் அவர்களிருவர் உள்ளத்தையும் ஒருமைப்படுத்துகிறது. இவ்வாறு ஒருவனும் ஒருத்தியும் காதலில் ஒன்றி 'அன்பராகி உயிர்கட்குத் தொண்டு செய்யும் அருளற நெறியாகிய 'இறைநிலை'யை எய்த முடியும். இந்நிலையைக் கூட்டுதற்குரிய காதல் வழிகள் பல உள்ளன. அவற்றுள் ஒன்று ஆண் மகன் ஒருவனே, பெண்மகள் ஒருத்தியோ இறைவனை நேரே காதலித்து வழிபாடு நிகழ்த்துவதாகும்.

இராமலிங்க அடிகள் தம்முள்ளத்தை அன்புமயமாக்கி அதன் வழிவாழ்தலை எளிதென்று அறிந்தார். 'தான்' எனும் முனைப்பற்று எல்லாம் அவன் என்னும் அறிவுபெற வேண்டுமானுல், தன்னை யிழத்தலாகிய செயற்கருஞ்செயலைச் செய்ய வேண்டும். அச்செயலைச் செய்வதற்கு இன்றியமையாது தேவைப்படுவது அன்புள்ளமாகும். அவ்வன்புள்ளமும் வெறும் அன்புள்ளமாக இருந்தால் போதாது. முதிர்ந்த அன்புள்ளம்—காதல் வெறியுள்ளம் தேவை. அத்தகைய காதல் உள்ளத்தைப் பெற்றுல்தான் கடவுளைக் காண முடியும் என்பதைத் திருமூலர்,

'காதலில் அண்ணலைக் காண இனியவர்
நாதனிருந்த நகரறிவாரே'

என்று பொழிந்துள்ளார்.

இத்தகைய மனநிலையைப் பெறுவதற்குக் காதல் நெறியே சாலவும் பொருத்தமுடையதாகும் என்பது நம்முடைய ஆன்றோர்கள் கண்ட முடிவு. அந்நெறி நின்ற நமது அடிகளும் 'ஆடையிலே என மணந்த மணவாளா!' என்றே இறைவனை விளிக்கின்றதைக் காணுகின்றோம். அவர் தம்மையே காதலியாகப் பாவித்து, அம்பலத்தரசராகிய இறைவனோடு கூடிக் கலந்து பெற்ற பேரின்ப அனுபவத்தை,

"அறியாத பருவத்தே யென்னைவலிந்
தழைத்தே
ஆடல்செய்யுந் திருவடிக்கே பாடல்செயப்
பணிந்தார்
செறியாத மனச்சிறியேன் செய்தபிழை
யெல்லாந்
திருவிளையாட் டெனக்கொண்டே திருமாலை
யணிந்தார்.

பிரியாமல் என்னுயிரிற் கலந்துகலந் தினிக்கும்
பெருந்தலைவர் நடராசர் எனைப் புணர்ந்தார் :
அருளாம்
அறிவாளர் புறப்புணர்ச்சி யெனையழியா தோங்க
அருளிய தீண்டகப்புணர்ச்சி யளவுரைக்க
லாமோ.

என்று தாம் பெற்ற சிவானுபவத்தைச் சொற்களால் சொல்லாமல் சொல்லுகிறர்.

இவ்வாறு 'ஆனந்த வெள்ளத் தழுந்தும் ஓர் ஆருயிராகிய' அடிகள், திருவொற்றியூரில் திருக்கோயில் கொண்டெழுந் தருளியுள்ள தியாகேசப் பெருமானிடத்துத் தீராக் காதல் கொண்டு பாடியுள்ள பாடல்கள் இருநூற்று முப்பத்தைந்து. இம்மூன்றும் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. அப்பாடல்கள் அனைத்தும் பத்தொன்பது அகப்

பொருள் துறைகளைச் சார்ந்தனவாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளன. அவை 'காட்சி' முதல் 'காதன் மாட்சி' எனும் துறைகளாக அமைக்கப் பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

ஒருவனும் ஒருத்தியும் பிறர் அறியாவகையில் கண்டு, காதலித்து, கூடிமகிழ்தலும், பிரிந்த பின்னர் மீண்டும் கூடுதற்கு ஆவல் கொண்டு எண்ணி, ஏங்கி, ஆற்ருது அரற்றி ஒருவரை யொருவர் காணுத வழியும் போற்றிப் புகழ்ந்து வாடுதலும், தலைவி தலைவனுக்குத் தன்னுடைய உள்ளப் போராட்டத்தை எடுத்துரைக்குமாறு தூது அனுப்புவதும், தான் பெற்ற கலவி இன்பத்தின் சிறப்பை எண்ணியெண்ணி ஏங்கிக் கலங்குவதும், தலைவி தலைவனின் காதல் திறனைச் சிறப்பித்துப் பேசுவதும் போன்ற பலவகையான ஒழுக்க லாறுகளைத் தன்னகத்தே கொண்ட காதல் ஒழுக்கத்தைக் 'களவொழுக்கம்' என்று கூறுவது அகப்பொருள் இலக்கண மரபாகும்.

காதல் ஒழுக்கத்தில் ஈடுபட்ட ஆடவனும் மங்கையும் ஊரறிய நாடறிய திருமணம் செய்து கொண்டு இவ்வாழ்க்கையில் ஈடுபடுவது 'கற்பொழுக்கம்' என்றும் போற்றப்படுவதாகும். இராமலிங்கர் மூன்ரும் திருமுறையில் களவொழுக்கத்தின் கண் ஈடுபட்ட தலைவி ஒருத்தியின் மன நிலையைப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டுகின்ருர்; உள்ளப் புணர்ச்சியில் இன்பம் அனுபவிக்கும் தலைவி மெய்யுறு புணர்ச்சியின் மூலம் பேரின்பக் கடலில் மூழ்கித் திளைக்கத் துடிக்குப் துடிப்பினைச் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார்.

திருவொற்றியூர்த் தியாகேசர் திருவுலா வருவதைத் தலைவி காணுகின்ருள்; கண்டதும் காதல் கொள்ளுகிருள். 'காதலை' பற்றிச் சிறிதும் இதற்குமுன்பு அறிந்திராத அம்மங்கைப் பருவத்தினளாகிய தலைவி தோழியைப் பார்த்து,

''சீரார் வளஞ்சேர் ஒற்றிநகர்த்
தியாகப் பெருமான் பவனிதனை
ஊரா ருடன்சென்(று) எனதுநெஞ்சம்
உவகை யோங்கப் பார்த்தனன்காண்
வாரார் முலைகண் மலைகளென
வளர்ந்த வளைகள் தளர்ந்தனவால்
ஏரார் குழலாய் என்னடிநான்
இச்சை மயமாய் நின்றதுவே?''

—திருவுலாப்பேறு-1.

என்று வினவுகின்ருள்.

தீராக் காதல் வேட்கை கொண்ட அத்தலைவி தாயையும் மறந்து, தன்னையும் மறந்து இறைவனின் கண்கொள்ளாக் காட்சியாகிய திருவுலாக் காட்சி இன்பத்தில் மெய்ம் மறந்து நெடுநேரம் நிற்கிருள். தோழி அவளை அழைக்கின்ற பொழுதுதான் 'தலைவி' நாணத்தோடு தன் தவற்றை உணர்கிருள். உடனே சோழியை

''சேயை யருளுந் திருவொற்றித்
தியாகப் பெருமான் வீதிதனில்
தூய பவனி வரக்கண்டேன்
சூழ்ந்த மகளிர் தமைக்காணேன்
தாயை மறந்தேன் அன்றியும்
என்றனையும் மறந்தேன் தனிப்பட்டே
ஏயென் தோழி யென்னடிநான்
இச்சை மயமாய் நின்றதுவே?''

—திருவுலாப்பேறு-6

என்று தலைவி வினவுகிருள்.

திருவுலா வந்த இறைவனைக் கண்டு தன்னுள்ளத்தை அவரிடத்துப் பறிகொடுத்த தலைவி தலைவனது திருவுலாக் கோலத்தை எண்ணி யெண்ணி வியக்கின்ருள்.

''வெள்ளச் சடையார் விடையார்செவ்
வேலார் நூலார் மேலார்தம்
உள்ளத் துறைவார் நிறைவார்நல்
ஒற்றித்தியாகப் பெருமானுர்
வள்ளல் குணத்தார் திருப்பவனி
வந்தார் என்ருர் அம்மொழியை
விள்ளற் குள்ளே மனமென்னை
விட்ட(கு) அவர்முன் சென்றதுவே'

இறைவனின் திருவுலாக் காட்சியைக் கண்ட தலைவியின் உள்ளத்தில் உண்டான உணர்வுப் பெருக்கையும், உடலில் உண்டான மெய்ப்பாடுகளையும் இருமென் மொழியால் இன்பம் குழைய 'திருவுலா வியப்பு' எனும் துறையில் எடுத்தியம்பிய அடிகளார், 'திருவுலாத் திறம்' எனும் துறையில் காதல் வயப்பட்டோருக்கு உண்டாகும் துன்பங்களை எல்லாம் முறையாக எடுத்துரைக்கின்ருர். கண்களுறக்கம் கொள்ளாத நிலையில் எதையோ நினைந்து நினைந்து கண்கலங்கும் தலைவி, 'பாலும் உண்ணுது, மலரும் சூடாது. படுக்கையிலும் படுக்காது' உலகத்துப் பொருள்கள் எதையும் விரும்பாதத் துறவி போன்று துன்புறுவதைச் சொல் நயமும் பொருள் நயமும் சிறந்து விளங்கும் வகையில் அடிகள் பாடியுள்ளார்.

தனிமையில் வாடும் தலைவி காமத்தீயால் கதுப்புண்டு, காதலன் அழகை மனக்கண்ணுல் கண்டு கண்டு அகமகிழ்கிருள். உள்ளக் களித்தலும் காணமகிழ்தலும் கள்ளுக்கு இல்லை; காமத்திற்கு உண்டு அல்லவா? எனவே, தோழி அவனழகைத் தன் மனக்கண்ணுல் பருகிப்பருகி மகிழ்கிருள். அம்மகிழ்ச்சி பொங்கியெழும் பொழுது தன் தோழியை,

''புன்னை யிதழிப் பொலிசடையார்
போக யோகம் புரிந்துடையார்
மன்னும் விடையார் திருவொற்றி
வாணர் பவனி வரக்கண்டேன்
உன்னும் உடலங் குளிர்ந்தோங்க
உவகை பெருக வுற்றுநின்ற
என்னை விழுங்கும் அவரழகை
யென்னென் றுரைப்ப(து) ஏந்திழையே?''

—திருக்கோலச் சிறப்பு-5.

இவ்வாறு தான் கண்ட காட்சியை நினைந்து நினைந்து ஏங்குகின்ற தலைவி தான் கண்ட காட்சி 'கனவோ நனவோ' என்று செயலற்ற உள்ளத்தோடு மயங்கிச் சோர்வடைகிருள், காதல் வெள்ளம் கரைபுரண்டு ஓடும் நிலையில், தலைவனைக் காணுது அவனுடைய தண்ணளியைப் பெறும்வேட்கை மிகுந்த தலைவி, அவனைத் தழுவிக் கலந்து இன்புறத் துடிக்கும் தனது உள்ளத் துடிப்பினை,

"கஞ்ச னறியார் ஒற்றியினர்
கண்மூன் றுடையார் கனவினிலும்
வஞ்ச மறியா என்றனக்கு
மாலையிட்ட தொன்றல்லான்
மஞ்ச மதனில் என்னேடு
மருவி யிருக்க நானறியேன்
கொஞ்ச மதிநேர் நுதலாயென்
குறையை யெவர்க்குக் கூறுவனே!"

—இரங்கன்மாலை-14.

என்னும் சொற்களில் வடித்துத் தருகிருள். இத்துன்பம் பெருகப் பெருக அதைப் பொறுத்துக் கொள்ள இயலாத அவள் தன் களவொழுக்கத்தை அறிந்த தாயும், தமரும் செய்வதறியாது மனம் கலங்குவதைக் கண்டாள்; எனவே இன்னும் அவர் வருகைக்காகக் காத்துக் கிடப்பதைவிட இறப்பதே மேல் எனத் துணிகின்ருள் தலைவி.

"ஏயும் பெருமை யொற்றியுளார்
இன்னும் அணையார் எனையளித்த
தாயுந் தமரும் நொடிக்கின்ருர்
சகியே யினிநான் சகியேனே!"

—ஆற்ருக் காதலின் இரங்கல்-11.

தலைவியின் களவொழுக்கத்தை அறிந்த அவளது அன்னை அவளை வீட்டைவிட்டு வெளியில் செல்லாதவாறு கண்காணிக்கத் தொடங்குகிருள். தலைவனே வரவில்லை; தலைவியோ தலைவனைக் காணுமல் துடிக்கின்ருள். இந்நிலையில் அவனுக்குத் தன் துன்பத்தை எடுத்துரைத்து அருள்புரியும்படி வேண்டிவருமாறு தனது அன்பிற்குரிய நாரையையும் கிளியையும் தூது விடுகிருள்.

"கண்ண னெடுநான் மண்ணிடந்துங்
காணக்கிடையாக் கழலுடையார்
கண்ணும் ஒற்றி நகரார்க்கு
நாராய் சென்று நவிற்ருயோ
அண்ண லுமது பவனிகண்ட
அன்று முதலா யின்றளவும்
உண்ணு முணவோ(டு) உறக்கநீத்(து)
உற்ரு ளென்றிவ் வொருமொழியே!"

—நாரையும் கிளியும்
நாட்டுறுதூது-1.

மற்ருெரு பாடலில் தலைவி கிளியைத் தலைவனிடத்து தன் நிலையைக் கூறிவருமாறு தூதனுப்புகிருள்.

"பூவார் முடியாள் பூமுடியாள்
போவாள் வருவாள் பொருந்துகிலாள்
ஆவா வென்பாள் மகளிரொடு(ம்)
ஆடாள் தேடாள் அனமென்றே" (6)

இவ்வாறு அடிகள் பத்துப்பாடல்களில் தன் ஆன்மீகப் பசியினை ஆண்டவனுக்கு அறிவிக்குமாறு நாரையையும் கிளியையும் தூதுவிடுவதாகப் பாடியுள்ளமை அகப்பொருள் சுவைநலம் கனிந்த கடவுட்காதலாகக் காட்சி தருகிறது.

இறைவனது அருளைப் பெருது அவள் கடைக்கண்ணுேக்கிற்காகக் காத்துக் கிடக்கும் தலைவி ஊரார் தூற்றும் பழிமொழியைக்—அவர் தூற்றலை—கேட்டுப் பொருதவளாய் உள்ளம் நைந்து உருகிக் கண்ணீர் வடிக்கும் காட்சியை வள்ளலார் 'புணரா விரகு பொருந்துறு வேட்கையின் இரங்கல்' என்னும் துறையின் கண் கற்பார் உள்ளம் கசிந்துருகுமாறு கவினுறப் பாடியுள்ளார் "நாணினைப் பேணிவாழாப் பெண்ணெனவே பெண்களெல்லாம் என்னை ஏசுகின்றனர்; மாலைமலர்ந்த மையலுேய் வசந்த காலமதனுல் வளர்ந்து விட்டது; கண்டார் கண்டபடி பேசக் கலங்கிப் புலம்புவது அல்லாமல் நான் வேருெரு வழியும் அறியாது வெந்து மடிகின்றேன்; என் மங்கைப் பருவம் மணமில்லா மலர்போல் ஒழிய வாடிவருந்துகின்றேன். இதுதானே என் தலைவிதி" என்றெல்லாம் தலைவி அரற்றியழுகிருள்.

இந்நிலையில் தோழி தலைவிக்கு ஆறுதல் சொல்லித் தேற்றுகிருள். குறிசொல்லும் குறத்தியை அழைத்து அவர்கள் குறிகேட்கின்றனர். தலைவி குறத்தியைப் பார்த்து

"தரும விடையார் சங்கரனுர்
தகைசே ரொற்றித் தனிநகரார்
ஒருமை யளிப்பார் தியாகரெனை
யுடையா ரின்று வருவாரோ
மருவ நாளை வருவாரோ
வாரா தென்னை மறப்பாரோ

குறத்தியிடத்துக் குறிகேட்டும் மனவாறுதல் பெருந்தலைவி சோதிடனை அழைத்துவரச் செய்து, தலைவர் இன்னும் சில நாட்களிலாகிலும் வருவாரா?' என்றும் அது வரையில் தன்னை மறக்காமல் இருப்பாரா?' என்றும் சோதிடம் பார்த்துக் கூறுமாறு வேண்டுகிருள். இவ்வாறு சோதிடரிடத்துச் சோதிடம் கேட்பது அகப்பொருள்இலக்கியத்தில்பிற்காலத்தில் உண்டான வளர்ச்சியாகும்.

சோதிடம் கேட்டுத் தலைவர் தவருமல் வருவார், தனக்குத் தலையளி செய்வார் என்பதை உறுதியாக அறிந்த தலைவி, தலைவன் வந்தால் தான் பெறப் போகிற இன்பப் பேற்றை எண்ணி எண்ணி மகிழ்கிருள். "மேருவை வில்லாக வளைத்த பெருமான் என் மனமாகிய கல்லைக் குழைத்தார். அவர் வருவார் வருவார் என்று வழி பார்த்து நான் இருந்தேன். ஆனுல்

அவர் எனக்கு யாதொரு பரிசும் கொடுக்க வரவில்லையே'' என்று ஆவலோடு அண்ணலின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தலைவியின் முன்னர் தலைவனைப் பழித்துரைக்கிறாள் செவிலித்தாய், தள்ளாத தாயற்ற வரை, பிச்சை யெடுத்துத் திரியும் பித்தரை மகளே நீ ஏதுக்க வரை விழைந்தனையோ என்று அவள் தலைவியைக் கடிந்துரைக்கிறாள்.

தன் மகள் தனக்குக் கணவனாகத் திருவொற்றியூர்த் தியாகேசரை வலரந்து கொண்டாள் என்பதை அறிந்த நற்றாய் அவளைப் பெற்றெடுத்த தன் மகளுடைய நற்பேற்றினை எண்ணி மகிழ்கிறாள். தன் மகிழ்ச்சியைத் தன் மகளிடத்து நற்றாய் வெளிப்படுத்துகிறாள். அவள் தன் மகளுடைய கற்பின் திறத்தையும், அவள் மணாளனாக அடைந்துள்ள இறைவனது ஏற்றத்தையும் போற்றிப் பாராட்டுகிறாள்.

'' மாதர் மணியே! மகளே! நீ
 வாய்த்த தவந்தான் யாதறியேன்
வேத ரனந்தர் மாலனந்தர்
 மேவி வணங்கக் காண்பரியார்
நாதர் நடன நாயகனார்
 நல்லோ ருளத்துள் நண்ணு கின்றார்
கோத ரறியாத் தியாகர்தமைக்
 கூடி யுடலங் குளிர்ந்தனையே!''

வியப்பு மொழி-1.

இறைவனோடு தலைவி கொண்டுள்ள காதல் பிறரறியா. மறைபொருளாக இருந்த நிலைமாறி, உற்றாரும் ஊராரும் அறிந்த ஒன்றாகப் போன பிறகு களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவி தன்னுடைய காதல் ஒழுக்கத்தை மறைத்துக் காக்க வேண்டிய தேவையில்லாமற் போயிற்று. ஆயினும், தலைவன் இன்னும் வரவில்லை; வந்து அவளை நாடறிய மணந்து செல்ல வில்லையே என்ற ஒரு குறைபட்டும் அவள் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது, அந்நிலையில் ஒரு நாள் தன் மகள் அவளுடைய தலைவனிடத்துக் கொண்ட அன்பின் திறம் எத்தகையது என்பதைஆராய்ந்தறியசெவிலித்தாய் எண்ணினாள். அதற்காகத் தலைவியின் முன்னிலையில் தலைவனை இழிவாகப் பேசத் தொடங்கினாள்.'' அவரோ ஒற்றியூரிலே (உரிமையடமானம்) குடியிருக்கிறார்; பிச்சை யெடுத்து வாழ்கின்றார்; கந்தை யுடுத்து அலைகின்றார்; பாம்பினை ஆபரணமாக அணிந்துள்ளார். எருக்க மலரைச் சூடியுள்ளார். யோகம் பயில்பவர்; மோகமில்லாதவர்; சுடுகாடே உறைவிடமாகக் கொண்டுள்ளார்'' என்றெல்லாம் செவிலி தலைவன் நிலையைச் சுட்டிக் காட்டி, அவன் உனக்கு மணாளனாகத் தகுதியுடையவனா என்று வினவுகிறாள்.

உடனே தலைவனிடத்து முருகிய காதல் கொண்டுள்ள தலைவியோ தாயின் கடிற்றுரையால் மனம் கலங்காது, தனது தலைவனுடைய அருமை பெருமைகளை இன்ப அன்பு கலந்தொழுகும் வகையில் எடுத்துரைக்கிறாள்.

'' உலக முடையார் தம்மூரை
 யொற்றி வைத்தா ரென்றாலும்
அலகில் புகழார் காபாலி
 யாகத் திரிந்தா ரென்றாலுந்
திலக மணியர் புறங்காட்டிற்
 சேர்ந்து நடித்தா ரென்றாலும்
கலக விழியாய் நானவர்மேற்
 காத லொழியேன் கனவினுமே

காதற் சிறப்புக் கதுவா மான்பு-1

தலைவன் விரைவில் வந்து தன்னை மணம் புரிந்து செல்லாமையால் தலைவி உள்ளம் நைந்துருகுகிறாள். தனிமை அவளுடைய துன்பத்தை மிகுதிப்படுத்துகிறது. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி ஏங்குகிறாள். அச்சமயத்தில் அவளைக் காண்பதற்கு அவளுடைய ஆருயிர்த் தோழி ஒருத்தி வருகிறாள். அவளைக் கண்டவுடன் குமுறும் எரிமலையாக இருந்த அவளுடைய உள்ளம் புறத்தே புன்னகை பூக்கிறது புன்னகைக்கு இடையே அவள் பெருமூச்சுவிடுகிறாள்; கண் கலங்குகிறாள் தோழி ஆறுதல் மொழிகூறி அவளைத் தேற்றுவிக்கிறாள். அப்பொழுது தலைவி தனது அடி மனத்தில் அடங்கிக் கிடக்கும் ஐயத்தை மெல்ல எடுத்துரைக்கிறாள்.

''ஓண முடையான் தொழுதேத்தும்
 ஒற்றி நகர்வா ழுத்தமர்பால்
மாண வலியச் சென்றென்னை
 மருவி யணைவீ ரென்றே நான்
நாணம் விடுத்து நவின்றாலும்
 நாமார் நீயா ரென்பாரேல்
ஏண விழி யாயென் செய்வேன்
 என்னை மடவார் இகழாரோ?

ஆற்றா விரகம்-1

தோழி அவளுக்கு நம்பிக்கைப் பிறக்கும் வகையில் ஆறுதல் மொழிகள் பல கூறித் தேற்றிய போதிலும், தலைவி எப்படி நாம் அவரை அடைவதற்கு எவ்வளவு தான் முயன்றாலும் அவருடைய அருள் நோக்கம் நம்மீது விழாவிட்டால் என்செய்வது என்பதைக் குறித்துத் தலைவி அல்லும் பகலும் அயராது சிந்தித்த வண்ணம் இருக்கிறாள். அவருடைய கடைக்கண் பார்வையை நம் பக்கம் திருப்ப வழியாதாகிலும் இருக்கிறதா என்று அவள் தன் தோழியை வினவுகிறாள்.

'' திரையா ரோதை யொற்றியில்வாழ்
 தியாக ரவர்தம் பவனிதனைக்
கரையா மகிழ்விற் காண வந்தால்
 கற்பின் நலத்தைக் கவர்ந்து கொண்டு
பரையா தரிக்க நமைத் திரும்பிப்
 பாரா தோடு கின்றார் நாம்
உரையா தோடினுமவர்
 ஓட்டம் பிடிக்க வொண்ணாதே!''

காதன் மாட்சி-7

இவ்வாறு தன்னுயிரிற் கலந்தினிக்கும் அம்பலவாணரை அணைந்து கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறிய விரும்பினார் இராமலிங்க அடிகள். அவ்வேட்கையையே திருவொற்றியூர் ஈசன் பால் தலைவி யொருத்தி கொண்ட தீராக் காதல் காதலாகச் சித்திரித்துள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும் பெண்மையுள்ளம் பெற்று இறைவனிடத்துத் தீராக் காதல் கொண்டு அவனை அடைய அல்லும் பகலும் அயராது வள்ளலார் முயன்றார். அவர் அவனுடைய அருள் நோக்கத்திற்காகப் பன்னெடுங்காலம் காத்துக் கிடந்தார். அவனருளாலே அவன் தாளடையும் பேற்றினை அடைவதற்காக அடிகள் அண்ணலின் வருகையை வழிமேல் விழிவைத்துக் காத்துக் கிடந்தார்; காலம் வறிதே கழிவதைக் கண்டு கலங்கினார். மனம் புழுங்கினார்; உள்ளம் நைந்துருகினார். ஆயினும் அவன் வரவில்லை. எனவே அவனிருக்கும் இடத்தைத் தேடிச் சென்றார் அவர். அங்கு அவனைக் கண்டார். ஆயினும் அவனைத் பின்தொடர்ந்து ஓடிச் சிக்கெனப் பிடிக்க முடியவில்லை. அவனோ பிடிக்க வொண்ணாத பெருவோட்டத்துடன் ஓடிக் கொண்டிருக்கிறான். அவனை எப்படிப் பிடிப்பது எனும் வழியறியாது அடிகள் மதிமயக்கம். கொள்ளும் நிலையில் மூன்றாம் திருமுறை முற்றுப் பெறுகிறது. தம்முடைய மெய்ஞ்ஞான வாழ்வில் உணர்ந்த உண்மைகளையே அடிகள் அகப்பொருள் இலக்கண மரபில் தலைவியொருத்தி தலைவன்பால் கொண்ட காதல் நாடகத்தின் வாயிலாக உலகிற்கு உணர்த்துகிறார் என்று கூறின் அது தவறாகாது. இவ்வடிப்படையில் இம்மூன்றாம் திருமுறையில் காணப் பெறும் பத்தொன்பது அகப்பொருள் துறைகளையும் கூர்ந்து நோக்குவோமானால், இராமலிங்க அடிகளே தலைவியாக இருந்து பேசும் மெய்யுணர்வுக் காதல் காட்சியைக் காணலாம்.

இங்குக் குறிப்பிடப்படும் தலைவன் பரம்பொருளாகவும் தலைவி பரிபக்குவ நிலையை அடைந்த ஆன்மாவாக (இராமலிங்கராகவும், தோழி திருவருளாகவும், செவிலி திரோதாயி எனும் பாசமாகவும், நற்றாய் பரையாகவும் நாரையும் கிளியும் கன்மேந்திரியங்களாகவும் கொள்ளப் பெறுமானால், இம்மூன்றாம் திருமுறை பேரின்பப் பொருளைப் புகட்டி வழிகாட்டும் வான் பொருளாக அமையும்.



With the best compliments from:

**DELHI SWEETMEAT STALL**

10/4, Officers' Line, VELLORE. (N.A.)

FOR

Dilicious Sweet

Prepared out of Agmark Ghee

PURE GHEE'S SWEET.




நீங்கள் விரும்பும் சுவைமிகு
காப்பிக்கும், பலகாரங்களுக்கும்,
இனிப்புகளுக்கும் நல்ல உணவிற்கும்
சிறந்த உங்கள் ஓட்டல்

# மெரினா கபேவே !

## மணமிகு மெரினா காபி பொடியையே
வாங்கி உபயோகியுங்கள்

உரிமையாளர்:

வி. கே. வினாயக முதலியார்.



# நான்காம் திருமுறை

அருளன்பர் G. கண்ணபிரான்

சன்மார்க்க பிரசாகர்; சென்னை-21

திருவருட்பாவின் ஆறு திருமுறைகளில் நான்காம் திருமுறையினை ஈண்டு சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப் புகுகின்றேன். இம்முயற்சி எளிதன்று, அரிது. ஆசை என்னை தூண்டியது.

நான்காம் திருமுறை முழுதும் மாலைகளால் அலங்கரிக்கப் பட்டிருக்கின்றது. வாடா அருள் மலர்களால். ஒருமாலை, அன்பு மலர்களால் ஒரு மாலை, அதிசய மலர்களால் ஒருமாலை, அருட்பிரகாச மணிகளால், ஒரு மாலை, ஆனந்த கமலங்களால் ஒரு மாலை, பக்தி மலர்களால் ஒருமாலை அழகால், அதிசயத்தால் ஆனவைகள் அருளால் ஆன மாலைகள். இப்படியே மாலைகளை சூட்டி சூட்டி மகிழ்கின்றார் வள்ளல் பெருமான். நமது வள்ளல் பெருமான் ஏன் இப்படிப் பாடிப்பாடி மகிழ்ந்தார்?

மக்கள் ஜாதி, மதம், சமயம், என்னும் சங்கற்ப விகற்பங்களால் கட்டுண்டு, கண்மூடித்தனமான பழக்க வழக்கங்களை வைத்துக்கொண்டு, கடவுள்களுக்கு, அதாவது உயிர்பலி இட்டு வணங்கி வந்தார்கள். இப்படிப்பட்ட நிலை அதிகரித்து, உயர்வு தாழ்வு என்றபேத மனப்பான்மை மக்களிடையே அதிகமாக வளர்த்து வந்த நேரத்தில், யாராலும் குறிப்பிடாத, மரணமிலா பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர் என்று மக்களுக்கு மனம் கனிந்து எடுத்துச் சொல்லி பாடுகிறார். மாலை சூட்டுகிறார். திரு அருட்பிரகாச பெருமானாகிய சிதம்பரம் இராமலிங்க அடிகளார். அய்யா அவர்கள், கருவில் உருவாகும்போது நடராஜ பெருமானால் உபதேசம் பெற்றதாக குறிப்பிடுகின்றார்கள்.

> கருவளர் அடியேன் உளத்திலே
> நின்று காட்டிய மெய்மொழிப் பொருளும், மருவி என் உளத்தே மகிழ்ந்து
> நான் இருக்கும் வண்ணமும், திரு
> உளம் அறியும்.

என்று, இப்படி கருவில் உருவானப் பெருமான் நடராஜப் பெருமான் கட்டளையை மேற்கொண்டு மக்களை திருஅருள்பெற அழைத்தார்கள்.

> குறித்து உரைக்கின்றேன் கேண்மின்
> இங்கே வம்மின் கோணுமனக் குரங்
> காலே நாணுகின்ற உலகீர் வெறித்த
> உம்மால் ஒருபயனும் வேண்டுகிலேன்,
> எனது மெய்யுரையை பொய் உரை
> யாய் வேறு நினையாதீர், பொறித்த மத
> சமயமெல்லாம் பொய் பொய்யே
> அவற்றில் புகுதாதீர் சிவம் ஒன்றே
> பொருள் என கண்டறிமின், கற்ற
> வரும், கல்லாரும் மடிந்திடக் காண்
> கின்றீர். கரணமெல்லாம் கலங்கவரும்
> மரணமும் சம்மதமோ, இற்றிதனை
> தடுத்திடலாம் எம்மொடு சேர்ந்திடுமின்
> எம் மார்க்கம் இறப் பொழிக்கும் சன்
> மார்க்கம் தானே!

என்று மக்களை தான் பெற்ற பேற்றினை அடையும்படி செய்ய சிவபெருமான் உடைய சிந்தனையிலேயே தன் கவனத்தை செலுத்தினார்கள், அப்போது நடராஜப் பெருமான்,

> பேருற்ற உலகில் உறுசமய மதநெறி
> யெலாம் பேய்ப்பிடிப்புற்ற பிச்சு
> பிள்ளை விளையாட்டென உணர்ந்
> திடாது, உயிர்கள் பலபேதமுற்று
> அங்கும், இங்கும், போறுற்று இறந்து
> வீண் போயினர், இன்னும் வீண்
> போகாதபடி விரைந்தே புனிதமுறு
> சுத்த சன்மார்க்க நெறி காட்டி மெய்
> பொருளினை உணர்த்தி எல்லாம்
> ஏறுற்ற சுகநிலை அடைந்திட புறிதிநீ

> என்பிள்ளை ஆதலாலே இவ்வேலை புறிக என்று இட்டனம் மனத்தில் வேறு எண்ணற்க, என்றகுருவே

என்று வள்ளலார் குறிப்பிடுகின்றார்கள். அதாவது மக்கள் எந்த நிலையில் இருந்தார்கள் அதற்கு, வள்ளற் பெருமான் என்ன செய்யவேண்டும் என்று, நடராஜப் பெருமான் மேற்குறிப்பிட்ட பாசுரத்தில் குறிப்பிடுகின்றார்கள். இந்த கட்டளையை மேற்கொண்ட வள்ளற் பெருமான். மக்களை பார்த்துக் குறிக்கின்றார்கள்.

> போற்றி உரைக்கின்றேன் எம் வார்த்தையை பொய் என்றிகழாதீர் நாற்றிசைக் கண் வாழும் நமரங்காள் ஆற்றல் அருள் அப்பன் வருகின்றார் அருள் விளையாட்டாடுதற்கென்று இப்புவியில் இத்தருணம் இங்கு, இதை

உமக்கு, போற்றி உரைக்கின்றேன் எம் வார்த்தையை பொய் என்று இகழாதீர் என்றார்கள். இப்படியாக நடராஜப் பெருமானிடம் தாம் பெற்ற பேரின்பத்தை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு

> எந்தவகை செய்திடில் கருணை எந்தாய் நீ தான் இறங்குவையோ அந்த வகையை நாநறியேன் அறிவிப்பாரும் இங்கு இல்லை. இந்த வகை இங்கு அய்யோ நான் இருந்தால் பின்னர் என் செய்வேன். பந்தவகை அற்றவர் உளத்தே நடிக்கும் உண்மை பரம் பொருளே,

எந்தவகை செய்திடில் என்தாய் நீதான் இறங்குவையோ என்று மக்கள் மையத்தில் இருந்து, எழுந்து சற்று விலகிசென்று, நடராஜப் பெருமானை நினைந்து, வருந்தும் போது "அஞ்சாதே என்மகனே அனுக்கிரகம் புறிந்தோம் என்று நடராஜ பெருமான் காட்சி அளித்தார்கள் அப்போது மூவரும், தேவரும் முத்தரும் சித்தரும், யாவரும், காணாத திருஉருவத்தை வள்ளற்பெருமான் கண்டு, ஆனந்தமடைந்து நிற்கும் போது, அய்யா அவர்களுடைய கையை நடராஜப் பெருமான் பிடித்துக் கொண்டு உத்தரவு இட்டு, மாலை சூட்டினார்கள். அதாவது!

> பொய் பிடித்தார் எல்லாரும் புறத்திருக்க, நான் போய், பொது நடங் கண்டு உளம் களிக்கும்போது, மணவாளர் மெய் பிடித்தாய் வாழிய நீ சமரச சன்மார்க்கம் விளங்க உலகத்திடையே விளக்குக என்றெனது கை பிடித்தார், நானும் அவர்கால் பிடித்துக் கொண்டேன். களித்திடுக உம்மை நாம் கைவிடோம் என்று மை பிடித்த விழியுலகர் எல்லாரும் காண மாலையிட்டோமென்று எனக்குமாலை அணிந்தாரே!

வள்ளற் பெருமானை நாடராஜப் பெருமான் பார்த்து மகனே நீ ஒருவன்தான் என்னை நன்றாக அறிந்தாய் ஆனதால் உலக மக்களுக்கு, சமரச சுத்த சன்மார்க்க லட்சியங்களை எடுத்து சொல் என்று, கையை பிடித்த உடனே அய்யா அவர்கள் நடராஜப் பெருமானுடைய காலைபிடித்துக் கொண்டார்கள். பிறகு ஆண்டவர் அய்யா அவர்களை ஆசீர்வதித்து, தன் கழுத்தில் அணிந்த மாலையை வள்ளலார் கழுத்தில் அணிவித்தார்கள். இதற்கு, சாட்சி மை பிடித்த விழி உலகர் எனவே இப்படி பெருமான் பெற்றுக் கொண்ட வெற்றிமாலையுடன் இதை மக்களுக்கு, மாலையாகவே, கொடுக்கவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டு திருஅருட்பா வேத நூலிலே எல்லாம் மாலை என்று தலைப்பு கொடுத்தே எழுதி வைத்தார்கள். அவையாவன?

1. மகாதேவமாலை. 2. எழுத்தறியும் பெருமான் மாலை, 3. சிகாமணி மாலை, 4. இரங்கன் மாலை, 5 அன்பு மாலை, 6. அருட்பிரகாச மாலை, 7. பிரசாதமாலை, 8. ஆநந்த மாலை, 9. பக்தி மாலை, 10. சௌந்தர மாலை, 11. அதிசய மாலை, 12. அபராத மன்னிப்பு மாலை, 13. தெய்வ மணிமாலை, 14. கருணை மாலை, 15. செல்வச் சீர்த்தி மாலை, 16. பிரார்த்தனை மாலை, 17. செஞ்சுடர் மாலை, 18. சிவசாட்சிமாலை 19. அருண்மொழி மாலை, 20. இன்ப மாலை, 21. திருச்சிற்றம்பல தெய்வமணி மாலை, 22. சற்குருமணி மாலை, 23. நடராஜபதி மாலை, 24. உத்தர ஞான சிதம்பர மாலை, 25. அருள் விளக்க மாலை, 26. அனுபவ மாலை, 27. ஆளுடைபிள்ளையார் அருள் மாலை, 28. ஆளுடைய அரசுகள் அருள் மாலை, 29. ஆளுடைய நம்பிகள் அருள் மாலை, 30. ஆளுடைய அடிகள் அருள்

மாலை இப்படியாகத்தானே, சுமார் 30 மாலை, திரு அருட்பா பெருநூலிலே அய்யா அவர்கள், அடைந்த, அனுபவித்த, நிலையை அழகாக எடுத்துக்காட்டி இருக்கின்றார்கள். **அன்பு மாலை:** வள்ளற் பெருமான் தான் பெற்ற பேற்றினை அன்பு மாலை என்ற பாசுரங்களிலே குறிப்பிடுகின்றார்கள். அற்புத பொன் அம்பலத்தே ஆடுகின்ற அரசே நிறையணிந்த சிவகாமி நேய நிறை ஒளியே ஆண்பனை பெண்பனை ஆக்கிய பெருமானே துப்பாடு திருமேனிசோதி மணிச்சுடரே திருநெறி சேர் மெய்யடியார் திறன் ஒன்றும் அறியாத அடியேனை தேவரீர்

> பாடும் வகை யணுத்துணையும் பரிந்தறியாச் சிறிய பருவத்தே யணிந்தணிந்து பாடும் வகை புரிந்து நாடும் வகையுடையோர்கள் நன்கு மதித்திடவே நல்லறிவு சிறிதளித்துப் புல்லறிவு போக்கி நீடும்வகை சன்மார்க்க சுத்த சிவநெறியில் நிறுத்தினை இச்சிறியேனை நின் அருள் என்னென்பேன் கூடும்வகை யுடையரெலாம் குறிப்பெதிர் பார்க்கின்றார், குற்றமெலாம் குணமாக கொண்ட குணக் குன்றே!

அதாவது, சுவாமிகள் ஆடும் பருவத்தில் நடராஜப் பெருமான் போதித்த கருத்துக்களை குறிப்பிடுகின்றார்கள்.

> ஏதும் அறியாது இருளில் இருந்த சிறியேனை எடுத்து விடுத்து அறிவு சிறிதேயீந்திடவும் புரிந்து ஓதும் மறைமுதற்கலைகள் ஓதாமல் உணர உணர்வில் இருந்து உணர்த்தி அருள் உண்மை நெறிக்காட்டி, தீது செறி, சமய நெறி செல்லுதலை, தவிர்த்து, திருஅருள் மெய் பொதுநெறியில் செலுத்தியும், நான் மருளும்போது மயங்கேல் மகனே என்று என் மயக்கெல்லாம் போக்கி, எனக்கு உள்ளிருந்த புனித பரம் பொருளே!

என்று அவர் அடைந்த நிலையை நமக்கு மேலே குறிப்பிட்ட பாசுரத்தில் இருந்து தெறிகின்றது. அதாவது, தான் பெற்ற அருளை இந்த உலக மக்கள் அனைவரும் அடைய வேண்டும் என்ற கருத்தோடு அய்யா அவர்கள் வருத்தமுற்று புலம்பி நிற்கும்போது நடராஜப்பெருமானே அய்யா அவர்களை நாடிச்சென்றதை, பாசுரத்தில் குறிப்பிடுகின்றார்.

> திருமாலு முருமாறிச் சிரஞ்சீவியாகித் தேடியும் கண்டறியாத சேவடிகள் வருந்த வருமாலை மண்ணுறுத்தப் பெயர்த்து நடந்தருளி வஞ்சகனேன் இருக்குமிடம் வலிந்திரவிற்றேடித் தெருமாலைக் கதவுதனை திறப்பித்து நின்று செவ்வண்ணத்திடை பசந்த திருமேனிக்காட்டிக் குருமாலைப் பெரு வண்ணக் கொழுநறொன்று கொடுத்தாய் குருமணி நின்றிருவருளைக் குறித்து மகிழ்ந்தனனே!

**அருட்பிரகாச மாலை:** பலமுறை நடராஜப் பெருமான் வள்ளலாரிடம் சென்று, கதவை தட்டி, வாயிற்படி நின்று, சென்று எல்லாம் மகனே நீ இவ்வுலகிடை சிறிதும் கரவிடை நெஞ்சயர்ந்து இளைத்து கலங்காதே இதனை களிப்பொடு வாங்கிக்கொள் என்று, அருளைப் பெற்றதாக பல பாசுரங்களிலே அருட்பிரகாச மாலையில் குறிப்பிடுகின்றார்கள். நமது அய்யா அவர்கள் நடராஜப் பெருமான் வருவதையும் போவதையும் என்ன கருத்துக்கொண்டு இருந்தார்கள் என்பதை கவனித்து பார்க்கும்போது, அதன் பொருள் தெளிவாக தெரிகின்றது. அதாவது, கீழ் குறிப்பிட்ட பாசுரத்தில் சுவாமிகள் குறிப்பிடுகின்றார்கள்

> துரிய வெளிதனிற் பரமநாதவனை நடுவே சுயஞ்சுடரிற்றுலங்கு கின்ற துணையடிகள் வருந்தப், பிரிய மொடு நடந்தெளியே னிருக்குமிடந் தேடிப் பெருங்கதவந்திறப்பித்துப் பேயனெனை யழைத்து உரிய பொருளொன்றெனது கையிலளித்திங்கே உறைக மகிழ்ந்தெனவுரைத்தவுத்தம நின்னருளைப் பெரிய பொருளெவற்றினுக்கும் பெரிய பொருளென்றேபின்னரறிந்தேனிதற்கு முன்னரறியேனே!

இப்படி அருட்பிரகாசமாலை நூறு பாசுரங்களிலும் நடராஜப் பெருமான், வள்ளற் பெருமானை நாடிவந்து, கைதனில் அருட்செங்கோலை கொடுத்து, நன்மை புரியும் படி கூறிய கருத்துக்களை, விளக்குகின்றார்கள். அதாவது நடராஜப் பெருமான் ஒரு முறை அய்யா அவர்களிடம் வந்து

திருநீற்றுப்பையில் இருந்து, செஞ்சுடர் பூ ஒன்று கொடுக்க அதைப் பெற்றுக்கொண்டு தயாநிதியே திருநீறு பெறவேண்டும் என்று வணக்கத்துடன் கேட்கும்போது, நடராஜப் பெருமான் திருநீறும் கொடுத்திருக்கின்றார். அதை அய்யா அவர்கள் பாசுரத்தில் குறிப் பிடுகின்றார்கள். இப்படி யாரும் எந்த மகான்களும் கூறவில்லை, அடியார்களும் இந்த நிலையை அடையவில்லை என்பதற்கு திருஅருட்பா சாட்சி கூறும், அதாவது

> திருவுரு கொண்டு எழுந்தருளிச் சிறி
> யேன்முன் அடைந்து திருநீற்றுப்பை
> அவிழ்த்துச் செஞ்சுடர்ப் பூ அளிக்க
> தருவுருக் கொண்டெதிர் வணங்கி
> வாங்கிய நான் மீட்டுந் தயாநிதியே
> திருநீறுந்தருக எனக்கேட்ப மருவுருக்
> கொண் டன்றளித்தாந் திருநீறின்
> றுனக்கு மகிழ்ந்தளிந்தாமிவையென்று
> வாய்மலர்ந்து நின்றாய்குருவுரு கொண்
> டம் பலத்தே யருணடதம் புரியும் குரு
> மணியேயென்னை முன்னாட்கொண்ட
> குணக்குன்றே.

ஆகவே இப்படிப் பெற்ற நிலையினை அய்யா அவர்கள், **ஆனந்தமாலை, பக்தி மாலை**, போன்ற பல பாசுரங்களில் விளக்கி இருக்கின்றார்கள். அதாவது, பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் போன்றவர்களும், அறிய முடியாத பெருமான் தன்னை வந்து அடைந்து, செய்த விளையாட்டுக்களை பெருமான் அதிசயமாலையிலே குறிப்பிடுகின்றார்கள். வேதம் ஓதக் கூடியவர்கள் என்று பெருமைபட்டுக் கொண்டு, தானே ஆண்டவனுக்கு பிரதிநிதி என்று, இறுமாப்பு உடையவர் கட்கெல்லாம் அருள் வழங்காமல் தனக்கு அளித்தார் என்பதை, அய்யா அவர்கள் குறிப்பிடுகின்றார்கள், **அதிசய மாலையில்** பல பாசுரங்களில் அதன் விளக்கத்தை ஒரு பாசுரத்தில் கீழே காண்போம்

> அத்தோவீ ததிசயமீ ததிசயமென்
> புகல்வேன் அந்தணரெல்லா ருமறை
> மந்தணமே புகன்று ஒத்தோலமிடவும
> வர்க்கொரு சிறிது மருளான் ஒதியனை
> யேன் விதிபறியே னெருங்கேன்வன்
> குரங்கேன் இத்தோட மிகவுடையேன்
> கடை நாய்க்குங்கடையேன் எனைக்
> கருதியானிருக்குமிடந்தேடி நடந்து
> சத்தோட முறவெனக்குஞ் சித்தி
> யொன்று கொடுத்தான் தனித்த சிவ
> காமவல்லிக் கினித்த நடத்தவனே.

இப்படி நமது அய்யா அவர்கள் பெற்ற நிலையை பார்க்கும் போது, குரு அருளுக்கு பிறகு திரு அருளை பெறலாம் என்று நால்வர்களையும் குரு தோத்திரத்தில் பாடி உள்ளார்கள். அதாவது, **ஆளுடையபிள்ளை யார் அருள்மாலை** என்ற தலைப்பில் மூன்றுவது வயதில் ஞானப்பால் உண்ட சம்பந்தப் பெருமானை, கருவில் உருவான பெருமான் பாடுகின்றார்.

> சீரார் சண்பைக் கவுணியர்தந் தெய்வ
> மர பிற்றிகழ் விளக்கே தெவிட்டா
> துளத்திற்றித்திக்குந்தேனே யழியாச்
> செல்வமே காரார் மிடற்றுப் பவள
> மலைக் கண்ணின் முளைத்த கற்பகமே
> கரும்பே கனியே என்னிரண்டு
> கண்ணே கண்ணிற் கருமணியே
> ஏரார்பருவமூன்றிலுமையினிய முலைப்
> பாலெடுத் தூட்டும் இன்பக்குதலை
> மொழிக்குருந்தே யென்னுருயிருக்
> கொருதுணையே பேரார் ஞானசம்பந்
> தப்பெருமானே நின்திருப்புகழைப்
> பேசுகின்றோர் மேன்மேலும் பெருஞ்
> செல்வத்திற் பிறங்குவரே

என்று பலபாசுரங் களில் சம்பந்தப் பெருமானை வாழ்த்து கின்றார்கள். அடுத்து **ஆளுடைய அரசுகள் அருள் மாலை.** திருநாவுக்கரசரை புகழ்ந்து பாடிய பெருமான் அவருடைய தமக்கை யாரையும் புகழ்ந்து பாடி இருக்கின்றார்கள் என்றால் அய்யா அவர்களுடைய பெருமையை எவ்வாறு புகழ்வது, அதாவது

> அருள்வழங்குந் திலகவதி அம்மை
> யார் பின் அவதரித்த மாணியே சொல்
> லரசே ஞானத்தெருள் வழங்குஞ் சிவ
> நெறியை விளக்க வந்த செழுஞ்சுடர்
> மாமணி விளக்கே சிறியனேனை
> இருள் வழங்கு முலகிய னின்றெடுத்து
> ஞான இன்னருள் தந்தாண்டருள்
> வாயின்றோலந்தோ மருள் வழங்கும்
> பவநெறியிற் சுழல் வேனுய்யும் வகை
> யறியே னின்னருட்கு மரபன்றீதே

என்று, அப்பர் சாமிகளை வாழ்த்திய பெருமான் **ஆளுடைய நம்பிகள் அருள் மாலை** என்ற தலைப்பில் சுந்தரமூர்த்தி சுவாமிகளை வாழ்த்துகின்றார்கள். அதாவது

பேரூரும் பரவைமனப்பிணக்கறவெம் பெருமானை ஊரூரும் பலபுகலவோரி ரவில் தூதனெனத்தேரூருந் திருவா ரூர்த் தெருவு தோறும் நடப்பித்தாய் ஆரூரா! நின்பெருமை அயன்மா லும் அளப்பரிதே!

இப்படி புகழ்ந்து, மணிவாசகப் பெரு மானை ஆளுடைய அடிகள் அருள்மாலை என்ற தலைப்பின் கீழ் பல பாடல்களில் களில் அய்யா அவர்கள் புகழ்ந்து பாடி உள்ளார்கள். அதாவது

வன்பட்ட கூடலில் வான்பட்ட வையை வரம்பிட்ட நின், பொன்பட்ட மேனியில் புண் பட்ட போதில், புவி நடையான், துன்பட்டவீரர் அந்தோ வாதவூரர்தம் தூய நெஞ்சம், என் பட்டதோ! இன்று கேட்ட என் நெஞ் சம் இடிபட்டதே

என்று சிறப்பாக கூறி

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக் கேட்டபொழுது அங் கிருந்த கீழ்ப் பறவைச் சாதிகளும் வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான நாட்டமுறு மென்னில் இங்குநான் அடைதல் வியப்பன்றே.

என்று மிகைப்படுத்திப் பாடுகின்றார்கள். எனவே அய்யா அவர்கள் பட்டபாடு அனைத்தும் நாம் நன்மை அடையவேண் டும் என்பதுதான் குறிக்கோளாக வாழ்ந் தார்கள்.

அதாவது

பாதி இரவில் எழுந்தருளி பாவியேனை எழுப்பி அருட்ஜோதி அளித்து என் உள்ளகத்தே சூழ்ந்து கலந்து, துலங்கு கின்றாய் நீதி நடம் செய் பேரின்ப நிதி நான் பெற்ற நெடும் பேற்றை ஓதி முடி யாது என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே என்று அவர் பெற்ற இன்பத்தை நாம் பெறவேண்டுமென்று தாள்வணங்கி சாற்றுகின்றேன் தயவி னோடும் கேட்பீர் என்மார்க்கத்தினை உமக்குள் ஒருவனெனக் கொள்வீர், எல்லாம்வல்ல நமது இறைவனையே தொழுவீர் புன் மார்க்கத்தவர்போல வேறு சில நினைந்தே புத்திமயக்கடை யாதீர், பூரண மெய்ச்சுகமாய், தன் மார்க்கமாய் விளங்கும் சுத்த சிவம் ஒன்றே தன் ஆணை என் ஆணை சார்ந்தறிமின் ஈண்டே''

என்று அய்யா அவர்கள் சத்தியம் செய்து நமக்கு சொன்னார்கள்.

சத்தியம் செய்கின்றே சகத்தீர் அறி மின்கள் சித்தி எல்லாம் வல்ல சிவம் ஒன்றே நித்தியம் என்று எண்ணத் தாலே நம் எண்ணமெலாம் கைகூடும் என்று, எல்லாவல்ல ஆண்டவர்

அருள்பெற நாம் சீவ காருண்ய சீலராக வேண்டும்

அதாவது, கிரேதாயுகத்திலே, ஞானத் தால் முத்தி அடைந்தார்கள் திரே தாயுகத்திலே; தானத்தால் முத்தி அடைந்தார்கள் துவாபரயுகத்தில், யாகத்தால் முத்தி அடைந்தார்கள் கலியுகத்தில், ஜீவகாருண்யத்தில் இறவாவரம் பெறலாம் என்று, அருட் பிரகாச பெருமான் எடுத்து சொன்னார் கள்

நடராஜப் பெருமான் பலமுறை தனக்கு கொல்லாநெறியே குரு அருள் நெறி என்று எடுத்து சொன்னதாக அய்யா அவர்கள் நமக்கு, பாடல்களில் குறிப்பிடுகின்றார்கள்.

வேதாகமங்கள் என்று வீண் வாதம் ஆடுகின்றீர், வேதாக மத்தின் விளைவறியீர் சூதாக சொன்ன அல் லால் உண்மை வெளி தோன்ற உரைக்க இல்லை, என்ன பயனோ இவை

என்று திருவருளால் உணர்ந்து, குறிப்பிடு கின்றார் அய்யா அவர்கள் ஆகவே நாம், தீபவழிப்பாட்டை அய்யா குறிப்பிட்டபடி, சுத்தமான ஆகாரம் உட்கொண்டு ஒரு உயிருக்கும் கெடுதி செய்யாமல் பசித்தவர் கட்கு, தன்னால் ஆன ஆகாரம் கொடுத்து பெருமான் காட்டிய வழி நின்று எல்லாம் வல்ல இறைவனை வழிபடவேண்டும் அய்யா அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்

இதுவரை அடியேன் அடைந்த வெம் பயமும் இடர்களும் துன்பமும் எல் லாம் பொதுவளர் பொருளே பிறர் பொருட்டல்லால் இப் புலையனேன் பொருட்டல

என்று கூறினார் வள்ளல் பெருமான்.

அவருடைய முழுக்கருத்தையும் உணர அருட்பாபடிக்க வேண்டும். நான்காம் திருமுறையின் கருத்தை உணர வேண்டும், இந்த மாலைப் படிக்கவேண்டும். பாடிப்பாடிச் சிந்தித்து உருகவேண்டும்—உருகி உருகி—உள்ளம் கருணை மயம்—அருண்மயம்—ஆகவேண்டும். அப்போது ஆண்டவன் மயமாகும் வழி தெரியும். ஜோதி உதயமாகும்—அருட்பெருஞ் ஜோதியாய் ஒளிர்ந்து இருள் ஒழித்து ஒளி வழங்கும்.

வாழ்க வள்ளலார் — வாழ்க சன்மார்க்கம்


## எங்கே கருணை இயற்கையில் உள்ளன
## அங்கே விளங்கிய அருட்பெருஞ் ஜோதி



எங்கள் நல்வாழ்த்துகள் :

**திரு. ஆறுமுகம் பிள்ளை**

தினகரன் பால் டிபோ

இன்ஜினியர் சுப்பராய முதலியார் தெரு

**வேலூர், N. A.**

# ஐந்தாம் திருமுறை

பண்டித V. நடேசனுர் B.A.,
ஆசிரியர் 'முத்தமிழ்' சென்னை—7



உலகில் எல்லோர்க்கும் முதற் கடவுளாக விளங்குபவர் விநாயகரே. வி=விசேஷமான நாயகர்=தலைவர்; வி=இல்லை; நாயகர்=தலைவர்; விசேஷமான தலைவன் என்றும் தனக்கு மேல் தலைவன் இல்லாதவன் என்றும் பொருள்படவே நம் வள்ளலார் சித்திவிநாயகர் வல்லபைக் கணேசர் என்ற பெயரிட்டுப் பாடித் துதிக்க ஆரம்பித்தார். கருங்குழியிலமர்ந்துள்ள விநாயகரைச் சித்திவிநாயகர் என்றே அவ்வூரார் அழைத்துப் பரவுகின்ருர். கருங்குழிக்கும் வள்ளலார்க்கும் தொடர்பு உண்டல்லவா!

> திருமால் அறியாச் சேவடியால் என்
> கருமால் அறுக்கும் கணபதி சரணம்.

(இ-ள்) திருமாலும் பன்றியாகப் பாதாளம் வரை தோண்டிச் சென்றும் காணமுடியாத திருவடியால் என் பெரிய மயக்கத்தை (அறியாமையை) போக்கும் மகாகணபதியே! உனக்கே அடைக்கலம்.

வள்ளலார் அண்ணுமலையானும் ஆனைமுகனும் ஒன்றெனக் கொண்டார். தந்தையும் மகனும் தரையில் வெவ்வேருகவே இருப்பர்; ஒன்ருக முடியாது. உயிரோடு இருக்கும் வரை தந்தை தன் தந்தைக்கு மகஞக இருக்கலாம்; மகன் தன் மகனுக்குத் தந்தையாகலாம். ஆனல் இருவரும் ஒருவராக முடியாது. அத்தகைய செயற்கரிய செய்யும் கடவுளையே எல்லாம் செய்ய வல்லவனைய தந்தை போன்றும் மகன் போன்றும் வேருகத் தோன்றினும் இறுதியில் ஒருவரே இருவராகின்ருர்; இருவருள் இருந்தும் அவர்க்கு வேருகவும் விளங்குகின்ருர் விநாயகர் என்பதை விளக்கவே'' திருமாலும் அறியாச் சேவடி'' என விநாயகரது திருவடிகளைப் புகழ்கின்ருர் வள்ளலார்.

சித்திவிநாயகர் பதிகத்துள் ஏழாம் பாட்டில் ''சிவம் ஒன்றே''. கணபதியாம் என்கிருர் வள்ளலார்.

> '' ஒன்று அல்ல இரண்டும் அல்ல இரண்டு
> ஒன்ருேடுஉருவு அல்ல உவட்ட
> நன்று அல்ல நன்று அல்லாதது அல்ல விந்து
> நாதமும் அல்ல இவை அனைத்தும்
> பொன்று அல்ல என்று அறிந்து உள்புறத்
> தினும் அகண்ட பூரணமாம் சிவம்
> ஒன்றே
> என்றல் என்று அறி நீ'' என்றனை சித்தி
> விநாயக விக்கினேச் சுரனே.

நந்திதேவர்க்கு '' யாரையும் உள்ளே விடாதே'' எனக் கூறிவிட்டு மீனுட்சியம்மையாருக்குத் தனியிடத்தில் இருந்து அதிரகசியமாக வேதத்தின் உட்பொருளை உபதேசித்தார் சிவனுர். இறைவன் பரதவர் தலைவனுக்குத் தன்னை மகளாக அருள் புரியும் குறிப்பினன் என்பதை உணர்ந்த உமாதேவி மறையின் பொருளை அசட்டையாகக் கேட்டார்; அச்சமும் அடைந்தார். அதனை அறிந்த அண்ணல் அம்பிகையைச் சபித்தார். நோன்பும் அறனும் சுற்ற செம்படவர் குலத்தில் பெண்மகவாகப் பிறக்கப் பணித்தார். இச்சம்பவத்தையறிந்த விநாயகர் சிவனிடமிருந்த துதிக்கைக்குறிய நூல்களையெல்லாம் தம் துதிக்கையால் அள்ளிக் கடலில் எறிந்தார். முருகன் தன்தந்தை கரத்திலிருந்த சிவஞான போதத்தைப் பிடுங்கிக் கடலில் எறிந்தார்.

நந்திதேவரை வெகுண்டு கடலில் சுருமீனுகப் பிறந்து அலைய சாபமிட்டார் சோமசுந்தரர். குமாரக் கடவுளை உப்பூரி தனபதிக்கு ஊமைப் பிள்ளையாகப் பிறக்க ஆணையிட்டார். ஆனல் விநாயகருக்குச்

சாபமிடவில்லை. காரணம்: தலையாய காரணம்: விநாயகர்க்கு விதிக்கும் சாபம் தம்மையே சாரும். ஆதலால் சிவன் விநாயகர்க்குச் சாபம் விதித்திலர். இத் திருவிளையாடலால் சிவனும் கணபதியும் வெவ்வேறு உருவில் இருப்பினும் ஒருவரே என்பது வெள்ளிடைமலை. (விரிவுரைக்கு 'வலை வீசிய படலம்' நோக்குக) இவ்வுண்மையை உளத்திற் கொண்டே வள்ளலார் 'திருமால் அறியாச் சேவடியால் என்கருமால் அறுக்கும் கணபதி' என்றார்.

மாதாவினது கர்ப்பவாசமின்றி அநசூயையினது புஷ்பாஞ்சலியினின்றும் சிசுவாக, சிவஅம்ஸமாகிய துர்வாச முனிவர் துதித்தது போல் விக்கினேஸ்வரர் சுயம்புமூர்த்தி. (விரிவு விரும்பின் அடியேன் இயற்றியுள்ள "கணபதி பூஜை ஆராய்ச்சி" நூலை வாசிக்க) பிதாபிள்ளை எனல் அருள் நாடகம். இவர் தமக்கு மேல் தலைவர் இல்லாத விநாயகர். "மைந்தர் மனைவி இல்லான் எவன்? அவன் சஞ்சலமிலான்; முத்திதரும் பரசிவன் எனத்தகுமே.' பூ, நிறம், மணம் மூன்றும் போல் சிவன், சிவை, சிவசூநு இருப்பன. உயர்வு தாழ்வு கற்பிக்கக் கூடாது. பிதா, மாதா, புத்திரன் என்பன போல் சிவசக்தி கணபதிகள். மூன்றுடல்களில் கருமத்துக் கீடாக மூன்று ஆன்மாக்கள் உலாவுதல் உண்டு. ஆனால் சிவசக்தி கணபதி உருவங்களில் ஒரே பரமான்மா மூன்றிலும் உண்டு.

பெரும் பொருட்டு இடனும் பிரணவ
வடிவில்
பிறங்கிய ஒரு தனிப் பேறே!
அரும் பொருளாகி மறைமுடிக் கண்ணே
அமர்ந்த பேரானந்த நிறைவே
தரும் பரபோக சித்தியும் சுத்த
தருமமும் முத்தியும் சார்ந்து
விரும்பினோர்க்கு அளிக்கும் வள்ளலே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே

பிள்ளையார் சுழி எழுதாமல் நற்புலவன் தான் இயற்றும் நூலையும் பாடலையும் ஆரம்பிக்கமாட்டான் பிள்ளையார் சுழி என்பது ஓங்காரத்தின் சுருக்கெழுத்தேயாகும். பெருவிழா முதல் திருமணச் சடங்குவரை பிள்ளையார் பூசையின்றி ஆரம்பமாகா. சப்த பிரபஞ்சத்துக்குக் காரணம் 'ஓம்' எனும் ஏகாட்சரமே. நாதமே விந்துக்குக் காரணம். எனவே, பிரணவ வடிவினனாகிய கணபதியே எல்லாக் கடவுளர்க்கும் முதற் காரணம் எனலாம். "உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா! விமலா" என்றார் மாணிக்க வாசகர். அடியேன் பிழைக்கஎன்மனத்தில் 'ஓம்' எனும் பிரணவமாய் நிலைபெற்றுள்ள சத்தியனே! அடியேன் திருவடிஞானம் பெற என் மனத்தில் அகார, உகார, மகார நாத விந்துவாகி நின்றது இறை, சக்தி, பாசம், எழில், மாயை ஆவியுற நிற்கும் ஓங்காரச் சத்திய சொரூபன் என்க.

'ஓசை ஒலியெலாம் ஆனாய்நீயே' என்பது அப்பர் அருந்தமிழ். ஓசை ஒலியெலாம் பிறக்கக் காரணமாயுள்ளது ஓம் எனும் பிரணவவொலியே. உலகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள சப்தமும் இம்மந்திரவொலியே கடலிற் கேட்கும் இரைச்சலும் அலைவொலியும் இதுவே. வலம் புரிச் சங்கினைக் காதில் வைத்துக் கேட்பினும் இவ்விரைச்சலையே கேட்கலாம். மணிகளை விட்டு விட்டடித்தாலும் தாளத்தைத் தட்டினாலும் 'ஓம்' எனும் ஒலியே கேட்கும். பெருமழை சொரியும் போதும், புயற்காற்று வீசும் போதும், கடற் கொந்தளிப்பாகும் போதும், எரிமலை பொங்கி வழியும் போதும் ஓங்கார வொலியைக் கோர வொலி வடிவிற் கண்டு கேட்கலாம்.

ஐம்புலனடக்கித் தன்னகம் காண விழைவோன் முதலிற் கேட்கும் ஒலியும் ஓம் எனும் சப்தமே. காதினை மூடிக் கூர்ந்து கேட்பின் யாரும் ஓங்காரவொலியை உணரலாம். எனவே, இம்மந்திர சப்தமே இயற்கையொலி.

இயற்கையை இயக்கும் இறையின் ஒலியாம் "ஓம்." உலகமும் உயிரும் உந்தக் காரணமாயுள்ளது ஓங்கார ஒலியே. ஒலி ஒன்றிற்கே சாதலில்லை. இறைவனைப் போன்று யாண்டும் நிலைபெற்றுள்ளது. அணுத்திரள் ஒலியே. தக்கதோர் கருவி பெறின் நம்முன்னோர் பேச்சினை இன்றும் கேட்கலாம். பிறந்த சொல்லின் உச்சரிப்பு இறத்தலே இல்லை. யாண்டும் திரிந்தே உலாவி வருகிறது. ஓர் இடத்தில் பிறந்த ஒலி உலகெங்கும் பரவுகிறது. உலகை இயக்குகிறது மக்களையும் மாக்களையும் வாழச் செய்கிறது. சொற்கள் எல்லாம் வல்லானைப் போன்றது. எல்லா வல்ல

மையும் பெற்றவை. தன்பெருவலியால் ஒருவனை வாழவும் வீழவும் செய்வது சொல்லே அல்லது ஒலியே ஓர் சர்வவி யாபி. அப்பொருட்கே விஷ்ணு என்று பெயர்.

இந்த 'ஓம்' என்னும் ஒலியை வகுத்துப் பார்க்கையில் இ.்.து ஓர் அணுக் கூட்டொலி எனத் தெரியும். இதன்சக்தி அகில உலகத்தையும் உயிர்களையும் ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்லது என்று அறிந்தனர் நம்மனோர். உலகம் உய்ய ஓங்கார வொலி வேண்டும். திருத் தொண்டர் புராணம் உயரவே சேக்கிழார் 'உலகெலாம்' எனும் சொல்லை முதல் இடை கடைகளில் வைத்தார். 'உ' எனும் எழுத்தே தாய்மைக்குரிய எழுத்து. உலகம் இரண்டு (உ) விதம் எனவும் காட்டும் எழுத்து. மும்மூர்த்திகளைப் போல் மூன்று ஒலிகளால் ஆயது! 'ஓம்' எனும் பிரணவப் பொருள். அஃது அ+உ+ம் எனப் பிரியும். அ+உ=ஓ; அ உ சேர்த் தொலிப்பின் ஓகாரமே கேட்கும். உலகில் உள்ள எல்லா மொழிகளின் எழுத்துக்களுக் கெல்லாம் அகர வொலியே முதலாகும். எனவே, அகர முதல எழுத்தெல்லாம் என்றார் வள்ளுவர். இயற்கை செயற்கை ஒலிகளுக்கெல்லாம் 'அ' எனும் சத்தமே அடிப்படை. அம்மா என்றும் மா என்றும் மே என்றும் கூவியழும் குழந்தை முதல் அய்யோ என்று அலரும் கிழவி வரை அலறும் சப்தமே முதலாம் விலங்கு கத்தலிலேயே அகரச் சத்தம் கேட்கிறோம். பறவையின் ஒலியிலும் அ' எனும் ஒலியே ஒலிக்க நாம் கேட்கிறோம்.

ஆதலால் அகரம் முதற்கண் பிறப்ப தால் படைத்தல் தொழிலைச் செய்யும் மந்திர வொலி இஃ·· என்ப. வாய்மூடி உச்ச ரிக்கும் மகரவொலி முடிவுகாணும் அழித்தல் தொழிலைச் செய்யும் மந்திரவொலி என்ப. கட்டளையிடும் சொற்கள் எல்லாம் தமிழில் வாய் குவிந்து மூடிச்சொல்லும் பதமாகவே இருக்கும். உதாரணமாக "வேண்டும்" "ஓம்" இம்மூன்று குணங்களையும் தன்ன கத்தே கொண்டுள்ளதால் "ஓம்', யாவற் றினும் சிறந்த ஒலியாகும்.

திருநீறு வேறு மாற்றம் அடையாதது போல் ஓங்கார் வொலியும் திரிபற்றது. பண்ணியிடும் அணிபலவே பொன் ஒன்றே யாம்; பாண்டத்தின் பேர்பலவே மண் ஒன்றே யாம்; வண்ணமிகு பசு பலவே பால் ஒன்றேயாம்; நண்ணும் அறுசமயங் கள் பேர் வேறு அல்லால் நாதன் ஒருவனே யாவன்; அவைகளைப் போலவே ஓங்கார வொலியும் ஒன்றேயாகும். ஐம்பத்தொரு அட்சரங்கள் மிகமுக்கியம் என்ப. அவை உயிர் 12 மெய் 18, மந்திரவொலிக்காக வுள்ள எழுத்துக்கள் 21; இறுதியாகக்கூறிய 21 எழுத்துக்களைத் தமிழர் கைவிட்டனர். ஏனைய மொழியினர் இன்றும் கையாண்டு வருகின்றனர். எல்லா மந்திரவொலிகட்கும் தலைமையாக வீற்றிருப்பது 'ஓம், எனும் ஒலியே. இஃது இன்றிக் கூறும் மந்திரம் பலியா என்ப. நாத விந்தாகி விளங்கும் 'ஓம்' எனும் இவ்வொலி வடிவின் வரிவடி வங்களே பிரபை; திருவாசி; பிள்ளையார் சுழி, சிவலிங்கம் (அருவுரு) விநாயகர் வடிவம், காதுகள், வாய் திறந்து குவிதல், கழுத்துடனுள்ள மனிதமுகம் முதலியன. அறியாப் பொருளைத் தன்னகத்தே கொண் டது ஓங்காரம். மக்களின் குடர்களும் 'ஓம் எனும் வடிவு போல் அமைந்துள்ளது. கருவுயிர்க்கு முன்னுள்ள தாயின் மணி வயிறும் ஐந்திகழ்க்கொன்றையும்பிரணவத் தையே தோன்றத் துணையாகக் கொண் டுள்ளன. ஆதலாலே கொன்றை மலர் சிவனுக் குகந்தது என்ப. "நமசிவாய" எனும் பஞ்சாட்சரம் நீங்கலாக ஏனைய மந்திரங்களை "ஓம்" எனும் ஒலியோடு சேர்த்தே உச்சரித்தல் வேண்டும். கூத்தப் பெருமான் தன் ஞான நடனத்தையும் ஊன நடனத்தையும் "'ஓம்' 'எனும் திருவாசியுள் ஒட்டியிருந்தே ஆடுகிறான்.

> "ஓம் எனும்ஓங்காரத்துஉள்ளே ஒரு மொழி
> ஓம் எனும் ஓங்காரத்து உள்ளே உருவரு
> ஓம் எனும் ஓங்காரத்து உள்ளே பலபேதம்
> ஓம் எனும் ஓங்க,ரம் ஒண்முத்தி சித்தியே"
> —திருமூலர்

> "ஐங்கரன் அடிமலர் இங்குஉற நினைதி! நின
> பொங்கு உறு துயர் அறும் மங்கலின்
> மனனே'

(இ-ள்) ஐந்து கைகளையுடையவனது திருவடித் தாமரைகளை இத்தரையில் மனத் தில் பொருந்த நினைப்பாயாக! உனது மிகப் பெரிய பிறவித் துன்பம் நீங்கும்.

மனமே.

இறைவன் இயல்பாகாவ நுண்ணிய பேரறியும் பெருங் குணமும் உடையவர். பிறரையும் உயர்த்த குருவாகவும் வருவார். குருவின் முதல் வடிவம் மூத்த பிள்ளையார்; முதல் ஒலியே ஓம் எனும் பிரணவம். மிருகத் தன்மையால் மனிதவுயர்வுக்குப் பங்கம் ஏற்படாதபடி பிள்ளையார் யானை யானூர். வேதம் பிரமாணம். அதனில்போந்த பிரமேயம் சிவம். இச்சிவம் வேதத்தின் ஆதியிலும் அந்தத்திலும் பிரகாசிக்கிறது. உபக்கிராமத்தில் ஓம் ஆரம்பமாகிறது. பிரணவமே விநாயக சொரூபம். வேதத் தின் முதலெழுத்து விநாயகர் சொரூபமே ; முகமண்டலம் பிரணவத்தின் வரிவடிவமே. ஆதலால் எழுத்துப் படிக்க ஆரம்பிக்குங் கால் "ஓம்" சொல்லியே பாடசாலை படிப் பைத் தொடங்க வேண்டும். விநாயகர், சிவம், சக்தி பிரணவமாகிய பிரமசொரூபம்.

ஐ ங் க ர த் த ன் -ஐந்துகைகளையுடை யவன். ஒற்றைப் படையாக ஏனைய கடவுளர்களுக்குக் கைகளில்லை. 2,4,6,8, 10, 12 கைகள் தேவர்களுக்கு உண்டு. எக்கடவுளுக்கும் ஐந்து கரங்கள் இல்லை. இதுவே பிள்ளையாரைத் தனிக்கடவுள் என்று விளக்குகிறது. கையன் எனில் செய்கையன். பக்தர்க்கு அருள் செய் பவன்; எனவே துதிக்கைக்குரியவன். துதிக்கை எனும் முன்கை யானைக்கே உண்டு. ஆதலால் தும்பிக்கையனே முன் வருபவன் ; வாய் பேசாமல் செயல் புரி பவன். முன்கை போன வழியே பின்கை வரும்; முன்கை அருளல் எனும் பழமொழிக் கேற்ப, யானைமுகனது துதிக்கை அருளே செய்யும். ஏனைய நான்கு கைகளும் ஒடித்த தந்தத்தால் விதியெழுதி படைப்பை யும் பணியாரக்கை காப்பையும் அங்கு சக்கை அழிப்பையும் கயிறுடைகை மறைப் பையும் செய்யும். எனவே அநுக்கிரகத் துக்குரிய கை துதிக்கையே.

அவர் நோக்கம் மற்றவரும் உள்ளூர உணர்ந்து நடக்கையில் யாவும் எளிதே நிறையுறும். அவரடி என்றல் அவர துணர் வினையே போற்றி மதித்து துதித்தல். பின்னரே அருள்பவன் கருத்தும் அருளப் பட்டவன் இணக்கமும் சேர்ந்து எல்லாம் இனிமையாய் நலமுறும். யானைத்தலை பிரணவத்தையும் திருக்கரங்கள் பேராற் றலையும் அங்குசம் பாசம் முறையே வியா பகத்தையும் அருளையும் திருவடிகள் சித்தி யையும் புத்தியையும் காதுகள் சர்வஞ்ஞத் தையும் ஏகதந்தம் பரஞானத்தையும் கை யிலுள்ள ஒடிந்த தந்தம் அபயத்தையும் பெருவயிறு பொறுமையையும் குறிக்கும். மனத்தால் ஏற்படும் மாயாசக்தியை உணர்த்தி அதனில் மயக்கமுறாது உறுதி யுடன் இருக்கச் செய்வர் லம்போதரர்.

உலகில் எல்லாம் ஐந்தாகவே விளங்கு கின்றன எனக் கண்டவள்ளலார் விநாய கரை "ஐங்கரன்" என்றார். நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் என உலகம் ஐந்து பகுப்பினையுடையது. அண்டம் போலவே பிண்டமாகிய உடலும் ஐந்து பகுப்புடையது கால் முதல் இடுப்புவரை நிலத்தன்மை. யுள்ளது; ஏனெனில் திண்மையுள்ள எலும்பு உரத்தசையாகி நெகிழ்வு போல் மிகக் குறைகிறது. உடலின் பாதியே அரை (இடுப்பு) என்றும் கால் பாகமே கால் என்றும் கூறுப. இடுப்பிலிருந்து மார்பின் பள்ளம் வரை நீர்மையுள்ளது. சிறு குடல் பெருங் குடல் செரிக்கும் நீரை உண்டாக்கு தலும் கழிவுநீரை வெளியிடலும் தொழி லாகப் பெற்றுள்ளன; அவை நீர் வயத்ததே. நெஞ்சுமுதல் தோள்வரை நெருப்பின் தன் மையாம். தோள் முதல் மூக்கு வரை காற்றின் தன்மையாம்; மூக்கு முதல் மண்டை வரை வானத்தின் தன்மையாகும். நம் வீடுகளும் ஐந்து பாகங்களையுடையன வே. எனவே வள்ளலார் "ஐங்கரத்தான்" என்றார். விநாயகர் முகம் பிரணவம்; முக் கண்கள் சூரியன், சந்திரன், அக்னியாம்; ஐந்து கரங்கள் செய்யும் தொழில்கள் ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்பன, மும்மதம் பிடித்து, ஞானக்கம்பம் உடைத்து, அன்புச்சங்கிலி அறுத்து, அருள் எனும் கூடம் விட்டுநீங்கி, உலகக் காட்டில் பாகர்க்கு அடங்காமல் மேயும் திரியும் மனிதர்களை அடக்கி அருள் தருபவர் விநாயகர்.

சித்திவிநாயகர், இஷ்டசித்தி விநாயகர் வரசித்தி விநாயகர், சித்திபுத்தி விநாயகர் எனப்பல்வேறு நாமங்கள் கணபதிக்குண்டு உள்ளம் எனும் சாலையில் ஊக்கம் எனும் கம்பம் நாட்டி அன்பாகிய சங்கிலி பூட்டி, பசுபோதம் எனும் உணவு உருண்டையிட வரசித்தி விநாயகர் வரமருளுவர். சித்தி= நற்பேறு; புத்தி= நல்லறிவு. நம் நாட்டில்

செல்வங்களையும், நற்பண்புகளையும் சக்தி மார்களாகவே உருவகஞ் செய்வர் பெரியோர்; ஆதலால் விநாயகர்க்குச் சித்தியை புத்தியையும் இரு தேவிமார்களாக்கினர். வல்லபையை மணந்ததால் இவரை வல்லபை கணேசர் என்ப.

விநாயகரை நோக்கி வள்ளலார் வேண்டும் வரங்களாவன:

சித்தி புத்திகளைச் சேர்த்தணைத்திடும் இருமருங்கும் விலகுருது எளியேன் விழைந்தனன்; அருளுக.'

'உள்ளமும் உயிரும் உணர்ச்சியும் உடம்பும்
உறுபொருள் யாவும் நின் தனக்கே
கள்ளமும் கரிசு நினைந்திடாது உதவிக்
கழலிணை நினைந்து நின் கருணை
வெள்ளம் உண்டு இரவு பகல் அறியாத
வீட்டினில் இருந்து நின்னோடும்
விள்ளல் இல்லாமல் கலப்பனோ சித்தி
விநாயக! விக்கினேச் சுரனே!''

''அகண்ட பூரணமாம் சிவம் ஒன்றே என்றல்
என்று அறி நீ என்றனை ''
மருளுறு மனமும் கொடியவெம் குணமும்
மதித்து அறியாத துன்மதியும்
இருளுறு நிலையும் நீங்கி நின் அடியை
எந்த நாள் அடைகுவன் எளியேன்''
ஈன வஞ்சக நெஞ்சகப் புலையேனை
ஏன்று கொண்டு அருளுநாள் உளதோ''
''விரும்பினோர்க்கு அளிக்கும் வள்ளலே! சித்தி
விநாயக! விக்கினேச் சுரனே!

## வல்லபைக் கணேசர் பிரசாத மாலை

பெருமையை நாடோறு மறவேன்
''ஆருருத்திடினும் அஞ்சுதல் செய்யா
ஆண்மை பெற்கருளிய அரசே!'
''தேரையூர் வாழ்வும் திரமல எனும் நல்
திடம் எனக்கு அருளிய வாழ்வே''
''இன்னருள் புரியும் நின்னருட் பெருமை
இரவினும் பகலினும் மறவேன்''
'' மன் அருநெறியில் மன்னிய அறிவே!''
'' மதிபெறும் உளத்தில் பதிபெறும் சிவமே!''
'' திருவளர் மேன்மை திறமுறச் சூழும்
திருவருட் பெருமையை மறவேன்''
மருவளர் தெய்வக் கற்பக மலரே
மனமொழி கடந்த வான் பொருளே
வருமலை வல்லிக்கு ஒரு முதற் பேறே
வல்லபைக் கணேச மாமணியே!''

## கணேசத் திருவருள் மாலை

''வெருவும் சிந்தை விலகக் கஜானனம்
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே!
''நின் தன்னை வேண்டிச் சரண்புகுந்தேன் என்னைத்
தாங்கிக் கொள்ளும் சரண்பிறிது இல்லை காண்.''
ஓவிலாது உனைப் பாடவும் துன்பெல்லாம்
ஓடவும் மகிழ் ஓங்கவும் செய்குவாய்!''

## தனித்திருமாலை

'' திங்களங்கொழுந்து வேய்ந்த செஞ்சடைக் கொழுந்தே போற்றி
மங்கை வல்லபைக்கு வாய்த்த மகிணநின் மலர்த் தாள் போற்றி
ஐங்கர நால்வாய் முக்கண்ணருட் சிவகளிறே போற்றி
கங்கையாய் மகிழும் செல்வக் கணேச! நின் கழல்கள் போற்றி !''

'' கலைநிறை கணபதி சரணஞ் சரணம்
கஜமுக குணபதி சரணஞ் சரணம்
தலைவ! நின் இணையடி சரணஞ் சரணம்
சரவண பவகுக சரணஞ் சரணம்
சிலைமலையுடையவ ! சரணஞ் சரணம்
சிவ சிவ சிவ சிவ சரணஞ் சரணம்
உலைவறும் ஒரு பரை சரணஞ் சரணம்
உமை சிவை அம்பிகை சரணஞ் சரணம்''

சித்தி விநாயகர் விரை கழல் சரணே!

## பிள்ளைப் பெருமான்

## பிள்ளைப் பெருமானைக் காணல்

''அன்னார் அமுது படையாதே'' என்றார்; அண்ணியார் அமுதார்; உண்ணாதிருந்தார்; மாலை புனையும் மாலை நேரத்தில் பிள்ளைப் பெருமான் வந்தார். ''அறுசுவை உண்டி யாவரும் உண்ண பழைய அமுது உனக்கா'' என்றுகூறி அழுதார்; அண்ணியழுகை அடிகளாரை அழச்செய்தது. தாயழுகை தனயனை மாற்று மன்றோ? மனத்தை மாற்றியது '' ஒழுங்காகக் கல்வி பயில்வேன்; ஓர் அறையைக் கொடும்'' என்றார் இராமலிங்கம். கணவரிடம் கூறி உத்தரவு பெற்ற தருமபத்தினி மைத்துனர் வேண்டியவாறு மெத்தையிலுள்ள அறையொன்றை தந்து அடிகளார் தனித்திருந்து வாழத் துணைபுரிந்தனர்.

அன்றுடம் பிள்ளைப்பெருமான் பூஜைக்குரிய பூ, பழம், கற்பூரம், தீபங் கொண்டு கண்ணாடியை அலங்கரித்து வணக்கம்

செய்ய ஆரம்பித்தார். இது ஞானிகள் செய்யும் பூசை; கருவில் திருவுற்ற அடிகளாருக்கு வாய்த்தது. ஒரு நாள் கண்ணுடிக்கு முன்னர் உட்கார்ந்து கற்பூரங் கொளுத்திக் கண்ணிமை கொட்டாது நோக்கினர். தன்முகம் தெரியாது ஆறுமுகப் பெருமான் காட்சியைக் கண்டார். அதுவே பிள்ளைப்பெருமான் தேடித்தேடிப் பேணி வந்த தணிகைமலை பிள்ளைப் பெருமான் திருவுருவாம். அன்று கண்ட அருவுருவத்தையே அனுதினம் உபாசிக்கலானர். அன்று அவர்தம் அகவை எண்ணில் பெரிதாம் ஒன்பது. ஒன்பதில் எவ்வெண்களும் அடங்குமன்றே? பிள்ளைப்பெருமான் தாம் கண்ட பிள்ளைப்பெருமானைச் சொல்லோவியமாகத் தம்பின் வரும் சந்ததிக்காகப் பாடி வைத்தார்.

### கண்ணுடியில் சண்முகன்

சீர்கொண்ட தெய்வவதனங்கள் ஆறும்
திகழ்கடப்பம்
தார் கொண்ட பன்னிரு தோள்களும்
தாமரைத் தாள்களும் ஓர்
கூர் கொண்ட வேலும் மயிலும் நல்கோழிக்
கொடியும் அருள்
கார் கொண்ட வண்மைத் தணிகாசலமும்
என் கண்ணுற்றதே

இ-ள் அழகு இளமை தெய்வத் தன்மையுடையஆறுமுகங்களும் விளங்கும் வெண்கடப்ப மார்புமாலையும் பன்னிருகைகளும், செந்தாமரை போன்ற இரண்டு திருவடிகளும், ஒப்பற்ற ஞான சக்தியாகிய கூர்மையுடைய வேலாயுதமும், இருள் விரும்பும் மயிலும், ஒளி விரும்பும் நல்ல கோழிக் கொடியும், அருள் மேக வளமும் கொண்ட வள்ளலாகிய தணிகையம் பெருமான் தானே உவந்து வந்து எனக்குக் காட்சியளித்தான்.

இன்றும் இராமலிங்க சுவாமிகள் கண்ணுடியிற் கண்ட ஆறுமுகப் பெருமானைத் திருத்தணிகை மலைக்கோயிலிற் காணலாம். உற்சவமூர்த்திக்கும் ஆபத்சகாய கணேசருக்கும் இடையே சண்முகஸ்வாமி காட்சியளிக்கிருர். சுவாமிகளுக்குத் தணிகை மலைமேலுள்ள முருகனிடத்துத் தனி அன்பு உண்டு. ஐந்தாம் திருமுறை முழுதும் இவ்வுண்மையைக் காட்டும்.

### திருத்தணிகையின் சிறப்பு

போர்வினை தணிந்து உபய நாச்சியாரோடு வீற்றிருக்கும் திருப்பதி "செருத்தணி" என்ப. அதுவே திருத்தணி எனலாயிற்று. திருத்தணிகை மலையுச்சியில் நீலோற்பசுனையிருத்தலால் உற்பலகிரி என்றும் செங்கழுநீர்பூ பூசைக்குத் தருதலால் கல்லோரகிரி (கல்லாரம்=செங்கழுநீர்) என்றும் கந்தாசலம் கணிகவெற்பு (இன்பத்தை இம்மையிலும் மறுமையிலும் ஒரு கணத்தில் ஈவது) என்றும் செங்கல்வகிரி என்றும் குருகிரி அகத்திய முனிவர்க்குத் தமிழ் கற்பித்தவர் முருகர்) என்றும் நீலகிரி என்றும் பலபெயர் கூறுப. நந்தியாற்றங்கரை மேலுள்ள ஆறுமுகஸ்வாமி அகத்தியரால் வழிபடப் பட்டவர்.

"தேவராயினும் முனிவராயினும் சிறந்தோர்
எவராயினும் பிறந்தபின் இவ்வரை
தொழாதார்
தாவராதிகள் தம்மினும் கடையரே தமது
பாவராசிகள் அகலுமோ பார் வலஞ்
செய்யினும்"
"பாதகம் பல செய்தவராயினும் பாவங்கள்
ஏதம் லவகலும் புரிபவராயினும் எம்பால்
ஆதரங்கொடு தணிகை வெற்பு அடைவ
ரேல் அவரே
வேதன் மாலினும் விழுமியர்; எவற்றினும்
மிக்கார்"

இத்தகைய தணிகாசத்திலுள்ள பிள்ளைப் பெருமான் என்கண்ணுற்ருன்." "God is more willing to give than we are to receive." என்பது ஆங்கில பொன் மொழி. எனவே. வள்ளலார் தேடினுர்; முருகன் கிடைத்தான். கோயிற் கதவினைத் தட்டினுர்; திறக்கப்பட்டது. கேட்டார்; கொடுக்கப்பட்டது. காணமுடியாத கடவுளாம் "தணிகாசலமும் என்கண்ணுற்றது" என்ருர் பிள்ளைப்பெருமான்.

### கண்ணுடி உண்ணுடி

உலகில் முதன்முதலில் கண்ட கண்ணுடி நீர்மட்டமே. குளநீரும் ஏரி நீரும் சலனமற்ற தண்ணீரும் எண்ணெய்யும் உலோகத் தகடுகளும் கண்ணுடிக்கு அடிகோலின. ஈப்புருக்கள் மெருகிட்ட பித்தளையையும் எகிப்தியர், கிரேக்கர், ரோமர் வெங்கலத்தையும் கண்ணுடியாகப்

பண்டையில் உபயோகித்தனர். 2400 ஆண்டுகளுக்கு முன்னர் பிராக்ஸிட்டல்ஸ் வெள்ளித் தகட்டினையே கண்ணுடி போல் விற்கத் தொழிற்சாலை அமைத்தார். அக் கண்ணுடியே மேலை நாட்டில் யாவரும் உபயோகித்தனர். கி. பி. 1300-ம் ஆண்டில் முகக் கண்ணுடி வேனிஸ் நகரில் செய்யப் பட்டது; 1673-ம் ஆண்டில் ஆங்கிலேய நாட்டில் அறிமுகமாக்கப்பட்டது. மெருகிட்ட உலோகப் பொருளினுல் செய்த கண்ணுடியை விருத்திப் பண்ணியே 1835-ம் ஆண்டில் வெள்ளிய தகரத்தை மூலாம் பூச முற்பட்டனர் மக்கள்.

தமிழகத்திலும் தாம்பாலம் போன்ற உலோகப் பொருள்களையே தமிழர்கள் உபயோகித்தனர். "ஆடி" (உலோகம்) எனும் வார்த்தை கண்ணுடியைக் குறிக்கிறது. கண் + ஆடி = கண்ணுடி. பிற்காலத்தில் பாதரசத்தையும் வெள்ளீயத்தையும் கலந்து கண்ணுடியில் பூசி அதன் மேல் அரக்கெண்ணெயையும் செந்தூரத்தையும் பூசஆரம்பித்தனர். கி. மு. இரண்டாம் நூற்ருண்டில் செய்யப்பட்ட கண்ணுடி மணிகள் தட்சசீலத்தில் கிடைத்தன. கி.பி. இரண்டாம் நூற்ருண்டில் எழுந்த மணிமேகலைக் காவியத்தில் கண்ணுடி அறை (பளிங்கு மண்டபம்) யைப்பற்றிப் படிக்கின்ரேம். உலகத்திலேயே காண முடியாத மிகப் பளப்பளப்பான மட்பாண்ட ஓடுகள் கண்ணுடித் துண்டு போல் காணப்படுபவைகளை ஹாரப்பாவிலும் மோகஞ்சோதாராவிலும் கண்டு பிடித்தனர் புதைப் பொருளாராய்ச்சியாளர். வேதங்களில் கண்ணுடியைப் பற்றிய குறிப்பு உண்டு. வைதீக நெறிப்படிப் பூசிக்க விரும்புவோர் படிமத்தின் முன் கண்ணுடி வைத்தே பூசிப்பர். கற்பூரம் கொளுத்தி ஆராதிக்கும் போது படிமத்தில் உருவத்தினையும் கண்ணுடியில் அருவத்தையும் கண்டு ஒரு சேர வழிபடுவர் வைதீகர். இன்னும் இந்நெறியை தேவாலயங்களில் காணலாம். தொல்காப்பியர் மலையாளியாகிய (திரணதுமாக்கினி) காலத்திலேயே உருவ வழிபாடு உண்டென்று "படிமம்" "படிமத் தான்" எனும் பதங்கள் காட்டுகின்றன. "ஆடி" எனும் பதமும் சங்க விலக்கியங்களிற் காணலாம்) ஆதி குடிகள் கண்ணுடித் துண்டுகளையே அம்புகளிலும் கத்திகளிலும் ஈட்டி முனைகளிலும் உபயோகித்தனர்.

ஆனுல் இராமலிங்க சுவாமிகள் பழம் பெரும் பூசையை மேற்கொண்டார்; ஆனுல் பெரும் புதுமையைக் காட்டினுர். பணமற்றவனை வெறும் கண்ணுடிக்கும் பணமுற்றவனை முகம் பார்க்கும் கண்ணுடிக்கும் ஒப்பிடலாம். காரணம் என்னை? தலையாய காரணம். வெறுங் கண்ணுடி யாவரையும் காட்டும்; பாதரச மேற்றக் கண்ணுடி ஒருவனையோ ஒருத்தியையோ காட்டும். பணமற்றவன் யாவரிடமும் உள்ளன் போடு பழகுவான்; சேவை புரிவான். ஆனுல் அவனே வெள்ளியை நிரம்ப சேர்த்து விடுவானுகில்சுயநலமிக்குத் தன்னையே நினைக்கிருன்; தனக்கே உரிய செயல்களைப் புரிகின்ருன். பிறநலம் பேணியவன் தந்நலமுடையவனுகின்ருன். காரணம் வெள்ளியே. யாரையும் பார்க்கச் செய்த வெறுங் கண்ணுடி வெள்ளியைப் பூசிக் கொண்டால் பார்ப்பவனைத் தவிர வேறு யாரையும் காட்டுவதில்லை. எனவே, வெள்ளியே மனிதனையும் கண்ணுடியையும் கெடுக்கிறது. மிதமிஞ்சிய வெள்ளி வேண்டா.

கண்ணுடிக்கும் கண்ணுட்டிக்கும் டகார மெய்யே பேதம்; இரண்டும் மிக அருமையாகக் காப்பாற்ற வேண்டியவை. இரண்டும் நம்மைப் பேணுபவை; நம் குணத்தைக் காட்டுபவை. உருவம் பிரதி பிம்பிக்கும் படிமக்கலம். இத்தகைய சிறப்பு வாய்ந்த கண்ணுடியில் பிள்ளைப் பெருமான் தன்னுரு காணுது அறுமுகனுரு கண்டார். இது ஆச்சரியமன்ரே; அற்புதமன்ரே? செயற்கையுலகையும் நவநாகரிகத்தையும் பேதபுத்தியையும் கொடுநெறியையும் மறப்போரையும் தொலைக்க வந்த பெருமான் வள்ளலார் எனும் உண்மையை வெளியிடவே இக்கண்ணுடிப் பூசையிற் கடவுள் தோன்றினன். சூரபன்மன் காலத்தில் உலகுய்ய ஒரு முருகன் உதித்தான்; இக்கலியுகத்தில் உலகுய்ய குரு மகான் தோன்றினுர்.

**கண்ணுடியிற் கண்ட கந்தனைப் பார்ப்போம்**

1. "ஒழியாத புவனத்து உயிர்க்கு உயிரதாய் நின்றது
ஒரு தெய்வம் உண்டென எடுத்து
உரையால் உணர்த்துவதை
ஒழிய எவர் எவர்கட்கும் ஊன் கண் உளக்
கண்ணதாம்

2. விழியாகமுன் நின்று தண்ணளி சுரந்தவர்கள்
வேண்டியவரம்
கொடுப்பான் மெய்கண்ட தெய்வம்
இத்தெய்வமல்லால்
புவியில் வேறில்லை என்று உணர்தியால்

3. பொழியாத புயல் தங்கு புவனமும் திசைமுகப்
புத்தேள்
பெரும் புவனமும் பொன்னுலகும்
பண்ணுலகும்
எவ்வுலகு வேண்டினும் பொருளன்று ;
இவற்குமற்ற

4. அழியாத வீடு தரக் கடவன்: இவனுடன்
அம்புலி ஆடவாவே !
அழகு பொலி கந்தனுடன் அம்புலி
ஆடவாவே !''

—குமரகுருபரர்

'' ஊரிலான் குணம் குறி இலான் செயல் இலான்
உரைக்கும்
பேர் இலான் ஒரு முன் இலான்பின்இலான்
பிறிதுஓர்
சாரிலான் வரல் போக்கு இலான் மேல் இலான்
தனக்கு
நேர் இலான் உயிர்க் கடவுளாய் என் உ(ள்)ளே
நின்றான்''

—கச்சியப்ப சிவாசாரியர்

திருத்தணிகை மலையில் உள்ள இறைவன் உயிர்க்குயிரானவன்;உடலுக்குயிரானவன் வாழ்வுக்கு வாழ்வாகி நிற்பவன் ; எனவே அவனைப் '' பெருவாழ்வு'' எனும் காரணப் பெயரிட்டார்கவிராக்ஷசகச்சியப்ப முனிவர். பன்னெறியிலும் பல்லாற்றாலும் ஆய்ந்து அறிந்து உண்டென உணரத்தக்க பெருங் கடவுள் ஊர், பேர், குணம், அடையாளம் அற்றவர் எனினும் அவர் நமக்குள்ளே உயிர்க்குயிராக விளங்குகிறான். அதுவே அவனது இயல்பும் ஆகும். உடல் முழுதும் வியாபித்து மறைந்து நின்று உயிருக்குப் பொருளைக் கண்டும் காட்டியும் உதவுகின்றான் முருகன். கண்ணுக்கு கரணங்கள் காணாமல் நிற்பவன் தணிகாசலபதி.

தணிகை முருகன் உயிர்கள் அறியா வண்ணம் அவற்றுடன் உயிர்க்குயிராய் ஒன்றியிருப்பவன் ; இவனையே சிவன் எனலாம். ''சிவனவன்'' என் சிந்தையில் நின்ற அதனால்'' என்றார் மாணிக்க வாசகர். ''சிவ'' என்பது '‘வசி'' எனும் பதமே. எவ்விடத்திலும் எப்பொருளிலும் எவ்வுயிரிலும் தங்குபவனே இறைவன். '' நமது சக்தி அறுமுகன்; அவனும் யாமும் பேதகம் அன்றால்; நம்போல் பிரிவிலன்; யாண்டும் நின்றான் ; ஏதமில் குழவி போல் வான்; யாவையும் உணர்ந்தான் ; சீரும் போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருள வல்லான்'' எனச் சிவனே உமைக்குக் கூறியதாகக் கந்தபுராணம் கூறுகிறது. '' குகன்'' எனும் பெயர் இதனை வலியுறுத்தும்.

### ஆறு சமயக் கடவுள் ஆறுமுகம்

'' ஆறு சமயக் கடவுள் வேறு வேறு
அன்றி யான் ஒருவனே அங்கங்கு
இருந்து
அன்பர்க்கு முத்தி தரு வித்து என்று
யாவர்க்கும் அறிவித்த வதன மணியே!

பேறு தரும் தெய்வம் யாவைக்கும் யான் பெருந் தெய்வம் என்றே வீறுமுகம் கொண்டு பேரூர் முருகன் விளக்கியதே'' எனச் சிதம்பரசுவாமிகள் கூறியுள்ளதால் அழகுள்ள இடமெல்லாம் ஆலயமாதல் அழகன் ஆங்காங்கு வீற்றிருக்கின்றான். ஆறு சமயமன்றி வேறு சமயங்களிலும் அவனே தெய்வமாக விளங்குகிறான் எனக் காட்டவே சமரசங் கண்டார் வள்ளலார். அவர் கண்ணாடியில் கண்ட சண்முகனும் சமஷ்டித் தெய்வமாகும். அத்தகைய தெய்வம் பேரழகுடையவன் என்றார். முற்றறிவும் அளவிலா ஆநந்தமும் அநாதியே பாசநீக்கமும் அளவிலா ஆற்றலும் போருளும் தம்வயமுடைமையும் உடையவன் எவனோ அவனே ஆறுமுகப் பெருங்கருணைக் கடவுளாவான்.

ஒரு முகம் உலகிற்கு ஒளியை நல்கும்
ஒரு முகம் அன்பர்க்கு வரம் வழங்கும்
ஒரு முகம் யாகத்தைக் காக்கும்
ஒரு முகம் முனிவர்க்கு உபதேசிக்கும்
ஒரு முகம் அசுரரை அழிக்கும் ; களவேள்வி
புரியும்
ஒரு முகம் இல்லறம் இனிது நடக்க நகை
செய்யும்

### பன்னிரு கரங்கள்

இரிஷிகளுக்காக ஒரு கையும், இடுப்பில் சேர்த்த ஒரு கையும், கலிங்கம் கட்டிய தொடையின் மேல் ஒரு கையும், அங்குசம் பிரயோகிக்க ஒரு கையும் வேலும் கேடகமும் தாங்கிய இருகைகளும், மார்பில் விளங்கும் ஒரு கையும், வெண் கடப்ப மாலையோடு ஒரு கையும், ஆகாயத்தில் சுழல ஒரு கையும், மணியை மாறி

மாறி ஒலிக்கும் ஒரு கையும், மழையைப் பெய்விக்க ஒரு கையும், அறமகளிர்க்கு மணமாலை சூட்ட ஒரு கையும், ஆறுமுகங்களுக்கு ஏற்ப தொழிற்படும். ஆறுமுகங்களோடும் பன்னிரண்டு திருக்கரங்களோடும் கண்ணுடியில் கந்தவேளைக் கண்டார் அடிகளார். ஞானவேலாயுதம் எனக் காட்ட ''கூர்வேல்'' என்றும் மயில் அழகு பெற்றிருந்தும் அஞ்ஞானப் பறவை எனக் காட்ட அடைமொழியின்றி ''மயிலும்,' என்றும் ''கொக்கறக்கோ'' (கொக்கு=மாமரத்தை ; அறு=அறுத்த ; கோ=தலைவனே) என்று கூவி, ''பள்ளியெழுச்சி'' பாடித் ''தூங்கும் தேவர்களை'' எழுப்பும் சேவல ஞானப் பறவை எனக் காட்ட ''நற்கோழிக் கொடியும்'' என்றும் பாடியுள்ளார் வள்ளலார். இறைவன் இரைதேடியுழலும் மக்களையும் தேடி வேண்டியன செய்கிறுன் எனக் காட்ட ''தணிகாசலமும் என் கண்ணுற்றதே'' என்றுர். "God is more willing to give than we are to receive" ஏன்பது ஓர் ஆங்கிலப் பொன்மொழி.

### பிள்ளைப்பெருமான்

போற்றும் முறையில் ஒரு மூர்த்தி குழந்தை வேலன். குழந்தை பாவனை கொண்டு பூசிக்கலாம். ''என்றும் இளையாய்'' என்று அழைக்கலாம். என்றும் பிள்ளையாக இருப்பவன் எனக் காட்டும் தமிழ்ச் சொல்லே ''சேய்'' என்பது. குன்றுதோருடல் புரியும் குமரனை என்றும் நீங்காது ஆராதனை செய்யும் அடியார் மனத்திலும் விளையாடுகின்ருன். ''மருவும் அடியார்கள் மனத்தில் விளையாடும் மரகத மயூரப் பெருமாள்காண்'' என்றுர் அருணகிரியார். முருகனைப் பேராதரிக்குமடியார் ஒருவர் உளரேல் ஊர் சுகம் பெறும். அந்த ஊரையும் ஊராரையும் தேடிச் செல்வான் முருகன்.

''மாசில் அடியார்கள் வாழ்கின்ற ஊர் சென்று தேடி
விளையாடியே அங்கனே நின்று
வாழு மயில் வீரனே செந்தில் வாழ்கின்ற பெருமாளே''
—அருணகிரியார்

### முருகனிடம் வள்ளலார் வேண்டும் வரம்

1. மயிலேறிய மாணிக்கமே! மாணித்த ஞான மருந்தே! தணிகைக்கு
வா என ஓர் மொழி நல்குவையே.''
2. ''சமராபுரிக்கு அரசே! பரமகுருவே! எனக் கூவி நிற்பேன்;
எமராசன் வந்திடுங்கால் ஐயனே எனை ஏன்று கொள்ளே.''
3. ''தருவே! தணிகை தயாநிதியே! துன்பச் சாகரமாம்
கருவேர் அறுத்து இக்கடையேனைக் காக்கக் கடன் உனக்கே''

### முடிந்த நோக்கம்

''நவையே தரு வஞ்ச நெஞ்சக மாயவும் நான் உன் அன்பர்
அவையே அணுகவும் ஆநந்த வாரியில் ஆடிடவும்
சுவையே அமுது அன்ன நின் திருநாமம் துதிக்கவும் ஆம்
இவையே என் எண்ணம் தணிகாசலத்துள் இருப்பவனே''
—இராமலிங்க சுவாமிகள்

மார்க்கமெலாம் ஒன்ருகும் மாநிலத்தீர்
வாய்மை இது!



Grams :

Phone : 887

# SUMATHI & CO.,

MANUFACTURERS OF

## PAINTS & COLOURS

**Bangalore Road, Konavattam,**

**VELLORE, N. A. Dt.**

★

TRADE MARK 454

P. No. 82. Res No. P. 46.

*With the best compliments from*

# *Jothi Medical Stores,*

746, BAZAAR STREET,

**FORT, VANIYAMBADI, N. A. DIST.**

★

எமது நல்வாழ்த்துக்கள்

# ஜோதி மெடிகல் ஸ்டோர்ஸ்

746, பஜார் தெருவு,

போர்ட், வாணியம்பாடி, வ. ஆ. ஜில்லா

# ஆனந்த் கேப்

**சைவ உணவு விடுதி,**

**பிராட் பஜார், ஆம்பூர்**

●

சுவை மிகுந்த உணவு வகைகள்

சிற்றுண்டிகள் திவ்யமான குளிர்

பானங்கள் சிறந்த முறையில்

பரிமாறப்படுகிறது.

●

# ANAND CAFE

MEALS & TIFFIN HOTEL

**Broad Bazaar, Ambur. N. A.**

# ஆறும் திருமுறை

தா. பால்வண்ணன்

ஆசிரியர் : சுத்த சன்மார்க்கம்



ஆருந்திருமுறை என்னும் அருள் களஞ்சியத்தின் அளவை அளக்க ஆற்றல் உள்ளேன் அல்லன்-ஆசையுள்ளேன். ஆசையின் விளைவே இந்த முயற்சி. ஆண்டவன் துணை இருக்கும் என்ற திடமான நம்பிக்கையின் எழுச்சியும் இருக்கிறது. இவையே எனது செயலுக்கு உறு துணை செய்வனவாகும்.

ஆருந்திருமுறையை விளக்கவும் அளக்கவும் விரும்பவில்லை. ஆறு திருமுறைகளையும் படிக்க வேண்டும் என்ற ஆசையும்-புத்தகத்தைப் பார்த்தவுடன் மலைப்பும் ஏற்படும் நண்பர்களுக்கு அதனுள் இருப்பது இவை என்பதை உணர்த்திட இந்த முயற்சி பயன்படும் என்ற ஆசையால் எழுதுகின்றேன்,

ஆருந்திருமுறையை இதுவரையில் ஆருவது திருமுறை என்று பொருள் கொண்டிருந்தோம் இன்னும் சிறப்பாகச் சொல்லப் புகுந்தால் 1. 2, 3, 4, 5 6 வது என்பது தான். ஆனுல் அப்படி பொருள் கொள்வதை விட இன்னும் சற்று ஆழ்ந்து பார்த்தால் நல்ல பொருள் விளங்கும் எப்படி எனின்;

ஆறு + ஆம் = திருமுறை எனப் பிரித்தல் வேண்டும். ஆறு = வழி; ஆம் = ஆகின்ற; திரு = அழகிய; முறை = உறவு எனக் கொள்வது பொருந்தும்.

உலக உயிர்களுக்கு வாழ்வின், இன்பத்தின், பேரின்பத்தின், நித்திய நிலையான இன்பத்தின் வழியாக அமைந்த அழகிய உறவு. என்பதாகும். முறை என்ருல் உறவு என்று பொருள்படும், அருட்பாவுக்கும், அதன் அருள் தன்மைக்கும், அது காட்டுகின்ற அருள் வாழ்வுக்கும், அந்த அருள் வாழ்வை அளிக்கின்ற இறைவனுக்கும் உள்ள உறவை மட்டுமல்லாமல், ஆன்மாவுக்கும் மேற்குறித்தவைகளுக்கும் உள்ள உறவையும் காட்டும் ஞானக் கண்ணுடி ஆரும் திருமுறை.

மேலும் 1; 2, 3, 4, 5, ஆகிய திருமுறைகளில் பேசப்பட்ட பெரிய இன்பத்தின் வழியை காட்டும் அருட்களஞ்சியம் ஆரும் திருமுறை எனவேதான் இந்தத் திருமுறை ஆருவதாக அமைந்துள்ளது.

ஆரும் திரு முறையில்தான் சுத்தசன் மார்க்கத்தின் சாதனைகளைப்பற்றி விளக்கப்பட்டிருக்கிறது. சாதகர்கள் ஒழுக வேண்டிய ஒழுக்கங்களைப் பற்றியும் அதில் விளக்கப்பட்டிருக்கிறது. எனவே சாதகர்களுக்கும் சாத்தியர்களுக்கும் ஏற்றது ஆரும்திருமுறை.

ஐந்து திருமுறைகளும் கடவுளர்களைப் பற்றியே அறிவிக்கின்றன. ஆரும் திருமுறை கடவுளர்களின் தனித் தலைவரை—அருட்பெருஞ் சோதி ஆண்டவரைப்பற்றி அறிவிக்கின்றது.

ஆருந் திருமுறையில் மொத்தம் 174 தலைப்புகள் மட்டும் உள்ளன. அதில் வசன பாகத்தை கழித்து விட்டுப் பார்த்தால் 159 தலைப்புகள் மட்டும் உள்ளன. இது காரணப்பட்டு கந்தசாமிபிள்ளை அவர்களால் பார்வையிடப்பட்டு 1924 ஆம் ஆண்டு தீ. நா. முத்தையா செட்டியார் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட அருட்பாவின் படி எடுக்கப்பட்ட கணக்காகும்.

$159 = 1 + 5 + 9 = 15 = 6$ ஆகிறது. தலைப்புகளின் எண்ணிக்கையை கூட்டி அந்த கூட்டு எண்ணைக் கூட்டிப் பார்த்தால் 6 வருகிறது. இதுவும் ஓர் அற்புதம்.

இப்படி ஆறும், ஆரும் திருமுறையும் என்ற தலைப்பிலேயே ஒரு பெரிய நூல் வெளியிடலாம். அந்த அளவுக்கு அருள் கருத்துக்கள் இந்த அற்புதமான 6 இல் அடங்கி இருக்கின்றன.

அந்தங்கள் 6 ஆதாரங்கள் 6 என்று பேசிக் கொண்டே போய் அவை அனைத்தும் ஆரும் திருமுறையில் அடங்கிவிடுகிறது என்று கூறிவிடலாம். இதை இத்துடன் நிறுத்திக் கொண்டு ஆரும் திருமுறைக்குள் நுழைவோம்.

## அருட்பெருஞ் சோதி அகவல்

ஆருந் திருமுறையைத் திறந்தவுடன் அதிலே காட்சியாகும் முதல் தலைப்பு அருட்பெருஞ் ஜோதி அகவல்.

ஆருந் திருமுறை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் அருட்பெருஞ் ஜோதி அகவல். ஆரும் திருமுறை உடல் என்ருல் அதன்

உயிர் அகவல். அகவலைப் புரிந்து கொண்டால், ஆண்டவனை புரிந்து கொள்ளலாம், அண்டங்களை புரிந்து கொள்ளலாம். அணுக்களைப்பற்றி அறிந்து கொள்ளலாம். அணுக்களின் அளவுகளைப் பற்றியும், அதன் ஆற்றல்களையும், ஐம்பூதங்களைப் பற்றியும் அதன் கலப்புகளைப் பற்றியும், இறைவன் எப்படி எப்படி உலக உயிர்களிலும், அண்ட பிண்டங்களையும் அடக்கி ஆளுகின்றான், உள் இயைந்து இயக்குகின்றான். என்னும் மிகப்பெரிய உண்மைகளை அறிந்து அழியாத வாழ்வு பெறலாம்.

அத்துணைச் சிறப்பும், உயர்வும், நிறைந்தது.

இந்த அகவலில் இறைவன் எப்படி எப்படி வியாபித்துள்ளான்-எப்படி எப்படி உயிர்க்கு உபகாரியாக இருக்கிறான் என்றும் பாடி புகழ்ந்து விட்டு, அந்தப் பேரிறைவன் தனக்கு எப்படி எப்படி அருளை வழங்கினான் என்று கூறிவிட்டு, தன்னை மகனாக கருதிய தந்தையன்பு, தாயன்பு, ஆகியவற்றுடன் தலைவனாய் துணையாய் இருந்த தன்மை, ஒளியாய், தீபமாய், இருந்து இருளோட்டிய விளக்கம், காத்தருள் கர்த்தனாய், அடக்கியாளும் ஆசானாய், இருந்து மாயத்திரைகளை விளக்கிய மாண்பு, மெய்ப் பொருளாய் அருள் சுரந்தமை, பரமாய். அபரமாய், சிவமாய், சிவ பதியாய், அருட்குருவாய, உறவாய், இயற்கை இன்பமாய் அருளமுதம் அளித்த மணியாய், மந்திரமாய், மருந்தாய், மாற்றறியாப் பொன்னாய், உலவாநிதியாய், சோதிமலையாய் இயற்கைப் பொருண்மையாய், அமுத சித்தியாய், நித்திய விளக்காய், நிறைமதியாய். கருணை மழையாய், அருட்கடலாய் தனியன்பு காட்டிய ஆண்டவனாய் இருந்த தனிப்பெருங்கருணை வடிவினனே! அடியேன் வேண்டுகோள் கேட்டருள்க; என்று வேண்டுகிறார்:-

அந்த வேண்டுகோள் யாதெனில்: "ஆண்டவனே உலகத்து உயிர்கள் துயர் அடையும்போது நான் அவற்றை நீக்கி அவர்களுக்கு பேரின்பம் வழங்க வேண்டும் ஆதலின் என்னை சுத்த சமார்க்க நிலையில் இருக்க செய்க" என்கின்றார். அந்த வேண்டுகோளை கேட்ட இறைவன்

"அன்ப! உன் மனநினைப்பின் படிக்கே
பெறுக" என்பதை

"உலகினி லுயிர்களுக் குறுமிடை யூறலாம்
விலகநீ யடைந்து விலக்குக மகிழ்க
சுத்தசன் மார்க்கச் சுகநிலை பெறுக
உத்தமனாகுக யோங்குக" என்னும்

பாவால் விளிக்குகிறார்.

இறைவன் இந்த அருள் விளக்கத்தை அளித்த பெரு மகிழ்ச்சியால் உந்தப்பட்ட வள்ளல் பெருமானார்

"போற்றிநின் பேருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலினோங்கிய அருட்பெருஞ் ஜோதி"

என்று இறைவனை போற்றினார்—புகழ்ந்தார்—அருள் பெற்றார் பெற்ற பேரருளை கொள்ளை கொடுத்தார். அள்ளிப்போக ஆள் இல்லாது போயினர்.

உலக உயிர்களுக்கு வரும் துன்பத்தை தீர்ப்பதொன்றே குறிக்கோளாகக் கொண்ட பெருந்தகை நமக்கு கிடைத்ததுபோல் உலகில் வேறு எவருக்குமே கிடைத்ததில்லை. அந்தப் பெரிய மாணிக்கத்தைப் பெற்றநாம் ஏழைகளாக இருப்பது சரியா? கண்ணிருக்க கையிலே விளக்கிருக்க கிணற்றிலே வீழ்வது பொருந்துமா? நாம் யோசிக்க வேண்டாமா?

## பரசிவ வணக்கம்

ஜோதியை. பெரும் ஜோதியாக—அருட்பெரும் ஜோதியாக காட்டிய வள்ளல் பெருமான் இரண்டாவது தலைப்பில் பரசிவமாக காட்டுகிறார். ஒரே பாடல்தான் பரசிவ வணக்கம் என்னும் தலைப்பு. இருந்தாலும் அது உலகிற்கு ஒரு சூரியன் போன்றதாகும். அதில் :

"திரு, சிவம், யோகம், சித்தி, ஞானம், அனுபவம், திருக்கூத்து, இவ்வளவும் விளங்குகின்றனவே அதன் ரகசியம் தெரியுமா? என்று கேட்டு இவ்வளவும் விளங்குவான் வேண்டி தான் திருசிற்றம் பலத்தே ஒளிசிறந்த திருவிளக்காய் விளங்கிக் கொண்டிருக்கிறான். அந்த ஒளி மயமான இறைவன் மேற் சொன்னவை யெல்லாம் மட்டும் விளங்க விளக்காகி ஒளிரவில்லை. இன்னும், உரு, உயிர், உணர்ச்சி, உலகம், இவை யெலாம் விளங்கி வாழ அருளை உதவுகின்ற சிவமாக சுந்தரியையும் ஒருபால் வைத்து விளக்காகி ஒளிர்ந்தும் மணி பொதுவானது விளங்கவும் சிவக் கொழுந்தாகவும் பிரகாசிக்கின்றான் என்று கூறி முடிக்கிறார்.

## பதி விளக்கம்

இதில் இறைவன் ஒருவன் என்னும் பேருண்மையை பல ஆதாரங்களுடன் வற்புறுத்தியும், இறைவன் ஒருவன் உண்டு என்ற அசைக்க முடியாத உறுதியையும் விளக்கிப் பாடி இருக்கிறார். 13 பாடல்கள்.

எல்லா சத்தர்களுக்கும் ஒளி வழங்கும் தெய்வம் ஒன்றுதான். வெளிகளெல்லாம் தன்னருள் வெளியில் ஐக்கியப்படுத்திடும் தெய்வம் ஒன்று தான்.

எல்லாத் தத்துவங்களையும் அவற்றின் விளக்கங்களையும் தன் இயற்கை விளக்கத்தில் அடக்கிடும் இறைவன் ஒருவனே, இந்திரிய, இன்பம், மற்றுமுள்ள உலக இன்பங்கள் அத்தனையும், ஞான இன்பம் அத்தனையும் தனது தனி இன்பமாய் கொண்ட இறைவன் ஒருவனே!

எல்லா வல்லபங்களும், உடையதாய், அளவையெலாம் கடந்ததுமாய், எல்லாம்தானாய், செல்லாத நிலைகள் எல்லாம் செல்லுவதாய் விளங்கும் இறைவன் ஒருவனே.

அறிவாய், அண்டமாய், பூதங்களாய், கலைகளாய், அந்தங்களாய், தத்துவங்களாய், மெய்யே மெய்யாய், எல்லாம் ஆன ஒன்றாய் ஓங்கும் கடவுள் ஒருவரே. என்று கூறிவிட்டார். அதுமட்டுமல்ல மேல் குறித்த தன்மைகள், ஆற்றல், வியாபகம் எல்லாம் இணைந்த ஏக உருவினன் இறைவன். இந்த பெருஞ்ஜோதியைவிட சிறந்த தெய்வம் இல்லை. இந்த தெய்வத்தை விரும்பாத மதம், மார்க்கம், சமயம் கிடையா ஆகவே பதி என்றால் இவன் தான் என்பதை பதி விளக்கத்தில் பதித்துள்ளார்.

## அஷ்டகம்

எட்டு பாடல்கள் கொண்ட இது அஷ்டதிக்குகளைப் போன்றதாகும் அருள் உலகிற்கு. கருணை மண்டபத்தின் எட்டுத் தூண்களாகும், அதுமட்டுமல்ல மாண்புள்ள இறை குணங்கள் எட்டு போன்றவை.

பெருங்களிப்பாய் விளங்கும் அரசே!
அருள் விளக்கமாய் விளங்கும் அரசே!

உண்மை தழைத்து ஓங்கும் அரசே!
ஞானிகள் வழுத்தும் அரசே!
அறிஞர்கள் ஏத்தும் அரசே!
அருள்புரியும் அரசே! என்று ஆண்டவனை

விளித்து அவனைபற்றி அருளாளர்கள் எப்படி நினைக்கின்றார்கள் என்பதை விளக்குகின்றார்.

பதிவிளக்கம் என்று மீண்டும் பாடி இருக்கிறார் அதன் இயலை எழுதுவது அவ்வளவு சுலபமன்று. எனவே மாதிரிக்கு ஒரு பாடலை மட்டும் படித்தால் விளங்கும்.

நிதிவளர் நிலமே நிலம்வளர் நிதியே நீதிநிலம்
வளர்தரு நிறைவே
மதிவளர் நலமே நலம் வளர்மதியே மதிநலம்
வளர்திரு பரமே
கதிவளர் நிலையே நிலைவளர் கதியே கதிநிலை
வளர்தரு பொருளே
பதிவளர் பதமே பதம்வளர் பதியே பதிபதம்
வளர்சிவ பதியே

இதைபோல் அருள்சொட்டும் அமுதத்துளிகளால் ஆன 10 பாடல்கள் உண்டு.

## திருவடி நிலை :

இந்தத் தலைப்பில் வள்ளல் பெருமான் அருளிய பாடல்களை மிகவும் அச்சத்தோடும் அடக்கத்தோடும் அணுகவேண்டும். ஏன் எனில் இறைவனின் திருவடி நிலையை கண்டதும் அதன் புறத்தே இருக்கும் அண்டங்களின் நிலை. சத்தி சத்தர்களின் நிலை, ஐந்தொழில் செய் நாதர்களின் நிலை இவற்றை அனுபவ வாயிலாக அறிந்து பாடுகிறார்.

முதல் மூன்று பாடல்கள் பலருடைய மனத்தை புண்படுத்துவதாக கூறியதை நான் கேட்டிருக்கிறேன். பண்படாத அந்த நெஞ்சங்களை நான் அனுதாபத்தோடு நோக்குகின்றேன். மடத்தலைவர் ஒருவர் தலைமையில் யான் சொற்பொழிவாற்றியபோது அவர் "திருவருட்பாவில் திருவடிநிலை என்னும் தலைப்பில் உள்ள மூன்று பாடல்களை நீக்கி விடவேண்டும். அது சிவநேசச் செல்வர்களின் நெஞ்சைத் துன்புறுத்துகின்றன" என்றார். அதன ரகசியம் என்ன? என்று நீங்கள் அறிய வேண்டுமல்லவா? இதோ :-

பிரமன், திருமால், உருத்திரன், மகேசன். சதாசிவம் விந்து, பிரமம், பராசக்தி, பரசிவம் ஆகிய இவர்கள் பொதுவில் நடம்புரியும் எம் பெருமான், முழுமுதற் கடவுள் அருட்பெருஞ் ஜோதி இறைவன் ஆடுகின்றபோது அவருடைய இடதுகால் சுடை விரல் நகத்தின் கடைசியில் உள்ளதுகள் என்று நான் உணர்ந்து அதன் மேல் விறு கொண்டு ஆடுகின்ற சேவடிக்கண்டு ஆனந்தப் பரவச மடைந்தேன். என்கின்றார்.

அப்பாடல்:-

தடையுருப் பிரமன் விணடுருத் திரன்மா
யேச்சுரன் சாதாசிவன் விந்து
நடையுறுப் பிரம முயர்பாரா சக்தி நவில்பர
சிவமெனு மிவர்கள்
இடையுருத் திருச்சிற் றம்பலத்தாடு மிடது
காற் கடைவிரனகத்தின்
கடையுறு துகளென் றறிந்தன னதன்மேற்
கண்டனன் திருவடி நிலையே

என்பதாகும்.

இதில் ஐந்தொழில் செய்யும் கடவுளர்களை பேராண்டவன், முழுமுதல் தெய்வத்தின் இடது கால்துகள் என்று கூறுகின்றபோது இறைவனின், பெருமையை உணரும் உணர்வுதான் அருளுணர்வு. இந்த உணர்வு தான் இறைவனின் முழுமையை உணர்த்தும் உணர்வு; ஞான உணர்வு. இதனை தவராகப் புரிந்து கொண்ட சமய, மதத்தலைவர்கள் முழுமுதல் இறைவனை அறிய மறந்தோ விரும்பாமலோ சிறு தெய்வநெறி சென்று குறைந்த வாழ்வு வாழ்கின்றனர். எனவே அவர்கள் இலே குறிக்கப்படும் திருவடிநிலை ஏகஜோதியாய் விளங்கும் ஆண்டவனுடையது என்று உணர்ந்தால் அருளறிவு பெறுவர் என்பது திண்ணம் இந்த அருமையை அறிந்து சன்மார்க்க பெரு நிலைக்கு அவர்கள் சொல்ல வேண்டும் என்று விரும்புகின்றேன்.

## பரசிவ நிலை

அருட் ஜோதி தெய்வம் எனையாண்டு கொண்ட தெய்வம் என்னும் பாடல் உலகப் பிரசித்தி பெற்றதாகும். இதில் மேலான இறைவனின் நிலையை மிகநன்றாக விளக்குகிறார்.

" கல்லாதவர்கள் ஆனாலும் களிப்பை
அருளும் தெய்வம் "
" பொய்யாத தெய்வம் இடர் செய்யாத
தெய்வம்
" எச்சமய தெய்வமும்தான் எனநிறைந்த
தெய்வம் "

"சன்மார்க்க சபையில் எனைத் தனிக்க
வைத்த தெய்வம்"

"தீண்டாத வெளியில் வளர்தீண்டாத
தெய்வம்"

"எவ்வகைதாந் தவஞ்செயினு மெய்தரிதாந்
தெய்வம்

என கெளிதிற் கிடைத்தென் மனமிடங்
கொண்ட தெய்வம்

"எல்லா நிலைகளுந்தன் னருள் வெளியில்
நிலைக்க வைத்த தெய்வம்"

என்று அறிய பெரிய விஷயங்களை அழகு தமிழில் எளிதாக அளித்து ஆண்டவனை புரியவைக்கின்ருர்.

## ஆற்ருமை

இந்தத் தலைப்பில் மனித இனம் செய்கின்ற எல்லா குற்றங்களையும் சுட்டிக் காட்டுகின்ருர். அந்த மக்கள் இனத் தலைவனுக தானே இருந்து ஏழை மக்களுக்காக வாதாடுகிருர், அழுகிருர், குறைபட்டுக் கொள்கிருர். அத்துடன் இறைவா! உன் அருள் பெற வழியென்ன? என்று அழுது புலம்பி முறையிடுகிருர்.

தன்னை எழுவினும் வலிய மனம் உள்ளவன் என்கின்ருர். மலஞ்சார் ஈயினும் நாயினும் இழிந்தவன் என்று கூறிக் கொள்கிருர். இப்படியே பத்து பாடல்களில் பஞ்சமா பாதகங்கள் செய்பவன் என தன்னையே பழித்துக் கூறிக் கொண்டே ஆண்டவனே! அம்பலத்தாடல் வல்லவனே உன் குறிப்பை எப்படி அறிந்து உய்யப் போகிறேன்" என்று மனம் வாடி வெதும்புகின்ருர்,

அடுத்த தலைப்பும் ஆற்ருமை தான் அதுவும் பத்து பாடல்கள் தான். அதில் மேல் குறிப்பிட்டதைவிட அதிகமாக தன்னையும், தான் செய்யும் குற்றங்களையும் கூறிகூறி வெதும்புகிருர்.

அதற்கு அடுத்த தலைப்பும் ஆற்ருமை தான் அதிலும் அப்படியே அதனை சுட்டிக் காட்ட ஒரு பாடல் போதும்.

"கொடிய வெம்புலிக் குணத்தினே னுதவாக்
கூவ நேர்ந்துள்ளேன் பாவமே பயின்றேன்

கடிய நெஞ்சினேன் குங்குமந் சுமந்த
கழுதை யேனவப் பொழுதையே கழிப்பேன்

விடியுமுன்னரே யெழுந்திடா துறங்கும்
வேட னேன்முழ மூடரிர் பெரியேன்

அடிய வைதற் கென்செயக் கடவேன்
அப்பனேயெனை யாண்டு கொண்டருளே

என்று ஆண்டவனே என்னை ஆண்டு கொண்டு அருள்வாய் என வேண்டுகோள் விடுகிருர்.

## முறையீடு

"பலகுறைகள் உடைய யான் எங்கே புகுவேன், யாரார்க்கு உரைப்பேன், என்ன செய்வேன் ஐயனே ஏதும் அறிந்திலனே." என்று மிக மிக வேதனையடைந்து பாடுகிருர்.

அகங்காரக் கொடுங் கிழங்கை அகழ்ந்தெறிய அறியேன் கற்குமுறை கற்றறியேன், உலக நடையிடை கிடந்தே உழைப்பாரில் கடையேன், நான் யார் என் கோன் யார் என்றறியேன், கொலை புலைகள் விடுத்தறியேன், கோபமறுத்தறியேன். கொடுங் காமக்கடல் அடக்குங் குறிப்பறியேன், சாதிமதஞ் சமயமெனுஞ் சங்கடம் விட்டறியேன், சாத்திரச் சேருடுகின்ற சஞ்சலம் விட்டறியேன் மரணபயம் தவிர்த்திடுஞ் சன்மார்க்க மதை அறியேன், எனவே உரை, உணர்வு கடந்த திருமணி மன்றந்தனிலே பொருமை நடம் புரிகின்ருர் பெருமையறிவேனு அறிய முடியவில்லையே! ஐயகோ! இந்தப் பொய்யுலகினிடை எங்கனம் நான் புகுவேன், யார்க்குறைப்பேன் என்ன செய்வேன் ஏதுமறிந்திலனே. என்று பத்துப் பாடல்களில் பாடிப்பாடி உறுகி நெகிழ்ந்திருக்கிருர். ஏன்? நாமெல்லாம் அப்படிப் பாடுதல் வேண்டும். உருகி உருகி-அழுது அழுது-நாமும் பாடினுல் பாவம் குறையும் பரமன் அருளும் உண்டாகும்.

தன்னிடம் உள்ள குறைகளைக் கண்டார்-அதனை உணர்ந்து குறை நீக்கவேண்டும் என்று முறையிட்டார் இப்போது குறைபட்டவர்களுக்கு ஆண்டவன் வாழ்வளித்த வரலாற்றை சிந்தித்துப் பார்க்கின்ருர். கொடியவர்கள் தீது புரிந்தவர்கள், என்று கூறிய பலருக்கும் அருள் சுரந்தான் இறைவன் என்ற உண்மையினை உணர்ந்து "ஆண்டவரே நீங்கள் பாவிகளை யெல்லாம் வாழ வைத்த வரலாறு இருக்கிறதே நான் படித்தேனே எனக்கும் அதே போல் கருணை அளித்து அருள் சுரக்க வேண்டுமாய் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன் என்று தனக்குத் தெரிந்தவற்றை கூறுகிருர். பாடல்கள் இருபது. அவ்வளவும் எப்படி எழுத இயலும், சில குறிப்புகள் மட்டும் காண்க,

"அடியார் வருத்தம் கண்டு தரியார்"

"பேய்க்கு' கருணை பெரிதளிப்பான்"

"தீது நினைக்கும் பாவிகட்கும் செய்தாய்
கருணை"

"கல்லும் கனிய திருநோக்கம் புரியும்
கருணைகடல்"

என்று நான் அறிவேனே, ஐயனே! பாம்புக்கும் பரிந்து அருள்சுரந்த அண்ணலே! விஷத்தை விரும்பி உண்ட உத்தமனே! நான் பாம்பை விட' விடத்தைவிட கொடியவனு?

அடியவர் வருத்தம் தமை கண்டு தரியார் என்று சொன்னது என்னை ஒருவனை மட்டும் நீக்கியதா? அடியார் தமக்கு அருளமுதம் அளித்து! ஐயோ! இங்கு சிறியேன் ஒருவனுக்கு இடர்தான் அளிப்பது நியாயமா? என் அளவில் சூது நினைத்தால் இதையான் யாரிடம் புகல்வேன்? கல்லும் கனிய திருநோக்கும் புரியும் நீர் நான் எவ்வளவு சொல்லியும் இரங்காத நிலையை எப்படி ஐயனே பெற்றீர். இப்படிபட்ட நான் உயிரை விட்டுவிடுவேன். ஆனுல் மீண்டும் பிறக்கும்போது எந்த உடம்பு வருமோ என்று அஞ்சுகின்றேன். எந்தவகை நான் செய்தால் உன் உள்ளம்

உருகும். தயவு செய்து எனக்கு அறிவியுங்கள். இறைவா எல்லாம் உனது செயல் என்ருல் நான் செய்யும் எல்லாமும் நினது திருச்செயலன்ரே. அப்படி இருக்க என்னை எப்படி புறத்தே தள்ள முடியும். இது நீதியா! புறத்தில் மட்டும் நீர் இல்லையா? நல்லவர்கள் எங்கும் நீர்நிறைந்து இருப்பதாகத்தானே சொல்கின்றனர்? இது உண்மையாயின் என்னை தள்ளினுலும் சேர்த்தாலும் எல்லாம் உன்னிடத்தில் அல்லாது எங்கே போவேன் எனவே இறைவா!

கூடுங் கருணை திருக்குறிப்பை யிற்றைப்
பொழுதே குறிப்பித்து
வாடுஞ் சிறியேன் வாட்டமெலாந் தீர்த்து
வாழ்வித்திடல் வேண்டும்
பாடும் புகழோய் நினையல்லால் துணைவே
றில்லைப் பரவெளியில்
ஆடுஞ் செல்வத் திருவடிமே லாணை முக்கா
லாணையதே

என்று தன்னை வாழவைக்க வேண்டும் என்று உறுதியாக–உண்மையாக இறைவன் திருவடியை உயிர் பிடியாக பிடித்துக் கொண்டார். வாழ்ந்தார்.

## ஆத்தும விசாரத்தழுங்கல்

இதில் தன் சிறுமையை மிக மிக தாழ்த்திக் கூறுகின்ருர். அத்துடன் இறைவா இப்படிப் பட்ட கேவலமான என்னை வேற்று மனிதன் என்று நினையாமல் காத்தருள்க என்று வேண்டுகின்ருர் அவர் வேண்டுகோளை எடுத்துக்காட்ட ஒரே பாடல் போதும்:-

பூப்பினும் பலகால் மடந்தையர் தமைப்போய்
புணர்ந்தவெம் புலையனேன் விடஞ்சார்
பாப்பினும் கொடிய குரவையே விழைந்த
பள்ளனேன் கள்ளனே னெருக்கம்
ஆப்பினும் வலியே னறத்தொழில் புரியேன்
அன்பிலு லடுத்தவர் சுரங்கள்
கூப்பினும் கூப்பாக் கொடுங்கையே எனினுங்
கோபியேல் காத்தருளெனையே

இது போன்று பத்துப் பாடல்களைப் பாடிப் படி தீமை செய்பவர்களை உருக வைக்கின்ருர்.

## அவா வறுத்தல்

குற்றங் குறைகளை சாடிய மனம் உலக நடையில் எப்படி அலைகிறது. மனிதன் ஏன் கால முதல் உழல்கின்ருன்? இறைவனை எண்ணவும், நல்ல காரியங்களை நண்ணவும் ஏன் விரும்புவதில்லை? என்று யோசித்துப் பார்த்து இப்புவி மக்கள் சோறு தேடுவதும், அந்தச் சோற்றை சுவையோடு உண்பதும், அதனை எத்தனை எத்தனை வகைப்படுத்தி உண்ண முடியுமோ அப்படி எல்லாம் செய்வதுதான் நாகரிகம் அது மட்டுமல்ல மனிதனின் கடமை என்று நினைக்கின்ருன். அதனை சுட்டிக் காட்டி உலக மக்களை உய்விக்க பதிமூன்று பாடல்கள் பாடுகின்ருர்:-

உடம்பொரு வயிருய்ச் சருக்கரை கலந்த
வுண்டியே யுண்டனன் பலகால்
கடம்பெறு புளிச்சோ றுண்டுளே களித்தேன்
சட்டிநற் றயிரிலே கலந்த
தடம்பெருஞ் சோற்றிற் றருக்கினே னெலுமிச்
சம்பழச் சோற்றிலே தடித்தேன்
திடம்பெறு மற்றைச் சித்திரச் சோற்றிற்
செருக்கினே னென்செய்வே னெந்தாய்

என்று சோறே சுகம் என்று எண்ணி அதைப் பெறுவதே கடமை என்றும் கருதும் கருத்தினைச் சாடினுர். பின்னர் சோறு தேடி அலைந்தாலும் பாதகமில்லை. அப்படி உண்டியை விழைபவர்கள் ஆண்டவனை அண்டியிருந்தால் பாதகமில்லை அத்துடன் ஆண்டவன் தொண்டு செய்யாதவர்களின் கைச் சோற்றை உண்ணுமல் இருந்தால் அப்போதாவது இறைவன் நம்மீது இரங்கிக் காப்பாற்றுவான் என்பதை மிகவும் வற்புறுத்தி மக்கள் உணரும் வகையில் கூறுகிருர். இதோ அந்தப் பாடல்:

உண்டியே விழைந்தே னெனினுமென் றன்னை
யுடையவா வாடியனே னுனையே
அண்டியே யிருந்தே னிருக்கின்றே னிருப்பே
னப்பநின் னுணைநின் றனக்கே
தொண்டுரு தவர்கைச் சோற்றினை விரும்பேன்
தூயனே துணைநினை யல்லாற்
கண்டிலே னென்னைக் காப்பதுன் கடன்காண்
கைவிடேல் கைவிடே லெந்தாய்

குற்றங்களை கூறுகிருர் அக்குற்றங்கள் தீர வழியும் கூறுகின்ருர். இறைவனை சிக்கெனப் பிடித்திட வழியும் கூறி மக்களை வாழவைக்க விரும்புகிருர்.

## திருவருட் பெருமை:

ஆன்மாக்கள் சில சமயம் உணர்ச்சி வயப்பட்டு இறைவனை சினந்துரைப்பதுண்டு அப்படி கோபத்தால் பேசிய சொற்கள் இறைவன் மனத்தைப் புண்படுத்தி நம்மீது கோபம் கொள்ளச்செய்யுமோ என்று எண்ணுவர் சிலர். அப்படி அறிவற்ற ஆன்மாக்கள் பேசிவிட்டாலும் ஆண்டவன் கோபியான் என்பதை பத்துப் பாடல்களில் பாடிக் காட்டுகிருர். அப்படி பாடி மன முருகி வளம் பெற உதவுகிருர் திருவருட் பிரகாச வள்ளலார்.

## பிரிவாற்ருமை:

குற்றம் அறிந்து, கடமை தெரிந்து, இறைவனை அறிந்து அவனை அறிய ஆவல் கொள்ளும் நெஞ்சைத தந்த வள்ளல் பெருமான். உலகீர் இது மட்டுமல்ல உங்கள் கடமை. அழையுங்கள்! உங்கள் உங்களுக்கு அருள் சுரக்கக் கூறுங்கள்! உங்களிடம் அடைக்கலமாக இருக்கவும் அருள் புரியவும் வேண்டுங்கள்! என்கின்ருர்? ‘‘வள்ளல் பெருமானே எப்படி அழைப்பது’’ என்பார்க்குப் பாடிக் காட்டுகிருர். இருபது பாடலில் ஒன்றை காணீர்:-

வந்தருள் புரிக விரைந்திது தருண மாமணி மன்றிலே ஞான
சுந்தர வடிவச் சோதியாய் விளங்குஞ் சுத்த சன் மார்க்க சற்குருவே
தந்தருள் புரிக வரமெலாம் வல்ல தனியருட் ஜோதியை யெனது
சிந்தையிற் புணர்ப்பித் தென்னெடுங்கலந்தே
செய்துவித் தருள்க செய்வகையே

## சிற்சபை விளக்கம்

"குற்றம் அறிந்தோம், கடமை உணர்ந்தோம், இறைவனை எம்முள் இருத்திக் கொண்டோம்." அடுத்து என்ன செய்வது என்பார்க்கு:

உண்மை அறவழியில் நின்று "சோறு, துகில், சுகங்கள், மற்றவை எது வேண்டினும் சரி,

துயர் நீங்கவும், மனத் துடிப் படங்கவும், மரணபயம் நீங்கவும், பொய் உலக மாயம் நீங்கவும், இறைவா நின் கருணையை நயந்து பெறவும் சத்திய ஞான சபையில் வந்து நின்று "வள்ளலே எனது வேண்டுகோள் கேளீர் வந்து நிற்கின்றேன் உந்தன் மனக் குறிப்பு அறியேன் அறிவித் தருள்க!" என்று அழுமின், தொழுமின், அருள் பெறுமின் என்று கூறுமல் கூறுகின்ருர் அருட் பிரகாசபெருமான்.

## திருவடி முறையீடு

மேற் குறித்த வேண்டுகோள் விடுத்த பிறகு அன்பனே நீ இறைவனிடம் நெருங்கி உரிமையோடு தேவைகளை கேட்கும் திறம் பெருகின்ருய் கேள்! தாராளமாகக் கேள்—உரிமையோடு கேள்! எப்படி தெரியுமா இதோ பாடுகின்றேன்:-

போதுதான் விரைந்து போகின்ற தருணீ புரிந்திட தாழ்த்தியேலையோ
யாதுதான் புரிவேன் யாரிடம் புகுவேன் யார்க்கெடுத் தென் குறை யிசைப்பேன்
தீதுதான் புரிந்தே னெனினுநீ யதனைத் திருவுளத் தடைத்திடுவாயேல்
ஈதுதான் தந்தை மரபினுக் கழகோ என் னுயிர்த் தந்தை நீ யலையோ

என்று பாடு, பாடிக் கொண்டே ஆடு இறைவன் இரங்கி அருள்வான். அப்போது:-

சுதந்தர முனக்கே கொடுத்தன முனது தூய நல் லுடம்பினிற் புகுந்தோம்
இதந்தரு முளத்தி விருந்தனம் உனையே இன்புறக் கலந்தன மழியாப்
பதந்தனில் வாழ்க அருட்பெருஞ் ஜோதிப் பரிசு பெற்றிடுக பொற்சபையுஞ்
சிதந்தரு சபையும் போற்றுக வென்ருய் தெய்வமே வாழ்கநின் சீரே.

என்று இறைவனை பாடி மகிழ்ந்து இன்புறுக! என்கின்ருர்.

## தற்சுதந்திர மின்மை

மனிதன் தன்னிடமுள்ள குறையை உணர்ந்தான், குறையை ஆண்டவனிடம் முறையிட்டான். குறையைப் போக்கி யருள விண்ணப்பித்தான் தனது உரிமை கடமை எவை என்று உணர்ந்தான் இறைவன் இரங்கி அவன் உள் கலந்தான். அப்போது மனிதன்—இறைவன் பதி—பசு என்ற இரண்டின் தன்மையும் ஒன்று படுகிறது. பின் தற்சுதந்திர மழிகிறது என்பதை உணர்த்துகிருர். எல்லாம் வல்ல இறைவனே நான்செய்த பிழை நோக்கி துன்பமே செய்தாலும், இன்பமே அளித்தாலும் அது உள் திரு உள்ளத்தைப் பொறுத்தே அன்றி அந்தோ இச் சிற்யேனுல் ஆவதுதான்யாது?

## வாதனைக் கழிவு

என் செயலால் ஆவதொன்றில்லை எல்லாம் நின் செயலே என்று நான் இருந்து வருகிறேன் இறைவா? நீரும் வாளா இருப்பது சரியேயோ! இனியும் சிறிதும் தறியேன். அழுது அரற்று கண்ணீர் பெருக அழைக்கின்றேன்—அயர்கின்றேன் பழுது தவிர்க்கும் திருச் செவிக்குப் பட்டதில்லையா? ஏன் தடைகளை களையாமை அழகோ நாயேன் கலங்குதல் சம்மதமோ எனக்கு அருள் வழங்குவாய் என்று நம்பி இருக்கின்றேன் நீர் அருள் வழங்காவிடில் உன் அடியர் சிரிப்பர் நான் திகைப்பேன். நீ அருள் தந்தால் உன்னை "ஏன் அவனுக்கு அருள் தந்தாய்" என்று எவர் கேட்பார்? இறைவா! என் குறை தவிர்பாய் என்ற குறிப்புகாட்டியபோது எனது நெஞ்சு எத்துணை இன்பத்தில் ஆழ்ந்தது. அன்று முதல் உன்னை அன்றி வேறு அறிந்ததுண்டா? பார்த்துக் கொண்டு வாளா இருப்பதற்கு எப்படி உன் அருள் உள்ளம் இசைந்தது.

என்று பாடிப் பாடி அவனை வேண்டுகிருர். எங்கும் நிறைந்து எல்லாம் வல்ல இறைவன் மேற் குறித்த வேண்டுகோளை கேட்டதும் விரைந்து வதது. தர வேண்டியதைத் தந்தனன்—பெற வேண்டியதை பெற்றேன் என்று மகிழ்ந்து பாடுகின்றனர் கீழ் கண்டபடி:-

சுகமே நிரம்ப பெருங்கருணைத் தொட்டி விடத்தே யெனையமர்த்தி
அகமே விளங்கத் திருவருளா ரமுதமளித்தே யணைத்தருளி
முகமே மலர்த்திச் சித்திநிலை முழுதுங் கொடுத்து மூவாமற்
சுகமேயிருக்கப் புரிந்தாயே தாயே யென்னைத் தந்தாயே

தந்தா யின்றுந் தருகின்ருய் தருவாய் மேலுந் தனித் தலைமை
யெந்தாய் நினது பெருங்கருணை யென்னென் றுரைப்பேனிவ் வுலகிற்
சிந்தா குலந்தீர்த் தருளென நான் சிறிதே கூவு முன்னென்பால்
வந்தாய் கலந்து மகிழ்கின்ருய் யெனதுபொழுது வான் பொழுதே

முதலில் ஆண்டவா வா! அருள்தருக என்று கூவிக் கூவிப்பாடி அழுதார். ஆண்டவன் வெளிப்பட்டு இன்பந்தந்தவுடன் சிறிதே கூவு முன் என்பால் வந்தாய் என்கின்றார். இந்த பாடல்களில் வேண்டுதலும், வேண்டுதல் கேட்டு இறைவன் வெளிப்பட்டு அருளுதலும், அந்த அருளானந்தத்தில் வள்ளலார் திளைத்து மகிழ் தலும் தெரிகின்றது. அன்றோ.

## அபயத் திறன்

இறைவன் கருணைப் பெற்ற பிறகு ஆண்ட வன் தந்த இன்பத்தை அனுபவித்த பிறகு ஆண்டவனே என்னைக் கைவிடாதீர். நான் பொய் சமயம், பொய் ஒழுக்கம் புகேன் உன்னை யன்றி அயலவரை நாடேன், உலகரை நம்பி லேன். வானிலே உள்ளவரையும் நம்பிலேன். "உன்னையே நம்பினேன் கைவிடேல் எனையே" என்று அபயம் கேட்கிறார். மாதிரிக்கு ஒரு பாடல் காட்டி மேலே செல்வோம்.

ஈயெனப் பறந்தே னெறும்பென வுழன்றே
நெட்டியே யென மிகத் தழைத்தேன்
பேயெனச் சுழன்றேன் பித்தனே யெனவாய்ப்
பிதற்றெடு மூர்தொறும் பெயர்ந்தேன்
காயெனக் காய்த்தேன் கடையென நடந்தேன்
கல்லெனக் கிடத்தேன் குரைக்கும்
நாயெனத் திரிந்தே னென்னினு முனையே
நம்பினேன் கைவிடேலெனையே.

## பிரிவாற்றாமை

முன்னால் ஆண்டவனே கைவிடேல் என்று கூறியதில் இருந்து வளர்ந்து நான் உன்னைவிட்டு அகல மாட்டேன். ஆமாம்! உன்னில் இருந்து என்னை எவரும் பிரிக்க முடியாது என்று ஆணித் தரமாக கூறுகின்றார்.

பிறரிடத்தே போகமாட்டேன். பொய்ற் கிடந்து மனம் வேகமாட்டேன். பொய் உலகநை மாட் டேன். நான் சாக மாட்டேன். தீ மொழிகள் சொல்ல மாட்டேன் பொய் யொழுக்கம் பொருந்த மாட்டேன், பிற உயிரைக் கொல்லமாட்டேன் ஆனால் இறைவா! உன்னை பிரிந்தால் தரிக்க மாட்டேன். என்று சூளுரைக்கின்றார். இந்த உண்மை உரையை—அருளுரையை—கேட்ட இறைவன் பாதி இரவல் ஒருநாள் எழுப்பி பெரும் பொருள் ஒன்றைக் கையில் கொடுத்துக் களிப்புத் தாராம். காமக் கடலைகடத்தி யருட் கருணை யமுதங் களித்து அளித்தாராம். அத்துடன் நின்று விடாமல் அருட்ஜோதி அளித்தாராம் அதனால் வள்ளல் பெருமான் மிகப் பெரிய பேறு பெற்றாராம் அந்தப் பேற்றை வாய்விட்டு கூற முடியாதாம். அத்துணைச் சிறந்த பேறு உலக மக்கள் அனைவரும் பெற வேண்டுமாம். அன்றே அவரின் பெருநினைப்பு, பெருங்களிப்பு, பேரின்ப மும் பெற்று தன்னை மறந்த தனி இன்பம் பெற்று மகிழும் நேரத்தில் கூட அந்த பேசப்படாத பெரிய பேற்றை உலகமக்கள் அனைவரும் பெற வேண்டும்என்னும் பெரியஉள்ளம் யாருக்குவரும்? அதுவன்றோ அருள் உள்ளம் அந்த உள்ளத்திற் கன்றோ அருள்பா பாடும் இயல்பு ஏற்படும். அந்த உள்ளம் திருவருட் பிரகாச வள்ளல் பெருமான் திருவுள்ளமாகத்தான் இருக்கும். தனது இன்பனு பாத்தையும் உலகம் இன்பம் பெறுதல் வேண்டும் என்பதையும் எப்படி பாடியுள்ளார் என்பதைக் காணுங்கள்:-

பாதி யிரவி லெழுந்தருளிப் பாவியேனை
யெழுப்பியருட்
ஜோதியளித்தென் னுள்ளேகத்தே சூழ்ந்து
கலந்து துலங்குகின்றாய்
நீதிநடஞ் செய் பேரின்ப நிதிநான் பெற்ற
நெடும் பேற்றை
ஓதி முடியா தென்போலிவ் வுலகம் பெறுதல்
வேண்டுவனே.

## நெஞ்சொடு கூறல், நெஞ்சொடு கிளத்தல்

இறைவன் அருளைப் பெற்ற பின்னும் பாவி மனம் ஒருப்படாமல் அலைக்கிறது. எனவேதான் அடைந்த பெரும் பேற்றை இந்த நெஞ்சத்திற்கு கூறுகின்றார். நெஞ்சே எனது நாயகனார் எனக் களித்த இன்பத்தை நீயும் பெற்று உய் என்று அறிவுறுத்துகின்றார். அதுபோது இந்த சவலை நெஞ்சம் நாளைக்குச் செய்வோம் நாளை மறுநாள் பார்ப்போம் என்று மயக்கமும் தயக்கமும் கொள்ளும் நேரத்தில் மீண்டும் விளக்குகின்றார். நெஞ்சே இறைவனை காண, நாள் பார்ப்பது அழகாமோ என்று பாடிக்காட்டுகின்றார்.

அடங்குநா ளில்லாதமர்ந்தானைக் காணற்கே
தொடங்கு நாள் நல்லதன்றோ—நெஞ்சே
தொடங்குநாள் நல்லதன்றோ
ஆல மமுதாக்கு மண்ணிலை காணற்குச்
காலங் கருதுவதேன்—நெஞ்சே
காலங் கருதுவதேன்

என்று கூறி நெஞ்சைத் தன் வயப்படுத்துகிறார். இத்துணை உபதேசத்திற்கு பிறகு நெஞ்சம் ஒரு வாறு ஒருபட்டு வருகிறது. அப்போது "நெஞ்சே! உனக்கு ஒரு இரகசியம் கூறப் போகிறேன். என்ன தெரியுமா? என் அப்பன்-இறைவன் வரும் தருணம் நெருங்கிவிட்டது." என்கின்றார்,

மனம் ஐயமுறுகிறது அப்போது:-
'உள்ளபடி யுரைக்கின்றேன் சத்தியமா முரையீ
துணர்ந்திடுக மனனேநீ யுலகெலா மறிய
வள்ளல்வரு தருணமிதே யென்று
வகுத்துரைத்துத் தெரிந்திடுக மயக்கமனுத்
துணையுங்
கொள்ளலையென் குருநாத னருட்ஜோதிப்
பெருமான்
குறிப்பிதுவென் குறிப்பெனவுங் குறியாதே
கண்டாய்."

ஏன் வருகின்றார் என்று மனம் கேட்க வள்ளலார் கூறுகிறார்

"தீதுமுழு துந்தவிர்தே சித்தியெலா மளிக்கத்
திருவருளாம் பெருஞ்ஜோதி யப்பன்வரு
தருணம்
ஈதிதுவே யென்றுலக மறிய விரைந் துரைப்பாய்
எல்லாருங் களிப்படைந்துள் ளிசைந்தேத்தி
யிடவே"

என்று இறைவன் வருந்தருணமதை உலகிற்குக் உணர்த்த மனத்தை அழைத்து மனநிறைவோடு கூறுகிறார்,

## திருமுது குன்றம்

பழமலை நாதர் மேல் 13 பதிகங்கள் பாடியுள்ளார். முது குன்றம் அமர்ந்த மூத்தப் பெருமானின் பெருமைகளை கண்டதும், களி கொண்டதும் குறித்தே பாடிப் பரவசமடைகின்றார்.

## திருப்பள்ளியெழுச்சி

மாயை மால் இரவு நீங்கி ஞான சூரியன் ஒளியுடன் பிரகாசிக்க அவன் வரவால் செய்ய வேண்டிய நிகழ்ச்சிகளை நன்றாக விளக்கு கின்றார். உலக இருள் நீங்கி மக்களுக்கும் அஞ்ஞான இருள் நீங்கிய அறிஞர்களுக்கும் இந்த பள்ளிஎழுச்சி பயன் தருவதாகும்

இறைவனை பள்ளி யெழுப்பும் முகத்தால் தனது உள்ளத்தில் பதிங்கி இருக்கும் அருள் உணர்ச்சிகளை தட்டி யெழுப்புகிறார் மாதிரிக்கு ஒரே பாடல் போதும்.

மதம்பிடித் தவாரெல்லாம் வாய்பிடிப்புண்டு
வந்து நிற்கின்றனர் வாய்திறப் பிப்பான்
கதம்பிடித் தவரெல்லாம் கடும்பிணியாலே
கலங்கினர் சூழ்ந்தன ருலம்புறு கின்றனர்
பதம்பிடித் தவரெல்லாம் அம்பலப் பாட்டே
பாடின ராடினர் பரவிநிற்கின்றனர்
இதம்பிடித் தெனையாண்ட அருட்பெருஞ்சோதி
என்னைய னேபள்ளி யெழுந்தருளாயே

## சிற்சத்தி துதி

குறை நீங்கியது, இறைவன் அருள் வந்தடைந்தது. இறைவன் வரும் தருணம் எனப் பறை அறையும் பேறும் கிடைத்தது. எனவே தனது கொள்கைக்கும், குறிகோளுக்கும் ஏற்ற விதத்தில் கொடி அமைத்துக் கொள்ளல் வேண்டும். அந்த கொடி எத்தகையது? அறிய வேண்டுமல்லவா?

அது ஜோதிக் கொடி, ஆனந்த சொரூபக் கொடி, கருணைக் கொடி, சன்மார்க்க நீதிக் கொடி, ஞானக் கொடி, யோகசித்திலாம் காட்டுங் கொடி, சன்மார்க்க நாட்டில் விடுத்த நற்கொடி, வெறிக்குஞ் சமயக் குழியில் விழ விரைந்தேன் றன்னை விழாதவகை மறிக்கும் ஒரு பேறறிவளித்த வள்ளற் கொடி சித்தியெலாம் இந்தா மகனே என்றெனக்கே கொடுத்தக் கொடி. அந்த அருளற்புதத் திருக் கொடி சிவகாம வல்லிக் கொடியாகவும் இருக்கிறது அடியேனுக்கும் அருள்கிறது என்று கூறி கடைசியில் இந்தக் கொடிதான் அருட் பெரு செங்கோல் நடத்தும் தனிக் கொடி சுத்த சன்மார்க்கக் கோட்டைக் கொடி என்று குறிக்கிறார்.

தனக்கென ஒருமார்க்கம்—அது சன்மார்க்கம் தனக்கென ஒரு கொடி—அது வெண்மையும் மஞ்சளும் கலந்த கொடி. தனக்கென ஒரு மன்றம்—அது சத்திய ஞானசபை. தனக்கென ஒரு சாலை—அது சத்திய தருமச்சாலை. தனக்கென ஒருமாளிகை—சித்தி வளாகத்திருமாளிகை இத்தனைப் பேர்களையும் பெற்றுக் கொண்டு தனியருட் செங்கோல் நடத்தும் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவனின் தனிப்பெரும் மகனாக இருந்து உலகை வாழ்வித்தவர். எனவே சிற்சத்தித் துதியின் கடைசி பாடலில் சன்மார்க்க சங்கத்தைக் கோட்டையாகவும், தான் அதற்கு பொறுப்புள்ளவ ராகவும் கருதி கொடிகட்டி கொடிக்குத் தனி வணக்கம் புரிகின்றார் நமது அருட்தந்தை அருட் பிரகாச பெருமான். இதோ அந்த கொடிவணக்கப் பாடல்:-

ஏட்டைத் தவிர்த்தென் னெண்ணமெலா
மெய்த வெளிதந் தியான் வணைந்த
பாட்டைப் புனைந்து பரிசளித்த
பரமஞானப் பதிக்கொடியே
தேட்டைத் தனிப்பே ரருட்செங்கோல்
செலத்துஞ் சுத்த சன்மார்க்கக்
கோட்டைக் கொடியே யானந்தக்
கொடியே யடியேற் கருளுகவே

என்பதாகும்

## இன்பத்திறன்

இறைவனின் அருளாட்சியில் கலந்து கொண்ட ஐயா அவர்கள் தான்பெற்ற இன்பத்தை எண்ணி எண்ணி மகிழ்கின்றார். "உலக மக்களே! இறைவன் என்னைக் கலந்த தால் சிவமே க வடிவாகி இருக்கிறேன். இளைப்பு அறியேன், தவிப்பறியேன். இடர் செய்பசி யறியேன். எனவே வாரீர் வந்து இறைவனை ஏத்தி இன்பமடைமின்" என்கின்றார். இறைவன் எனக்கும் இன்பம் அளித்ததுடன் நிற்கவில்லை நல்ல பணியுமிட்டார். என்ன தெரியுமா?

"நீ பாடுகவென் னோடுகலந் தாடுக தென்றெனக்கே பணியிட்டாய் நான்செய் பெரும் பாக்கியம் மென் றுவந்தேன்" என்றார் பின்னர் இறைவா! "கோடு தாவராது உனை பாடுதற் கேற்ற குணப்பொருளு மிலக்கியமும கொடுத்து மகிழ்தருளே" உன்னை பாடுதற்கு ஏற்ற இலக்கியம் நல்ல இலணப்பொருள் அனைத்தும் தாரீர்" என்றும் கேட்டு பெற்றார்

## நடராஜபதிமாலை

திருவருட்பா என்னும் அருள் நூலின் சாரம், அருட்பெருஞ் ஜோதி அகவல் என்று துவக்கத்

தில் பார்த்தோம். அந்த அருட்பெருஞ் ஜோதி அகவல் 1500க்கு மேலுள்ள நீண்ட அடிகளைக் கொண்டது ஆகும். அருட்பாவின் சுருக்கமும், அகவலின் சுருக்கமும் இரண்டும் ஒன்ருக இணைந்து இனிக்கும் சுருக்கமான அருட்பிழிவு நடராஜ பதிமாலை அதில் உலகம், உயிர், இறைவன், ஆகியவற்றின் லட்சணமும், இவை இயங்கும் இயக்கமும் நடராஜ பதி மாலையில் நன்ருக விளக்கமாக கூறி இருக்கிருர். அருட்பா முழுதும் படிக்க முடியாதவர்கள் அருட்பெருஞ் ஜோதி அகவலைப் படிக்கலாம், அதுவும் முடிய வில்லை என்பவர்கள் 34 பாடல்கள் கொண்ட நடராஜபதிமாலையைப் படித்தால் மனிதன் உணர வேண்டியவையெலாம் உணரலாம் திருவருட்பா இன் சுவை கனி குலுங்கும் மரம்—அகவல் அந்த மரத்திலே பழுத்த கனிகள் நடராஜபதிமாலை அந்தக் கனியில் கலந்திருக்கும் இன்சுவை. எனவே உள்ளமுருகி பாடவும், உயர்ந்த கருத்துக்களைப் பெறவும்–விஞ்ஞான அறிவு விளங்கவும், அஞ்ஞான இருளை ஒழிக்கவும் நமக்குக் கிடைத்த ஒப்பற்ற உயிர் கவிதையின் கூட்டு நடராஜபதிமாலை. இதில் இறைவன் நமது ஐயா அவர்களை எந்த அளவுக்கு உயர்த்தி உரிமை அரசோச்சும் அதிகாரமும் தந்துள்ளான் என்பது நன்ருக விளக்குகின்ருர் இந்த மாலையில் இறைவன் வாக்குகளே இருக்கின்றன, எனவே இறைவன் திருவாக்கு நிறைந்த மகத்துவமும் நடராஜபதி மாலைக்கே உரியதாகும்.

ஆண்டவன் வள்ளல் பெருமானுக்கு அளித்த பெருமைகளைப் பற்றி சில பார்ப்போம்.

"வாழி நீடூழியென வாய் மலர்ந்து தழியா
"வரந்தந்த வள்ளலே"

"என்றும் இறவாத பெருநிலையில் இணைசொலா இன்புற்
றிருக்க வெனை வைத்த குருவே"

நான் வாட்ட மோடு இருந்தேன் அப்போது:-

"நாட்ட முறுவைகறையி லென்னருகணைந் தென்னை
நன்றுற வெழுப்பி மகனே
நல்யோக ஞானமெனினும் புரிதலின்றி நீ
நலிதலழகோ எழுந்தே
நின் எண்ணமெலாம் பலிக்கவரு ளமுதமுண்
டின்புறுக வென்றகுருவே"

"துன்பெலாந் தீர்ந்தன சுகம்பலித்தது நினைச்
சூழ்ந்த தருளொளி நிறைந்தே
சுத்த சன்மார்க்க நிலையனுபவம் நினக்கே
சுதந்தரமான துலகில்
வன்பெலாம் நீக்கிநல் வழியெலா மாக்கி மெய்
வாழ்வெலாம் பெற்று மிகவும்
மன்னுயிரெலாம் களித்திட நினைத்தனை யுன்றன்
மனநினைப்பின் படிக்கே
யன்பநீ பெறுகவுலவாது நீடூழிவிளை
யாடுக வருட் ஜோதியாம்
ஆட்சி தந்தோம் உனைக் கைவிடோங் கைவிடோம்
ஆணை நம் மாணை யென்றே
இன்புறத் திருவாக் களித்தெனுள் ளேகலந்
திசையுட னிருந்த குருவே"

பேருற்றவுலகிலுறு சமயமத நெறியெலாம்
பேய்பிடிப் புற்ற பிச்சுப்
பிள்ளை விளையாட்டென வுணர்ந்திடா துயிர்கள்பல
பேதமுற்று றங்கும் மிங்கும்
போருற்று இறந்துவீண போயின ரின்னும்வீண்
போகாதபடி விரைந்தே
புனிதமுறு சுத்த சன்மார்க்கநெறி காட்டி மெய்ப்
பொருளினை யுணர்த்தி யெல்லாம்
ஏருற்ற சுகநிலை அடைந்திடப் புரிதிநீ
யென்பிள்ளை யாதலாலே
இவ்வேலை புரிகவென் றிட்டனன் மனத்தில்வே
றெண்ணற்க வென்ற குருவே"

"நின் வார்த்தை யாவும் நமது
நீள் வார்த்தை யாகுமிது வுண்மை மகனே சற்றும்

நெஞ்ச மஞ்சேல் லுனக்கே

ஆடுறும் அருட்பெருஞ் ஜோதியீந்தன மென்றும்
அழியாத நிலையில் நின்றே
அன்பினு லெங்கெங்கு மெண்ணிய படிக்குநீ
யாடி வாழ்க என்ற குருவே

என்று இறைவன் வள்ளல் பெருமானுக்கு அளித்த அரும் பெரும் பேறுகளை எல்லாம் கூறி விளக்குகிருர். அந்த பேற்றை பெரும் படியும் உலகமக்களை கூவிக் கூவி அழைக்கின்ருர். எனவே நடராஜபதிமாலை மனிதனை தெய்வமாக்கும் மார்க்கத்தை காட்டுகிறது. இதனுல் நடராஜபதிமாலை மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது

## சற்குருமணிமாலை

வள்ளல்பெருமானுக்கு குருவாக இருந்தவர்கள் 1. தணிகைக் குமரன் என்பவர் சிலர், 2. திருஞான சம்பந்தர் என்பவர் சிலர். 3 மணிவாசகப் பெருமான் என்பவர் சிலர். இதில் எது உண்மை என்று யாரும் ஆய்ந்திடத் தேவையில்லை. ஏனென்ருல் திருவருட் பிரகாச வள்ளல் பெருமானே தனது சற்குருவைப்பற்றி விளக்கம் தருகின்ருர். சற்குரு மணிமாலையில் தனது சற் குருவாக இருந்தவர் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவன் தான் என்பதை மிகவும் விளக்கமாக கூறுகின்ருர். அந்த சிவகுரு தனக்கு எதை எதை எப்படி எப்படி உபதேசித்தார் என்பதையும் விளக்கிக் கூறுகின்ருர் எனவே நமது தெய்வத் தந்தையாரின் அருட்குரு அருட்பெருஞ் ஜோதி ஆண்டவனே; அன்றி மற்றவர் அல்ல என்கின்ற உண்மையை உணரவேண்டும். நடராஜபதி மாலையிலும்.

அருட்பெருஞ் ஜோதி அகவலிலும் ஆண்டவன் குருவாக இருந்து உபதேசித்ததை நன்ருக உணர்த்துகின்ருர்.

'அந்தங்களின் நிலைகள் இவை சாகாத தலையிது, வேகாத காலிது காண் எனக் காட்டினுர் என்றும், இதுபதி, இது பொருள், இது சுகம், இது வழி என உரைத்தார் என்றும், என் நிலை இது, தன் நிலை இது இரு நிலைகளும் ஒருநிலையே உணர்வாய்' என்றும், 'காரணமிது, காரியமிது, காரணக்காரிய கருவிது, பூரண நிலைஇது,' என்றும் உணர்த்திய உபதேசங்களை வள்ளல் நன்ருக சற்குரு மணிமாலையில் குறிப்பிடுகிருர்.

ஒரு பாடலில்:

பன்னெறிச் சமயங்கண் மதங்க ளென்றிடுமோர்
பவநெறி யிதுவரை பரவிய திதனுற்
சென்னெறி யறிந்தில ரிறந்திறந் துலகோர்
செறியிரு ளடைந்தன ராதலினிநீ
புன்னெறி தவிர்தொருபொதுநெறி யெனும்வான்
புத்தமு தருள்கின்ற சுத்த சன்மார்க்கத்
தன்னெறி செலுத்துக வென்றவென் னரசே
தனி நடராஜவென் சற்குருமணியே"

"துஞ்சிய மாந்தரை யெழுப்புக நலமே
சூழ்ந்த சன்மார்க்கத்திற் செலுத்துக சுகமே
விஞ்சுற மெய்பொருண் மேனிலை தனிலே
விஞ்சைகள் பலவுள விளக்குக என்ருய்',
"சாதியுஞ் சமயமும் தவிர்த்தவ ருறவே"
"ஓ காள மதங்களை முழுவது மாற்றி
ஒருநிலையாக்க வென்றுரைத்த மெய்ப்பரமே"

என்று சற்குரு தனக்கிட்ட பணியினை மிக நன்ருக எடுத்து விளக்குகிருர்.

## வைத்தியநாதர் பதிகம்

பன்னிரண்டு பாடல்களில் ஆன இப்பதிகம் நாத்திகத்தை கண்டிப்பதாகும். இல்லை தெய்வம் என்பவரையும். பெண்களிடம் அடையும் இன்பத்தை தவிர வேறு இன்பமில்லை என்பவரையும், உண்மையான ஒழுக்க சீலர்களான பெரியோர்களை எள்ளி நகையாடும் மூடர்களையும் கண்டிக்கும் திருப்பாசுரங்கள். இதனை விளக்க ஒரே பாடல் போதும்.

"ஓகைமட வாரல்குலே பிரம பதமவர்கள்
உந்தியே வைகுந்தமேல்
ஓங்குமுலை யேகைலை யவர்குமு தவாயினிதழ்
ஊறலே அமுத மவர்தம்
பாகனைய மொழியேநல் வேதவாக்கிய மவர்கள்
பார்வையே கருணை நோக்கம்
பாங்கினவ ரோடுவிளை யாடவரு சுகமதே
பரம சுகமாகுமிந்த
பூகமறியாமலே தேகமிக வாடினீர்
உறுசுவைப் பழமெறிந்தே
உற்றவெறு வாய்மெல்லும் வீணர்நீ ரென்றுநல்
லோரை நிந்திப்ப ரவர்தம்
வாகைவாய் மதமற மருந்தருள்க தவசிகா
மணியுலக நாதவள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர் பவரோகமற
வளர் வைந்திய நாதனே.

இப் பாட்டில் பெண்கள்தான் பேரின்பக் களஞ்சியம் என்னும் கயவரை கண்டித்து அவர்களின் அந்த தீய எண்ணம் மாறவும், தூய எண்ணம் வளரவும் அருள்கூர்ந்து, அறிவருள்க வைத்திய நாதன் என்னும் பேர் பெற்ற பெருமானே இந்தக் காமுகர்களின் காமநோய், அறியாமை நோய், நீங்க நல்ல அருள் என்னும் கதி மருந்தருள்வாய் எனவும் வேண்டி நிற்கிருர்.

## திருவோத்தூர் ஞானசிகாமணி தோத்திரம்

இதில் அருமைமிகு துதிப்பாடல்கள் மூன்று பாடி உருகி இருக்கிருர்.

## அத்து விதானந்தத்த நுபவ விடையீடு

இந்த தலைப்பில் பாடியுள்ள பாடல்கள் மிகவும் உயர்ந்தவை —மனத்தின் நிலையும்— அது மாருமல் இருக்க வேண்டிய அவசியமும், தத்துவத் துடிப்புகள் எப்படி பட்டவை என்றும் கூறுகின்ருர் தான் இறைவனின் அருளைப் பெற்று அழியாத வாழ்வு பெறும் வரையில் தனது கருவிகாணங்கள் தன்னுடன் ஒத்துழைக்க வேண்டுமே என்கின்ற பெருங்கவலை வள்ளல் பெருமானுக்கு. அதனுல் தனது கருவிகரணங்களை அடக்கி ஆள பாடியிருக்கிருர். அதில் ஒரு பாடல்:

"தீட்டு மணிப் பொதுநடஞ்செய் திருவடிகண் டேத்தச்
செல்கின்றேன் சிறியனேன்முன் சென்றவழி யறியேன்
காட்டுவழி கிடைத்திடுமோ நாட்டுவழி தருமோ
காலிளைப்பு கண்டிடுமோ காணுதோ களிப் பாம்
மேட்டினிடை விடுத்திடுமோ பள்ளத்தே விடுமோ
விவேகமெனுந் துணையுறுமோ வேடர் பயமுறுமோ
ஈட்டுதிரு வடிச்சமுகங் காணவுநேர்ந் திடுமோ
எப்படியே திருவுளந்தா னேதுமறிந் திலனே

## தற்போத வியப்பு

இறைவனின் திருவுருவைக் கண்டு களித்த வள்ளல் பெருமான், மேலும் மேலும் இதேபோல் இறைவனைக் கண்டு ஆனந்த மநுபவித்துக் கொண்டும், அருளில் தோய்ந்து கொண்டும்

யாருமறியாமல் இருப்போம் என்று இருந்த வேளையில் உலகறிய வெளியே இழுத்து விடப் பட்டார். வெளியே இழுத்து வரப்பட்ட தன் காரணம் என்னே? ''இறைவா! உன் செயலா? அல்லது மாயை தன் செயலா? அறிய முடியவில்லையே. மனம் கலங்குகின்றதே'' என்று முறையிடுகிறார். பத்துப் பாடலில் அவற்றில் ஒன்று:-

''கள்ளிருந்த மலரிதழி சடைக்கனின் வடிவங்
கண்டுகொண்டேன் சிறிதடியேன் கண்டு
கொண்டபடியே
நள்ளிருந்த வண்ணமின்னுங் கண்டு கண்டு
களித்தே
நாடறியா திருப்பமென்றே நன்று நினைந்து
தொருசார்
உள்ளிருந்த வெனைத்தெருவி லிழுத்ததுதான்
உன்செயலோ பெருமாயைதன் செயலோ
வறியேன்
வள்ளிருந்த குணச்சடையே ஸிதைநினைக்குந்
தோறும்
மனமாலை பாய்வதுகாண் மன்றி நடத்
தரசே''

## மாயா விளக்கம்

இறைவன் அருள் பெற்றும் மாயை என்னும் கொடுந்திறை முழுதும் விலகவில்லை, மாயை வள்ளல் பிரானை எப்படி எப்படி வாட்டியது என்பதை இப்பாடல்கள் மூலம் மிக அழகாக வருணிக்கிறார். உயிரைக் குழந்தையாகவும். மாயை செவிலித் தாயாகவும். சிவகாம வல்லியைத் தாயாகவும், இறைவனைத் தந்தையாகவும் எண்ணிப் பாடுகின்றார்.

இறைவா என்னை வளர்த்துவிரும்படி செவிலித் (மாயை) தாயிடம் கொடுத்தாய் ஐயோ அவள் புரியும் கொடுமைகள் ஒன்று இரண்டா, ஐயனே! அவள் எடுக்கவும் நினைப்பதில்லை. படுக்கவும் விடமாட்டேன் என்கிறாள்; தூங்க விடவும் விரும்பாள் சூதையே நினைக்கிறாள், தத்துவப் பெண்களிடம் எனைத் தந்து விட்டாள். தனித்தனியாக அவர்கள் வலிந்து எடுதது நான் சத்தும் போட்டு அழும் வண்ணம் பயங் காட்டுகின்றனர். மாயை என்னும் அந்தச் செவிலி என்னை தாலாட்டிக் கொண்டே கிள்ளி விடுகிறாள் கள்ளி. உயிர் போகும் அளவு அழுதேன்—இளைத்து வெதும்பினேன், என் குரலும் கம்மியது சோர்ந்து இளைத்தேன். இவை அனைத்தும் கண்ணாலே பார்த்துக் கொண்டே அம்மிபோல் அசையாது இருக்கின்றாள். அவளைச் சூழ்ந்துள்ள மற்ற பெண்கள் என் நிலைப்பற்றி கவலைப்படாது கொம்மி அடித்து மகிழ்கின்றார். இவ்விதம் அவள் செய்வது சரியோ இறைவா! என்னை எடுத்து அணைக்க எனது தாய் வந்திலள். நீயும் வராமல் இருப்பது சரியே ஈசா' என்று கேட்கிறார்.

''தும்மினேன் வெதும்பித் தொட்டிலிற்கிடந்தே
சோர்ந்தழ திளைத்து மென்குரலுங்
கம்மினேன் செவிலி யம்மிபோ லசையாள்
காதுறக் கேட்டிருக்கின்றாள்
செம்மியே மடவார் கொம்மியே பாடிச்
சிரிக்கின்றன ரந்தோ
இம்மியே யெனுனு மீந்திடார் போல
யிருப்பதோ நீயுமெந்தாயே.''

## பிரியேனென்றல்

மாயை, அதன் தொடர்புள்ள மற்றவைகள் உயிரை வாட்டியும் வதைத்தும் வருவதறிந்து வள்ளல் பெருமான் இறைவா இனிமேல் நான் அவர்களுடன் இருக்க மாட்டேன். துயர் பட மாட்டேன் மேலும் எனது அச்சம் துயரம் எல்லாம் தீர்த்தருள் உன்னை அடைய நான் ஊனை உறக்கத்தினை விட்டேன். உயிரை வேண்டுமானாலும் விடத்தயங்கேன் அருள்க. என் உடல் பொருள் ஆவி அனைத்தையும் உன தாக்கிக்கொண்டு உன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் என்னதாக்கி விடு. என்று வேண்டுகின்றார். உன்னை நான் பிடித்த பிடி கையால் அல்ல உயிரால்—உயிர் அகன்றால்தான் என் பிடி நெகிழும் என்று பாடுகின்றார். அந்த பிரியாத நிலையை குறிக்கும் பாடல்காணீர்.

''தெருவிடத்தே விளையாடித் திரிந்தவெனை
வலிந்தே
சிவமாலை யணிந்தணையச் சிறுவயதிலிந்த
உருவிடத்தே நினக்கிருந்த ஆசையெலா
மின்னாள்
ஓடியதோ புதியவொரு வுருவுவிழைந்
ததுவோ
கருவிடத்தே எனைக்காத்த காவலனே யுனது
கால்பிடித்தேன் விடுவேனோ கைப்பிடியன்
றதுதான்
வெருவிடத்தே உயிர்பிடிகா ணுயிரகன்றாலன்றி
விடமாட்டேன் விடமாட்டேன் விட
மாட்டேனனே.

## திருவருட் பேறு

இறைவன் வள்ளலார் குரலுக்கு செவி சாய்த்து வந்து காட்ட வேண்டிய உருகாட்டி, கலக்கம் நீக்கி, அருள் நல்கிச் சென்றார். மீண்டும் திருக்கதவை மூடிவிட்டார். திறப்பார் திறப்பார் என்று காத்திருந்த பிறகு பாடுகின்றார்.

''படிகளெல்லா மேற்றுவித்தீர் பரமநடம் புரியும்
பதியையடை வித்தீரப் பதிநடுவே
விளங்குங்
கொடிகணிறை மணிமாடக் கோயிலையுங்
காட்டிக்
கொடுத்தீரக் கோயிலிலே கோபுரவாயிலிலே
செடிகளிலாத் திருக்கதவந் திறப்பித்துக் காட்டித்
திரும்பவுநீர் மூடுவித்தீர் திறந்திடுதல்
வேண்டும்

அடிகளிது தருணமினி யரைக் கணமுந்தரியேன்
அம்பலத்தே நடம்புரிவீர் வந்தருள்வீர்
விரைந்தே ''

என்று ஆண்டவன் அவரைப் படிப்படியாக வளர்த்து ஒவ்வொரு நிலையில் ஏற்றுவித்த தன்மையை வெகு அழகாக விளக்கி காட்டுகிருர்.

உலவாத பெரும்பொருள் நிறைந்த பெட்டியைக்காட்டி அதன் சாவியும் கொடுத்தார் திறந்ததனை எடுக்க முயல்கின்றபோது இறைவா அட்டி செய்ய நினையாதீர் என்கிருர். என் தகுதிக்கு மேம்பட்ட பெருவிருந்தில் உட்கார வைத்து திருவமுதம் வழங்கினீர். நான் உண்ணப் புகும் நேரத்தில் எனது பக்குவம் பார்க்கின்றீர் ஆண்டவனே உலகில் பசித்தவர்களுக்கு உண வளிப்பவர்கள் இவர்கள் சிறிவர் இவர்கள் பெரியவர்கள் என்று பார்ப்பதில்லையே அப்படி இருக்க நீர் எனது பக்குவம் பாராது அருளமுதம் உணவளிப்பீர் என்கின்ருர்..

இந்த வேண்டுகோளுக்கு இறைவன் மனமிறங்கி அருள் புரியும் குறிப்பு உணர்த்தினுன், எனினும் இந்த மனம் இதனை நம்பவில்லை எனவே 'ஏ மனதே நீ கேள்' என்று பாடுகின்ருர்.

''இதுதருண நமையாளற் கெளுந்தருழுந்
தருணம்
இனித்தடை யொன்றிலை கண்டா பென்
மனமே நீநான்
மதுவிழுமோ! ரீப்போல மயங்காதே கயங்கி
வாடாதே மலங்காதே மலர்ந்து மகிழ்ந்
திருப்பாய்
இதுசுபமே யிதுதொடங்கிக் குறவிலைகா ணமது
குருபரனை நமதுபெருங் குலதெய்வத் தானை
பொதுவில்நடம் புரிகின்ற புண்ணியனை
ரெனக்குட்
புணர்ந்துரைத்த திருவார்த்தை பொன்
வார்த்தை யிதுவே

என்று தான் பெற்ற பெரும் பேற்றை மனத்திற்கு அறிவித்து மகிழ்கின்ருர்.

## பக்தி வைராக்கியம்

வள்ளல் பெருமான் இறைவனைக் காண வேண்டும் என்று விரும்புகின்ருர். இறைவன் வரவில்லை. அவருடைய பக்தி முற்றி வைராக்கிய மாகிறது எனவே தனது வைராக்கியத்தைப் பாடுகின்ருர்.

இறைவரே! உம்மை இங்கு கண்டல்லால் அநித்திய உலகை பார்க்கவுமாட்டேன்; அறுசுவை உணவை அருந்தவு மாட்டேன்; பாயலிற் படுக்கவும் மாட்டேன; ஆசையிற் பிறரொடு பேசவும் மாட்டேன்; அன்பொடு காண்பவரை முன்பிடமாட்டேன் அருந்தவர் நேரினும் பொருந் தவுமாட்டேன்; அரைக் கணமாயினும் தரிக்கவு மாட்டேன்; அடுக்கவிழ் கலையெடுத் துடுக்கவு மாட்டேன் அருட்பெருஞ் ஜோதியீர் ஆணை நும்மீதே என்று ஆணையிட்டுப் பாடுகின்ருர்.

''பெறுவது நுமையன்றிப் பிறிதொன்றும்
விரும்பேன்
பேசலும் பேச்சன்றிப் பிறிதொன்றும்
பேசேன்
உறுவநும் மருளன்றி பிறிதொன் றுமுவேன்
உன்னலுன் றிறனன்றிப் பிறிதொன்று
முன்னேன்
மறுநெறி தீர்த்தெனை வாழ்வித்துக் கொண்டீர்
வள்ளலே னுந்திரு வரவுகண்டல்லால்
அறுசுவை யுண்டி கொண்டருந் தவுமாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீ ராணை னும்மீதே.

## ஆற்ருமை

எனது மனத்தில் எழுந்த ஆசைகள் உலகை வாழ வைக்க நான் நினைத்த நினைப்புகள் அத்தனையும் உடனேசெய்ய விரும்புகின்றேன். காலம் தாழ்க்கில் ஆற்றேன் என்கின்ருர்.

வெப்பா ருள்ளக் கலக்கமெலா மிற்றைப்
பொழுதே விலக்கி யொழித்
திப்பா ரிடையென் கருத்தின் வண்ணம்
எல்லாம் விரைவி னீந்தருள்க
ஒப்பா லுரைத்த தன்றுண்மை
யுரைத்தேன் கருணையுடையானே
அப்பா வரசே யினிச் சிறிது
மாற்ற மாட்டேன் கண்டாயே.

## பிரிவாற்ருமை

இறைவன் அருள் அளித்தான்; இன்பமும் அளித்தான் உலகியலில் யான் பேசிய பேச்சுக்கள் — எண்ணிய எண்ணங்கள் — தெரிவித்த முடிவுகள் இவை தவராக இருக்குமோ இதனுல் இறைவன் நம்மை புறம் தள்ளிவிடுவானே என உன்னை எண்ணி மறந்து எதையும் நான் செய்ய வில்லை அப்படி பேசினுலும் நீர் பொறுத்துக் காத்திடல் வேண்டும என்கின்ருர்.

''மாயையாற் கலங்கி வருந்திய போதும்
வள்ளலுன் றன்னையே மதித்துன்
சாயையாய் பிறரைப் பார்த்ததே யல்லால்
தலைவ வேறெண்ணிய துண்டோ''
''எம்மதநிலையு நின்னருணிலையா
விலங்குத லறிந்தன னெல்லாஞ்
சம்மதமாக்கி கொள்கின்றேறன்றீ
தனித்து வேறெண்ணிய துண்டோ''

என்று பாடி தனது பிரியாத தன்மையை உறுதி படுத்துகின்ருர்.

## வேண்டுகோள்

இறைவன் வள்ளலாரின் உறுதியை கண்டு நேரில் தோன்றி வேண்டிய வரமெலாம் வழங்

கினர். இதனுல் இரும்பூ தெய்திய வள்ளலார் உள்ளம்:-

"துன்பங்களை ஒழித்து விட்டேன்—தூக்கமும் தளர்ந்தேன். சுகம் பெற்றேன். கருத்து மலர்ந்து களிப்புற்றேன். இனி நான் கலக்கமுறேன், வீண் போது போக்கமாட்டேன் அவலம் அச்சம் எல்லாம் ஓடத் துறந்தேன் மரணக் களைப்பும் அற்றேன், பிறவிக்கடல் கடந்தேன். எனது தோலுடற்பு செழும் பொன்னுடம்பாய் திகழ்ந்தேன்" என்று களிப்பால் விம்முகின்றது. பொன்னுடம்பு பெற்ருர்— பிறவிக்கடல் கடந்தார். இதனுல் பெற்ற பெரும் பேரும் இறைவன் ஏன் தன்னை இந்த வுலகில் வரவிடுத்தான் என்பதையும் பாடுகின்ருர்.

அவருடைய அருமையான தூய நெறியைப் பற்றி:

"நிலத்தே யடைந்த விடரனைத்தும்
நிமிடத் தொழித்தே நிலைபெற்றேன்
வலத்தே யழியா வரம்பெற்றேன்
மணிமன் றேத்தும் வாழ்வடைந்தேன்
குலத்தே சமயக் குழியிடத்தே
விழுந்திவ் வுலகங் குமையாதே
நலத்தே சுத்த சன்மார்க்க
நாட்டா நின்றே நாட்டகத்தே"

"அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்
திருந்த வுலக ரனைவரையுஞ்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்
தடைவித்திடவ வரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்
திடுதற் கென்றே யெனையிந்த
உகத்தே யிறைவன் வருவிக்க
வுற்றே னருளைப் பெற்றேனே."

"பெற்றே னென்று மிறவாமை
பேதந் தவிர்தே யிறைவ னெனை
உற்றே கலந்தா னுனவனை
யுற்றே கலந்தே னென்றுனேம்
எற்றே யடியேன் செய்ததவம்
யாரே புரிந்தா ரின்னமுதந்
துய்த்தே யுலகீர் நீவிரெலாம்
வாழ்க வாழ்க துனியற்றே"

மேற் குறித்த மூன்று பாடல்களில் முதல் பாட்டில் தன்னை சமயக் குழியில் விழாமல் தடுத்து எடுத்து சுத்த சன்மார்க்கத்தில் நாட்டம் செலவிடுத்தார் என்பதை கூறுகின்ருர்.

இரண்டாம் பாடலில் இறைவன் வள்ளல் பெருமானை ஏன் இந்தவுலகில் வர விடுத்தார் என்பதை மிக அருமையாகக் கூறுகின்ருர்.

மூன்ருவது பாட்டில் உலகீர் நான் பெற்ற பேறு மிக பெரிது நீவீரும் என்போல் பெற்று இன்னமுதுண்டு வாழ்வீர் என்று வாழ்த்துகின்ருர்.

## சிவாநந்தத் தழுந்தல்

இறைவன் அளித்த அற்புத சித்திகளை எல்லாம் அனுபவித்து பாடுகின்ருர்.

காரண காரிய கல்வி யெலாம் கற்பித்து நாரணன் நான்முகன் முதலோர் போற்ற ஆரண வீதியில் ஆடச் செய்தீரே. போகமெல்லாம் என் போகமாக்கி, ஆகம வீதியில் ஆடச் செய்தீரே சித்தஞ் சிவமயமாக்கி. வானந்த மாதியுங் கண்டு கொண்டழியா வாழ்க்கையில் இன்புற்று சுத்த வேதாந்த வீதியில் ஆடச்செய்தீரே! சுத்த சித்தாந்த அற்புத வீதியில் ஆடச்செய்தீரே தத்துவ மெல்லாம் மென்றன் வசமாக்கி சாகவரத்தையுந் தந்தெனைத் தேற்றி சுத்த நாதாந்த வீதியில் லாடச் செய்தீரே சுத்த சன்மார்க்க நிதியையோதி யோர் சுத்தபோ தாந்த வீதியிலாடச் செய்தீரே யெலாஞ்செய வல்லவோர் சித்திப் புண்ணிய வாழ்க்கையில் நண்ணி யோகாந்த வீதியில் ஆடச் செய்தீரே மன்னுயிர்க்கின்பஞ் செய்கின்ற சித்தியெலாம் தந்து சுத்த கலாந்த வீதியில் ஆடச் செய்தீரே அருளன வீதியில், அருட் ஜோதி வீதியில் ஆடச் செய்தீரே அருட்பெரும் ஜோதி என் ஆண்டவர் நீரே!" என்று பாடி மகிழ்கிருர்

## வாதனைக் கிரங்கல்

இந்த தலைப்பில் வள்ளல் பெருமான் தான் பட்ட கஷ்ட நஷ்டங்களை எண்ணி அந்த கஷ்ட நஷ்டங்களில் இருந்து முழு விடுதலை பெற்று இறைவனின் பெருங்கருணையினை எய்திய இன்பத்தால் மகிழ்ந்து பாடுகிருர்.

நான் துயர்படமாட்டேன், பயப்படமாட்டேன். நான் சாகமாட்டேன், என்கிருர். ஏன் தெரியுமா? அவன் அருளாலே நான் அவனுனேன். அதுமட்டுமல்ல என்னை அவன் வளர்கின்ருன். எனக்கு வேண்டிய அனைத்தும் தந்தான். அவனுடைய பெருங்கருணையை என்னென்பேன் ஆண்டவனே 'அருள்க' என்றேன் என்பதன் முன் அருள் சுரந்தான் என்பதை

அந்நாளி லடிச்சிறியே னம்பலவா யிலிலே
அருளை நினைந் தொரு புறத்தே யயர்ந்தழுது
நின்றேன்
முன்னுளில் யான்புரிந்த பெருந்தவத்தா லெனக்கு
முகமலர்ந்து மொழிந்த அருண் மொழியை
நினைந்தந்தச்
செந்நாளை யெதிர்பார்த்தே பன்னுளும் களித்
தேன்
சிந்தைமலர்ந் திருந்தேனச் செல்வமிகு
திருநாள்
இந்நாளே யாதலி லெனக்கருள்வீ ரென்றேன்
என்பதன் முன்னளித்தீர் னுமாண்புலகிற்
பெரிதே

## திருவடிப் புகழ்ச்சி

அருள் வழங்கிய ஆண்டவன் அத்துடன் நின்று விடவில்லை. அவன் வள்ளல் பெருமான்

உள்ள மெனும் குடிசையில் வலிந்து வந்து அமர்ந்து விட்டான். இதனை சிறப்பித்துப் பாடுகிருர்.

## வரம்பில் வியப்பு

குடிசைக்குள் நுழைந்து அங்கேயே கொலு வீற்றிருக்கும் இறைவனை—வரவேண்டாம் என்று தானே—போக வேண்டாம் என்று பிறரோ தடுக்க இயலுமா? என்று இயம்புகிருர்.

இப்படி இறைவன் குடிசையில் அமர்ந்து இருப்பதை கண்டு கண்டு களிக்கின்ருர். பார்த்துப் பார்த்துப் பரவசமடைகின்ருர், பாடிப்பாடி இன்பத்தில் திளைக்கின்ருர்.

இறைவனை அழைத்தார்—இறைவன்வந்தார் அருள்புரிய வேண்டினுர்—அருள் புரிந்தார். உள்ளமென்னும் குடிசையில் புகுந்து அமர்ந்தார். அவர் அழகைக் கண்டார்—காணக் காண மனம் கனியத் தொடங்குகிறது. கனிந்து கனிந்து உருகுகிறது இறைவனிடம் உயிர் கலந்து களிக்கிறது.

இதனை

மருணெறிசேர் மலவுடம்பை யழியாத விமல
வடிவாக்கி யெல்லாஞ்செய் வல்லசித்தாம் பொருளைத்
தருணமது தெரிந்தெனக்குத் தானே வந்தளித்த
தயாநிதியை யெனையின்ற தந்தையையென் ருயைப்
பொருணிறை சிற்றம்பலத்தே விளங்குகின்ற பதியைப்
புகலரிதாஞ் சுத்தசிவ பூரணமெய்ச் சுகத்தைக்
கருணையருட் பெருஞ்ஜோதிக் கடவுளையென் கண்ணுற்
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்து கொண்டேன் களித்தே

## அச்சோபத்து

எம்மானைக் கண்டேன். களித்தேன் என்று கூறிவிட்டதுடன் அமையவில்லை. 'அருட்பெருஞ் ஜோதியைப் பெற்றேன்' என்று கூறிக் கூறி அதிசயிக்கிருர்.

''சாதியைநீள் சமயத்தை மதத்தையெலாம் விடுவித்தென்றனை ஞான
நீதியிலே சுத்தசிவ சன்மார்க்க நிலைதனிலே நிறுத்தினனைப்
பாதியையொன் ருனவனைப் பரம்பரனைப் பாராபரனைப் பதியனாதி
ஆதியை சிற்றம்பலத்தென் அருட்பெருஞ் ஜோதியைப் பெற்றே னச்சோ வச்சோ

## சிவாநந்த நிலை

இந்தத் தலைப்பில் பத்துப் பாடல்கள் உள. அவற்றில் இறைவனைப் பழம் என்கின்ருர்—அதுவும் துன்பம் கலவாத பழம்—இன்பப்பழம் என்கின்ருர். அதுவும் சாதாரண இன்பமாக இல்லாத—பேரின்பப் பெருங்கனியாக வள்ளலார் உள்ளத்தில் கனிந்ததாக கூறிக் களிக்கின்ருர்.

## ஆற்ருமை கூறல்

இப்பிறப்பை மெய்பிறப்பாக்கினுய்-அழியாத திருவுரு அளித்தாய்—மெய்பயன் அளித்தாய் பெரு நலமளித்தாய்; என் புரிதன்னை பொன் புரியாக் கினை என்று பாடிப் பரவுகிருர்.

இன்னும்,

இப்படிப்பட்ட உன்னை—எப்படிப் புகழ்வேன் இறைவா! 'துன்பமெலாம் தவிர்த்த துணைவா என்று கூறட்டுமா? சேயனேன் பெற்ற சிவபதமென்று புகழ்வதா? எனது நேயன் என்பதா? என் உளம் விரும்பிய நகை முகம் காட்டும் நாயகன் என்பதா? போகம் உள் விரும்பும்போது வலிந்து புணர்ந்த ஒரு பூவை என்பதா?

என்று பாடி இன்புறுகிருர்.

## திருநடப் புகழ்ச்சி

படிப் படியாக காணுத காட்சிகளை காட்டுவித்த இறைவன்—அறியாத அனுபவங்களை அறிவித்த இறைவன்—நுகராத இன்பங்களை நுகரவைத்த தெய்வம் இப்போது உள்ளத்தே கூத்தாடுகின்றது. அந்தக் கூத்து திருக்கூத்து. அதுமட்டுமல்ல சுத்த நடம்—அப்படி புரியும் பெருமான் யார் தெரியுமா? அவர்தான் சித்த சிகாமணி என்கின்ருர்.

அந்த ஆடும் அழகனைப் பாடிப் பரவுகிருர். ஆண்டவனே! நான் எருதுபோல் உழைத்தேன்—மாடுபோல் உழன்றேன்—இப்படிப்பட்ட என்னை நான் இருக்கும் இடத்திலேயே வலிந்து வந்து ஆண்டாய்? ஒருநாள் இரட்டை ஜோடி குதிரை பூட்டியத் திருத்தேர் ஒன்றில் என்னையுடைய தாயார் தயாபரியுடன் என்னை நெருங்கினுய். நான் மிகவும் பயந்து உள் வாயில் தாளைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தேன். என் நிலையை கண்டதாங்கள் ''பயப்படாதே வருக'' என்று கரங்களை அசைத்து அழைத்தீர் நான் நெருங்கினேன். தாங்களோ

அகவடிவை ஒருகணத்தே யனகவடி வாக்கினீர். அருளமுதளித்தீர், படிக்கடி யென்னுளத்தே முகவடிவை காட்டிக் காட்டி களிக்கச் செய்தீர். முடிவனைத்தும் உணர்த்தினீர். சகவடிவில் தானுகி நானுகி நானுந்தானும் ஒருவடிவாகி தனித்து ஓங்கப் புரிந்தீர்—சுகவடிவம்தனை அளித்தீர்—துணயே''
என்று பாடுகிருர்.

வேறு ஒருநாள் உடுததிருந்த ஒரு துணியை அவிழ்த்து தரையில் விரித்து பசியுடன் மனம் நொந்து கலக்கத்துடன் படுத்து அயர்ந்தேன். அப்போது ஆண்டவனே நீர் சிறுவன் முன் எழுந்தருளி ''மகனே ஏன் பயப்படுகின்ருய்? என்று பரிவுடன் கூறி திருக்கரத்தால் வாரி

எடுத்து அணைத்துக் கொண்டு வேறு ஒரு நல்ல இடத்தில் அமர்த்தி அருள் வழங்கிய தெய்வமே'' என்கிறார்,

'' எருதினுலை மழத் திருந்தேனுக் கிரங்கியடிச்
சிறியேன்
இருந்தவிடந் தனைத்தேடி யணைப்பரிமா
னீர்க்கும்
ஒரு திருத்தே ரூர்ந்தென்னை யுடையவளோ
டடைந்தே
உள்வாயிற் றிழ்பிடித்துப் பயத்தொடுநின்
றேனை
வருதியெனத் திருக்கரங்க ளதைச்சதழைத்த
பதியே
மணியேயென் மருந்தேயென் வாழ்வேயென்
வரமே
சுருதிமுடி யடிக்கணிந்த துரையேயென் னுளத்தே
சுத்த நடம்புரிகின்ற சித்த சிகாமணியே: ''

'' உடுத்ததுகி லவிழ்த்துவிரித் தொருதரையிற்
றனித்தே
உன்றுது முன்னியுளத் துறுகலக்கத் தோடே
படுத்தயர்ந்த சிறியே னருகணைந்து மகனே
பயமுனக்கென் னென்றென்னைப் பரிந்துதிருக்
சரத்தால்
அடுத்தணைத்துக் கொண்டெடுத்துப் போய்
பிரிதோரிடத்தே
அமர்த்தி நகைத்தருளிய வென்னுண்டவனே
யரசே
தொடுத்தணியென் மொழிமாலை ளணிந்து கொண்
டென் னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்த சிகாமணியே

என்று ஊனுருக—உள்ளுருக தன் அநுபவங்களை வெளியிடுகிறார்.

## ஆனந்த நித்திரை

தூச்கம் தவிர்ந்தார்—தூயவரானார் என்பதை பாடிக்காட்டுகிறார். தான் இறைவனிடம் பெற்ற வொருமையைப் பற்றி எண்ணி எண்ணி மகிழ்கிறார். ஆங்காரம் தவிர்ந்தருளி ஓங்கார நிலை காட்டி அதன் மேல் ஒளிரும் நிலையும் காட்டினார் என்றும், எந்தப் பதத்தலைவரும் படைக்க ''வொணாச்சித்தியை நான் படைக்க வைத்த பதியே'' என்கின்றார். முடிவாக,

'' எண்ணமெலாங் களித்தளித்த வொனுன்ரி மைப் பதியே சினந்தவிர்ந்தெவ் வுலகமுமோர் சன்மார்க்க மடைந்தே சிறப்புற நடத்த அருள் கின்ற சித்தசிகாமணியே ''
என்று பாடுகிறார்

## திருவருட் புகழ்ச்சி

இதில் ஆண்டவர் இந்த அடிமையின் பொருட்டு இந்த உலகில் தாங்கள் கருணை உரு தாங்கி வந்து அருளினை—சாகாத சித்தை நல்கும் சுத்த சன்மார்க்கம் வழங்க நல்வரமளித்தாய் என்பார்.

## திருவருட் பெருமை 1

'' ஆண்டவனின் அருட் பெருமையைப் புகழ்ந்து புகழ்ந்து வியந்து வியந்து வாழ்த்துகின்றான் என்பிழைகளை பொறுத்த பெருமானே கருகிடும் நெஞ்சத்தை துளிர்விடச் செய்தாய்—அருள் ஜோதியை வழங்கினை உன் பேருள வாழ்வதாக— நினது மாண்பு மலர்வதாக: '' என்று வாழ்த்துகின்றார்.

## திருவருட் பெருமை 2

இதிலும் இறைவனைப் புகழ்கின்றார். எடுத்துக் காட்டுக்கு ஒரு பாடல் போதும்:-

'' முன்பே யென்றனையே வலிந்தாட்கொண்ட
முன்னவனே
இன்பே யென்னுயிரே யெனையீன்ற
விறைவனே
பொன்பே ரம்பலவா சிவ போகஞ்செய்
சிற்சபைவாழ்
அன்பே தந்தனை யருளமுர தந்தனையே ''

## அனுபவ ஈடு

தான் இருந்த நிலை, இருக்கும் நிலை ஆகிய இரண்டினையும்—அநுபவவாயிலாக உணர்ந்ததையும் பாடிக்காட்டுகிறார்:

தெருவில் கலந்து விளையாடிய சிறியேனுக்கு மெய் ஞானசித்தி அளித்த கருணை தெய்வமே! நான் உண்பேன், படுத்து உறங்குவேன், பின்னர் எழுவேன்—கதைப் பேசியே காலம் கழிப்பேன், இவை மட்டோ உனை அடைய நோன்பும் நோற்றேன். அந்த நோன்பு உடம்பு நோகாத நோன்பு உள்ளத்தை அடக்காத நோன்பு. இப்படிப்பட்ட எனக்கு ஐயநீ சாகாவாழும் சித்தியெலாந் தழைத்த நிலையுஞ் சன்மார்க்க சங்க மதிப்பும் கொடுத்தாய் என் சதுர்தான் பெரிதே அன்றோ! என்று பெருமைப் பட்டுக் கொள்கிறார்.

## கைம்மாறின்மை

தேவா! உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். கருணை மழை பொழிந்து மயக்கம் தீர்த்தாய் தீது பொறுத்து திருவருட் பெருமை தந்தாய். இருமையும் ஒருமை தன்னிலே ஈந்தாய்; உன் பெருமையை என்னவென்று பேசுவேன்; பேதம் பாராமல் உரிமையுடன் நீயும் நானும் ஒன்றாகி கலந்து கொண்ட ஒருமையை நினைக்கின்றேன். உள்ளம் தழைக்கின்றேன். உனக்கு என்ன கைம்மாறு செய்ய போகின்றேன்.

அதுமட்டோ! எனக்கு சாகாவரத்தை தந்தாய் எழு வேதனையும் தவிர்த்தாய், ஏழ்நிலை மேல்னிலை ஏறிவிளங்குகின்றேன். ஊழால்வரும் துன்பங்கள் யாவும் ஒழிந்தேன் நின் பாதமென்னும் வாடாமலர் என் தலையில் குட்டினாய் சுத்த நல் உடம்பு அளித்தாய். இவ்வுலகத்தில் களித்து மகிழ்கின்றேன் என்றுபாடி இன்புறுகிறார்.

அளித்தாய். வாழிஎன் ஆண்டவனே நீ! சன் மார்க்க பெருநெறியும் மாண்பு கொண்டு வாழி! இந்த வையம் வானம் யாவும் வாழி! என்று வாழ்த்துகின்ருர்.

## குறையிரத்தல்

ஆண்டவனே அபயங் கொடு! நான் ஆனந் தம் கொள்ளற்கு அபயங் கொடு. என்றேன் தூக்கம் கெடுத்து சுகம் கொடுத்தான். இன்புருவம் தாங்கினேன்—சாகாத தனிவடிவம் பெற்ற ஒளி யால் ஓங்கினேன். இஃது பொய் அன்று உண்மை உரை என்று சத்தியம் செய்கிருர்.

## தத்துவ வெற்றி

தனது கருவிகரணங்களை அடக்கி ஆளவும்-அதன் கொட்டத்தை அடக்கவும் தான் யார் என்பதனை அந்தத் தத்துவங்களுக்கு உணர்த்து கின்ருர்!

ஏ தத்துவங்களே! மனமே, மயங்கும் புத்தியே, கலையறியாச் சித்தமே, ஆங்காரமென் னும் அடவாதிப் பயலே, மானென்றும் சகச்கால சிறுக்கியே, மாயை என்னும் படுதிருட்டுச் சிறுக் கியே, கன்மம் கடும் கலசப் பயலே—ஆணவம் என்றிடுமோர் இருட்டறைக்கோர் அதிகாரக் குருட்டுப் பயலே! திரோதாயி என்னும் பெண்மட வாய், தூக்கம் என்னும் கடைப்பயலே—பய மெனும் கொடும் பாவிப்பயலே, கோபம் என்னும் புலைப் பயலே, உலோபப் பயலே, காமவலைப் பயலே, மோகக் கடைப்பயலே, குறும்பு மதப் பயலே, மாற்சரியப் பயலே—பசி என்னும் பாவிப் பயலே, துன்பு எனும் படுபாவிப் பயலே, ஆபத்து எனும் பொய்ப்பயலே, அவத்தைக் கடைப் பயலே, தடைப் பயலே, இடராம் வன்பயலே மரணம் எனும் திருட்டு மாபாவிப் பயலே எனும் நீங்கள் அனைவரும் வையத்தை தாண்டி - வானத்தைத் தாண்டி, அதற்கப்பால் உள்ள பேரிட்டுப் பெரிய நிலம்தாண்டி பரையற்று நீவிர் ஒழிந்து போங் கள். இல்லையேல் உங்களை அழித்து ஒழித்து விடு வேன். நான் ஏதோ சொல்கின்றேன் என்று கரு தாதீர் என் குருமேல் ஆணை, அறிந்து கொள் என்னை யார் என்று புரிந்து கொள்ளாமல் உங்கள் கைவரிசைகளை காட்டாதீர். யான் யார் தெரியுமா?

திருவளர் பேரருளடைய—யெல்லாம் செய்ய வல்ல தனித்தலைமை சித்த சிகாமணியான அருட் பெருஞ் ஜோதி எனும் பேருடைய ஒருவன் இருக் கின்ருனே அவன் தான் என்னைப் பெற்றவன்—தான் தான் அவனுடைய பிள்ளை என்று நான் மட்டும் கூறவில்லை. இதனை பெரியவர்கள் எல்லாம் அறிந்து கூறுகின்ருர் அதுமட்டோ நானே அறிவிக்கி றேன்.

ஞான சபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே, பெரிய தனித்தலைவனுக்குப் பெரியபிள்ளை நானே, சிற்சபை வாழ்பதி தனக்கே யருட்பட்டம் அளித்தபிள்ளை நானே. செல்வாக்குப் பெற்ற பிள்ளை நானே, எல்லாஞ் செய்ய வல்லவனுக் கினியபிள்ளை நானே, ஆண்டவன் தன் தாண்ட வங் கண்டமர்ந்த பிள்ளை நானே, சுத்தசிவ சன்மார்க்கம் பெற்ற பிள்ளை நானே, இறைவனருட் ஜோதிக் கினிய பிள்ளை நானே, அருளமுதுண்ட ருள் நிலை மேலமர்ந்த பிள்ளை நானே, சிற்சபை யப்பனுக்குச் சிறந்தபிள்ளை நானே. அம்பலத் தென் அப்பர் அருள் நம்புபிள்ளை நானே, தனித் தலைவன் தலைப்பிள்ளை நானே. அருட்பெருஞ் ஜோதியை யடைந்த பிள்ளை நானே என்று தான் பெற்ற பிள்ளைப் பேற்றை தத்துவ மூர்கர்களிடம் கூறி மிரட்டி அவற்றை ஓட்டுகிருர்.

## சத்திநிபாதத்தடைவு

மகன் என்று உரிமை பாராட்டிய வள்ளல் பெருமானுக்கு ஆண்டவன் மணம் புரிந்து மகிழ வைப்பதை இங்கே கூறுகின்ருர்.

"தூங்காதே! என்மகவே, தூய நீராடுக, பாங்குற வோங்கும் மங்கல கோலம் பண்பொடு புனைந்துகொள் இன்னும் இரண்டரை கடிகையில் அருள் ஒளித் திருவை எழில்உற மணம் புரிவிப் பாம் ஏங்கலை! இது நம ஆணை. "என்ருர். இத்துணைச் சிறப்பும் இன்பமும் வள்ளல் பெரு மான் பெற்ருர்.

## சுத்தசிவநிலை

சுத்த சிவ நிலையை அடைந்தார். இந்த நிலையில் இருந்து உலகை நோக்குகிருர். தன் நிலையை நோக்குகிருர். அவைப் பாடல்களாக உதிர்கின்றன.

சுத்த வடிவம், சுகவடிவம் ஓங்கார நித்த வடிவம் நிறைந்து ஓங்கும் சித்தன் என்றும் ஓர் ஞான வடிவம் பெற்றேன், துன்மார்க்கம் தொலைத் தேன், சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றேன். இதனை நான் மார்க்கம் என்று வான நாட்டவர் புகழ்கின் றனர். எனவே மக்களே இனியும் நீர் வேத ஆகமம் என்று வீண்வாத மிடாதீர் அவை நமக்கு நன்மை பயக்கா! மார்க்கங்கள் நமக்கு நல்ல மதிப்புதராது. மார்க்கம் என்பது ஒன்று தான். இதனை மாநிலத்து மக்களே உணருங்கள். ஏமாராதீர்கள் சாகாத வாழ்வு பெற்று உய்ய வேண்டில் அருட்பெருஞ் ஜோதி இறைவனைக் சார்வீர். என்று உபதேசம் புரிகிருர்.

## அந்தோப் பத்து

இதிலும் இறைவனின் அருட் கொடை யினையே வியந்து பாடுகிருர். எனக்கு அருட் ஜோதி அளித்த இறைவன் சாதி மதம் சமய முதல் சங்கற்பவிகற்ப மெலாந் தவிர்த்து ஆதி நடம் புரிகின்ருன். அந்தோ! அந்தோ! என்றும் எந்தக் காலத்தும் எந்த இடத்திலும் எதனுலும் மாய்வில்லாத அருள்வடிவை இம்மையிலே யடைந்திடப் பெற்றேன். ஆடுகின்றேன் அந்தோ! அந்தோ! ஈதென்னே அதிசயம்.

## உலகப் பேறு

அருட்பெருஞ்ஜோதியார் என்னுள்ளத்தில் கலந்தார். அதனுல் இன்று நான் காணுகின்ற உலகம் பெரும்பேறு பெற்ருதாய் உளது. இன்பங்

கள் விளங்கின—துன்பத்தால் இறந்தவர் எழுந்து மகிழ்ந்தனர். பாம்பெலாம் ஓடின. பறவையுள் சார்ந்தன. உலகர் வானவராயினர்—வளம் பெறும் சுத்த சன்மார்க்கம் சிறந்தது. மனிதர்கள் பண்புள்ளவர்களாயினர்—முன்னிருந்த மார்க்கங்கள் யாவும் முடிந்தன. மன்றுள சுத்த சன்மார்க்கம் சிறந்தது. விடம்பெற்ற வுயிரெலாம் விடமற்று வாழ்ந்தன. மடம் பெற்ற மனிதர்கள் மதி பெற்று வாழ்கின்றார். குணங்கள் சிறந்தன. குற்றங்கள் அற்றன. எங்கும் இன்பம் எல்லாம் இன்பம் என்று பாடிப்பாடி மகிழ்கின்றார். இறைவன் நிறை அருளை பெற்ற வள்ளல் பெருமானுக்கு உலகை, மக்களை, உயிர்களை குற்றக் கண் கொண்டு காணவும், அழிவுக்கண் கொண்டு நோக்கவும் மனமில்லை என்பதல்ல அவர்களுக்கு எல்லாம் நல்லதாய்—அருள் செயலாய் தெரிகின்றன. எனவே அவர் உயர்ந்த உலகை கண்டு மகிழ்கின்றார்—நமக்கும் காட்டி மகிழ்கின்றார்.

## திருக்கதவந் திறத்தல்

தடைகளை நீக்கித் திரைகளை நீக்கித் திருவுரு காட்டுக! என்று பாடுகின்றார்.

கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண் முடிப்போக என்று சபிக்கின்றார். வேதநெறி ஆகமத்தின் நெறி பௌராணங்கள் விதித்தநெறி முழுதும் ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி உள்ளதனை உள்ளபடி உணர உணர்த்தினையே'' என்றும் கூறுகின்றார்.

கூறுகின்ற சமயமெலாம் மதங்களெல்லாம் பிடித்தே கூவுகின்றார். பலன் ஒன்றும் கண்டறியார், நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார் அவர் போல் நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனே.'' என்கின்றார்.

அதனால் இறைவா எனவே இத்தருணம் திருக்கதவம் திறந்து திருவருட் பேரொளி காட்டு. என் உடல் உயிர் எல்லாம் கலந்து காவலரை பாரைப்பவை யெலாம் கடந்து திருப்தியுடன் விளங்கி அருளாடல் செய்ய வேண்டும் என்று வேண்டுகிறார்.

## பிள்ளைச் சிறு விண்ணப்பம்

நெஞ்சை யள்ளும் பகுதி—உள்ளத்தை உருக்கும் பகுதி—ஆண்டவனிடம் விண்ணப்பம் செய்யும் ஒப்பற்ற ஒரு பகுதி.

தடித்த மகனை அன்னை அடித்தால் அப்பன் அணைப்பான். அப்பன் அடித்தால் அன்னை அணைப்பள். நீதானே என் அன்னையும் அப்பனும் எனவே என்னை அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்.

இறைவா எனக்கு பணத்திலே ஆசையில்லை நான் படைத்த பணத்தை குளத்தில், கிணற்றில், வீட்டுக் கூரையி லெறிந்தேன்.

சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் இவற்றில் எனக்கு ஆசையில்லை. பிரம்ம, வைகுந்த, சிவ பதங்களைப் பெறவும் நான் விரும்பவில்லை. இறக்கவும், படிமிசை இருக்கவும், பிறக்கவும் ஆசையில்லை. பெரியவன் பெரியவன் என்றுசிறக்கவும் ஆசையில்லை விசித்திரங்கள் செய்யவும் — இறக்கவும்—படிமிசை துறக்கவும் ஆசையில்லை, துயரடைந்து தூங்கவும் ஆசையில்லை.

ஆனால் இறைவா! என் ஆசை என்ன தெரியுமா? சற்சபைக் குரியவர்களுடன் கூடி தனித்த பேரன்பு காட்ட வேண்டும், மெய்யறிவு பெற்று நற்சபைக்கு உரிய ஒழுக்கமும் அழியாத நல்ல வாழ்க்கையும் உலகத்து உயிர்களுக்கு யெல்லாம் இன்பம்செய்வதும்என்ஆசை கண்டாய். பிறருக்கு இடுக்கண் உற்றால் அதனைத் தீர்த்தே திருமணிப் பொதுவில் அன்புடையவராகச் செய்ய எனக்கு ஆசை. எல்லா வுயிர்களையும் என் உயிராகக் கருதி அவைகட்கு நல்லின்பத்தை நல்கவும், அவர்களுக்கு உற்ற துயர்களை ஒழிக்கவும் ஆசை காண் எந்தாய் எனக்கு உலக அறிவு தொடங்கிய நாள் முதல் இன்று வரை என்னோடு பழகி. என்னை நண்ணி எண்ணி, பின்னர் விலகிய மாந்தர் அனைவரும் ஒன்றாகக்கூடி உன்னையே அன்பினால் போற்றி வாழ்த்திடவும் அடியேன் இச்சை எந்தாய்.

தங்கம் அனையார் கூடிய சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தில் நானும் நினைபாடி அழியாமல் விளங்க ஆசைப்பட்டேன். கருணையே வடிவாகக் கொண்டு மற்றவர்களின் துயரம், பிணி, பசி, ஆகியவற்றை நீக்கவும், புலை, கொலை, இரண்டும் ஒழிந்து உலகம் சிறக்கவும் எனக்கு ஆசை இறைவா! இந்த நிலவுலகில் உயிர்கள் வருந்துவது கேட்டு நான் சிறிதளவும் மனம் பொறேன். சகியேன். எனவே நான் நினைக்கும் போதெல்லாம் அந்த வருத்தத்தை நீக்கி அவர்களுக்கு நல்லவாம் நல்கவே எனக்கு ஆசை.

இது போன்றவைகளில் அன்றி எனக்கு வேறெதிலும் ஆசையில்லை எனவே என் உயிர்க்கு உயிராம் தெய்வமே இந்த என் விண்ணப்பத்தை கேட்டு அருளே!

## பிள்ளைபெறுவிண்ணப்பம்

சிறு விண்ணப்பம் செய்த வள்ளல் பெருமான் அத்துடன் அமையாமல் திருப்திபெறுமல் பெரு விண்ணப்பம் விண்ணப்பிக்கின்றார் அதில் இரும்பினும் வலிய மனத்தினேன் செய்த பிழையைப் பொறுத்து கரும்பும் முக்கனியும் பாலும் அமுதோடு செழுந்தேனும் கலந்தது என இனிக்கின்றாய்! அருள் கூர்ந்து என் சிறு மொழியை கேட்டருள்வீர்!

இறைவா! என்னை அடுத்தவர் நேயர் சூழ்ந்தவர் உறவினர், தாய், உடன் பிறந்தோர், அயலவர் எனும் இக் குறிப்பினர் முகங்களில் இளைப்பு தோன்றிய போதெல்லாம்; பசியினால் பிணியினால் மெய்யுளம் வெதும்பிய வெதுப்பை பார்த்த போதெல்லாம்; வறுமை சங்கட பாவியால் வருந்திய போதெல்லாம்; முதியவர், இளையர் மற்றவர் எனக்கு நண்பன் என்றுஉள்ளவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட குறைகளை உரைத்த போதெல்லாம் என் உள்ளம் கலங்கிய கலக்கம், பயந்து என்

மனம் பதைத்த பதைப்பு நடுங்கிய நடுக்கம்; எல்லாம் நின் திரு உள்ளம் அறியும்.

பணம் படைத்தோர், ஏழைகள், மடவார் ஆடவர் ஆகியோர் நோய்வாய்ப்பட்டு ஆவி தளர்கின்றனர். உயிர் போகும் தருணமிது என்று சொன்ன போதெல்லாம், ஒருசிலர் மடிந்தனர் என்று கேட்ட போதெல்லாம்; என் குலை நடுங்கிய நடுக்கம் நீ அறிவாய். வீதியில் நான் செல்லும் போது மனிதர் ஆவி நீத்தனர்; அது கண்டு உறவினர் அழுகின்ற குரலைகேட்ட போதெல்லாம் என் உள்ளம் பகீரென நடுங்கி பத்தைத்ததை நின் உள்ளம் அறியும்.

எனக்கு வேண்டியவர், பெற்றதாய், உற வினர், துணைவர் ஆவிநீத்ததை நினைத்து என் உள்ளம் நடுங்கியது. நெறியில்லா நெறிச் சென்று கொலை புரிந்திட்ட கொடியவர் இவர் என்று மற்ற வர் சொன்னபோதெல்லாம் கொடுந்தீ என் வயிற் றில் புகுந்தது என நடுங்கி வெகுதூரம் ஓடி கண் களை மூடி துயர்ந்ததும் நீ அறிவாய்.

உலகை ஆளுகின்ற மாமன்னர்கள் வாள் கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கி உயிர் அறச் செய்கின்றனர் என்பதனைக்கேட்டு நடுங்கி அயர்ந்தேன்.

பல்லிகள் கீச்சிடும்போது இந்தக் குறி யாருக்கு என்ன தீங்கு செய்திடுமோ என பயந் தேன், கூகை வெங்குரல் கேட்டு, புலியின் குரல் கேட்ட பசு போல் பயந்தேன். காக்கைகள் கூவ கலங்கினேன். பருந்தின் கடுங்குரல் கேட்டு உளங்குலைந்தேன். தாக்கிய ஆந்தை குரல்செய பயந்தேன். சாக்குர பறவையால் பயந்தேன். பாம்பைக் கண்டபோது உள்ளம் நடுங்கினேன். சோம்பலால் வருந்தியபோது, பகலில் தூங்கிய போதும் தூங்கி எழுந்த போதும் நான் பயந்ததை நீ அறிவாய்.

கோபமே வருமோ, காமமே வருமோ, கொடிய மோகங்களே வருமோ, சாபமே யனைய தடைமதம் வருமோ, தாமதப் பாவி வந்திடுமோ, பாபமே புரியும் லோபமே வருமோ, பயனில் மாற் சரியம் வந்திடுமோ, தாப வாங்காரமே யுறுமோ வென்றைய நான் றளர்ந்தது மறிவாய்.

இறைவா! நின் கோயிலுக்குள் புகுந்து நினது காட்சியைக் காணுகின்ற போது எனது மனம் வயப்படாமல் வேறு இடத்தில் சென்று விடுதலை அறிந்து நான் எவ்வளவு வருந்தினேன் தெரியுமா? பயத்துடன் திரும்பி பருத்த என் உடலைப் பார்த்திடவும் அஞ்சி கண்களை மூடிக் கொண்டு தூங்கினேன். வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு ஆற்றமல் உள் நடுங்கி எலும் பெலாம் கருக இளைத்தேன், தர்க்கவாதிகள் வந்து என்னுடன் தர்க்கம் செய்தபோதெல்லாம் வருந்தினேன்.

பொருளில் உலகம் இருக்கிறது. அதனல் நான் பொருள் உள்ளவரிடம் போவதில்லை. ஏன் தெரியுமா? அவர்களிடம் பலதடவை நான் சென் றல் பணஆசையால் போவதாகச் கருதி என்னை வெறுப்பர் என்று பயந்தேன். நான் இந்தக் கைகளை கட்டியே நடந்தேன்-கைவிசி நடக்க நாணினேன்-உடம்பை வெளியில் காட்ட பயந்து அதனை வெள்ளுடையால் மறைத்தேன் நகரில் அழகுடைய பெண்கள் வலிந்து என் கைப்பிடித்து இழுத்தும்சைகைகள் உணத்தியும், சரச வார்த்தை களால் தனித்து எனைப் பலவிசை யறிந்தும், பொய்யை மறைத்து சத்தியம் கூறியும், மேல் விழுந்தும், பொருள் முதலிய கொடுத்து என்னை விரும்பியும் நான் கைக்கலப் பறியேன்—நடுங்கி னேன், அவர்களைக் கடிந்ததும் இல்லை.

எளியோரை வலியோர் அடித்த போதும் கலங்கினேன். இரவிலே கள்வர் கொள்ளை அடித் தார் எனக் கேட்டுக் கலங்கினேன். வாடிய பயிரைக் கண்டு வாடினேன். பசித்தவர்களைக் கண்டு வருந்தினேன்-மானமுள்ள ஏழைகளை கண்டு நெஞ்ச மிளைத்தேன். சிறு தெய்வங் களுக்கு பலிதர ஆடு, பலிக்கடா, கோழி முதலிய உயிர்களை அலங்கரித்து அழைத்து செல்வதை கண்டு பயந்தேன்-அந்தச் சிறுதெய்வ வெங் கோயில் கண்டு உளம் பதைத்தேன். கொடி யவர்கள் பிறவுயிரைக் கொல்லத் தொடங்கியது கண்டு பயந்தேன் உயிர்கள் பதைப்பதை கண்டு பதைத்தேன். தூண்டில், வலை, கண்ணி வகைகளைக் கண்டு கலங்கினேன் உயர்ந்த அணைகளில் இருக்கவும், காலின் மேல் கால் வைக்கவும் பயந்தேன். இவையனைத்தும் இறைவா நீ அறிவாய்.

நான் இப்படி பயத்தோடு துயரோடு இருப்பது அழகா? இந்தக் குறையை நீக்கி அருளாய்! என் உயிர் இரக்கத்தால் ஆனது. இரக்கம் இல்லையேல் எனது உயிரும் இல்லை. நீதானே என்னையும் இரக்கம் தன்னையும் ஒன்றுக வைத்தாய். இறைவா! எனது பன்னிரண் டாவது வயது முதல் இன்று வரை நான்பட்ட துன்பமெலாம் சொல்லி முடியாது. அவை உனக்கே தெரியும்.

தேவா! மேலே யான் குறித்த பயம், இடர் துன்பம், யாகியவையெல்லாம் என்பொருட் டல்ல. பிறர்பொருட்டேயாம் உன் அடிய வனுகிய எனக்கு எதிலும் ஓர் ஆசையில்லை, பயமும் இடருமில்லை. ஆனல் பிறர்பால் எனக்கு ஏற்பட்டகருணையே அந்தத் துயரங்களை எனது துயரங்களாக ஏற்று வருந்தச் செய் கின்றது.

எனவே என்வருத்தம்தீர, அவர்களின் வருத்தம் தீர்த்து வாழ்வளிப்பீராக-அப்படி செய்வீராயின் நான் தரிக்க மாட்டேன். எனவே இன்பம் அருள்க. கருணைக் கடலிலே பேரின்ப வல்லியை மணந்த வள்ளலே சிற்சபை யில் நடம் புரியும் வாழ்வே!

## சுத்த சன்மார்க்க வேண்டுகோள்

தனக்கு எவை எவை வேண்டும் என்பதை இந்த தலைப்பின் கீழ்வேண்டுகிருர். இதில் வள்ளல் பெருமானின் பரந்த நோக்கம்-அன்பு உள்ளம் என்பது மிகநன்ருகத் தெரிகிறது.

என் தந்தையே நான் வேண்டுவது அளித்து வாழ்விப்பீராக! எனது வேண்டுகோள் யாதெனின் ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செய்ய வேண்டுகிறேன். நான் எல்லா உலகிற்கும் சென்று தங்களின் பெரும் புகழைப் பேசியிடல் வேண்டும் பொய்யாத வாய்மைகளே புகன்றிடுதல் வேண்டும். அருட்ஜோதி எனையுறல் வேண்டும்-நையாத வண்ணம் உயிர் காத்திடல் வேண்டும் அழியாத தனிவடிவம் யானடைதல் வேண்டும் - உயிர்களுக்குறும் துயர் தவிர்த்தல் வேண்டும் செத்தாரை மீண்டும் இங்கே வருவித்தல் வேண்டும். ஒத்தாரும் உயர்ந்தாரும், தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளராகி உலகியல் நடத்தல் வேண்டும்- எவ்வுலகமும் ஓர் ஒழுக்கமுறல் வேண்டும். கொலைநெறியும், புலைநெறியும் சிறிதும் பொருந்தாமல் எவ்வுயிரும் புரிந்து னுவத்தல் வேண்டும் எவ்வுலகத்து எத்தேவரும் எவ்வுயிரும் சுத்த சிவசன்மார்க்கம் பெற்றிடுதல் வேண்டும். எனை அடுத்தார் தமக்கெல்லாம் இன்புறுதல் வேண்டும். நானும் நீயும் கலந்தே விளங்குதல் வேண்டுவனே'' என்று தனது வேண்டுகோளை இறைவனிடம் கூறுகிறார்.

## ஆன்மதரிசனம்

இதில் ஆண்டவனிடம் கீழ்கண்டவாறு உரைக்கின்றார்:-

'சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன், சாத்திரக் குப்பையுந் தணந்தேன், நீதியும் நிலையும் சத்திய மெய்ப் பொருளும் நித்திய வாழ்க்கையும், சுகமும், ஆயியும், நடுவும் அந்த முமில்லா. அருட்பெருஞ் ஜோதியென்றறிந்தேன்'

தேவா! பித்தெலாம் உடைய உலகர்தம் கலகப் பிதற்றெல்லாம் என்று ஒழிந்திடுமோ—சத்தெல்லாம் ஒன்றென்றுணர்ந்த சன்மார்க்க சங்கம் என்று ஓங்குமோ. கள்ள வாதனைக் கலைந்து அருள் நெறியைக் காதலித்து உள்ளவாறு இந்த உலகெலாம் களிப்புற்று ஓங்குதல் என்று வந்து உறுமோ! வள்ளலே அது கண்டு அடியனேன் உள்ளம் மகிழ்தல் என்றோ என்று துயர்ந்திருந்தேன். ஒளிமய மானவனே இஃது உனது திருவுளம் அறியுமே அறிந்ததை நான் அடிக்கடி உணர்த்திடல் வேண்டுமோ.

## சித்திவிளைவு

நெஞ்சே நீ அஞ்சேல்! நீ பெற்ற பேறு பெரிது என்று கூறுகிறார். என்னுழைப்பால் நான் உயர்ந்தேன். என்று கூறுவது உலக வழக்கு. ஆனால் அஃது சரியன்று. மனித முயற்சியையும் முடித்துத் தரும் முதல்வன் இறைவன் தான் என்பதை.

முன்னுழைப்பா லுறுமெனவே மொழிகின்றார்
மொழியின்
முடிவறியே னெல்லாஞ் செய் முன்னவனே
நீயென்
தன்னுழைப்பார்த் தருள்வாயே
லுண்டணைத்து மொருநின்
தனது சுதந் தரமேயிங் கெனது சுதந்
தரமோ
என்னுழைப்பா லென்பயனோ விரங்கியரு
ளாயேல்
யானுரென் னறிவெதுமே லென்னைமதிப்
பவரார்
பொன்னுழைப்பாற் பெறலுமரி தருநிலையே
வெல்லாம்
பொதுநடஞ்செய் புண்ணியநீ யெண்ணி
யவாருமே

என்று பாடிக் காட்டுகிறார்.

மேலும்.

நான் விழித்து விழித்து இமைத்தாலும் சூர் உதயமாகமாட்டேன் என்கிறதே—விழிகள் இமைப்பதல்லால் வேறு விளைவுகள் இல்லையே. நான் என்ன தான் முயன்றாலும் உன் அருள் இல்லாமல் யாது நிகழும். உன் அருள் உள்ளம் இரங்கினால் சிறுதுரும்பும் ஐந்தொழில் செய்வது என்பது சாத்தியமாயிற்றே இதை உணராமல் "முயற்சி தான் உயர்வு" என்போர் எனைப்பழித்துரைக்கின்றார். அவர்கள் எப்படி உரைத்தாலும் உரைக் கட்டும். என் பதியே எல்லாம் உன்செயல் தான். எனவே என்மீது பரிவு காட்டி பாடுவித்து பரிசும் மகிழ்ந்தருள்வீர்.

## அநுபோக நிலையம்

இறைவா! எனது நாயகனே என்னைக் கலந்தருள்—புணர்ந்தருள் என்று பாடுகிறார்.

"ஏதுமொன் றறியா பேதையாம் பருவத்
தென்னையாட் கொண்டெனை யுவந்தே
ஓதுமின் மொழியாற் பாடவே பணித்த
ஒருவனே யென்னுயிர் துணைவா
வேதமும் பயனு மாகிய பொதுவில்
விளங்கிய விமலனே ஞான
போதகந் தருதற் கிதுதகு தருணம்
புணர்ந்தருள் புணர்ந்தரு லெனையே

## திருமுன் விண்ணப்பம்

இந்த உடம்பே இந்த உலகில் உனது அருட்குருவுருக் கொள்ளுதல் வேண்டும்—ஒளி பெறும் இயலுருவாக—துஞ்சிடா சுகவுடலாக-வீழ்ந்திடா இயலுடலாக — அழிவுறு அருளுடலாக அமைந்திடுமாறு செய்வித் தருள்க.

## முறையீடு

இறைவா அபயம்! என்னை சோதியாமல் அருள்வாய் என்று முறையிடுகிறார்.

கொடியேன் பிழைநீ குறியேல் அபயம்
கொலைதீர் நெறியேன் குருவே அபயம்
முடியேன் பிறவே னெனநின் னடியே
முயல்வேன் செயல்வே றறியே அபயம்

படியே யறியும் படியே வருவாய்
பதியே கதியே பரமே அபயம்
அடியே னினியோ ரிறையுந் தரியேன்
அரசே யருள்வாய் அபயம் அபயம்.

## அருள் விளக்க மாலை

ஆண்டவனிடம் தான் பெற்ற அருளை விளக்கி விளக்கிப் பாடுகிறார்.

அருட்ஜோதி ஆண்டவரே! இருள் கடிந்து என் உள முழுவதும் கோயில் கொண்ட பதியே! ஏங்கிய போது என்னைத் தாங்கிய துணையே! நான் புணர நானுகி நண்ணிய மெய்ச் சிவமே, மனமிளைத்து வாடியபோது என் எதிரே கிடைத்து வாட்டமெலாம் தவிர்த்து எனக்கு வாழ்வளித்த நிதியே. சினமுகத்தார் தமைக் கண்டு திகைத்த போது அவரை சிரித்த முகத்த வராக எனக்கு அளித்த சிவமே! நாட்டார்கள் சூழ்ந்து மதித்திட மணி மேடையிலே நடு விருக்க என்றனையே நாட்டிய பேரிறைவா! சாதி குலஞ்சமய மெலாஞ் தவிர்த்தெனை மேலேற்றி தனித்த திருவமுதளித்த தனித் தலைமைப் பொருளே! எனது சிறு மொழியை ஏற்றருள் என்று வேண்டுகிறார் இந்த அருள் விளக்க மாலையில் வள்ளல் பெருமான் தனது அனுபவ உண்மைகளை அழகாக எடுத்து இயம்புகின்றார் அவற்றில் சில:-

பசியின் களைப்பால் இளைத்து களைத்து படுத்தபோது திருவமுதை திருகரத்தில் ஏந்தி ''ஒற்றியிற் போய் பசித்தனையோ'' என்று என்னை எழுப்பி அமுதத்தை உவந்து அளித்த என் உயிர் துணையே'' என்கிறார்.

தாய் முதலாரோடு சிறிய பருவத்தில் தில்லை தலத்தில் சென்று நடனப் பெருமானைத் திரை யைத் தூக்க தரிசித்தபோது எனக்கு எல்லாம் வெளியாகக் காட்டிய என்மெய் உறவாம் பொருளே!'' என்கிறார்.

ஒருநாள் உயர்ந்த ஒட்டுத் திண்ணையின் மேல் படுத்து தூங்கினேன். என் தூக்க மிகுதி யால் புரண்டு தரையில் விழ இருந்தேன். அது போது என்னைத் தரையில் விழா வண்ணம் தாங்கிப் பிடித்து எடுத்து அணைத்து நல்ல இடத் தில் படுக்கவைத்த மெய்துணைவனே'' என் கிறார்.

நான் வருந்த இருந்தபோது ஒருநாள் ''மகனே பயமுனக்கேன்'' என்று என்னை பரிந்து அணைத்து இன்மொழி பல புகன்று என் முடிமிசை மலர்காலினை யமர்த்தி யெனையாண்ட என்னுயிர் நற்துணையே''

ஒரு நாள் ஒரு மடந்தை வலிந்து வந்து என்னை அணைந்து கலந்து அகன்ற பின்னர் உளம் வருந்தினேன். என்ன தவறு செய்தோம் என்று அயர்ந்தேன். அதுபோது ''பெருமடஞ் சேர் பிள்ளாய் யென் கெட்ட தொன்று மிலைநம பெருஞ் செயலென்றெனைத் தேற்றி பிடித்த பெருந்தகையே'' என்கிறார்.

''இச்சை யொன்றும் இல்லாது இருந்த எனக்கே இங்கு இயலுறு சன்மார்க்கம் நிலைக் கிச்சையை யுண்டாக்கினாய். நான் பயந்து பிற முயற்சிகளில் ஈடுபட்டேன். அதுபோது அவை நடைபெறாமல் தடையுண்டாக்கினாய் பிறகு உலகறிய என் தடைகளை தீர்த்தாய். எச்சமய முடிவுகளும் திருச்சிற்றம் பலத்தே இருந்தன என்றாய்' என்றார்.

இறைவா! நான் யார்? என்று வள்ளல் பெருமான் கேட்க இறைவன் ''கொலை புரிபவர் களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் நினது குலத் தவர். நீ எனது குலத்து முதன் மகன். நீ மலைவு அறு சுத்த சன்மார்க்கம் வளர வளர்ந்திருக்க''

உயிர் கொலை—புலைப்புசிப்பு உடைவர் கள் உறவினத்தார் அல்லர். புறவினத்தார். அவர்களுக்கு நீ உதவி செய்ய விரும்பினால் பசிப்போக்கும் உதவி மட்டும் செய். மற்றவை அவர்கள் நயப்புறும் சன்மார்க்கம் அடைந்த பிறகு செய். இது நமது ஆணை.

கொடியவர்கள் கொலை புரிந்து புலை நுகர் வார்கள் இருந்தாலும் சில சமயங்களில் அவர் கள் ஆபத்தில் வருந்துவார்கள். அப்போது நீ பார்த்துக் கொண்டு நிற்காதே. அவர்கள் வருந்தும் துன்பத்தை, பயத்தை தீர்த்து விடுக''

துயையுடையாரெலாம் சமரச சன்மார்க்கம் சார்ந்தவரே!

அருளுடையா ரெல்லாம் சமரச சன்மார்க் கம் அடைந்தவரே! என்று கூறுகிறார். மேலும் இறைவன் கூறியதை வள்ளல் பெருமானே விளக்குகிறார்.

கொள்ளை வினைக் கூட்டுறவால் கூட்டிய பல்சமயக் கூட்டம், அக்கூட்டத்தே கூவுகின்ற கலை—உள்ளமுறும் அக் கலைகள் காட்டிய பல்கதி, காட்சிகள்—காட்சி தரும் கடவுள் எல்லாம் பிள்ளை விளையாட்டென நன்கு அறி வித்து இங்கு எனையே பிள்ளை யெனக்கொண்டு பிள்ளைப் பெயரிட்ட பதியே.

நால் வருணம் ஆசிரமம் முதலா நவின்ற கலை சரிதமெலாம் பிள்ளை விளையாட்டே. மேல் வருணம் என்பது தோல் வருணமே அன்றி வேறில்லை. விழித்துப்பார்.''

என்று எனக்கு எல்லாம் காட்டி இறுதியில்.
''ஐயமுறே லென்மகனே யிப்பிறப்பிற்றுனே
அடைவதெல்லாம் மடைந்தனைநீ யஞ்சலை
யென் றருளி
வையமிசைத் தனியிருத்தி மணிமுடியுஞ் சூட்டி
வாழ்கவென வாழ்த்தியவென் வாழ்க்கை
முதற்பொருளே
துய்யவருட் பெருஞ்ஜோதி சுத்தசிவ வெளியே
சுகமயமே யெல்லாஞ்செய் வல்லதனிப்
பதியே
உய்யுநெறி காட்டிமணி மன்றிடத்தே நடிக்கும்
ஒருமை நடத்தரசேயென் னுரையுமணிந்
தருளே

மேலையிலே இம்மையிலே வொருமையிலே
தவத்தால்
மேவுகின்ற பெரும் பயனும் விளைவை
யெலாஞ் தருமச்
சாலையிலே ஒருபகலிற் றந்த தனிப்பதியே ''

என்று மகிழ்ந்து பாடி களித்து தனது பாமாலையை சூடி மகிழ்கின்றார்.

## உபதேச உண்மை

எல்லாம் வல்ல இறைவனே! அடியேனுக்கு நல்ல உபதேசம் அளித்தருள்வாய் உண்மை அறியாது உழல்கின்றேன் எனக்கு உண்மை யுரைத்தருள்வீர். என்கிறார்

'' நன்றாலுங்கடந்தே—பொளிர்—ஞான
சபாபதியே
பொன்னுருஞ் சபையாய்—அருட்பூரண
புண்ணியனே
என்னாலாவதொன்றாம்—உனக் கில்லை
யொனினு மெந்தாய்
உன்னால் வாழுகின்றே னெனக்குண்மை
யுரைத்தருளே,

## வேண்டுகோள்

'' உண்மை வேண்டும் அதனை எனக்கு உரைத்தருள்வீர் '' என்று வேண்டிப் பெற்றபின் '' எனக்கு வாழ்வு வேண்டும் அதனையும் அளித்தருள் '' என்கின்றார் அந்த வாழ்வு இனித்த வாழ்வாக—நல்வாழ்வாக—பெரிய வாழ்வாக—எல்லாம் படைத்த வாழ்வாக சன்மார்க்கத் தனி நிலை நிறுத்தும் தக்க வாழ்வாக—வளம் நிறைந்த வாழ்வாக—ஞான வாழ்வாக—தூய வாழ்வாக—அபய வாழ்வாக—இனிய வாழ்வாக இருக்க அருள்வாய் என்று வேண்டுகிறார்.

## சிவயோகநிலை

சிவயோக நிலையில் அமுதம் சுரக்கம் மதி மண்டலத்தில் அமுத மருந்தி பதிமண்டலத்து அரசு செய்ய வேண்டும்—சாக வருளமுதம் நான் அருந்த—தண்ணமும் அன்பால் அருந்தி மருள் நீங்கிவாழ, ஞானேதய அமுதம் நானருந்த நல்ல ஆரமுதம் என்வாழ் நிலைக்க நான் உண்ண வேண்டினேன்—ஏகனே—அனேகனே எழில் பொதுவில் வாழ்ஞான தேகனே கதவை திறந்து காண வேண்டியதைக் காட்டுவாயாக '' என்று முடிக்கிறார்.

## உய்வகைக் கூறல்

இந்த உலகம் உய்ய பல வழிவகைகளைக் கூறுகிறார். கேளுங்கள்.

உலகீர்! மருட்பெரும் பகைநீக்கி மெய் வாழ்வு பெற்றிடலாம். என் மொழி கேளீர்: ஆகம அந்தமும் வேதத்தின் அந்தமும் அறையும் பாகமாம் பரவெளிட நடம் பரவுவீர் உலகீர். மோக மாந்தருக் குரைத்திலன் இது சுகமுன்னும் யோக மாந்தருக்கு காலமுண்டாகவே உரைத்தேன்.

'' சமயமோர்பல கோடியுஞ் சமயங்க
டோறும்
அமைந் தெய்வங்க ளனதமும்ஞான சன்
மார்க்கத்
தெமையு மும்மையு முடையதோ ரம்பலத்
திறையும்
அமைய வாங்கதி நடம்புரி பாதமொன்றறி
மின் ''

ஆறு கோடியாஞ் சமயங்களகத்தினுமவை
மேல்
வீறு சேர்ந்த சித்தாந்த வேதாந்த நாதாந்தத்
தேறு மறெய வந்தத்துஞ் சிவம்மொன்றே
யன்றி
வேறு கண்டிலேன் கண்டிரேற் பெரியர்
கள் விளம்பிர்.

## உறுதி கூறல்

மனிதவர்கத்தை கண்டு கண்ணீர் விட்டு நல்வழி பல காட்டியும் தேறாமல் அல்வழியே செய்வது கண்டு வருந்தி உறுதியாக சில கூறுகின்றார்.

கட்டோட கனத்தோட வாழ்கின்றோம் என்பீர்—கண்ணோட கருத்தோடக் கருத்தனைக் கருதீர். பட்டும் பணியும் பூண்டு தெருவில் திரிகின்றீர் பசியோட வந்தவர்களைப் பார்க்கின்றீர்.

சாமாந்தராகாதரம் சிறிதும் அறியீர் காமாந்த காரத்தில் கண்மூடித் திரிவீர் வட்டிமேல் வட்டி கொள் மார்க்கத்தில் நின்றீர் வட்டியை வளர்கின்ற மார்க்கத்தை அறியீர்—பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர் பழங்கஞ்சியாகிலும் வழங்கவும் நினையீர் சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திட விழையீர் சாவையும் பிறப்பையும் தவிர்ந்திட விரும்பீர்—பண்ணாத தீமைகள் பண்ணுகின்றீர்—பகராதவன் மொழி பகருகின்றீர்—நண்ணாத தீயினம் நண்ணுகின்றீர் நடவாத நடத்தைகள் நடக்கவந்தீர் கண்ணாகக் காக்கின்ற கருத்தனை நினைத்தே கண்ணார நீர் விட்டுக் கருத அறியீரே! எண்ணாத எண்ணம் எண்ணும் ஓர் காலம் எத்துணை கொள்கின்றீர்? பித்துலகீர்!" என்று உறுதியாகக்கூறி துணையற்ற வைத்தியக்கார உலகிற்கு பெருந்துணையாக இருந்து மேலும் கூறுவார்?

சாதி, மதம், சமயம், சாத்திரம், கோத்திரம் இவைகளிலே உங்கள் அபிமானயதை செலுத்து வீணே அழிந்து போகும் உலகாக்களே! நீங்கள் அலைந்து அலைந்து அழிந்து போவது சரியா? அழகா? போனது போகட்டும், நீதியுடன் கூடிய சன்மார்க்க நெறிதனிலே ஞானத் தாண்டவம் புரியும் இறைவன் ஒருவனே அவர் எல்லோரும் காண வீதியிலே வரும் தருணம் மேவியது. வாருங்கள் பேரருள் பெற்றுய்யலாம் '' கரடு முரடான காட்டை வெட்டி நல்ல நிலமாக்கி சிறந்த எருவும் போட்டு அற்பமான கடுகை யிட்டு களிக்கின்ற உலகீர்—உங்களுக்கு கரும்பு இருப்பது தெரியவில்லையா? உங்கள் கூடுவிட்டு

போனபிறகு என் செய்வீர்? எங்கே மூடியிருப்பீர் ஐயோ! பாடுபட்டுப் பலன் காணாது பாழ்கிறைத்துகளிக்கின்றீரே! ஆற்று வெள்ளம் வருதற்கு முன்னே அணைப்போட வாரீர். அகங்காரப் பேய் பிடித்து ஆடுதற் அறிவீர். பொய் விளக்கப் புகுகின்றீர். போது கழிக்கின்றீர்—புலை கொலைகள் புரிகின்றீர்—கைவிளக்கு பிடித்து ஒரு பாழும் சிணற்றில் விழ்வதில் மகிழ்ச்சி அடைகின்றீர். அச்சத்தை தருகின்ற மூப்பு, மரணம் இவைகளை நினைத்தால் உங்கள் அடிவயிற்றை முறுக்காதோ—எவ்வகைச் சார் மதங்களிலே பொய்வகைச் சாத்திரங்கள் எடுத்துரைத்த எமது தெய்வம் எமது தெய்வம் என்று கைவகையே கதறுகின்றீர் தெய்வமொன்றென்றயீர் உடம்புவரும் வகையறியீர்-உயிர் வகையறியீர் உடல் பருக்க உண்டு நிதம் உறங்குதற்கே அறிவீர் நரை, திரை மூப்பறிய நல்ல உடம்பினரே நற்தலத்தார்ரென அறியீர் நானிலத்தீர்'' நீ வீர் உயர் குலம் மென்றும் தாழ்ந்த குலம் மென்றும் வருக்கின்றீர் இரண்டு குலமும் அழிந்து விடுதல் காணீரோ.

வையகத்தீர் வானகத்தீர் மற்றகத்தீர் நுமது வாழ்க்கையெமைவாழ்க்கையென மதித்து மயங்காதீர் மையகத்தே யுறுமரண வாதனையைத் தவிர்ந்தவாழ்கையே வாழ்க்கையாகும். எனவே அதனை பெறவே விரும்பி இங்கே வந்திடுமின். ஐந்தொழில் செய்யவொளி வழங்கும் சித்திபுரமென ஓங்கும் உத்தர சிற்சபையில் சரணமெனக் களித்து என்னையும் தானுக்க எனது தனிதந்தை வருகின்ற தருணமிது தானே.

## ஞானசரியை

மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர். வம்மின் உலகியலீர் புனைந்துரையேன். பொய் புகலேன். சத்தியம் சொல்கின்றேன். நினையுங்கள்—நினைந்து கொண்டே இருங்கள்—நெகிழுங்கள் நெகிழ்ச்சி குன்றுது இருக்கட்டும். அந்த நெகிழ்ச்சி மேலிட்டு அன்பு நிறையட்டும்–நிறைந்து பொங்கட்டும், அந்த அன்பு பொங்கல் கண்ணீராக உற்றெடுக்கட்டும் அந்த நீர் உடலை நனைக்கட்டும் இந்த உயரிய நிலையில் இருந்து அருளமுதே—நன்னதியே. ஞானநடத்தரசே யென்னுரிமை நாயகனே என்று ஏத்துவோம்-ஆமாம்! மரணமிலாப் பெரு வாழ்வு பெறுவோம்.

உலகியலீர் நீவீர் இதுவரையில் உண்மை அறிந்திலரே! கண்டதெல்லாம் அநித்தியம் கேட்டதெலாம் பழுதே, கற்றதெல்வாம் பொய், களித்த தெல்லாம் வீண், உண்ட தெல்லாம் மலம், உள் கொண்டதெலாம் குறை, எனவே நீர் இனியும் மயங்காமல் தெளிந்து சமரச சன்மார்க்க மெய் நெறியைக் கடை பிடித்து மெய்ப் பொருளை நன்குணர்ந்து எண் தகு சிற்றம்பலத்தே எந்த அருள் அடைமின் இறவா வரம் பெறலாம். இன்ப முறலாமே.

அன்புடைய வுலகீரே வம்மின் நாம் இன்புறலாம். எவ்வுலகும் மேத்தி மகிழ்ந்திடலாம் எல்லாம் செய்வல்ல சித்தி பெறலாம் சமரச சன்மார்சகம் அடைந்திடுமின். நீர் பிறரோ நான் உமக்கு நேயா உறவு அவனே, நெடுமொழியேயுரைப்பன்றி கொடு மொழி சொல்வேனே, சார்புறவே யருளமுதந்தந்து என்னை மேலேற்றி தனிததபெருஞ்சுகம் அளித்த தனிப்பெரும் பதிதான் திருப் பொதுவில் திருமேனிதரித்து சித்தாடல் புரிகின்ற திருநாள் அடுத்தது வம்மின் நீவீர் வேருக நினைந்து ஏமாற்றமடையாதீர். திரைந்து திரைந் துளுந்தவரும், மிளமை அடைந்திடவும், செத்தவர்கள் எழுந்திடவும் சித்தாடல் புரிய வரைந்து வரைந்து எல்லாம் செய்யவல்ல சித்தன் தானே வருகின்ற தருணமிது வரம்பெறலாம் நீவீர் கரைந்து கரைந்து துளமருகி கண்ணீர் பெருகிக கருணை நடக கடவுளைக் கருதுமினே.

நான் உரைக்கும் வார்த்தை யெலாம் நாயகன் தன் வார்த்தை நம்புமினே. நற்ற குணமிதுவே நம்புங்கள். நான் ஏன் உரைக்கின்றேன் இரக்கத்தால் எடுத்து உரைக்கின்றேன் கண்டீர் நான் அடையுஞ் சுகத்தினை நீர் அடைதல் குறித்தே

கோணு மனக்குரங்காலே நாணுகின்ற உலகீர் குறிந்து உரைக்கின்றேன் இதனைக் கேண்மின் இங்கே வம்மின். வெறித்த உம்மால் ஒரு பயனும் வேண்டுகிலேன். எனது மெய்யுரையைப் பொய்யுரையாக வேறு நினையாதீர் பொறித்த மதஞ் சமயம் எல்லாம் பொய் பொய்யே? அவற்றில் புகுகாதீர். சுத்த சன்மார்க்தந் திருநெறியே பெருநெறி இதனை ஓர்ந்திருமின்:

மேதினியீர் நீர் என்னை வைதாலும் வைதிடுமின் வாழ்த்தெனக் கொண்டிடுவேன் மனங்கோனேன். மானமெலாம் போன வழிவிடுத்தேன். பொய்தானும் ஒரு சிறிதெனினும் புகலேன் சத்தியம் புகல்கின்றேன் நீவிரெலாம் புனித முறும் பெருட்டே. செய்தாலும் தீமையெலாம் பொறுப்பான் பொது வில்நடம் புரியும் பெருங் கருணைத் திறத்தான். மற்று அறிவோம் என்று சிறிது தாழ்ந்திருப்பிரேல் மரணம் எனும் பெரும்பாவி வந்திடுமே சற்றுமதை நம்மாலே தடுக்கமுடியாது. சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தவரல்லால் அதனை ஏற்று நின்று தடுக்கவல்லார் எவ்வுலகத்திலும் இல்லை கண்டீர். பற்றிய பற்றனைத்தும் விட்டு அம்பலப்பற்றே பற்றுமினே என்றும் இறைவீரே இறந்தவர்களை எடுத்தேகும் போது அழுது புலம்புகின்றீர் இறவாத பெருவரத்தை ஏன் அடைய மாட்டேன் என்கின்றீர்? பிணி மூப்பு சம்மதமோ நுமக்கு மறந்தும்இதைபற்றறநினைக்கில் மனம் நடுங்குகின்றதே. சன்மார்க்க மொன்றே பிணி மூப்பு மரணம் சேராமற் தவிர்திடும் தெரிந்து வம்மின். பிறந்த இப்பிறப்பில் நித்திய வாழ்வு பெற்றிடுவோம் உற்ற மொழி உரைக்கின்றேன் ஒருமையினுல் உமக்கே உறவன்றிப் பகைவன் என உண்ணுதீர் உலகீர் கற்றவரும் கல்லாரும் அழிந்து விடக் காண்கின்றீர் கரணமெலாம் கலங்க வரும் மரணமும் சம்மதமோ. சன்மார்க்கத்

தார் தம்பதியை—யென்னைத்தாங்குகின்ற பெரும் பதியை சன்மார்க்க சங்க நடுவிருக்க அருளமுதம் நல்கிய நாயகனை—எல்லாம் செய்வல்லவத்தை எனக்களித்த பதியை அடைந்து போற்ற மகிழ்ந் திடுமின் உள்ளமெலாம் கனிந்து உருகி உள்ளபடி நினைத்தே!

## ஆன்ம நேய உரிமை

இறந்தவர்களை சுடுவது எத்துணைப் பெரிய பாவம் என்பதையும்—அவர்களை புதைக்க வேண்டும் என்பதையும் இதிலே விளக்கு கின்றார். ஒரு பாடலில்.

"பரனளிக்குந் தேகத்தை சுடுவதா அபராத மெனப் பகர்கின்றேனீர்
சிரம்நெளிக்கச் சுடுகின்றீர் செத்தவர்கள் பற்பலருஞ் சித்தசாமி
உரனளிக்க எழுகின்ற திருநாள் வந்தடுத்தன வீதுணர்ந்து நல்லோர்
வரனளிக்கப் புதைத்திலை காணிரோ கண் கெட்ட மாட்டிநீரே.

## தாய் கூறல்

இப்பகுதியில் வள்ளல் பெருமான் தலைவி யாகிய தனது உயிர்த் தலைவனை எண்ணி எண்ணி உள்ளம் வருந்துகின்றாள் இதனை தாய் அந்தத் தலைவனிடம் முறையிடுகிறாள். தலைவனே! என் மகளின் மனத்தைக் கவர்ந்த மணாளனே! என் மகள் பித்துப் பிடித்தவள் போல் பிதற்றுகின்றாள் அவள் கூறியதை கூறுகின்றேன் கேளுங்கள்.

"பூமியோ பொருளோ விரும்பிலே னுன்னைப்
புணர்ந்திட விரும்பினே னென்றாள்
காமியென் றெனை நீ கைவிடேல் காமக்
கருத்தெனக் இல்லை காணென்றாள்
சாமி நீ வரவு தாழ்ந்திடி லையோ
சற்றுநான் தரித்திடே னென்றாள்
மாமிகு கருணை வள்ளலே யென்றாள்
வரத்தினால் நான் பெற்றமகளே"

## பாங்கி தலைவி பெற்றியுணர்த்தல்

தாய் கூறிய பிறகு தலைவியின் பெற்றியை தலைவனிடம் எடுத்து இயம்புகின்றாள். தன் தலைவி யின் தூயகாதலை தனிச்சபை நாயகனிடம் கூறு கின்றார்.

"ஊராசை யுடலாசை யுயிர்பொருளினாசை
உற்றவர்பெற் றவராசை யொன்றுமிலா ளுமது
பேராசை பேய்பிடித்தாள் கள்ளுண்டு பிதற்றும்
பிச்சியென பிதற்றுகின்றாள் பிற பெயர் கேட்டிடிலோ
நாராசஞ் செவிபுகுந்தா லென்னநலி கின்றாள்
நாடறிந்த திதுவெல்லாம் நங்கை யிவளளவில்
நீராசைப் பட்டதுண்டேல் வாய்மலர வேண்டும்
நித்தியமா மணிமன்றில் நிகழ்பெரிய துரையே."

## தலைவி தலைவன் செயலைத் தாய்க்குரைத்தல்

தோழியுடன் திருசிற்றம்பலம் காணப்புகும் போது தலைவன் வந்தது நிகழ்த்திய நிகழ்ச்சிகளை தனது தாயிடம் கூறிவியக்கின்றாள் தலைவி.

"உன்னைப் பார்த்துன்னுள்ளே யென்னைப் பாராதே, ஊரைப் பார்த்து ஓடி உழல்கின்ற பெண்ணே என்னைப் பார் என்கின்றார் என்னடி யம்மா? என்கைப் பிடிக்கின்றார் என்னடியம்மா?
பொதுப்பாவனை செய்யப் போகாதே பெண்ணே; பொய் பாவனை செய்து கைப்பானேன்? இது பாவமென்கின்றார் என்னடியம்மா? என் கை பிடிக்கின்றார் என்னடியும்மா?
புறக்காதல் செய்வார் போல் செய்யாதே பெண்ணே, பொற்கம்பம் ஏறினை சொர்க்கமங்கப் பால் இறங்காதே என்கின்றார் என்னடியம்மா? என்கைப் பிடிக்கின்றார் என்னடியம்மா?

பொய் குலம் பேசி புலம்பாதே பெண்ணே.
பூரண நோக்கம் பொருந்தினை நீதான்
எக்குலம் என்கின்றார் என்னடியம்மா?
என்கைப் பிடிக்கின்றார் என்னடியம்மா?
இம்மதம் பேசி பிறக்காதே பெண்ணே
ஏகசி வோகத்தை யெய்தினை நீதான்
எம்மதம் என்கின்றார் என்னடியம்மா?
என்கைப் பிடிக்கின்றார் என்னடியம்மா?
புறப்பற் றகற்றந் தொடங்காதே பெண்ணே
புலையகப்பற்றை யறுத்தாய் நின்க்கே
இறப்பற் றென்கின்றார் என்னடியம்மா?
என்கைப் பிடிக்கின்றார் என்னடியம்மா?

## நற்றாய் செவிலிக்குக் கூறல்

தன்மகள் புணர்ந்து மகிழ்ந்த மணவாளரின் பெருமையினை தாய் செவிலுக்கு கூறி மகிழ் கின்றாள்:-

வள்ளலைப் புணர்ந்தே னம்மவோ விதுதான்
மாலையோ காலையோ வென்றாள்
எள்ளலைத் தவிர்த்தே னுலகெலாமெனக்கே
யேவல் செய்கின்றன வென்றாள்
தெள்ளமுத தருந்தி யழிவிலா வுடம்புஞ்
சித்தியும் பெற்றன னென்றாள்
துள்ளிய மடவீர் காண்மினோ வென்றாள்
சோர் விலாள் நான் பெற்ற சுதையே"

## தோழிக்குரிமை கிளத்தல்

தோழி தலைவியை நோக்கி, பெண்ணே உன் செய்கை சரியா நீ இந்திராதி பிரமன் நாரா யணன் முதலிய பெருந்தேவர் எதிர்வரினும் மதி யாமல் இருப்பது தவறல்லவா? அவர்கள் கோபம் கொண்டால் உன்கதி என்ன வாகும்? என்று கேட் கிறாள். அதற்கு தலைவி அடிப்பைத்தியக்காரி, என்நாயகன் பெருமை அறியாய் கேளடி பேதைப் பெண்ணே கேள்:-

'' நயந்துநட நாயகருன் நயகரே யெனினும்
நாடியமந் திரங்கள்சில கூடியுரை யிடவே
வியந்த மற்றைத் தேவரெல்லாம் வரவுமவர் நேயம்
விரும்பாதே யிருப்பதென்னீ யென்கின்ருய் தோழி
வயந்தருமிந் திரர்பிரமர் நாரணர்கா ரணர்கள்
மற்றையர்கண் மற்றையர்கண் மற்றையர்க ளெவர்கும்
பயந்தகுடி யல்லடி நான் திருச்சிற்றம்பலத்தே
பதி நடஞ்செய் யடிப்பணிக்கே பதித்தகுடி யறியே.

## தலைவி கூறல்

தனது நாயகன் வரும் தருணம் அவர் பெருமை பொய்யுலகர் அறியர்—நான் அறிவேன் எனவே அவர் வருமுன் இந்த மாளிகையை மணியாலும் மலராலும் அலங்கரித்து மலகளம் புனைக என்கின்ருள்.

முன் பாட்டுக் காலேயிலே வருகுவரென் கணவர்
மோசமில் மோசமென மொழிகின்ருர் மொழிகள்
பின்பாட்டுக் காலேயிலே நினைத்த வெலா முடியும்
பிசகிலேயிம் மொழி சிறிதும் பிசகிலேயிவ் வுலகில்
துன்பாட்டுக் சிற்றினத்தார் சிறுமொழிகேட் டுள்ளந்
துளங்கேல் நம்மாளிகையைச் சூழவலங் கரிப்பாய்
தன்பாட்டுத் திருப்பொதுவில் நடத்திறைவராணை
சத்தியஞ்சத் தியமதே சத்தியஞ்சத் தியமதே

## தலைவி பாங்கிக் குரைத்தல்

தோழி நான் பொது நடம் காண வேண்டும் என்னேடு வருவாயோ வராது ஒழிவவயோ என்று கேட்கிருள் தலைவி:-

'' வேதாந்த நிலையோடு சித்தாந்த நிலையு
மேவும் பொதுநடம் நான் காணல் வேண்டும்
நாதாந்தத் திருவீதி நடப்பாயே தோழி
நடலாம லென் மொழி கடப்பாயோ தோழி
தத்துவத் துட் பிறந்தாடும் பொதுவிற்
சத்தாந் திருநடம் நான் காணல் வேண்டும்
கொத்தது வித்தை குறிப்பாயோ தோழி
குறியாதுலகில் வெறிப்பாயோ தோழி.

## அனுபவமாலை

தோழி எனது அனுபவத்தை என்றுரைப்பேன்! எனது நாயகன் திருவடி மலரை என் முடிமேல் அணிந்து கொண்டேன். அத்துடன் என் ஆருயிர்க்கும் அணிந்தேன். அந்த மலர் மணத்தை முகர்ந்து மகிழ்கின்றேன் தோழி பொய்யல்ல இது. உன்னுல் முகர முடியவில்லையா? பேதையே உன் நாசியடைப்பை திறந்து முகர்ந்து பார் தெரியும். ''

பெண்ணே என்னை தூங்கும்படி கூறுகின்ருய். தூக்கம் தான் வருமோ. தூங்கினுலும் அங்கே எனது கணவருடன் கலந்து மகிழும் கனவன்றே காட்சியளிக்கும். என் கணவர் என்னை எப்போதும் இன்புறச் செய்கின்ருர். அதனுல் தூங்க முடிவதில்லை மண்ணுறங்கும், மலையுறங்கும், வளைகடலுறங்கும், மற்றுள்ளன வெல்லாம் உறங்கும் நமது பெண்ணுறங்காள் என்று என் தாய் கூறிமகிழ்கின்ருள். இதை கேட்ட மற்ற பெண்கள் எல்லாம் இந்தப் பேறு நமக்குக் கிடைக்கவில்லையே என்று கூசுகின்றனர்.

பொது நடஞ்செய் துறையிருக்கின்ரேஎனது கணவர் அவர் திருமுகத்தில் தளதளவென் றெளிரும் புன்னகை ஒரு கோடி பொன்பெறும் என்றுரைப்பர். இதுவரை பலகோடி என்ருலும் ஓர் அளவு இல்லை எனவே அத்துணை தடவை நான் அந்தப் புன்னகையைக் கண்டு கண்டு பூரித்து பூரித்து மகிழ்ந்து களித்து இன்புறுகின்றேன். ''

தோழி என் உடம்பு கற்பூர மணம் வீசுகின்றதல்லவா? இது எனது கணவர் என்னுடம்புடன் கலந்ததால் ஏற்பட்ட அருள் மணம் காண் ''

'' தோழி! நான் பயப்படுகின்றேன், ஏன் தெரியுமா? எனது கணவர் திருவழகினை நான் கண்டு கண்டு களிக்கின்றேன். அந்த அழகைக் காணும் எனது கண்ணெச்சல் படுமோ என்று தான். ''

'' என் கணவர் வரும் தருணம் நெருங்கி விட்டது. நீ போய் கற்பூரம் கொணர்ந்திடுக அவர் திருவுருவுக்கு கண்ணேறு கழிக்க வேண்டும். ''

' மலரணை மேல் என் மணவாளர் என்னை யணைந்தபோது என்வடிவு அவர் வடிவு என்று பிரித்து அறிந்த தில்லையடி நான். அப்படி இருக்க நான் வேறு எதைப்பற்றி அறியேன் கடு களவும் விகர்ப்ப உணர்ச்சி யென்பதில்லையே''

உன் கணவனைத் தந்தை யென்கின்ருய், மகன் என்கின்ருய், மணவாளன் என்கின்ருய் இது என்னடிமுறை? இப்படி பேசித்திரிந்தால் உலகர் சிரியாரோ? என்று தோழி கேட்கிருள். அதற்கு '' மதியற்ற தோழி சிந்தை செய்து காண் சிற் சபையில் நடிக்கும் திருவாள்ர் என்னைக் கலந்த கணவர் தான் அந்த அவர் ஆதி அந்த நடுவில்லா அருட்பெருஞ் ஜோதியுமாவர். அண்டமாரசரங்கள் எல்லாம் அவரே என்ருல் எப்படி சொன்னுல் தான் என்ன? ''

தோழி அம்பலத்தே கூத்தாடி ஐயருக்கே மாலையிட்டேன் என்று புகழ்கின்ருய். அவர் திருக்கூத்து புரியாவிட்டால் அண்டபகிரண்ட திருக்கின்ற சத்தி சத்தர்கள் எல்லாம் இன்னும் மற்றவர்கள் அனைவரும் பேசுகின்ற வார்த்தை எனது ஐயன் திருக்கூத்தைப் பற்றியதுதான். குலமிலாதவன், புலமறியான்கூத்தாடி என்கின்

ருய் தோழி. நீயும் இப்படி பேசுவது ஒழித்து இது கேள், அலகறியாத் திருக்கூத்து எனது ஐயர் புரியாரேல் அயன், அரி, அரன் முதலாகிய ஐவரும் பிறரும் உயிர்கள் பலவும் நீயும் இங்கே நின்று மினுக்குவதுங் குலுக்குவதும் வெளுத்து விடும் காணே.

'' உன் கணவர் உன்னை கடைசிவரையில் கைவிடாது இருப்பாரா என்று கேட்கின்ருய்? கேள் ''

பொருத்தமிலா ரெல்லாரும் புறத்திருக்க நான் போய்
பொதுநடங்கண் டுவந்து நிற்கும் போது தனித் தலைவர்
திருத்தமுற வருகணைந்து கைப்பிடித்தார் நானும்
தெய்வமல ரடிபிடித்துக் கொண்டேன் சிக் கெனவே
வருத்தமுறே லினிச்சிறிது மயங்கேலக னறியா
வாழ்வுவந்த துன்தனக்கே யேழுலகு மதிக்க
கருத்தலர்ந்து வாழிவென் ருழியளித் தெனது
கையினிற்பொற் கங்கணமுங் கட்டினார் காண் தோழி

உங்கள் கணவரின் திருப் பெருமை அத்துணைச் சிறப்புடையதா? என்று தோழி வினவ தலைவி:-

மாதேகே ளம்பலத்தே திருநடஞ் செய்பாத
மலரணிந்த பாதுகையின் புறததெழுந்த வணுக்கள்
மாதே வுருத்தரர்க ளொருகோடி கோடி
வளைபிடித்த நாரணர்க ளொருகோடி கோடி
போதேயு நான்முகர்க ளொருகோடி கோடி
புரந்தரர்கள் பலகோடி யாகவுநப் புணர்ந்தே
ஆதேம ராகியிங்கே தொழில் புரிவாரென்ருல்
ஐயர் திருவடிப் பெருமையை யாருரைப் பார் தோழி

இவ்வளவுக்குப் பிறகு என்னைப் போய் தூங்குக என்கின்ருய் தோழி:—

தூங்குக வென்கின்ருய் தூங்குவனே வெனது
துரைவருமோர் தருணமிதில் தூக்கமும் தான் வருமோ
ஈங்கினி நான் றனித்திருக்க வேண்டுமா தலினல்
என்னுடைய தூக்கமெலா நின்னுடைய தாக்கி
ஏங்கலறப் புறத்தே போய்த்தூங்கிடுக நீ தோழி''

'' தலைவி! இவ்வளவு பேசுகின்றீரே உமது மணவாளர் திருநாமம் யாதோ '' என்கின்ருள் தோழி. தலைவி:-

அருகர், புத்தர், அயன், நாராயணன், அரன், ஆதிசிவம், சதாசிவம், சத்தி சிவம், பரமம், பிரமம், பரம்பிரமம் சுத்த பிரமம், துரிய நிறைவு, சுத்தசிவம் என்பேன். இருந்தாலும் இவையணைத்தும் சித்து விளையாட்டு'' என் கின்ருள் தலைவி. தோழி சிரித்து, என்னம்மா இது புறச் சமயத்தார் பெயர்கூட உம் கணவர் பெயர் என்கின்றீரே '' என, தலைவி:—

பேதைப் பெண்ணே! புறச் சமயத்தார் பெயர் மட்டுமல்ல—பிறசமயத்தார் பெயரும் அவர் பெயரே! பித்தர் என்று பெயர் படைத்த அவருக்கு எப்பெயர் தான் பொருந்தாது? அவர்களின் பெயர் மட்டுமா? இல்லை. நின் பெயர், என்பெயர் அவர் பெயரே அதுமட்டோ! எவ்வுயிரின் பெயரும் அவர் பெயரே! இது இப் போது புரியாது உனக்கு! சிற்சபையில் என் கணவர் செய்யுமொரு ஞானத்திருக் கூத்துக் கண்ட அப்போது புரியும் உனக்கு '' என்கிருள்.

இதுபோல் எத்தனையோ இன்ப அனுபவங் கள் மலிந்து கிடக்கும் அருள் இன்பக் குவியல் அனுபவமாலை. அதனை விரித்து எழுத நீண்டு கொண்டே போகும் என்ற அச்சம் ஏற்படுவதால் இரண்டு பாடல்களுடன் அனுபவமாலையைக் கடந்து செல்கின்றேன்:-

சாதிசம யங்களிலே வீதிபல வகுத்தே
சாத்திரக் குப் பைகளலெலாம் பாத்திரமன் றெனவே
ஆதியிலென் னுள்ளத்திருந்தே அறிவித்த படியே
அன்பாலின் றுண்மைநிலை யறிவிக்க அறிந் தேன்
ஓதியுணர்ந்தோர் புகழுஞ் சமரச சன்மார்க்கம்
உற்றேன்சிற் சபைகாணப் பெற்றேன்மெய்ப் பொருளாஞ்
சோதிநடத் தரசையென்ற னுயிர்க்குயிராம் பதியை
சுத்தசிவ நிறைவையுள்ளே பெற்று மகிழ்ந் தேனே

அறியாத பருவத்தே யென்னைவலிந் தழைத்தே
ஆடல்செய் திருவடிக்கே பாடல் செய்யப் பணித்தார்
செறியாத மனச்சிறியேன் செய்த பிழையெலாந்
திருவிளையாட்டெனக்கொண்டே திருமாலை பணிந்தார்
பிரியாம லென்னுயிரிற் கலந்துகலந் தினிக்கும்
பெருந்தலைவர் நடராய ரெனைப் புணர்ந்தா ருளாம்
அறிவாவர் புறப்புணர்ச்சி யனையறியாதோங்க
அருளியதீண் டகப்புணர்ச்சி யளவுரைக் லாமோ

## தலைவி வருந்தல்

தன்னை வளர்த்த வளும் தாயும், பாங்கியும் பகையானுர்கள் ஏன்? அறியாமல் விழிக்கின்ருள் தலைவி. இந்த நிலையில் தனது நாயகன் நட ராயன் என்ன நினைக்கின்ருன் என்று புரியாமல் திகைக்கின்ருள். ஏன் இவர்களுக்கு பகை மூண்டது என்பதை எண்ணிப் பார்க்கின்ருள்

நான் அம்பலத்து ஆடல் அரசனை மணம் புரிந்தேன் என்றேன். அதனுலோ—கண்ணுறங்

கேன உறங்கினும் எனது கணவரொடு கலக்கும் கனவுவன்றி வேறு நிலையறியேன் என்றேன் அதனுலோ, சிற்சபைத் தலைவனை மணந்தேன் அதனுல் இல்லாமை எனக்கில்லை, எனவே எனக்கு இணை எவர், எச்சமய தேதரையும் இனி மதிக்க மாட்டேன், மறறவர்போல் இறந்து மூல மாட்டேன், என்றே னகுலோ. எனது மணவாளர் வரும் தருணம் இது போய் மறைந்து கொள்ளுங்கள் உங்கள் கண் எச்சல் பட்டு விடப் போகிறது என்றேன்—உங்களுக்கு என் நாயகனைக் காணும் தகுதியில்லை என்றேன். "அப்படி உன் கணவரை கூடாமல் செய்ய முடியாதா" என்று கேட்டனர்:-

கூடியவென் கணவரை கூடாமற் கலைக்க கூடுவதோ நும்மால்? ஏடியெனை அறியாரோ" என்றேன் அதனுலே எதனுலோ எனது மனமாம் பாங்கியும் தாயும் வளர்தவரும் பகையாயினர் திருநட நாயகனே தங்கள் திருக்கருத்தையறி யேனே" என்று வாடிவருந்துகிருள் தலைவி;

## திருவடிப் பெருமை

மீண்டும் தலைவி தனது நாயகன் பெருமையை பேசிப்பேசிப் பூரிக்கின்ருள். அவர் பெருமை யாருரைப்பார் உரைத்து கலந்தனவே மறைகள் ஆகமங்கள். மருண்டனவே அப்படியிருக்க என்னுல் எப்படி முடியும். என்று கூறிக்கூறி வியக்கின்ருள்.

## சமரச நிலை

வையத்தை வாழ்த்துகின்ருர் வள்ளல் பெருமான்.

"அச்சஞ் தவிர்த்தே யருளில் செலுத்து
கின்ற
விச்சை யரசே விளங்கிடுக நச்சரவ
மாதிக் கொடியவுயி ரனைத்தும் போயொழிக
நீதிக் சொடிவிளங்க நீட்டு.
கருணையிலா ஆட்சி கடுகி யொழிக

அருணயந்த சன்மார்காக்க ராள்க—
தெருணயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்றுநினைத்
தெல்லோரும் வாழ்க இசைந்து.
புல்லொழுக்க மெல்லாம் புணரியிடைப்
போயொழிக

நல்லொழுக்க மொன்றே நலம் பெருக—
இல்லொழுக்கிற் செத்தார்களெல்லாம் திரும்ப
எழுந்து மனம் ஒத்தாராய் வாழ்க வுவந்து.

என்றுகூறி தான் பெற்ற பெரும் பேற்றை மிக்க எக்களிப்போடும், துணிவோடும் சொல்கின்ருர்.

நோவது நோன்பேனைப் போல் நோற்றவரு
மெஞ்ஞான்றும்
சாவா வரமனைப்போற் சார்ந்தவருந்
தேவாநின்
போருனை யென் போலப் பெற்றவரு
மெவ்வுலகில்
ஆருளர் நீ சற்றே யறை.

## தனிப்பாடல்கள்

இத்துடன் ஆருந்திருமுறைப் பாடல்கள் தலைப்பு முடிகிறது. என்ருலும் தனிப்பாடல்கள் தனிப்பெருமை உடையன. அவற்றை எல்லாம் எழுத மனம் இருந்தாலும் ஏடு இடம் கொள்ளாது. எனவே ஒன்றை மட்டும் சுட்டிக் காட்டிட விழை கின்றேன்.

எல்லா வுலகமு மென்வச மாயின
எல்லா வுயிர்களும் மென்னுயிராயின
எல்லா ஞானமு மென்ஞான மாயின
எல்லா வித்தையு மென்வித்தை ய யின
எல்லா போகமு மென் போக மாயின
எல்லா வி ஈயமுமென் னின்ப மாயின
எல்லாம் வல்ல சிற்றம்பலத் தென்னப்பர்
எல்லாம் நல்கியென் னுள்ளந் துள்ளாரே

என்பதுடன் முடித்துக் கொள்வோம் கடைசிப் பாடலில் வள்ளல் பெருமான் உலகம், உயிர், ஞானம், வித்தை, போகம், இன்பம் எல்லாம் எனதாயின என்று கூறுகின்ருர் அதற்குக் காரணம் எல்லாம் வல்ல அம்பலச்சித்தர் எல்லாம் நல்கி என்உள் அமர்ந்தார் என்கின்ருர். இதனுல் நாம் அறியப்படுவது என்னவென்ருல் எல்லா உலகையும், நமதாகவும், எல்லாவுயிரை நம்வுயிராயும் எல்லா இன்பத்தையும் நமதின்ப மாகவும் நினைத்திடும் பரந்த மனம் வேண்டும். உலக உயிர்களுக்கு உதவி செய்யவும்—இரக்கம் காட்டவும்—வருத்தம் போக்கவும் நாம் பாடுபட வேண்டும். உயிருள் இறைவன் இருப்பதால் உயிர்க்கு உபகாரம் செய்வதே இறைவழிபாடு ஆகும். என்னும் மிகச்சிறந்த கருத்தினை நமக்கு திருவருட் பிரகாச பெருமான் திருவருட்பா மூலம் தெரிவிக்கிருர்.

இறைவனிடம் கலப்பதோ—முத்தியடை வதோ—மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்வாத எதுவாக இருந்தாலும் இரக்கமற்றவைகள் அந்த நிலையை அடைய மாட்டார்கள். கருணை ஒன்று தான் கடவுளைக் காட்டும் கண்ணுடி தயவு ஒன்று தான் தெய்வத்திடம் அழைத்துச் செல்லும் தெப்பம், இரக்கம் ஒன்று தான் இறைவனை ஈர்க்கும் காந்தம் எனவே ஆரும் திருமுறையின் முழு பயன் உலக உயிர்களுக்கு உதவுவது தான் அந்தந்த உதவி மரக்கட்டையைப் போல் மனத்தை வைத்துக் கொண்டு இரும்பு போல் இதயத்தை வைத்துக் கொண்டு இயந்திரம் போல் இயங்கும் கடமை என்ருே—கடவுளைப் பெறவழி என்ருே கருதி செய்வது சரியல்ல என்பதும் மட்டுமல்ல தவருன பாதைக்கு வழிஎன்று பொருள் நாம் உள்ளக் களிப்புடன் எல்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணிச் செய்ய வேண்டும். இந்த எண்ணம் உள்ளம் விரும்பி யேற்றதாக இருக்க வேண்டும் உரிமையுடன் செய்ய வேண்டும். அப்படி அன்பால் அருளால் ஆருயிர்க்கு அன்பு செய்யும் அற்புத மார்க்கம் தான் சன்மார்க்கம். மனம் இளக இறைவனைப் பாடவேண்டும். பாடல் பாடி மனத்தை இளகச் செய்து கொண்டு உயிர் களுக்கு உபகாரம் செய்யும் உயிர்பணி செய்தல்

வேண்டும் இதுவே எல்லாவற்றிலும் சிறந்த— உயர்ந்த, தவம், ஜபம், யோகம், ஞானம், முத்தி எல்லாம். ஒன்பது என்னும் எண்ணுக்குள் எல்லா எண்களும் அடங்கி விடுவது போல் உயிரிரக்கத் தான் செய்யும் பணியில் எல்லாம் அடகிங் விடுகிறது. எனவே இந்த தூயமாரச்சுத்தை பின் பற்றுவோமாக ! இந்த மார்க்கத்தை போதிக்கும் சன்மார்க்க சங்கம், சன்மார்க்க சங்கத்தை உலகிற்கு அளித்த வள்ளல் பெருமான், வள்ளல் பெருமானையும், இறைவனையும், மக்கள் கடமைகளையும் காட்டும் திருவருட்பா, திருவருட்பா நமக்கு காட்டும் அருட்பெருஞ்ஜோதி இறைவன் ஆகிய எல்லாம் வாழ்க! வாழ்க! இனிது.

போற்றிநின் பேரருள்போற்றி நின்பெருஞ்சீர்
ஆற்றலி னோங்கிய அருட்பெருஞ் ஜோதி
வெல்கநின் பேரருள் வெல்க நின்பெருஞ்சீர்
அல்கநின் றோங்கிய அருட்பெருஞ்ஜோதி
வாழிநின் பேரரருள் வாழிநின் பெருஞ்சீர்
ஆழியொன் றளித்த அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

---

மிகப்பெரிய ஆறும் திருமுறையை மிகச்சிறியவனாகிய நான் ஆராய்ந்து எழுதியது சிறுபிள்ளைத்தனம் என்று அறிவேன். ஆனாலும் எனது பிஞ்சு உள்ளத்தில் எழுந்த பெருதிணப்பே எனக்கு துணையாக இருந்தது அந்த நினைவுகளை வள்ளல் பெருமான் அருளினார் என்ற திருப்தியுடன் அமைகின்றேன் "நின்பெருமையை நான் உரைக்க நான் யாரோ நான் எவவே நாணுகின்றேன். நடராஜ குருவே" என்று வள்ளல் பெருமான் கூறும் போது அடியேன் சூரியன் முன்ஏற்பட்ட விளக்கே போல்வேன் என்றாலும் விளக்குக இருளடைந்த வீட்டிற்கு ஒளிதர உதவும் அதுபோல் இக்கட்டுரை பயன்படும் என்பது என் கருத்து. மலரில் இதுவே பெரிய நீண்ட கட்டுரை என்ன செய்வது பொருள் பெரியது புத்தகமும் பெரியது. பொறுத்தருள்க :

---


எல்லாவிதமான இங்லீஷ் மருந்துகளுக்கும் சிறந்த இடம் :

ஜெயா மருந்து கடை

குப்தா மெடிகல் ஸ்டோர்ஸ்

திருவண்ணாமலை

குறிப்பு : ஜெயா மருந்து கடையில் சோடா கியாஸ் & எஸன்ஸ் கிடைக்கும்

மலிவான விலை ! மனதுக்கேற்ற ஆடை !!

கண்ணைக் கவரும் டெர்லின், ரெயான்

டெரிகாட்டன், ட்விங்கிள், பாரகன்

சில்க்குகளும், உல்லன்மப்ளர்

உயர்ந்த பாப்ளீன்களும், கடாவ்.

அரவிந், பின்லே & பென்னி

மேட்டூர் மில் ரகங்களை

தேர்ந்தெடுக்க சிறந்த இடம்

ஜோதி ஸ்டோர்ஸ்

ஜவுளி வியாபாரம்.

ஆம்பூர், வ. ஆ.

## BOOK PUBLISHERS

TIRUMALAII PATHIPAGAM
1, Wallers Road, 1st Lane
Madras-2

# அமைப்பும் வளர்ச்சியும்

இந்த சன்மார்க்க சங்கம் திருத்தணிகை திருப்பதி நெடுஞ்சாலையோரமாக அரக்கோணம் வட்டம் அலுவலகத்திற்கு ஒரு பர்லாங் சமீபத்தில் தென்திசை நோக்கி 70 × 100 அளவுள்ள 18 செண்டு நிலத்தில் R. S. துரைசாமி முதலியாராகிய அடியேனும் மதுரை நிலக்கோட்டை ரயில்வே கண்டிராக்டர் S. சிவக்கொழுந்து பிள்ளையாகிய நாங்கள் இருவரும் கிரையம் பெற்று பார்த்திப ஆண்டு வைகாசித் திங்கள் 31-ம் நாள் 13-6-1945 புதன்கிழமை பூசம் நன்னாளில், திரு ஸ்ரீலஸ்ரீ முத்தானந்த அடிகள், திரு இராஜமாணிக்கம் பிள்ளை (திருவருட்பா பதிப்பாளர் சென்னை இவர்களால் விதிப்படி அமைத்து சிறு அளவில் துவக்கம் செய்தோம்.

இந்த சங்கம் வடலூரில் அமைத்துள்ள சத்திய ஞான சபை, சத்திய தருமச் சாலை சிதம்பரம் கோபுரம் தரிசிக்கும் அளவில் உள்ளதுபோல, திருத்தணிகைக்கு 7 மைல் சமீபமாக திருத்தணிகை கோபுரம் தரிசிக்கும் அளவிலும் அமைந்துள்ளது. மேற்கண்ட சங்கத்தை 12-11 1946-ல் R. S. துரைசாமி முதலியாராகிய அடியேனும், S. சிவக்கொழுந்து பிள்ளையும் பொதுவுடமையாக, தான செண்டில்மெண்டு பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் செய்து, ஞாபகார்த்த சாசனம் குறிப்பு, பாலிஸ் செய்த கல்லில் பொறித்து கட்டிடத்தில் அமைத்துள்ளோம்.

●

சிறு அளவில் துவக்கப்பட்டது, நாளடைவில் அடியேனுடைய முயற்சியாலும், திரு. S. சிவக்கொழுந்து பிள்ளை, திரு. ஊ. வ. தட்சிணாமூர்த்தி முதலியார் பேருதவியாலும், மற்ற அன்பர்கள் உதவியாலும், திருமதி நாராயணியம்மாள், திருமதி தேவகியம்மாள் தங்கள் பெயரால் அறக்கூழ்ச் சாலை, நூல் நிலையம், அறக்கூழ்ச் சாலை வளர்ச்சிக்கு நீடிய வருவாய்க்கு மூன்று கடைகள் திருமதி நாராயணியம்மையாரால் பொருளுதவி செய்தும், திருமதி K. B. சுந்தராம்பாள் பாட்டுக் கச்சேரி அமைத்து, அதனல் கொஞ்சம் பொருளுதவி கிடைத்து, சங்கம் பூர்த்தியாக சத்திய ஞான சபையும், சத்திய தருமச்சாலையும் வருவாய்க்கு கடைகளும் பாதுகாப்பு மதில் சுவர்களும் எழுப்பி, பூச்செடிகளும், மா, பலா, வாழை, தென்னை மரங்களும் அமைத்து 17-2-1962 மாசிப் பூசம் நன்னாளில் திருமுருக கிருபானந்தவாரியார், திரு சச்சிதானந்தம் பிள்ளை, திரு வடலூர் வள்ளலார் அடிமை அவர்களால் தூபி நீராட்டு விழா செய்து, சிறப்புடன் திறப்பு விழா செய்யப்பட்டது.

1961-ம் ஆண்டு ஐந்து பிள்ளைகளைக் கொண்டு அனாதைப் பிள்ளைகள் ஆதரிப்பு ஒன்று துவக்கி மூன்று மாத காலத்திற்குப் பின் சரிவர இயங்காததால் அம்முயற்சி கைவிடப்பட்டது. இச்சங்கம் 20-3-61ல் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட சங்கம் ஒவ்வொரு வருடமும் நான்கு விழாக்கள், வைகாசி 11-ம் நாள், ஆடி கிருத்திகை நன்னாளில் மூன்று நாள் தொடர்ந்து நீர், மோர், பாணகம், கூழ் முதலியவை தொண்டு செய்வது, புரட்டாசித் திங்கள். மூன்று நாள் திருவருட் பிரகாச வள்ளலாரின் பிறந்த நாள் விழா திருவீதி வுலாக் காட்சியுடனும், தைப்பூசம் நன்னாளுக்கு சங்க உறுப்பினர்கள் யாவரும் வடலூர் செல்வதால் தைப்பூச நினைவு நாளும் ஆண்டு விழாவுமாக 7-நாள் மாசிப் பூசம் நன்னாள் தொடர்ந்து செய்து வருகிறோம்.

நமது தெய்வத் தந்தையாகிய திருவருட் பிரகாச வள்ளலாரின் கொள்கைப் உறுப்பினர்கள் அகவினத்தார்களாகவும், கருணையுஞ் சிவமே பொருளெனக் கருதி வழிபடுவதும் வாரம் இருமுறை, திங்கள், வியாழக்கிழமை தோறும், திருவாயிரம், திருவகலல் முறையாக அன்பர்கள் கூடி கூட்டு பாராயணம் செய்வதுமாகவும் அற்றூர்க்கு அரும்பசியாற்றுவதும் செடி கொடிகளை கண்காணித்து போஷிப்பதுமாக பணியாற்றி வருகிறோம். அரசாங்க ஆதரவுடன் ஒரு துவக்கப்பள்ளி (ஜோதி வள்ளலார் ஆரம்பப் பள்ளி) என் 6-6-1962ம் நாள் ஒரு ஆசிரியரைக் கொண்டு துவக்கி இப்பொழுது சுமார் 200 பிள்ளைகள் வரை நான்கு ஆசிரியர்களைக் கொண்டு ஐந்தாம் வகுப்பு வரையில் தக்க முறையில், பள்ளித் துவக்கத்தில் தெய்வ வழிபாடு 20 நிமிடம், ஒழுக்கமும்,

பண்பும், பக்தியும் போதிக்கப்பட்டு சங்கம் கட்டிடத்திலேயே நிறைவேறி வருகிறது.

எங்கள் துவக்கப்பள்ளிக்கு ஒரு தனி கட்டிடமும் அமைத்து ஒரு உயர்தர துவக்கப் பள்ளியாகவும், பள்ளிப்பிள்ளைகளுக்கு சன்மார்க்க நெறி பரப்பவும், திருத்தணிகையில் ஒரு சன்மார்க்க சங்கம் அமைக்க வேண்டும் என்ற ஒரு பேரவாயிருப்பதால் அன்பர்கள் ஆதரவும், அருட்பெருஞ்சோதி ஆண்டவன் திருவருள் கூட்டி வைக்குமென்றும், இம்முயற்சிக்கு ஆண்டவன் அருளும், நிறை ஆயுளும் கிடைக்கப் பெற்றுல் முடிக்க எண்ணி பிரார்த்தித்து வரும்.

அன்பன்
R. S. துரைசாமி
செயலாளர்
பிரமஞ்ஞான சமரச சுத்த சன்மார்க்க சங்கம்
அரக்கோணம்


எங்களிடம் கீழ்க் கண்ட மோட்டார்கள் ரெடி ஸ்டாக்கில் கிடைக்கும்.

B. E. T.' 'சுகுணு' 'கிர்லாஸ்க்கர்' டீக்கோ' 'கிராப்டன்' மோட்டார்கள்- தண்டபாணி பம்புகள், ரைஸ் மில் பாகங்கள், பைப் பிட்டிங்ஸ், எலக்டிரிகல் சாமான்கள் குறைந்த விலையில் கிடைக்கும்

M/s. பத்மனுப முதலியார்

பம்பு செட், மெஷினரி, &எலக்டிரிகல் வியாபாரம்.

30, ஸ்டேட் பாங்க் அருகில்,

வேலூர்.



உயர்ந்த ஜவுளி ! குறைந்தவிலை !

இன்றே வாருங்கள் !

கண்ணைக் கவரும் மில் ஜவுளி தினுசுகளும், கவர்ச்சி மிக்க கைத்தறி ஜவுளி தினுசுகளும், சுப விசேஷங்களுக்கு வேண்டிய எல்லாவித ஜவுளி தினுசுகளும்,

நம்பிக்கையுடன் வாங்க சிறந்த இடம்:

மோஹன் ஸ்டோர்

ஜவுளி வியாபாரம் ஆம்பூர்.

எங்களிடம் பக்கிங்ஹாம் & கர்னுடிக் மில் ஜவுளிகளும்
எங்கும் பிரசித்திப்பெற்ற லுங்கி தினுசுகளும் கிடைக்கும்,



எங்களிடம் எல்லாவித உயர்தரமான பனியன்கள், ரெடிமேட் ஆடைகள், உள்ளன் உடைகள், மற்றும் டிராவலிங் பேக்குகள் சரசமான விலையில் கிடைக்கும்.

ஒருமுறை விஜயம் செய்யவும்.

அருட்ஜோதி ஸ்டோர்ஸ்

104, லாங் பஜார்.

வேலூர்: வ. ஆ. ஜில்லா.



சத்திய ஞானசபை

போன் : நெ. 49

நூற்றுண்டு நிறைவு
விழாவிற்கு
எமது
நல்வாழ்த்துக்கள்

**A. K. சுப்ரமணிய முதலியார்**

மளிகை, பஜார்

அரக்கோணம்

Phone : 139

DRINK & ENJOY

# FRESH AMBIKA'S COFFEE

100 Per Cent Pure

## AMBIKA COFFEE WORKS

BAZAAR STREET,

CHITTOOR A. P.

— -* —

போன் : 139

# சுத்தமான அம்பிகா காப்பி

அருந்தி திருப்தி அடையுங்கள்

100 சதவீதம் சுத்தமானவை

## அம்பிகா காப்பி ஒர்க்ஸ்

பஜார் வீதி, சித்தூர் A. P.

தொலைபேசி எண் : 43

## கூட்டுறவே நாட்டுயர்வு

# வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம் லிட். வேலூர்

நல் வாழ்க்கைக்கு அவசியத்தேவைகள் மூன்று

1. **உண்ண உணவு :-** எங்கள் சங்கத்தின் நியாய விலைக்கடைகள் மூலம், மக்களுக்கு மிகவும் மலிவான விலையில் அரிசியும், மற்ற பண்டங்களும் வினியோகம் செய்யப்படுகின்றன.

   உணவு உற்பத்தி பெருக்கிற்கு மூல காரணமாயுள்ள விவசாயிகள், குறைந்த செலவில் அதிக விளைச்சல் பெற தரமிக்க கலப்பு உரங்கள் தயாரித்து நியாயவிலையில் விற்கப் படுகின்றன.

2. **உடுக்க உடை :-** இச் சங்கத்தின் விற்பனைக் கூடத்தில் பல்வகை வண்ண ஆடைகளும், நேர்த்தியான சேலைகளும், எல்லோருடைய தேவைகளுக்கும் ஏற்றவாறு மிகவும் மலிவான விலையில், ஒரே விலையில் விற்கப் படுகின்றன.

3. **இருக்க இடம் :-** இந்தத் தேவையை நீங்கள் கவனித்துக் கொள்வீர்கள் !

   இவை தவிர உங்கள் குடும்பத்திற்குத் தேவையான பலவகைப் பொருள்களையும் எங்கள் விற்பனைக் கூடத்தில் மலிவான விலையில் பெறலாம்.

**வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு**
**வினியோக விற்பனை சங்கம்**
**வேலூர்.**

நூற்றுண்டு நிறைவு விழாவிற்கு
எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

# மூர்த்தி மருந்து கடை

எல்லாவித இங்கிலீஷ் மருந்துகளும் கிடைக்கும்

29, கடம்பராயன் தெரு, திருவண்ணுமலை.

ஏஜண்ட் : விக்ஸ்

# THE ARKONAM CO-OPERATIVE URBAN BANK LTD. C-1225

## ARKONAM

Estd. 1935 Phone No. 41.

| | |
|---|---|
| PAID UP SHARE CAPITAL | Rs. 44,021 |
| RESERVES | Rs. 28,100 |
| DEPOSITS | Rs. 1,81,632 |
| WORKING CAPITAL | Rs, 2,75,000 |

All kinds of Deposits accepted

### Rates of interest on Fixed Deposits

| | | |
|---|---|---|
| 1. | FOR 6 MONTHS ... | $5\frac{1}{4}$% |
| 2. | FOR 1 YEAR ... | $6\frac{1}{4}$% |
| 3. | FOR 2 YEARS ... | $6\frac{3}{4}$% |
| 4. | FOR 3 YEARS ... | 7% |
| 5. | FOR ABOVE 3 YEARS ... | $7\frac{1}{2}$% |

All kinds of Banking Business transacted

**V. RAJAGOPALAN**

PRESIDENT.

ஸ்தாபிதம் : 1959 போன் நெ : 612

## நூதன ஜவுளி ரகங்களில்

டெரிலின், சூட்டிங், ஷர்ட்டிங், ரயான், நைலான், நைலக்ஸ், டிர்லான்

சேலைகளும், லான் வாயில் & கைத்தறி கோடம்பாக்கம்,

சின்னாளப்பட்டி சேலைகளும், வேஷ்டிகளும்,

மேட்டூர் மில் ரகங்களும் கிடைக்குமிடம்!

# சாமி எம்போரியம்

## 167, லாங்கு பஜார், வேலூர். (வ. ஆ.)



Phone: 241 Tel: SWEETSUGAR

# V. Doraswamy Cheety Sons

## 453, Main Bazaar

## (VELLORE. N. A.)

**Distributors for:**

Parrys Sweets, Deccan Sweets, Britannia Biscuits, Horlicks & Deluxe Steel Furniture

**Wholesalers:**

**M/s. HINDUSTAN LEVER LTD.,**

(Food Products)

**Stockists:**

**R. M. H. STEEL COTS**

## The Co-Operative General Bank Ltd., Vellore

Phone : 52 & 524 Grams : COBANK

### BRANCHES:

Arkonam, Cheyyar, Tiruvannamalai,
Ambur, Tirupathur.

**Offers an attractive Rate of Interest**

| | | |
|---|---|---|
| SAVING DEPOSIT | ... | 4% |
| CALL DEPOSIT | ... | 4% |
| FIXED DEPOSIT UPTO | ... | $7\frac{1}{4}$% |
| RECURRING DEPOSIT | ... | $7\frac{1}{2}$% |

For Particulars Regarding Free Facilities
Please Contact

the SECRETARY

PHONE : **47.**

*With the best compliments*

## V. RAJAGOPAL IYER

**General Merchants & Coconut Stockist**

BAZAAR, : : ARKONAM.

Phone No: 331 G. S. T. 211

# G. மாணிக்க முதலியார்

மரம், ஓடு வியாபாரம், மரம் அறுக்கும் ஆலை

**காட்பாடி ரோடு, வேலூர் (வ. ஆ.)**

வணக்கம்

எங்களிடம் வேங்கை, தேக்கு, கடுக்கா, வெண் தேக்கு மரங்களாகவும், சயிஸ்களாகவும், விலை மலிவாகவும், சுத்தமாகவும் கொடுக்கிறோம்.

தங்களுக்கு தேவையான சயிஸ்களுக்கு ஆர்டர் கொடுத்தால், குறித்த காலத்தில் சப்ளை செய்கிறோம்.

*With best compliments of*

# ARUNA MEDICAL HALL

**CHEMIST & DRUGGIST**

**Thiruvannamalai, N. A. Dt.**

•

எல்லா வகையான இங்கிலீஷ் மருந்துகளும், நியாயமான விலையில்
நம்பகமாய் கிடைக்கும் இடம்

# அருணா மெடிகல் ஹால்

கெமிஸ்ட் & டிரக்கிஸ்ட்ஸ்

**திருவண்ணாமலை, (வ. ஆ. ஜில்லா)**

# வள்ளலாரும் மாணிக்கவாசகரும்



## திருக்குறள் பீடம் குருகுலம் அழகரடிகள்

மாணிக்கவாசகரும் வள்ளலாரும் காலத்தால் வேறுபட்டவர். ஆயினும், இவர்களிடையே ஓர் ஒற்றுமை உண்டு. அதுதான், ''சன்மார்க்கம்' என்பது இருவரும் சன்மார்க்க நெறியினர்.

வள்ளலாருக்கு மாணிக்கவாசகரிடத்தில் மிக்க ஈடுபாடு. மாணிக்கவாசகர் நடந்து காட்டிய சன்மார்க்கத்தை வள்ளலார் தாமும் கடைபிடித்து நன்கு விளக்கி அது தழைக்க நிலையங்கள் நிறுவியும் உதவியிருக்கிறார்.

முன்னோர் மொழிகளுக்கும் கருத்துக்களுக்கும் விளக்கங்கள் கொடுப்பதில் வள்ளலார் மிகவும் கருத்தூன்றியிருக்கிறார். வள்ளலார் ஆற்றல் அந்நிலையிலும் சிறந்து விளங்குகிறது. அருட்பாவில் இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் கிடைக்கின்றன. 'சன்மார்க்கம்' என்பது வள்ளலாரால் மிகவும் விளக்கம் பெற்றிருக்கிறது.

### ஞான சன்மார்க்கம்

'சன்மார்க்கம்' என்பது 'சீலம்' 'நோன்பு' 'செறிவு' என்னும் முதல் மூன்று நிலைகளுக்கும் அப்பாற்பட்ட நான்காவதாகிய 'ஞானம்' என்னும் தெளிவு நிலை! அதனால், 'ஞானசன்மார்க்கம்' என்றும் இது வழங்கும், ''ஞான சன்மார்க்கமே தெளிமின்'' (6 : 104 : 12) என்று வள்ளலார் விளக்கினார்.

### சுத்த சன்மார்க்கம் :

தூய்மை என்பது அவாவின்மை என்றார் திருவள்ளுவர்; ஞானநிலை பற்றற்ற தன்மையுடையதாதலின் மிகவும் தூய்மையானது; அதாவது மிகவும் உயர்ந்த (அதீதமான) ஞானத்தில் ஞானமான உச்ச நிலையுடையது. இத்தூய சன்மார்க்கம் இதனால் 'சுத்த சன்மார்க்கம்' என்று வள்ளலாரால் இனிது விளக்கப்பட்டது. 'சுத்த' என்னும் அடைமொழி, பல இடங்களில் இங்ஙனம் உயர்ந்த கடந்த மிகத் தூய நுண்ணிய தனி நுகர்வு நிலைக்கு அவரால் வழக்கப்பட்டிருக்கிறது.

''தருணம் இஞ்ஞான்றே சுத்த சன்மார்க்கத்
தனிநெறி உலகெலாந் தழைப்பக்
கருணையும் சிவமுமே பொருளெனக் கருதும்
கருத்துமுற் றெம்மனோர் களிப்ப''

(6 : பிரிவாற்றாமை, 18)

### சிவ சன்மார்க்கம் :

தூய இந்நுகர்வு, மற்றவற்றைப்போல் மங்குவதில்லை; எப்போதும் மங்கலமாகவே இருக்கும். மங்கலம் என்பது மங்காதது, வாடாதது; கிளர்ச்சியும் வளர்ச்சியும் பொலிவும் இருந்து கொண்டே இருக்கும். மங்குவது மதிப்புக்குரியதாகாது. அழிவு உடையது; நிலையில்லாதது; ''மங்குவா ரவர் செல்வம் மதிப்போமல்லோம்'' என்றார் அப்பர் பெருமான்; 'யாம் மங்கலம்' (மங்கமாட்டோம்) என்னும் மங்காத நிலையில் மரணமிலாப் பெருவாழ்வில், விளங்குவோர் சன்மார்க்கிகள்.

மங்கலத் தன்மையைச் 'சிவம்' என்றும் சொல்வதுண்டு; அழியாத மங்கல நிலை கடவுள் நிலை; கடவுள் மங்கலமானவர்; எல்லாம் வல்ல தனிப்பெருங் கடவுளை முன்னோர் இக்காரணத்தால் 'சிவம்' என்று பெயரிட்டு அழைத்தனர்.

மரணமிலாப் பெருவாழ்வாகிய வாடாத மங்கலத்தை அளிக்கும் 'சன்மார்க்கம்' என்பது, 'சிவ மார்க்கம்' என்றே இதனால் கூறப்படும்; 'சிவ சன்மார்க்கம்' என்றும் வழங்கப்படும். இப்படி இருவகையாலும் வள்ளலார் விளக்கி வழங்கி இதனைச் சிறப்பித்தார்.

''செப்பாத மேல்நிலைமேல் சுத்த சிவமார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல்
வேண்டும்''
''துடிசேர்எவ் வுலகமும்எத் தேவரும்எவ்
வுயிரும்
சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றிடுதல்
வேண்டும்''
- (6 : சுத்த சன்மார்க்க வேண்டுகோள் 1,6)

சன்மார்க்கப் பெருநெறியினராகிய மாணிக்கவாசகரை வள்ளலார், ''வாட்ட மிலா மாணிக்கவாசக'' என்று மங்கலக் கருத்தில் அழைத்த தனிச்சிறப்பும் இங்கு நினைவு கூறுதற்குரியது.

**சமரச சன்மார்க்கம் :**

சன்மார்க்கம் என்னும் சொல் 'உண்மைநெறி' என்னும் பொருளுடையது. உண்மை, உள்பொருளாகிய இறைவனை உணர்த்தும். உண்மை என்பது அனைவர்க்கும் பொதுவானது. கொள்கைகளால் நிலைகளால் படிமுறைகளால் பயிற்சிகளால் வேறுபட்டவர்கள் எல்லாரும் உள் பொருளை இறுகப் பற்றியே அவரவர் நெறியில் ஓங்க வேண்டியிருக்கிறது. ஆதலால் சன்மார்க்கம் யாவர்க்கும் பொதுவானது. அதனால் இயல்பாகவே அது சமரச சன் மார்க்கமாக உள்ளது. ''சமரச சன் மார்க்கம்'' பெற்ற வியப்பிதுவே'' (6:132:74) என்று வள்ளலார் அதனை எடுத்துக்காட்டினார்.

**சத்திய சன்மார்க்கம் :**

'சன்மார்க்கம்' என்னும் பெயரில் 'சத்' என்பது உள்பொருளைக் குறிக்கும். உள்பொருள் 'சத்' என்றால் அதன் இயல்பு 'சத்தியம்' எனப்படும். உள்பொருளைப் பின்பற்றுவதென்றால், அதன் இயல்பைப் பின்பற்றுவ தென்பதுதான் பொருள். ஆதலால், சன்மார்க்கம் 'சத்திய சன் மார்க்கம்' எனவும் விளக்கம் பெற்றது. ''சத்திய சன்மார்க்கச் செங்கோல் அளித் தது பாரீர்'' (6:146:4)

**ஷடாந்த சன்மார்க்கம் :**

இனி இச்சன்மார்க்கம் 'ஷடாந்த சன் மார்க்கம்'' என்பதும் வள்ளலார் கருத்து ஆறும் திருமுறை இறுதியில் வள்ளற் பெருமான், ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சங்கம் என்பதற்கு விரித்துதவிய விளக்கம் காணப்படுகிறது.

அதில், சன்மார்க்க சங்கத்தை, ''எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவு நூல் முடிபான நான்காவது மார்க்கத்தை அனுட்டிக்கின்ற கூட்டம்'' என்று தெளிவாக விளக்கிக் கொண்டு 'மார்க்கம் நான்காவன,' தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன் மார்க்கம் என விரித்து, இவற்றில் உயர்ந்த தாகிய சன்மார்க்கத்தை எடுத்து, ஷடாந்த, சமரச, சுத்த, சிவ சன்மார்க்கம் என்று தக்க அடை மொழிகள் தந்து தெளிவு படுத்தத் தொடங்கி, 'ஷடாந்தம்' 'சமரசம்' 'சுத்தம்' முதலியவற்றின் கருத்துக்கள் இன்னவை என்று வள்ளற் பெருமான் காட்டிச் செல்கின்றார்.

ஷடாந்தம் என்பன, 'வேதாந்தம்' 'சித்தாந்தம்' முதலிய ஆறு அந்தங் களாகிய மதங்கள் எனவும், 'சைவம்' முதலிய சமயங்களின் கொள்கைகள் எனவும், சமயங்கள் மதங்கள் என்னும் இவற்றில் தாச மார்க்கம் முதலிய நுகர்வு நெறிகளாகிய மார்க்கங்கள் நான்கும் உள்ளன எனவும், இவற்றில் 'சன்மார்க்கம்' என்பது உச்ச நிலையானது எனவும் விளக்கியருள்வார்.

சமயத்தில் மதம் முக்கியம், மதத்தில் மார்க்கம் முக்கியம், மார்க்கத்தில் சன் மார்க்கம் தலையானது என்றும் தெளிவிப்பார்.

சமயவொழுக்கமுடையோர் சன் மார்க்கத்தை எட்டும் போது சமய சன் மார்க்கம் எனவும், மதச்சிறப்பினர் சன் மார்க்கத்தை எய்தும் போது மத சன்மார்க்கம் எனவும் பெயராதலைப் பிரித்துக் காட்டுவார்.

இனிச், சன்மார்க்கம் என்பதும் நான்கு வகைப்பட்டு, ஞானத்தில் ஞானமாக உயரும் போது, தூய கடந்த சுத்த சன்மார்க்கமாகும் என்று ஒரு விளக்கம் கொடுத்துக் கொண்டு, இப் பெரிய நிலையை அடைவோர் சுத்த தேகிகள் என்றும் எடுத்துக்காட்டுவார்.

வாட்டமிலாத மாணிக்கவாசகரை இத்தகைய அதீத சன்மார்க்கத்தின்சாத்தியராய், அதாவது 'கேட்டல்', 'சிந்தித்தல்', 'தெளிதல்', 'நிட்டை' என்னும் ஞான

சாதனங்கள் கைவந்து அவற்றிற்கு அப்பாலான ஞானத்தில் ஞான முதிர்வுடைய ஞானஞான இன்புருவினராய், (சுத்த தேகியாய்) விளங்குவோர் என்று போற்றினர், வள்ளலார்! ''அருளுருவம் பெற்ற பின்னர் இன்புருவமாயினை நீ எழில் வாதவூர் இறையே'' என்பது அவர் துதி!

மாணிக்கவாசக பெருமானும் தாயுமானர் முதலிய சான்றோர்கள் பொதுவாகச் 'சன்மார்க்கம்' என்று கூறியதில், ''வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யானொருவன் அலனோ'' என்று தாம் உரிமை கொண்டாடியபடி அப்பெரியோர் வழி வந்த இராமலிங்க அடிகளார், சன்மார்க்கம் என்பது இவ்வளவு நுண்ணிய உயர்நிலைகளைத் தன்னுட் கொண்டதென்று விளக்க முற்பட்டு, அதனை, ஷடாந்த சமரச சுத்த சத்திய சிவ சன்மார்க்கம் என்று இங்ஙனமெல்லாம் உரிய அடைமொழிகள் மூலம் விளக்கியருளும் அழகையும் தெளிவையும் கருணையையும் என்னென்பது! அப்பெருமான் கருணையில் தோய்ந்த உலகம் உய்தி கூடுவதாக!






STAR TRUNK WORKS

32, LONG BAZAAR,

Vellore, N. A.

ஸ்டார் ட்ரங்க் ஒர்க்ஸ்

32, லாங்கு பஜார், வேலூர்.

Proprietor:

K. MOHANA MUDALIAR.

Phone : 644

# BOMBAY ELECTRIC CO.

**DEALERS IN EVERYTHING ELECTRICAL**

**46, MAIN BAZAAR, VELLORE, N. A.**

**Distributor For North Arcot District:**

**GANESH FANS**

**CINNI TABLE FANS**

**TENBY PILOT SWITCHES**

**"METROVICK" LAMPS**

**"SIEMENS" LAMPS**

**KELVINATOR REFRIGERATORS**

Please Visit For Your Requirements.

# தமிழ் இலக்கியங்களும் வள்ளலாரும்


## அ. மு. பரமசிவானந்தம்

தமிழ் பேராசிரியர் பச்சையப்பன் கல்லூரி சென்னை


வள்ளலார் தம்மை மறந்த அடியவர். வையக மெல்லாம் வளமுற்று வாழவேண்டும் என்பது அவரது ஆசை. அந்த ஆசை நிறைவேறும் வழித்துறைகளையெல்லாம் எண்ணி எண்ணி சமரச சன்மார்க்க நெறியினை வகுத்தார்–அந் நெறி வளர்ந்து சிறக்க வேண்டுமென்று விரும்பினார்–முயன்றார். எனினும் அவர் நினைத்தபடி வெற்றிபெற முடியவில்லை இறைவன் திருவுள்ளம் அது போலும். 'கடையை விரித்தோம் வாங்குவாரில்லை' என்று அவரே சொன்னதாக வழக்காறு உண்டு. எப்படியாயினும் அவர்தம் சமரச சன்மார்க்கநெறி இன்னும் நாட்டில் தழைக்கவில்லை என்பது தேற்றம். அந்நெறி தழைத்தால்தான் வையம் வாழும் என்பது அதனினும் நன்கு தெளிவாகும் உண்மை.

தம் செம்மை திறம்பா நல்ல வாழ்வின் அடிப்படையை வள்ளலார் பலபாடல்களில் விளக்கிக் காட்டுகின்றார். அவர் தமக்கு முன் வாழ்ந்த 'தம்மை மறந்த' மெய்யடியார்கள் பலரையும் எண்ணிப் பார்க்கிறார். அவர்தம் பாக்கள் இவர் உள்ளத்தில் நிழலிடுகின்றன. அவர் தம் வாழ்வையும் வரலாற்றையும் வாய்மொழிகளையும் எண்ணி எண்ணிப் பார்க்கிறார் அத்தனையும் தன் உயிருக்கு வழியாக அமையும் சிறப்பையெல்லாம் எண்ணுகிறார் 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உணர்வு உள்ளத்து எழும்ப, வாய் 'அருட்பா' வைப் பாடுகின்றது எனவே அந்த நல்ல அருட்பாக்களில் தமிழ்நாட்டுப் பழம்பெரும் இலக்கியங்களின் வாடை வீசக் காண்கிறோம்.

அடிகளார் ஆழ்ந்த புலமையுள்ளவர் தெய்வ உள்ளத்தோடு தமிழ் உள்ளமும் பெற்றவர். அவர் பாக்களைப் படிக்குந்தோறும் அவர்தம் புலமை புலப்படாமற் போகாது. திருவள்ளுவரும் கபிலரும் பரணரும் நக்கீரரும் களிநடம் புரிவர். மணிவாசகரும் அப்பரும் பிறசமயத் தலைவர்களும் வந்து வந்து சிந்தை மகிழ்விப்பர். அடிகளாரின் ஆழ்ந்த தமிழ்ப்புலமை ஒவ்வொரு அடியிலும் நிழலிடும் சில விடங்களில் அவர் மொழிவும் பொன்னேபோல் போற்றுவம் என்ற மரபிற்கு இலக்கியமாய்ப் பல சொற்களை தொடர்களை அப்படி அப்படியே எடுத்தாள்வதைக் காண்கின்றோம். எனவே அத்தனையும் இங்கே நம்மால் எண்ணிப் பார்க்க இயலாது. எனவே ஒரு சிலவற்றை மட்டும் காணலாம்.

அடிகளார் முந்திய அடியவர் தம் பாடல்களுள் தோய்ந்தவர் எனக் கண்டோம். அவருக்கு முன் வாழ்ந்த ஞானசம்பந்தர் தேவாரத்தை ஓதி உணர்ந்து, அதன்படி நடவாத நெஞ்சை நைந்து நோக்குகின்றார்; வாய்பாடுகிறது. உலகில் உடலை விட்டு உயிர் நீங்கப் போவது உண்மை அக்காலத்து உயிர்களுக்கு உற்ற உறவினனாய் 'அஞ்சேல்' என்று அருள் செய்பவன் ஆண்டவனே யாவன். இந்த அடிப்படை உண்மையை உணராத காரணத்தினாலேதான் உயிர்கள் நிலைகெட்டு மயங்குகின்றன. இதை அடிகளார் தன் நெஞ்சை நோக்கியே கூறும் வகையில் உலகுக்கு அறிவுறுத்துகின்றார்.

'புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டைமேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்றருள்
செய்வான் அமரும்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும்
திருவையாறே'

என்பது ஞானசம்பந்தர் வாக்கு. இதை உள்ளத்து உணர்ந்த அடிகளார் நெஞ்சினை நோக்கி,

'புலனைந்தும் என்றருளும் பொன்மொழியை
மாயா
மலமொன்றி அந்தோ மறந்தாய்'
(நெஞ்சறி-470)

எனக்கூறி, உலகில் உயிர்கள் இந்த உண்மையை உணர்ந்தாலன்றி வாழ்வில்லை என்பதை விளக்கிக் காட்டிவிட்டார்.

அப்பரடிகளார் உலகில் மக்கள் உற்றுழலும் பல வேறுபாடுகளை எண்ணிப்பார்க்கிறார். சாதியும் சமயமும் மக்களை அலக்கணுறச் செய்வதைக் காண்கிறார். உள்ளம் நைகிறது. உதடு பேசுகிறது.

'சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்
செய்வீர்?' எனக்

கேட்கின்றார் அப்பர். அப்பர் காலத்தைக் காட்டிலும் வள்ளலார் காலத்தில் நிச்சயமாகச் சாதி, சமயப் பூசல்கள் அதிகமாக நிலவி இருக்கும் என்பது உறுதி. எனவே அவர் அப்பர் அடிகளை ஒற்றி, உலகமக்களை நேரில் நோக்கி,

‘சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரக்குப்பை
யிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்
அழகலவே’
(ஆறும் திருமுறை)

எனக்கூறி அறிவுறுத்துகின்றார். இவ்வாறே அடிகளார் மணிவாசகர் தம் திருவாசகத்தைப் பலப் பல விடங்களில் எடுத்தோதுகிறார் அடிகளார் மணிவாசகரிடம் தம்மைப் பறகொடுத்த நிலையினையும் அவர் பாடலைப் பாடிப்பாடிக் கசிந்து கண்ணீர் பெருக்கிய நிலையினையும் உலகம் நன்கு அறியும். எனவே அத்துணைப் பாடல்களையும் நம்மால் தொகுத்துக் காட்டல் இயலாது ஒன்றே காண்போம்.

மணிவாசகர் இறைவனிடம் பண்டமாற்று வாணிபம் செய்கின்றார் தன்னை அவனுக்கு அளித்த அவன் தன்னை இவருக்களித்தான், இருவரில் பயன்பெற்றவர்தானே எனப் பெருமிதத்தோடு கூறுகின்றார் ஆம்! இறைவன் அருள்வலத்தால் உயிர்கள் பெறும்பலன் எண்ணற்றவை. ஆனால், நம்மால் அவனுக்கு என்னபயன்? இதையே மாணிக்கவாசகர் நம் பொருட்டு வாயாரப்பாடுகிறார்.

‘தந்ததுன்றன்னைக் கொண்ட தென்றன்னைச்
சங்கரா யார்சொலோ சதுரர்
அந்த மொன்றில்லா. ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்ற தொன்றென்பால்’ என்பது

திருவாசகம். இப்பெருவாசகத்தில் தம்மை மறந்த வள்ளலார் அம்மையின் முன்னின்று,

‘நின்னால் எனக்குள் எல்லா நலனுள் நினை
அடைந்த
என்னால் உனக்குள நென்னைகண்டாய்?
எமை ஈன்றவளே!
முன் நால் வருக்கருள் ஒற்றியெம்மான்
கண்புமுமணியே
மன்னு மறையின் முடிவே! வடிவுடை
மாணிக்கமே!
(வடிவுடை-மாலை-91)

எனப்பாடுகின்றார், இவ்வாறு வள்ளலாருக்கும் வாழ்ந்த சமயத் தலைவர்தம் வாக்கும் கருத்தும் பிறநலங்களும் அவர்தம் அருட்பாவில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

அருட்பாக்களைப் பாடிய அடியவர்கள் மட்டுமின்றி, வள்ளலார் உள்ளத்தை அறம்பாடிய வள்ளுவரும் ஈர்த்துள்ளார் எனக் காண்கின்றோம். சமயநெறி கடந்த பெருநூல் எனக்குறள் போற்றப்படினும் அதில் அமைந்துள்ள மெய்க் கருத்துக்கள் அனைத்தும் எல்லாராலுங் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளமை அறிவோம். அடிகளார் வள்ளுவர் காட்டிய வழியை உணர்ந்து உணர்ந்து இறைவன் முன் நிற்கின்றார், அப்படி அப்படியே குறட்பாக்களைத் தம் பாடல்களில் எடுத்தாளுகின்றார்.

‘உறங்குவது போலுமென்ற ஒண்குறளில்
வாய்மை
மறங்கருதி அந்தோ மறந்தாய்’
(நெஞ்சறி-466)

‘செல்லாவிடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லறதனிற் தீயதென்று எண்ணலையே’
(நெஞ்சறி-433)

பற்றற்றான் பற்றினையே பற்றியிடல் வேண்டு
பற்றற்றால் அன்றிப் பலியாதால்’ மது
(நெஞ்சறி-624)

என்பன அருட்பா அடிகள். இவை குறள் நலம் சான்றவை என்று கூறவும் வேண்டுமோ?

இவ்வாறு எண்ணற்ற இலக்கியங்களை வள்ளலார் தம் வாய் மொழிக்கிடையில் எடுத்தாண்டு தம்புலமைத் திறனையும் தெய்வ வலத்தையும் காட்டி நம்மை மகிழ்விக்கின்றார் என்றென்றும் மகிழ்விப்பார். அவர்தம் அருட்பாவின் வழி உலகம் நடக்கத் தொடங்கின் நலனுண்டு அவ்வாக்கப்பணிக்கு-ஒன்றி உலக சமரச சன் மார்க்க அருள்நெறி வளர்க்கும் பணிக்கு, ‘சேர வாரும் சகத்தீரே!’ என அழைத்து அமைகின்றேன்.

**எல்லா உயிர்களும்**

**இன்புற்று வாழ்க**

# மெய்கண்டாரும் வள்ளலாரும்

(வேலூர் கிருஷ்ணமூர்த்தி)

இறையியலை ஈராண்டிலே இயம்பிய மெய்கண்டாரும், மூவாண்டிலே முழக்கிய சம்பந்தரும் ஏழாண்டிலே எடுத்தோதிய வள்ளலாரும் முப்பொருளை விளக்கி உயிர் உய்தி பெற மரணமிலாப் பெருவாழ்வுக்கு செப்பனிட்ட சிவ நெறியைக் கூறினவர்கள். இலக்கியங் கண்டதற்கிலக்கண மியம்பலின் என்ற கற்கேற்ப இலக்கண இலக்கிய மாக்கிய சம்பந்தரும், இலக்கண வண்ணமாக்கி இலக்கணமாய் எழிலுற ஒளிர வைத்த மெய்கண்டாரும் இலக்கிய இலக்கணத்தை அருளமிழ்த மாக அருளிய வள்ளலாரும் சிவமாம் செம்பொருளை விளக்க வந்த முச்சுடர்கள்.

இறை-உயிர்-தளை ஆகிய இம்மூன்றும் என்றுமுள்ள மெய்ப் பொருள்கள் என்பனவற்றை, "வேண்டிய கல்லியாண்டு மூன்றிறவாது" என்று தொல்காப்பியம் கூறுவதினின்று சில நெறியின்மையையறிகிறோம். அநாதியாகியுள்ள உயிர்கள் மாயையினுதவியால் மறைப்பினின்று நீங்கி நல்வினையால் விளக்க முற்று அருளால் ஆட்கொள்ளப் பெற்று இறையடி எய்தி இன்புறுகின்றன.

'தனிக் கடவுளொருவருண்டே-கண்டீர்' 'உயிரெழு வகுப்பையும்'-'ஆணவம், மாயை, கன்மம்'-என்று வள்ளலார் உரைத்தமையால் முப்பொருள் நன்கு வலியுறுத்தப்படல் தேற்றம்.

கடவுள் வேறு; உயிர்கள் வேறு; தளைவேறு என்ற கொள்கைகளை மறுப்பான் வேண்டி வளர்ந்த மாயா வாதக் கொள்கைகளை வள்ளலார் நன்கு அஞ்சுதலின்றி வன்மையாகக் கண்டிக்கிறார். உலகம், பொய், உயிர்களும் பொய், இறையொன்றே மெய் என்ற கொள்கை தமிழகத்தில் சுழன்று சுழன்று ஓயாது உழன்ற வண்ணமாயிருந்ததை வள்ளலார் வன்மையுடன் எதிர்த்தார். '... அது நான் என்னும் கைஞானம் கழன்றேறி...' என்று கூறினார் கடவுளே, நான் என்று கூறினால் நான் கடவுள் என்று தான் பொருள்படும். இது முரணுடையதென்று அவர் அறைந்ததோடல்லாமல் 'நாம் பிரம நமையன்றியாம் பிரமம் வேறில்லை' என்ற நெறி 'புன்மைநெறி' என்றார்

"மண்ணுலகதிலே உயிர்கள் தாம் வருந்தும்.' என்று கூறுவதாலே உயிர்கள் பல என்றும் ஒவ்வொரு உயிரும் வேறுபட்டிருப்பதாலும் ஓர் உயிரைப் போன்று மற்றோர் உயிர் இல்லாமலிருப்பதாலும் ஓர் உயிர் உவகையுறவும் மற்றோர் உயிர் ஊறுறவும் காண்கின்றோமாதலால் உயிர்கள் பல வென்றும் உயிர்கள் வேறுபாடுடையன வென்றும் அறிவிக்கிறார்.

இறைவனே உயிர்களென்றால் உயிர்களுக்கு வினையே இல்லை; வள்ளலார் உயிர்களுக்கு நல்வினை தீவினையுண்டென்பதை நன்கு வலியுறுத்த "தீவினை நல்வினை எனும் வன் கயிற்றால் இந்தச் சீவர்களை ஆட்டுகின்ற தேவே' என்று கூறுகிறார் "இருவினையில் போக்கு வரவு புரிய.. ..." என்று மெய் கண்டார் கூறியிருப்பதை நுணுகியாராயின் உயிர்களுக்கு வினையுண்டென்பது தேற்றம்.

நல்வினை தீவினை ஆகிய இருவினைகளுக்கேற்ப உயிர்கள் இறைவனால் பலனுறும்; வினைக்கேற்ற விளைவு தானாக உயிரை எய்தாது; ஆனால் சேக்கிழார் பெருமான் பகர்ந்தவாறு' செய்வினை செய்வானும். அதன் பயனுஞ் சேர்ப்பானும்... என்பதால் இறைவனே வினைக்கேற்ற விளைவுகளை உயிர்களுக்கு நல்குகிறார். ஆதலால் இறைவன் உண்டு; உயிர்கள் உள்ளன; வினையுண்டு.

புலனின்பங்களில் தோய்ந்துழலும் உயிர் தன் நன்னிலையை உணராது அவலமுறும், மலத்திலழுந்தி மறைக்கப்பட்டுள்ள உயிர், உண்மையறிவாலுணர்ந்து மலங் கடந்து அருளால் ஆட்கொள்ளப் பெற்று இறையருள் பெறுமியல்பை "ஐம்புலவேடரின் அயர்ந்தனை....... தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்த"

உயிர் புலன் வழி செல்லாது அரன்வழி செல்லுதற்கு வள்ளலார் இந்திரிய ஒழுக்கம்-கரண ஒழுக்கம்-சீவஒழுக்கம்-ஆன்ம ஒழுக்கம் ஆகியவைகளைக் கடைபிடித் தொழுக வேண்டுமென்று கூறுகிறார்; இம்முறைகளைக் கைக்கொள்ளின் உயிர் உண்மையறிவு பெற்று மல நீக்க முற்று அருள் பிடிப்புற்று
அரன் உணர்த்து மியல்பை

"பாதி இரவில் எழுந்தருளி
பாவியேனை எழுப்பி அருள்
ஜோதியளித்தன் உள்ளகத்தே
சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி நடஞ் செய பேரின்ப
நிதி நான் பெற்ற நெடும் பேற்றை
ஓதி முடியாதென் போலிவ்
உலகம் பெறுதல் வேண்டுவனே"

என்று வள்ளலார் விளம்புகிறார்

கானல் நீர் போன்ற பாசங்களிலிருந்தும் வெப்பமாகிய பிறவிகளிலிருந்தும் விலகிய உயிருக்குத் தன்மையாம் புகலிடமளிப்பது விதிப்படி ஐந்தெழுத்தை எண்ணுவதே என்று மெய் கண்டார் கூறுகிறார்.

நமசிவய என்ற ஐந்தெழுத்தும் மெய்ப் பொருள். மறைப்பு-மலம்-கடவுள்-அருள் உயிர் ஆகிய இவைகள் தான் ஐந்தெழுத்துக் குரிய பொருள்கள்.

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணி யார் திண்ணியராகப் பெறின். என்றவாறு ஐந்தெழுத்தை எண்ணினால் இறைவன் கழல் எய்துவர்.

வள்ளலார் எதை மறந்தாலும் நமசிவாயத்தை மறவேன் என்று கூறுவதோடல்லாது நற்றவத் தவர் உள்ளிருந்தோங்கும் நமசிவாயத்தை மறவேன் என்றருளியிருக்கிறார்.

நமசிவய என்பது திண்மை ஐந்தெழுத்து; சிவயநம என்பது நுண்மை ஐந்தெழுத்து மணி வாசகர் சிவாயநம எனப் பெற்றேன் என்று அருளியுள்ளார். கடவுள்-அருள்-உயிர் மறைப்பு-மலம் உயிரை கடவுள் அருள் ஒரு பக்கம் இழுக்கவும் மறைப்பும் மலமும் மற்றொரு பக்கம் இழுக்கவும் உயிர் உண்மையறிவால் அருளை உணர்ந்ததும் மலங்கழல அரன்கழலடை கிறது.

அதி நுண்மை ஐந்தெழுத்தென்பது மறைப் பும் மலமும் கடந்த சிவய என்பதே; கடவுள் அருள்-உயிர். இத்தத்துவத்தை வள்ளலார் மிகச் சிறப்பாகக் கூறிகிறார்:-

சாகாத்கலை என்பது சி = கடவுள்
வேகாக்கால் என்பது வ = அருள்
போகாப்புனல் என்பது ய = உயிர்

உடம்படுமெய் என்பது வ ய உடம்பை அடுக் கின்ற மெய் அல்லது உடன் படுகிறமெய்; சிகரத்தின் பிரிவினையின்றி அதன் சாயலாயிலங் கும் அருள் வ உடம்பிலுள்ள உயிரை ய உடன் படுத்துகிறது. ஆதலால் சிவமே தமிழ்; தமிழே சிவம்.

திருவைந்தெழுத்தை விதிப்படி ஓதுவதால் இறைவன் உயிர்களினிடம் கலந்துமேவருகியும் இருத்தலால், உயிர் இறை இன்பத்தைத் துய்க் கத் தொடங்கியதும் இறையுடனிரண்டறக் கலத்தலால் மும்மல நீக்கமெய்தி வல்வினை இன்றி இருந்ததை மெய்கண்டார்

“ அவனே தானேயாகிய அந்நெறி
ஏகனாகி இறை பணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே. ”

வள்ளலார், இறைவன் உயிருடன் கலந்திருத் தலை மிகச் சிறப்பாக கூறுகையில்,

‘ உயிர்கள் தொறும் கலந்துமேவி ’ என்றும்
‘ என்னுயிர் நீ என்னுயிர்க்கோர் உயிரும்நீ
என்
இன்னுயிர்க்குத் துணைவன் நீ......எனைக்
கலந்தநட்பும் நீ...

என்று கூறுகையில் இறைவன் உயிரிடைக் கலந்த மிகப் பெரிய நிலையைத் தன் துய்ப்பு நிலையிலிருந்ததைக் கூறுகின்றார்.

‘ இறை பணி நிற்க; என்ற அரிய கருத்துக்கு என்றும் இறையை நினைந்த வண்ணமாயிருத்தல் வேண்டு மென்பதற்கு வள்ளலார் மிகச் சீரிய முறையில் கூறுகிறார்:-

“ நீறணிந்து ஒளிர் அக்கமணிதரித்து உயர்
சைவநெறி நின்று உனக்குரிய வோர்
நிமலமுறும் ஐந்தெழுத்துள் நிலையுறக்
கொண்டு நின்னடி பூசை செய்து
வீறணிந்து என்றும் ஒரு தம்மைபெறும்சிவ
ஞான வித்தகர் பதம்பரவும் ஓர்
மெய்ச் செல்வ வாழ்க்கையில் விருப்பமுடை
யேன்
இது விரைந்தருள வேண்டும் அமுதே. ”

ஐந்தெழுத்து உள் நிலையுறக் கொண்டு நின்னடி பூசை செய்து என்று கூறுவதில் இதய தி லுள்ளே ஐந்தெழுத்து என்றும் நிலைத்திருக்கும் என்பது முடிந்தமுடிவு; நிலைத்துள்ள எழுத்து கொண்டு நின்னடி பூசை செய்து என்றதால் ‘ இறை பணி நிற்றல் ’ என்பதற்கு இதனினும் நல் விளக்கம் தேவையில்லை. ஆதலால் எந் நேரமும் ஐந்தெழுத்தை நினைத்து இறையடி பூசித்தல் வேண்டும். இந்நிலையில் இருப்பவர் கள் இறைவனைப் பிரியா திரண்டறக் கலத்தல் வெள்ளிடைமலை.

அடியார்களையும் திருச்சின்னமணிந்தவர் களையும் திருக்கோயில்களையும் மயக்கமின்றி அரன் என வழிபட வேண்டுமென்பதை

‘ மாலறநேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே!

என்று மெய்கண்டார் கூறியுள்ளார்.

“ பாங்குடையார் செய்யில் பலித்த திரு
நீறணியா
தீங்குடையார் தீமனையில் செல்லாதே ”

என்றும்

“ அருள் செய்நீறிடார் அமுதுனக்குடினும்
அமலத்தினை அருந்துதல் ஒழிக ”

என்றும் வள்ளலார் கூறியிருத்தலால் சிவச் சின்னங்களுக்கே அளித்த உயர்தனிச் சிறப்பு என்னே!

ஆலயங்களைக் கண்டதும் அரன் எனத் தொழவேண்டு மென்றதைக்கு வடலூரில் மெய் ஞானச் சபையை அமைத்து மன்பதை இறை யருள் பெற்றுய்ய அடிகோலிய வள்ளலார்:-

சிவமே பொருளென்று தேற்றி—என்னைச்
சிவவெளிக்கேறுஞ் சிகரத்திலேற்றி
சிவ மாக்கிக் கொண்டது பாரீர்.

வாழ்க மெய் கண்டார்! வாழ்க வள்ளலார்!.



## வள்ளலார்

# கண்ட முருகன்

நா. மகாலிங்கம் B.Sc., M.I.E., M.L.A,

வள்ளலார் ஓதாதுணர்ந்த ஞானி என்பது நாமனைவரும் அறிந்ததே. ஐந்தாம் வயது முதல் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரிடத்தில் இவரைக் கல்வி கற்க விட்ட போது கல்வியில் இவருக்குக் கருத்தூன்ற வில்லை. இறைவன் மேல் தோத்திரப் பாடல்களைப் புனைந்து பாடிக் கொண்டிருந்தார். இவ்வாறு இவர் பாடுவதை ஆசிரியர் சபாபதி முதலியார் அறிந்ததும் இவரது பெருமையை உணர்ந்து இவருக்குக் கல்வி கற்பிப்பதை நிறுத்திக் கொண்டார். இவ்வாறு வள்ளலார் இளமையில் பாடி வழிபட்ட தெய்வம் முருகன்.

முருகன் என்றாலே இளமையும் அழகும் மணமும் தெய்வத் தன்மையோடு கலந்து நம் கண் முன்பு நிற்கும். தமிழ் நூல்கள் கண்ட முருகன் காட்டும் காட்சி இது. ஆகவே தமிழ்க் கவிஞராகவே பூத்த இளைஞர் வள்ளலாருக்குக் கடவுள் முருகனாகவே காட்சியளித்ததில் வியப்பு இல்லை. வள்ளலாருக்கு இளமையில் எப்போது முதல் முருகன் மேல் பக்தி ஏற்பட்டது என்று சொல்ல முடியாது. மிகச் சிறுவயதிலிருந்தே முருகன் வள்ளலார் உள்ளத்தே ஒளிவீசத் தொடங்கி விட்டான்; தானே ஞான குருவாகவும் விளங்கி வள்ளலார் அறிய வேண்டியவை அனைத்தையும் அறிவுறுத்தி விட்டான். ''எனை உண்மை அறிவித்த குருவே!'' என்று தெய்வமணி மாலையில்'' இவரே கூறுகிறார்.

வள்ளலார் வரலாற்றின் தமையனாருக்குத் தெரியாமல் சிறுவர் இராமலிங்கம் மாடியறையில் கண்ணாடி முன் திருவிளக்கை ஏற்றி வழிபட்டிருந்த போது, ஆறுமுகம் வேலும் மயிலும் கோழிக்கொடியும் கொண்டு முருகன் தணிகாசல மலையுடன் சிறுவர் புறக்கண்ணுக்குக் காட்சியளித்தான்.

''சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும்
திகழ் கடப்பந்
தார் கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத்
தாள்களும் ஓர்
கூர் கொண்ட வேலும் மயிலும் நற்கோழிக்
கொடியும் அருள்
கார் கொண்ட வண்மைத் தணிகாசலமும் என்
கற்றண்ணுதே''

என்ற பாடலை அனைவரும் அறிவோம். வள்ளலார் மற்றோரிடத்தில் கூறுகின்றபடி இந்நிகழ்ச்சி அவரது ஒன்பதாம் ஆண்டளவில் நிகழ்ந்திருக்கலாம். ஆகவே முருகனைப் பற்றிய வள்ளலாருடைய பாடல்கள் எல்லாம் ஒரு சில தவிர தணிகை மலையைப் பற்றியதாகவே இருக்கின்றன.

வள்ளலாருக்குப் படிப்பு வரவில்லையே என்று தமயனால் வருந்திய காலத்திலேயே வள்ளலார் ஒரு தடவை தமையனாருக்குப் பதிலாகப் பெரிய புராணப் பிரசங்கம் புரிந்து தமதுஅபாரஞான ஒளியை வெளிப்படுத்தினார். அதன்பின் வள்ளலார் திருஒற்றியூர்த் தியாகேசனை வழிபடும் வழக்கத்தை மேற்கொண்டார். என்றாலும் முருகன் வழிபாடும் அவருடைய வாழ்வில் ஒரு கனிசமான அளவுக்கு இடம் பெற்றிருந்தது. ஐந்தாம் திருமுறையில் தொகுக்கப்பட்டிருக்கிற ஏராளமான முருகனைக் குறித்த பாமாலைகள் ஐயா அவர்களுடைய ஆன்ம அநுபவங்களை-ஆண்டவனைப் பற்றிய தெளிவை நமக்கு வெளியிடுகின்றன. ஜீவசாட்சியாகாநின்று தன்னை இயக்கும் சக்தியாக முருகனை வள்ளலார் கண்டார். பின்னால் தான் காணப் போகும் ஒற்றியூர்த்தியா

கேசனையும் வடிவுடைமாணிக்க அம்பிகையையும், கணபதியையும், நடராசப் பெருமானையும் அனுபவித்து உணர்தற்கும், முடிவாக அனைத்தையும் 'அருட்பெருஞ்சோதி' என்ற, நீக்கமற எங்கும் நிறைத்திருக்கும் ஒருபரம் பொருளாகஉணர்தற்கும் இந்த அநுபவமே தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. திரு. வி. க. அவர்களும் வள்ளலாருக்கு வழிபடுதெய்வம் முருகன் என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

"தெய்வம் ஒன்றே கண்டீர்"—என்று வள்ளலார் கூறுகின்றபடி ஒரே தெய்வம் பல உருவில் தோன்றுகிறதென்ற உண்மை வள்ளலாரின் இளமை உள்ளத்திலேயே முருகன் அருளால் தோன்றிவிட்டது. முருகனும் சிவபிரானும் ஒன்றே.

"பனிப்பற அருளும் முக்கன் பரஞ்சுடர் ஒளியே
போற்றி!
தனிப்பெருந்தவமே போற்றி! சண்முகத்
தரசே! போற்றி!"

(ஐந்தாம் திருமுறை போற்றித் திருவிருத்தம் பா. 2)

குணம் குறி கடந்து அருட்பெருஞ்சோதியாகவே ஆண்டவனைக் கண்டு பாடும் ஆறும் திருமுறையிலும் சண்முக சாமியை வள்ளலார் மறக்கவில்லை.

"மன்னப்பா; மன்றிடத்தே மாநடம் செய் அப்பா என்
றன் அப்பா! சண்முகம் கொள் சாமி அப்பா! எவ்வுயிர்க்கு
முன்னப்பா! பின்னப்பா! மூர்த்தியப்பா! மூவாத
பொன்னப்பா! ஞானப் பெருள் அப்பா!
தந்தருளே"

(திருமுறை 6 - தனிப்பாடல்கள் பாடல் 4)

அருட்பெருஞ்சோதியை ஆறுமுகனாக-முருகனாகக் கொள்ளுவதன் தத்துவத்தை வசன பாகத்தில் சுப்பிரமணியம் என்ற தலைப்பிலே படித்து மகிழலாம். ஒரு சிறு பகுதி வருமாறு:—

"நமது புருவ மத்தியில் ஆறுபட்டையாய்
உருட்சியுள்ள ஒரு மணி பிரகாசம் பொருந்தி
இருக்கிறது.
இந்த ஜோதி மணியைச் சண்முகம் என்று
பெரியோர் சொல்வார்கள்.
இதன்றி நமது மூலாதாரத்திற்கு மேல் மூன்றிடம்
தாண்டி
விசுத்தியாகிய இருதய ஸ்தானத்தில் இடது
புறத்தில்
ஆறுதலையுடைய ஒரு நாடி இருக்கிறது. இதைச்
சுப்பிரமணியம் என்று சொல்வார்கள்.
இந்தத் தேகத்திலுள்ள ஆறறிவும் ஒருங்கே
சேர்ந்த சுத்த
விவேகம் என்பதையும் ஷண்முகம் என்பார்கள்.
ஆயினும் சர்வ தத்துவங்களினது அந்தத்தில்
உன் மனிக்கப்பால்
சாந்த நிறைவாய்உள்ள ஆறுதலாகியசுத்தஆன்ம
அறிவாகிய உள்ளமே சுப்பிரமணியம்"

ஆகவே வள்ளலார் கண்ட முருகன் அருட்பெருஞ்சோதியின் ஒரு வடிவமே என்பதில் ஐயமில்லை.

சென்னைக் கந்தகோட்டத்துள் வளர் முருகனைப் பாடிய தெய்வ மணிமாலை வள்ளலார் இளமையிலேயே பாடிய பாடல் எனப்படுகிறது. இப்பாடல்களைக் கூர்ந்து கவனித்தோமென்று சொன்னால் மனிதனுக்கும் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டியவை இவை வேண்டாதவைஇவை என்பதை உணரலாம். முருகனுக்குச் சாத்திய இத்தெய்வமணிமாலையைநாமும் பாராயண நூலாக நாவில் தரித்துப் பயன்பெறலாம் "நோயற்ற வாழ்வில் நாம் வாழ வேண்டும் என்றால் என்னென்ன வேண்டும் என்று இவர் முருகனைக் கேட்கும்" "ஒருமையுடன் நினது திருமலரடி" என்ற பாடலை நாம் அறிவோம்.

முருகனுடைய அடியாருடைய புகழைச் செப்பினாலும் போதும், இம்மையில் சிறக்க வாழ்வதற்கான எல்லாவற்றையும் பெறலாம். அவை யாவை?

"பார்கொண்ட நடையில் வன் பசி கொண்டு
வந்திரப் பார்முகம் பார்த்திரங்கும்
பண்பும், நின் திருவடிக்கன்பும் நிறை ஆயுளும்
பதியும் நன் னிதியும் உணர்வும்
சீர்கொண்ட நிறையும் உட் பொறையும் மெய்ப்
புகழும் நோய்த், தீமை ஒரு சற்றும்
அணுகாத்
திறமும் மெய்த் திடமும் நல் இடமும் நின்
அடியர் புகழ், செப்புகின்றோர் அடைவர்
காண்"

ஆதலின் முருகனை மறக்கலாமா? வள்ளலாரைப் போன்றே நமக்கும் கீழ்க் கண்டபடி முருகன் தோற்றம் மனத்தில் வேரூன்ற வேண்டும்.

"கூர் கொண்ட நெட்டிலைக் கதிர் வேலும்
மயிலும் ஒரு-கோழியங் கொடியும் விண்ணோர்
கோமான்றன் மகளும் ஒரு மாமான் தன் மகளும்
மால்
கொண்டநின் கோலம் மறவேன்"

வள்ளலார் கண்ட முருகன் நம்மையும் ஆட்கொண்டு அருள் செய்வானாக.



# இராமலிங்கரும் சன்மார்க்கமும்


திரு ந. ரா. முருகவேள், M,A , M.O.L ,

ஆசிரியர் ''திருக்கோயில்''


ஒரு நாட்டின் பெருமைக்கு அந்நாட்டில தோன்றும் சமயச் சான்றோர்கள், தத்துவஞானிகள், கவிஞர் பெருமக்கள் ஆகியோரும் காரணமாக விளங்குகின்றனர்.

" தள்ளா விளையுளும் தக்காரும்
தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு''.

என்பது திருக்குறள் இதன்கண் 'தக்கார்' என்றது, மேற்குறித்த பெருமக்கள் போன்றவர்களையே எனக்கொள்ளலாம். இராமலிங்க அடிகள் ஒரு சிறந்த சமயச் சான்றோர், தலைசிறந்த தத்துவ ஞானி, ஒப்புயர்வற்ற பெருங்கவிஞர்.

சமயச் சான்றோர்கள் அல்லது அருளாளர்களால் நமக்கு விளையும் நன்மை யாது? 'சும்மா இருக்கும் சுகம்' விரும்பி ஒரு செயலும் செய்யாமல், தியானத்திலோ மௌனத்திலோ தவத்திலோ ஈடுபட்டு வாளா கிடக்கும் ஞானிகளால், நாட்டுக்கு ஒரு பயனும் இல்லையே எனச் சிலர் கருதுவர்.

ஞானிகள் ஒரு செயலும் செய்யாமல் இருப்பது போலத்தான் நமக்குத் தோன்றுகின்றது, ஆனால் ஞானிகளின் 'செயல செய்யாமை', எத்தனையோ பல செயல்களை விளைவிக்கின்றது என்பதனை. நம்மிற் பலர் அறிவதில்லை. சூரியனும் சந்திரனும் இருக்கின்றன. அவைகள் தாமாக அறிந்து ஒரு செயலும் செய்வதில்லை. ஆனால் அவைகள் இருப்பதனாலேயே நமக்கு எத்தனையோ பல நலங்கள் விளைகின்றன. அதனைப் போன்றதே ஞானிகள் அல்லது அருளாளர்களின் நிலையும்.

'கோஹினூர்' போன்ற வைரமணிகள் தம்மைச் சுற்றிலும் ஒரு பெருஞ் சுடரொளியைப் பரப்பி நிற்பது போல, ஞானிகளும் அருளாளர்களும் தம்முடைய தவ ஆற்றல் ஞானஒளி சிந்தனைத்திறன் ஆகியவற்றால் உலகில் அருளியல் அலைகளைப் பரப்பி, ஆருயிர்களுக்கு நன்மை செய்து வருகின்றனர். அருளாளர்களாகிய ஞானிகளின் முன்னே,

" தீய வாய விலங்கு வன்தொழில்
செய்ய அஞ்சிடும் ; நஞ்சுகால்
வாய நாகம், மணிப் பணங்கொள்
சுடர் விளக்கு எடுக்கும்''.

ஞானிகளின் முன்னிலையில் பகைவிலங்குகளும் தம்முடைய பகைமை மறந்து, நட்புரிமை கொண்டு உறவு பாராட்டி மகிழும்.

(1) " There is a stage in life when a man does not need even to proclaim his thoughts, much less to show them by outward action. Mere thoughts act. They attain that power. Then it can be said of him that his seeming **inaction** constitute s his **action.** I must confess that I am far from that state. All I can say is that my striving is in that direi-ction.''

—Mahatma Gandhi j·

"செந்தீப் பேணிய முனிவர் வெண்
கோட்க்
களிறுதரு விறகின் வேட்கும்
ஒளிறிலங்கும் அருவிய மலைகிழ
வோனே''

"கான யானை தந்த விறகிற்
கடுந்தொறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்துவோனே''

எனச் சங்க இலக்கியங்கள் பாடுதற்கு ஏற்ப, தவநலஞ்சான்ற தக்கோர்களுக்கு விலங்குகளும் வயப்பட்டுப் பணிவிடைகள் புரியும்.

இத்தகைய அருளாளர்கள் ஆகிய பெரியோர்களால்தான் உலகம் இயங்கி வருகின்றது. உலக நிகழ்ச்சிகளுக்கும் இயக்கத்திற்கும், உயர்ந்த அருளாளர்களே

ஒருவகையிற் காரணர்களாகத் திகழ்கின்றனர்.

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே;
நிகழ்ச்சி அவர்கட் டாக லானே

என்பது தொல்காப்பியச் சூத்திரம்.

பண்புடையார்ப் பட்டுண் டுலகம்; அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

என்னும் திருக்குறளும் இக்கருத்தினையே வலியுறுத்துவதாகும் எனலாம். ஞானிகள் நம்முடைய ஆன்மீக நலத்திற்கு ஒளியும் வளமும் இன்பமும் நல்கிப் பேருதவி புரிந்து வருகின்றனர்.

(2) The French writer Maurice Barres was once asked "What is good of the **saints?**" He replied, **"They delight the soul"**.

—Rene Fulop Miller.

அத்தகைய அருள் ஞானிகளுள் — அவதாரச் சித்த புருஷர்களுள் ஒருவராக விளங்கும் **இராமலிங்க அடிகள்,** நம் ஆன்ம நல வளர்ச்சிக்காகப் பெருந்தூய்மையும் பேரின்பமும் விளைவிக்க வல்ல பெருஞ் சான்றோர் ஆவர். "ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்" என்றும் பெருவேட்கையும் குறிக்கோளும் கொண்டிருந்த அடிகளார், ஆருயிர்கள் அனைத்திற்கும் அன்பு செய்யும் ஜீவகாருண்யச் செந்நெறியினை உலகிற் பரப்பியருளினர். சாதி சமய நிறமொழி இன வேற்றுமைகளை யெல்லாம் மறந்து, மக்கள் எல்லோரும் அன்பினால் ஒற்றுமைப்பட்டு இன்புற்று வாழ வேண்டும் என்று வலியுறுத்தினர். ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமையுணர்வு, மக்களிடையே பரவி வளர்ந்து செழிக்குமாறு பாடுபட்டார். இவற்றால் உலகில் துன்மார்க்கங்களையும் புன்மார்க்கங்களையும் போக்கி, உயர்ந்த சன்மார்க்க உண்மைகளைப் பரப்பத் திருவுள்ளம் கொண்டார் எனவே இராமலிங்கர் **சன்மார்க்கம்** பற்றி இடையறாது மக்களுக்கு அறிவுறுத்தியருளினர்.

"ஒன்றது பேரூர் வழி ஆறு அதற்குள" எனத் திருமூலர் அருளிச்செய்தவாறு போல, அருள் ஞானப் பெரியோர்கள் அனைவரும் ஒரு செந்நெறியினையே முடிவில் வலியுறுத்திச் செல்கின்றனராயினும், அவ்வக்கால நிலைக்கு ஏற்ப அதற்கு அவர்கள் வெவ்வேறு பெயர்களை வழங்குகின்றனர். அம்முறையில் திருவள்ளுவர் பொதுநோக்கம் கடைப்பிடித்து, அறத்தைப் போதித்தார். திருஞான சம்பந்தர் தம்முடைய ஞான நன்னெறியைத் **'திருநெறி'** என்றும், தம் தேவாரத்தினைத் **'திருநெறிய தமிழ்'** என்றும் குறிப்பிட்டார். தாயுமானவர் தம் கொள்கையினைச் **சமரசம்** என்னும் பெயரால் சுட்டியருளினர். இராமலிங்க அடிகளோ **'சன்மார்க்கம்'** என வழங்கினர். எனவே, இராமலிங்கரின் இணையற்ற இனிய செந்நெறிக்குரிய சிறப்புப் பெயர் 'சன்மார்க்கம்' என்பதே என்று கூறலாம். எங்கள் அண்ணல் காந்தி அடிகளால் **'அஹிம்ஸை' 'ஸத்தியாக்கிரகம்'** என்ற சொல்லும் சொற்றொடரும் சிறப்பாகப் போற்றிக் கைக் கொள்ளப் பெற்றனவோ, அங்ஙனம் இராமலிங்கரால் மிகவும் சிறப்பாகப் போற்றி பரப்பப் பெற்ற சிறந்த நன்னெறியே, சன்மார்க்கம் எனக் கூறுதல் பொருந்தும்.

சன்மார்க்கமானது பொது நோக்கம் (**சமரசம்**) தழுவியது; வாழ்க்கையில் பல துறைகளிலும் தூய்மை (**சுத்தம்**) பேணுவது; உண்மை (**சத்தியம்**) போற்றுவது; மக்கள் அனைவரும் அன்பினால் ஒன்றுபட்டுக் கூடி இன்புறுமாறு செய்யும் தன்மையது. ஆதலின், அச்சன்மார்க்கத்தினைப் பரப்பும் குறிக்கோளுடைய அமைப்பிற்கு, இராமலிங்கர் **"சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்"** என்னும் பொருள் நிறைந்த சிறந்த பெயரை வழங்கியருளினர்.

சன்மார்க்கர்க்கும் துன்மார்க்கர்க்கும் இடையேயுள்ள வேறுபாட்டினையும், முறையே அவ்விரு வகையினர்க்கும் உரிய இயல்பினையும், இராமலிங்கர் தம்முடைய பாடல் ஒன்றில் விளக்கியருள்கின்றார்!.

சேய்போல் உலகத் துயிரை எல்லாம்
எண்ணிச் சேர்ந்து பெற்ற
தாய்போல் உரைப்பர் **சன்மார்க்க
சங்கத்தவர்!** சாற்றும் எட்டிக
காய்போற் பிறர்தமைக் கண்டால்
கசந்து உள் கடுகடுத்தே
நாய்போற் குரைப்பர் **துன்மார்க்க
சங்கத்தவர்** நானிலத்தே

எனவரும் திருவருட்பாவினால் சன்மார்க்க சங்கத்தவர் சால்பும் சிறப்பும் யாவரும் தெளியலாம்! சன்மார்க்க நெறியிலும், அதனை வளர்க்கும் சன்மார்க்க சங்கத்தின் மாட்டும், இராமலிங்க அடிகளார்க்கு இருந்த எல்லையற்ற ஈடுபாட்டினை,

தங்கமே அணையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும், சங்கம்,
சார் திருக் கோயில்கண் டிடவும்.
துங்கமே பெறும்சற் சங்கம் நீடுழி
துலங்கவும், சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவும், இச்சைகாண் எந்தாய்!

எனவரும் திருவருட்பாவினுல், நாம் தெளிவுற அறிந்து கொள்ளலாம்.

கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக!
அருள்நயந்த சன்மார்க்கர் ஆள்க!—
தெருள்நிறைந்த
நல்லோர் நினைத்த நலம் பெறுக!
நன்று நினைத்(து)
எல்லோரும் வாழ்க! இசைந்து.

என்னும் பாடலால், சன்மார்க்க ஆட்சி விரைவில் மலர்தல் வேண்டும் என்று அடிகள் பெரிதும் விருப்பம் தெரிவித்திருக்கின்றார்கள். அவர் தம் விருப்பம் நிறைவேறி ஓரளவு வெற்றி பெற்றிருக்கின்றது இங்ஙனமே இராமலிங்கர் கண்ட ஏனைக் கனவுகளும் விரைவில் நனவாகி நிறைவேறி சன்மார்க்கச் செந்நெறியானது முழுவெற்றி பெற்று விளங்கும் என்பதில ஐயமில்லை.




Estd: 1952 Phone: 740

**For all your Requirements in Leather Goods**

Please Visit

# BABU SHOE MART

**10/2, Officers' Lane,**

VELLORE-1.

# அரக்கோணம் கூட்டுறவு வீடு அடமான பாங்கு லிமிடெட், நெ. C. 2204

அரக்கோணம், (வ. ஆ. மாவட்டம்)

**இரக்கமே !** **என் உயிர் !**

**" எவ்வுயிரும் இன்புற்றிருப்பதுவே எனது கொள்கை "**

என முழக்கமிட்ட, திருவருட்பா அருள் முரசு, திருவருட்பா பிரகாச வள்ளலாரின்,

> " தெரு நயந்த நல்லோர் நினைத்த நலம் பெறுக
> நன்று நினைத்து எல்லோரும் வாழ்க இசைந்து."

எனும் அருள் வாக்குக்கொப்ப, ஆன்மநேய ஒருமைப் பாட்டினின்றும் அவதரித்த, அனைத்திந்தியக் கொள்கைகளில், கூட்டுறவும், தேசிய ஒருமைப் பாடும் நாடெங்கும் இன்று சீருடன் சிறப்புற விளங்கி வருவதில் யாம்,

> " ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - இதில்
> ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு - நன்றிது
> தேர்ந்திடல் வேண்டும் - இந்த ஞானம்
> வந்தால் பின் நமக்கெது வேண்டும் ?"—என்னும்

புரட்சிக் கவி பாரதியின் தீர்க்க தரிசனத்துக்கொப்ப, எங்கும் கூட்டுறவு முறையில் நடந்துவரும் பல்வேறு பிரிவுகளில், வீடுகளின் பேரில் உண்டான தீர்க்க இயலாத கடனை நீக்கவும், புதிய வீடு கட்டவும். வீடுகளை அபிவிருத்தி செய்யவும், குறைந்த வட்டியில், தக்க சமயத்தில், 15 வருட நீண்ட கால மாதத் தவணைகளில் கடன் அளித்து உதவி வரும், இங்குள்ள கூட்டுறவு வீடு அடமான பாங்கைப் போன்று, எல்லா சென்னை மாநில நகரங்களிலும் அமைந்துள்ள பாங்குகளை, செவ்வனே, அங்குள்ளோர் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள பெரிதும் விழைகிறோம்.

இங்ஙனம்,

R. S. துரைசாமி முதலியார்,
தலைவர்,
அரக்கோணம் கூட்டுறவு வீடு அடமான பாங்கு லிமிடெட், நெ. C. 2204.

N. B : வீடு கட்டவும், அபிவிருத்தி செய்யவும் ரூ. 10,000-மும், வீட்டின் பேரிலுள்ள முன் கடன் தீர்க்க ரூ 5,000 மும், 15 வருட நீண்ட கால மாதத் தவணைக்கு கடனளிக்கிறோம்.

# அருட்பாவில் ஒருபா




திரு. ஆத்மானந்த அடிகளார்

ஓய்வு பெற்ற தமிழாசிரியர்

செங்கம் வட்டம்

வட ஆற்காடு மாவட்டம்


அருட்பெரு வெளியிலருட் பெரு வுலகத்
தருட்பெருந் தலத்துமே னிலையில்
அருட் பெரும் பீடத் தருட் பெரு வடிவில்
அருட்பெருந் திருவிலே யமர்ந்த
அருட் பெரும் பதியே யருட்பெரு நிதியே
அருட் பெருஞ் சித்தியென் னமுதே
அருட பெருங் களிப்பே அருட் பெருஞ் [சுகமே
அருட்பெருஞ் சோதியென் னரசே!

இப்புண்ணிய பூமியில் பிறவியின் பயன் இறைவனை வணங்கி வழி படல். அஃதில்லையேல் பிறந்ததன் பயனைப்பெற்ற வராகக் கருத முடியாது. எனவே இந்நாட்டிலும், எந்நாட்டிலும் தோன்றிய பெரியார் பற்பலர் இறைவனை அம்மையப்பனாகவும் தோழனாகவும், காதலியாகவும், மகவாக வும், முருகனாகவும், திருமாலாகவும் பற்பல நிலைகளில் வழிபட்டுளளனர். ஆனால் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த பெரியார் களில் ஒருவராகிய அருட் பிரகாச வள்ள லார் உலக ஒருமைப் பாடாம் ஆன்ம நேயத்தை வளர்க்க விரும்பி, அதன பொருட்டே வாழ்ந்தார். அவர் மக்கள் உள்ளத்தில் கடவுள் உணர்ச்சி தோன்றப் பற்பல தெய்வ வழிபாட்டுபபாக்கள் சமரச நோக்குடன் பாடியுள்ளார். யாவரும் மறுக்க முடியாத முறையில் எல்லோரும் கைக் கொள்ளும் விதத்தில இறைவனை அருள் வடிவாகவும், ஜோதி வடிவாகவும் வழிபட்டொழுகும்படி சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள திரு வடலூரில் ஒரு சத்திய ஞான சபை அமைத்து அதில் வழி பாடியற்றும் முறைகளை மக்கள் பின் பற்றும்படி அவ்வழிபாட்டைத் தாமே இருந்து நடத்தும்படி செய்துள்ளார்.

அவர் பாடிய அருட்பா:- அவர் உள்ளத்தைக் கசிந்துருகச்செய்யும் கணக்கற்ற பாடல்களை பாடினார். அவற்றை அடிகளாரின் மாணவர்கள் ஆறுதிருமுறை களாகப் பகுத்து அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். அப்பாடல்களைத் தொடங்கும் போதும் முடிக்கும்போதும் மக்கள் மனத்தில் என்றும் நிலைக்க வேண்டிய இரு பெரு மந்திரரங்களாகிய " "அருட் பெருஞ் ஜோதி! தனிப்பெருங்கருணை" என்னும் சிறந்த மந்திர மொழிகளை உச்சரிக்கப் பயிற்றுவித்துள்ளார். அவ்விரு மந்திரங் களும் அருட்பாவின் சாரமும் பயனும் ஆகும். அருட்பாவை ஓதாதவர்களும் இம் மகா மந்திரங்களை உச்சரித்து அதை ஆழ்ந்து சிந்தித்தார்களானால் அருட் பாவினால் அடையும் பயன் அனைத்தையும் அடைவர்,

## அருட்பெருஞ்சோதி :-

வள்ளலார், ஜோதி அருள் விளக்கம் என்னும் தலைப்பில பாடிய பாக்களில் இறைவன் ஜோதி வடிவில் எந்தெந்த நிலை களில் எவ்வெவ்வாறு விளங்குகிறார் என் பதைக் கூறியுள்ளார். எச்சமயத்தவரும் மறுத்து வாதம் செய்ய முடியாத நிலையில் அவருக்கு அருட்பெருஞ் சோதி என்ற திருப் பெயரை இட்டுள்ளார். இது இறை வன் அருளாகிய ஜோதி வடிவத்தில் நிலைத் துள்ளான் என்று கூறுகிறார்.

## அருள் எது ?

அருள் என்பது அன்பின் பெருக்கத் தில் தோன்றுவது. தொடர் பற்றவர்களி டமும் துன்பம் கண்டபோது உள்ளம் இரங்கி அவர்களுக்கு உதவி செய்வது. தமிழ் மறையும் அருள் என்பது அன்பு மாதா ஈன்ற குழந்தை என்று பகர்கின்றது நமது வள்ளலாரோ, எந்த உள்ளத்தில் அருட்குணம் வெளிப்பட்டு விளங்கு கிறதோ அந்த உள்ளமே அப்பெருமானின்

பெருஞ்சோதி விளங்கும் இடம் என்று சுட்டுகிறார். அவர் அருளைக் குறிப்பிடும் போது தனக்கும் பிற உயிர்களுக்கும் ஒரு சிறிதளவும் வித்தியாசம் இல்லாமல் அவையேதான், தானே அவை என்கிற விதத்தில் உள்ளம் ஒன்றுபட்டு அதனோடு தானும் ஒத்து அவைகளுக்கு வரும் துன்பங்களைத் தனக்குவந்த துன்பமெனக் கருதி அத்துன்பத்தைப் போக்கி அதனால் மகிழ்கின்றவர்களே கருணையுள்ளம் படைத்தவர்கள் என்பதை, "எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி, உள்ளே ஒத்து, உரிமை உடையவராய் உவக்கின்றார் யாவரோ" அவர்கள் உள்ளந்தான் கருணை நிறைந்த உள்ளமென்றும் அவ்வுள்ளத்திலேதான் எம்பெருமான் சதா நடம்புரிகின்றார் என்றும் அவர்கள் உடல் இறைவன் அமர்ந்துள்ள ஆலயம் என்றும் கூறுகிறார்.

## இறைவன் எவ்வாறு விளங்குகிறான்

இறைவன் எங்கும் நிறைந்திருப்பினும் சிற்சில இடங்களில் பொதுவாக அன்பர் உள்ளங்களில் மட்டும் சிறப்பாக வெளிப்படுவது, பசுவின் உடலெங்கும் பரவியுள்ள இரத்தம் அதன் மடியின் வழியாக பாலாக வெளிப்பட்டு உபகரிப்பதை போன்றது. வழிபடும் அன்பர்களுக்கு அவர்கள் விரும்பியதை அருளி ஆட்கொள்ளுகிறான். அவன் எப்போதும் யாவருடைய உள்ளத்திலும் சுயம்ஜோதி வடிவில் விளங்கினும் அம்மனங்களிலுள்ள சுத்தாசுத்தங்களால் தோன்றியும் அதாவது விளங்கியும் மறைந்தும் காணப்படுவது, எப்போதும் ஒளி வடிவினனாகிய சூரியன் மேகங்களின் மறைப்பால் ஒளி இலலாதவன் என்று தோன்றுவது போன்றது. தன் சுய ஒளியில் எவ்வித மாறுபாடு இல்லாதிருந்தும் மாறுபாடு உள்ளவனைப் போன்று கருதப்படுகிறான். அதைப் போக்கிக்கொள்ள நம்முடைய உள்ளத்தில் அந்தப் பெருஞ்சோதியை மேகங்கள் சூரியனை மறைப்பதைப் போன்று மறைப்பதை ஏழு திரைகளை நீக்குவதன் மூலம் சோதி எப்போதும் ஒரே படியாக ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் நிலைபெற்றிருக்கிறதென்றும் அதை மலின குணங்களாகிய அசுத்த எண்ணங்கள் மறைக்கின்றன என்றும் உணர்த்தி இருக்கின்றார்.

## அருட் சோதி விளக்கம்

அருட்சோதியாகிய ஆண்டவன் தன் சுய ஒளியில் விளங்க வேண்டுமானால் அதை மூடியிருக்கும் மன மாசுக்களைப் போக்க தனிப்பெருங் கருணையை வளர்க்க வேண்டும் என்று அறை கூவுகிறார். இறைவனை அருள் வடிவாக கருதுபவர் உள்ளத்தில் தனக்குச் சமம், சொல்ல முடியாதபடி தனித்ததாயும் எல்லாவற்றிலும் பெரிதாயும் உள்ள மாறாத கருணை உள்ளத்தை நாம் வளர்க்க வேண்டும் என்பதே அருட் பெருஞ் ஜோதி என்னும் மந்திர மொழிக்குப் பின் இயம்பும் தனிப்பெருங் கருணை என்பதின் விளக்கமாகும். இத் தனிப்பெரும் கருணை தடை அற்று வளர்ந்தாலொழிய உலக ஒருமைப்பாடாகிய ஆன்மநேய உரிமையை ஒருநாளும் பெற முடியாது. அக்கருணை உள்ளத்தை வளர்ப்பதற்கு வள்ளலார் இம்சை செய்யாத கொல்லா விரதத்தை அருட் பண்பாகக் கொண்டார்.

## கருணை உள்ளம்

மனிதன் கருணை உள்ளம் இல்லாத தனாலேயே உலகத்தில் பசி, பட்டினி, வஞ்சம், சூது, வாது பொருள்களைப் பதுக்கி அநியாய விலைக்கு விற்றல், விற்கும் பொருள்களில் இலாபம் கருதிப் பல குறைபாடுகளை செய்தல் முதலியவற்றால் எத்தனையோ மக்கள் உணவு, உடை, இருப்பிடம் கூட இல்லாமல் தவிக்கிறார்கள். இதனாலேயே உலகப் பெரும்போர்கள் அவ்வப்போது தோன்றி வருகின்றன. யாரும் அமைதியாக வாழவும் முடியவில்லை. இன்றைய மக்கள் பெரும்பாலும் பணத்தையே பரம்பொருளாகக் கருதும் அளவிற்கு மனதில் மாசு மூடிவிட்டது. இதனால் அறிந்தோ அறியாமலோ சரீர போகங்களை வளர்ப்பது ஒன்றே பிறவியின் பயன் என்று கருதும் தேகாத்மவாதம் தலை விரித்து எங்கும் கூத்தாடுகிறது. அதனால் மனிதன் தன்னலம் காரணமாக எதையும் செய்யத் துணிந்து விட்டான். இயற்கை நெறிகளும் பல பெரியார்களும் அவ்வப்போது தோன்றி தாங்கள் வழிகாட்டிகளாக இருந்து உலகினர் கண்டு வியக்கும்படி நற்குணங்களின் பெருமதிப்புக்களை அவ்வப்போது காட்டி வந்துள்ளனர். இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் புத்தர் பெருமானும், சென்ற நூற்றாண்டில் அருட்பிரகாச வள்ளலார் போன்றவர்கள் தோன்றி உலகம் வியக்கும் நிலையில் எவரும் எக்காலத்தும் கனவிலும் கண்டிருக்க முடியாத பல அரும் பெரும் செயல்களைச் செய்துள்ளனர். நமது அடிகளார் ஜீவகாருண்யத்தையும் கொல்லா நெறியையும் வளர்ப்பதற்கு உரிய தனிப் பெருங்கருணையை மக்கள் உள்ளத்தில்

வெளிப்படச் செய்வதன் மூலம் ஒவ்வொரு வருடைய உள்ளத்தையும் அருட்ஜோதி இறைவன் நிலைபெறும் கோயிலாக, மாற்றத் தனது ஆயுட்காலம் முழுமையும் அரும்பாடு பட்டுள்ளார். இக்குணம் வளர்ந்தால் இவ்வுலகமே தேவலோகம் போன்று, எல்லா இன்பங்களும் நிலை பெற்று, பசி, பஞ்சம், பிணி, போர் அற்று, காண்பதற்கு இனிய பொன்னுலகமாக காட்சியளிக்கும். அப்போது மக்கள் குறைவற்ற அமைதியான இன்ப வாழ்வை இனிது நடத்துவர். அப்போது எவ்வித அச்சத்திற்கும் இடம் இல்லை. இக் கருணை உள்ளம் நன்கு மலர வேண்டுமானால் உலகத்தில் நாம் எதிர் பாராதவிதமாக அவ்வப்போது நிகழும் பேராபத்துக்களை நாம் நன்கு சிந்தித்து வந்தால் இந்த உடம்பிலும் இந்த உடம்பிற்குரிய பொருள்களிலும் நமக்கு இருக்கும் பற்றுக்கள் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கி, அழியும் இந்த உடல் வாழ்வை அற்பமெனக் கருதி, இந்த உடலைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டுள்ளது. ஆன்ம வாழ்வை வளர்க்க வேண்டும். அதற்கு ஏற்ப பரநல் வாழ்வை நாடவேண்டும் என்னும் உண்மை அறிவு தலைப்படும். அதுவே மெய்ஞ்ஞானம் எனப்படும்.

## மெய்ஞ்ஞான வேட்கை

தாகம் கொண்டவன் நீரைத் தேடுதலைப் போலும், பசிமிக்கோன் உணவைத் தேடுதலைப் போலும் தீப் பற்றினோன் தண்ணீரைத் தேடிச் செல்வதைப் போலும் உலகில் தனக்கோ பிறர்க்கோ நிகழும் பேராபத்துக்களின்போது ஒவ்வொருவர் உள்ளமும், இது என்ன வாழ்க்கை, இந்தப் பொய் வாழ்க்கையை இதுவரையில் நம்பி காலத்தை வீணாக்கினேனே, தோன்றி மறையும் நீர்க்குமிழி போன்ற இவ்வற்ப வாழ்வின்கண் நிலைத்த சுகம் யாது உளது என்று பற்பல நல்லுணர்வுகள் தோன்றும். சிலநாள் உலகப் பொருள்களில் வெறுப்பும் இருக்கும். ஆனால் காலம் செல்லச் செல்ல அழகாய்த் தோன்றிய வானவில் மறைவதைப் போன்று மறைந்துவிடாமல், பல பிறவிகளின் நல்வினைப்பயனுக்கு ஏற்ப, இந்த உடம்பானான், இது காலப்போக்கில் பிணமானால் இதை சிலர் தூக்கிச் செல்கின்றனரே, இப்போது நானல்லவா இதில் இருந்து இதைச் செயல் படுத்துகிறேன். இந்த உடம்புக்கு வேறாக ஏதோ ஒன்று இருக்கிறது. அதுதான் உண்மையானது என்று ஓரளவு துணிந்து, அதை உண்மையில் அறியும் வேட்கை மிக்கு, அதை அறிந்தவர்களிடம் சென்று அவர்களை வினவி, அறிய வேண்டும் என்னும் பேரவர இடையறாது உள்ளத்தில் எழுமானால் அதுவே சுபேட்சை அல்லது மெய்ஞ்ஞான விருப்பம் ஆகும். இந்த முதல் நிலையில் ஏறியவன் எக்காரணம் கொண்டும் அதிலிருந்து தாழாமல் மேன் மேலும் ஏறிச் செல்ல வேண்டும் என்பதை மகாதேவ மாலையில் வள்ளலார் "மெய்ஞ்ஞான விருப்பத்தில் ஏறி" என்கிறார். மேலும் இந்த விருப்பம் கமி மிக ஆதை அறிந்தவர்களை நாடிச் சென்று, நான் யார்? இந்த உலக வாழ்வு சுகத்தை உண்மையில தருகிறதா? இவ்வுலகத்தையும் சூரிய சந்திரர்களையும் உண்டாக்கியது யார்? அவர் எங்குள்ளார்? என்று பலவாறு கேட்கச் செய்யும். அதற்கு அவர்கள் சொல்லும் பதிலில் மனம் அழுந்தும் அதன் மூலம் இவ்வுடம்பிற்கு வேறாயிருப்பது உயிர் அல்லது பசு ஆகும். அதை நடத்துபவன் எல்லாவற்றையும் படைத்த இறைவன் ஆகும் அவன் தான் இப்பசுக்களாகிய உயிர்களை நடத்துகிறான் என்றும் தனக்கு தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூவிடங்களின் வழியாக வருகின்ற இன்ப துன்பங்கள் யாவும் ஒரு அஞ்சலகத்திலிருந்து ஒருவருக்குக் கிடைக்கும் இன்ப துன்பச் செய்திகளைப் போல் இறைவனால் நமக்கு அளிக்கப்படுகிறது என்னும் உண்மை விளங்கும். இதை அடிகளார் கேள்வி மீதேறித் தெளிந்து என்கிறார்.

இவ்வளவு விசாரித்துத்தெளிந்த பிறகு கூட எல்லையற்ற பிறவிகளில் அனுபவித்த வாசனைகளின் உணர்ச்சியால்அவ்வப்போது பிறர் மூலமாக பரமன் நமக்கு ஊட்டுகிற இன்ப துன்ப நிகழ்ச்சிகளில் கட்டுண்டு, அது அவன் செயல் என்பதை மறந்து, பிறர் செய்தார் என நினைந்து, அவர்கள் மேல் விருப்பு வெறுப்பு உணர்ச்சிகளாகிய எண்ணங்கள் நம்மையும் மீறித் தோன்றும். அது மட்டுமன்றி, நாம். செய்யும் கருவியே ஒழிய அதன் பயனைக் கொடுப்பவன் இறைவன் என்பதை மறந்தும், பயனைக் கருதாது அவ்வப்போது தனக்கு ஏற்படும் கடமைகளை பயன் கருதாது அவன் விருப்பின்படி நான் செய்கிறேன் என்பதை மறந்தும், பல வியாபாரங்களாகிய மனோ இச்சைகள் தோன்றும் இந்த இச்சைக்கு இடம் கொடாமல் நாம் மேலும் மேலும் ஏறிச் செல்ல வேண்டும் என்பதை "இச்சை விடுதல் ஏறி" என்கிறார்.

இவ்வாறு திடப்பட்டு தெளிந்த நிலைக்குத் தான் மெய்ஞ்ஞானம் அல்லது அஞ்ஞானம் நீங்கிய நிலை என்பர். இந்த நிலை

அவ்வப்போது சூரியனை மேகங்கள் மூடு வதைப் போன்று சிற்சில சமயங்களில் மாறு வதை போன்று தோன்றும். அப்போது எல் லாம் அவன் செயல் என்னும் நிலை மாறி ஜீவச்செயல் தோன்றும். அதை விவேக மாகிய விளக்கால் அடிக்கடி விளக்கிக் கொள்ளவேண்டும். நாம் எவ்வளவு விளக் கிக் கொண்டாலும் நீரின் மேற்பரப்பில் பரவி யுள்ள பாசியைப் போன்று அஞ்ஞானம் பர வும். அந்த அஞ்ஞானம் நம்மிடத்தில் நாம் அணிந்திருக்கும் ஒரு சட்டையைப் போன்று மறைத்திருப்பதால் அது கழன்ற நிலையில் நாம் ஏறவேண்டும் இதை ''அஞ்ஞானம் கழன்ற படியேறி'' என்கிறார்.

மேலும் இதுவரையில் இவ்வுலகத்து நிகழ்ச்சிகள் எல்லாம் 'சிவச் செயலேயன்றி ஜீவச் செயலன்று' 'அவனன்றி ஓர் அணு வும் அசையாது'. 'அவன் நீக்கமற எங் கும் பாலில் நெய்போல் பரவியுள்ளான்'. நமது உள்ளங்களிலும் அவன் இருந்தே உணர்த்துகின்றான் என்று மேலும் மேலும் நம்முடைய உள்ளத்தில் திட அறிவு ஊன்ற வேண்டும் என்பதை ''உண்மை அறிந்த படி நிலையேறி'' என்கிறார்.

இப்போது ஒரு சிக்கலான நிலை ஏற்படு கிறது. எங்கும் நிறைந்த பொருளே என்வடி வம் அதற்குவேறாகநான் இல்லை. ஆகையால நான் எதனாலும் பந்தப்படாதவன். புண்ணிய பாவங்களால் கட்டுப்படாதவன் என்று சரீர பாவம் நீங்கிய நிலையில் தோன்றுகின்ற உண்மை அனுபவ நிலையை தேகாபிமானம் நிறைந்துள்ள நிலையில் அது நான் என்கிற பசு அறிவு அங்கே தலை தூக்குகிறது. எது வரையில் நான் என்கின்ற தன்மை அறிவு இருக்கிறதோ அதுவரையில் நீ என்கிற முன்னிலை அறிவும் இருக்கிறது. நான் என்ற தன்மை அறிவு மறைந்த பிறகு அது நான் என்று சொல்லுகிற பசு உணர்விற்கே இட மில்லை என்பதை ''அது நான் என்னும் கஞ்ஞானம் கழன்று ஏறி'' என்கிறார்.

இதற்குமேலும் மனம் எல்லாம் வல்ல இறைவனில் அடங்காமல் எத்தனையோ நிலை களில் பூர்வ வாசனையால் மனம் உளனீடாக எத்தனையோ வடிவங்களையும் சித்திகளையும் பெறுதற்குரிய நிலைகளை அடையும். அதுவும் உண்மை நிலை அல்ல. அவைகளெல்லாம் கடந்து சென்ற சூரியன் முன் விளக்கைப் போல அவன் ஒளியில் தன்னொளி கலந்து மறந்து நிற்கும் நிலை ஏற்பட வேண்டும் அங்கே எந்த தோற்றத்துக்கும் இடமில்லை ஒருவன் சுழுத்தியில் இருக்கும் நிலையைப் போன்ற விப்பிபு நிலையிலேயே நனவிற் சுழுத்தி அல்லது துரியம் என்னும்தன் இயற்கை நிலை ஏற்படும்.

அங்கே மனம் வாக்கு காயம் எதற்கும் அசைவில்லை இதுதான் ஞானத்தின் முடிந்த நிலையாகிய மௌன நிலை என்பர். எதிலும் மிகுந்த சூக்குமநிலையில் பகுத்தறிந்து உணர முடியாதபடி பெருங்காயப் பாத்திரத்தில் பெருங்காயம் நீங்கிய பிறகும் அதன் வாசனை தங்கியிருப்பதைப் போன்ற ஒரு நிலை ஏற் படும். அதையும் தாண்டிச் செலவேண் டும் என்பதை ''மௌன இயற் கதியில் ஏறி'' என்கிறார்.

இப்படி எல்லா ஞானங்களும் அற்றுத் தெளிந்த ஞானிகள் உப்புப்பாவை கடலாழம் பார்க்கச் சென்று அதில் கலந்து அக்கடல் மயமாய் விடுவதைப் போன்று ஜீவபோதத் திற்கே இடமின்றி இருக்கும் நிலைதான் தனது உண்மை நிலை, சுபாவநிலை, அத்துவித நிலை, அனுபவநிலை என்று சொல்லுவார்கள். இந் நிலையில் தெளிந்தோர் முன்வினைக்கீடாக உலகத்து விவகரித்தாலும் அவர்கள் அதை விருப்பு நிலையில் நாங்கள் அதைக் கண்டும் காணேம் என்று சொல்லி அதற்கு வேருகா மல் அந்த அனுபவ நிலையிலேயே அழுந்தி அவர்கள் மனம் அதற்கு வேருக வெளிவர இயலாது, இன்பமயமாய்விடுகிறது என்பதை ''எஞ்ஞானம் அறத்தெளிந்தோர் கண்டும் காணேம் என்கிற அனுபவமே, இன்பத் தேவே'' என்று ஒவ்வொருவரும் அடைய வேண்டிய பூரண நிலையை மகாதேவமாலை யில் ''மெய்ஞ்ஞான விருப்பத்தில் ஏறி'' என்று தொடங்குகின்ற திருப்பாட்டில் கூறிச் செல்கிருர். அந்த நெறியில் நம்மைத் திருவருள் நடத்துமாக.

அருட்பெருஞ்சோதி! தனிப்பெருங் கருணை!



# சன்மார்க்கமும்-
# மகளிர் கடமையும்

S. கலைச்செல்வி
சோஷியல் ஒர்க்கர்
சன்மார்க்க பிரச்சாரகர்



சன்மார்க்க மென்பது உண்மையும், ஒழுக்கமும் உடைய ஒருவன் அறம் வழுவாது அன்பு குன்ருது அருள் பெரும் மார்க்கமாகும். திருவருள் நெறியை மக்கள் அடைவதற்கு சமயம், மதம் இவைகளினுல் போதிக்கப்பட்ட மார்க்கம் சன்மார்க்கம்.

காலம்மாறி மக்கள் மனதில் ஏற்படும் பல எண்ணங்களின் வாயிலாக சன்மார்க்கம் மறைந்து, பிணியும், பகையும் தோன்றி சகிக்க முடியாத நிலையை அளிக்கக் கூடிய பல மார்க்கங்கள் தோன்றலாயின. அப்படியிருந்த காலத்தில் தோன்றியவர் திருவருட் பிரகாச வள்ளலார்.

அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த
உலக ரனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்
தடைவித்திட அவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந் திடுதற்
கென்றே யெனையிந்த
யுகத்தே யிறைவன் வருவிக்க வுற்றே
னருளை பெற்றேனே.

என்றும், பன்மார்க்கத்தில் சிறந்தது சன்மார்க்கம் எனவும் கூறலானுர். மண்ணுடல் பெற்று மயங்கும் இம்மாநிலம் பொன்னுடல் பெற்று பொலிய வேண்டுமென நினைக்கின்ருர்.

"பன்னெறிச் சமயங்கள் மதங் களென்றிடுமோர்
பவநெறி யிதுவரை பரவியதி தனுல்
சென்னெறி யறிந்திலர் இறந்திறந் துலகோர்
செறியிருளடைந்தனர் ஆதலின் இனிநீ
புன்னெறி தவிர்த்து ஒரு பொது நெறியெனும் வான்
புத்தமு தருள்கின்ற சுத்த சன்மார்க்கத்
தன்னெறி செலுத்துக என்ற என் அரசே
தனி நாடருஜ வென் சற்குரு மணியே"

பிறந்து பிறந்து இறந்துக் கொண்டிருக்கும் உலக மக்களே! புதிய அருளமுதம் அளிக்கின்ற சுத்த சன்மார்க்கத் தன்னெறி நின்று வாழுங்கள், நடருஜ பெருனின்மா பேரருளை நீங்களும் பெறுங்கள் என்றும் கூறலானுர்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்றும், தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்க என்றும் கூறும் நெறியில் அருள் பெற்றவர்கள், தாச மார்க்கம் அப்பர், சற்புத்திர மார்க்கம் சம்பந்தர், சகமார்க்கம்சுந்தரர், சன்மார்க்கம் மாணிக்க வாசகர். இந்த மார்க்க மெலாம் கடந்து விட்டேன் என்று கூறுகிருர் வள்ளலார்.

அடியனுக்கிப் பிள்ளையாக்கி நேயனுக்கியே
அடிகளாக்கி கொண்டாய் என்னை அவலம்
நீக்கியே!
படியுளோரும் வானுளோரும் இதனை நோக்கியே
பதியும் ஒரவாரம் என்பர் பரிவு தேக்கியே

என பாடுகின்ருர். என் உள்ளத்தை அடிமை படுத்தி ஆண்டவனை முதலாளியாகவும் நான் பணியாளனுகவும் வணங்கினேன், ஆண்டவனை தந்தையாக வைத்து என் உள்ளத்தை மகனைப்போல் அன்பும் பணிவும் உடைய தாக்கி வணங்கினேன், ஆண்டவனிடத்தில் உயர்ந்த அன்பு காட்டி தோழனுக வணங்கினேன், இன்புற்றேனில்லை. என் உள்ளத்தை பெண் உள்ளமாக மாற்றி ஆண்டவனை நாயகனுகவரித்து வணங்கிய பொழுது பெற்றேன் பேரின்பம். மண்ணுலக மக்களும், விண்ணுலக மக்களும் இதைக் கண்டு மகிழ்ந்து ஆரவாரம் செய்தனர் என கூறுகின்ருர்.

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழு
தொழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

என்ற பொய்யா மொழிக்கு ஒப்ப கணவனை தொழும் பெண் உயர்வு அடைவதைப் போலும்,

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத் தான் கொண்டொழுகின் உண்டு

நேர்மையுடைய ஒரு பெண்ணின் உள்ளம் போல் தன் உள்ளத்தை நிலைநிறுத்தி பெருமை அடைந்தார். இப்படிபட்ட உயர்ந்த மார்க்கம் தான் மாண்பு மிக்க மகிளீர் வாழும் சன்மார்க்கம். சன்மார்க்க நெறி நிற்கும் உயர்ந்த பண்புடைய மகளீருக்கு என்ன கடமையுண்டு என பார்க்கின்ற பொழுது பெண் பிறந்து சிறு குழந்தையாக இருக்கின்ற பொழுது தாய் தந்தையருடைய அன்பிலே வளர்கின்றாள்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

தாய் தந்தையருக்கு செய்ய வேண்டிய கடமையைச் செய்து, பக்குவ வயதடைந்த வுடன், தக்க துணைவனை அடைந்து வாழ்க்கையில் ஈடுபடுகிறாள்.

தற்காத்துத்தற் கொண்டான்பேணித்தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

தன்னை காத்து தன்னை கொண்ட கணவ னின் புகழைக் காக்கின்றவள் பெண். உடலை தழுவி இன்பத்தை யூட்டும் கணவனின் புகழையும், உயிரை தழுவி இன்பத்தை யூட்டும் ஆண்டவன் புகழை யும் காக்க வேண்டியவள் பெண். உள்ளத்தை பரிபக்குவ நிலைபடுத்தி பெறு கின்ற அருள் பேரின்பமாகும். வைணவ சமய பெண்ணான சூடிக் கொடுத்த சுடர் கொடியாள் ஆண்டவனை நாயகனாக வரித்து பாடி, பரவச முற்று ஆண்ட வனுடன் ஒன்றாக கலந்து பேரின்ப மெய்து கிறார். இவ்வாறான உயர்ந்த சன்மார்க்க நெறி நிற்கும் மகளீரை சிறப்பித்து பாடு கிறார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை.

மங்கையராகப் பிறப்பதற்கே-நல்ல
மாதவம் செய்திட வேண்டும் அம்மா
பங்கயக் கைநலம் பார்த்தலவோ-இந்த
பாரில் அறங்கள் வளரும் அம்மா.

முற்பிறவியில் செய்த நற்றவத்தின் வாயி லாகத் தான் மங்கையராக பிறக்கின்றனர். அவர்கள் கை நலஞ்சிறந்த நல்லகையாக இருக்க வேண்டும். வாரி வழங்குகின்ற அறம் வழுவாத கையாக இருக்க வேண் டும். ஊன் உணவு சமைக்கும் ஈனக்கை யாக இருக்கக் கூடாது. நல்ல சத்துள்ள காய்கறி உணவை சமைத்து உற்றார் உறவினருக்கு படைக்கும் அருள் சிறந்த கையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மகளீரும் தான் ஈன்றெடுத்த குழந்தைகளை சன்மார்க்க நெறியுடைய நல்ல குழந்தை யாக வளர்க்க வேண்டும். எல்லோரும் எப்பொழுதும் சன்மார்க்க சங்கத்தை சார்ந் தவராக வாழ வேண்டும்.

தங்கமே யனையார் கூடிய ஞான சமரச சுத்த
சன்மார்க்க
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம் சார்திருக்
கோயில் கண்டிடவும்
துங்கமேபெறும் சற்சங்கம் நீடூழிதுலங்கவும்
சங்கத்திலடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி ஆடவும் இச்சை
காண் எந்தாய்

திருவருட் பிரகாச வள்ளலார் விரும்புவது போல நாம் எல்லோரும் சன்மார்க்க சங்கத்தில் அங்கத்தினராக இருந்து நடராஜ பெருமானை பாடி பரவசமடைய வேண்டும்.

தருண மிஞ்ஞான்றே சுத்த சன்மார்க்கத்
தனிநெறி யுலகெலாந், தழைப்பக்
கருணையுஞ் சிவமே பொருளெனக் கருதுங்
கருத்துமுற் றெம்மனோர் களிப்பப்
பொருணிறை யோங்கத் தெருணிலை விளங்க
புண்ணியம் பொற்புற வயங்க
அருணயத் தருள் வாய் திருச்சிற்றம்பலத்தே
அருட்பெருஞ் ஜோதி யென்னரசே.

இது நல்ல தருணம். சமரச சுத்த சன் மார்க்கம் பரவவல்ல நல்லதோர் காலம். இறைவன் அருளை பெற சதாதியானித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

எனவே உள்ளம் உவந்து ஆண்டவனை வழிப்பட்டு பேறு பெறுங்கள். உடல் அழியாமல் பொன்னுடல் பெற்று மரண மிலா வாழ்வில் வாழ ஆண்டவனை என் உரிமையுடைய நாயகனே என வணங்கு கின்றார். பெண் உள்ளமாக தன் உள்ளத்தை மாற்றிய வள்ளலார் பெற்ற பெரும் பேற்றைப் போல பெண்ணாக பிறந்தவர்கள் எளிதில் ஆண்டவன் அருள் பெற்று உய்ய முடியும். இத்தகைய நன்னெறியான சன்மார்க்க நெறி நிற்பது தனை, மகளீர் கடமையாகும்.

வாழ்க! இறைமை எய்திய மகளீர் சமுதாயம்.
வளர்க்க! சமரச சுத்த சத்திய சன்மார்க்கம்.
ஓங்குக உலகெலாம் அருள் நயந்த சன்மார்க்கம்.

வள்ளல் வகுத்து தந்த ச. சு. ச.

சங்க 100 ஆண்டு

விழாவில் எங்கள் நல் வாழ்த்துக்கள்

**A. K. சுப்பிரமணிய முதலியார் & சன்.**

மளிகை

அரக்கோணம், வ. ஆ. ஜில்லா.

இந்த ச. சு. ச. ச. சங்க

நூற்ருண்டு நிறைவு விழாவின்

போது எங்கள் நல்

வாழ்த்துக்கள்.

*

# A. K. இராஜ ரத்ன முதலியார்

ம ளி கை

காந்திரோடு

அரக்கோணம் : வ. ஆ. ஜில்லா

எலலாவிதமான மருந்துகள்

மலிவான விலையில் கிடைக்குமிடம்

*

# ரங்கா மெடிகல்ஸ்

இங்கிலீஷ் மருந்து வியாபாரம்

61, மெயின் பஜார், வேலூர்

போன் நெ. 999

## கல்யாண வைபவங்களுக்கு வேண்டிய

B & C மில் & மேட்டூர் மில் ஜவுளி ரகங்கள் கிடைக்கும்

காஞ்சிபுரம், ஆரணி, தர்மாவரம், கொள்ளேகால் பட்டு சேலைகள், பட்டு பாவாடைகள், சோளி பீஸ்கள், கைத்தறி நூல் சேலைகள், பேன்ஸி சில்க், நைலான் & மில் ஜவுளி ரகங்கள் வாங்குவதற்கு சிறந்த இடம்!

போன்: 1050

## ஜமுனா ஸ்டோர்ஸ்

ஜவுளி வியாபாரம்,

134, லாங்கு பஜார், வேலூர். (வ.ஆ.)

*

**The Most up-to-date Shop in Town!**

Our Specialities in:

HIGH CLASS WOOLLEN SUITINGS

TERYLENE SUITINGS & SHIRTINGS

SILK COTTON SAREES

FANCY NYLON & COTTON VARIETIES

Please Visit

**Phone: 1050**

## JAMUNA STORES

**134, LONG BAZAAR, VELLORE. N-A.**

**B & C Mills Suitings Shirtings and Mettur Mill Varieties are all Available.**

# சமரசப் பெருநெறி



பேராசிரியர் வ. பெருமாள்,
எம்.ஏ., பி.டி., எம். ஆர். ஏ, எஸ்.
தமிழ்ப் பேராசிரியர்
முதல்நிலை கல்லூரி, உரிகம், கோலார் தங்கவயல்,
மைசூர் மாநிலம்.

உலகத்தில் பல நெறிகள் உண்டு; பல்வேறு நெறிகளும் உண்டு. ஒவ்வொரு நெறியும் ஒவ்வொரு துறையில் சிறப்புடன் திகழ்கின்றது. எல்லா நெறிகளிலும் விளங்குகின்ற சிறப்பியல்பு களைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது வள்ளலார் கண்ட சமரசப் பெருநெறி சமரச சன்மார்க்கம் ஒரு தனி சமயமோ மதமோ அன்று. மக்கள் அனைவரும் பின்பற்றத் தக்க தூய நன்மார்க்கமாகும். அந் நன்மார்க்கத்தின் ஒரு சில சிறப்புக்களை மட்டும் இவண் ஆராய் வோம்.

அன்பு நெறி: மனைவி, மக்கள், சுற்றத் தார், நண்பர் ஆகியோர் மாட்டு இயல்பாக உள் ளத்தில் எழுகின்ற பற்றே அன்பு எனப்படும். மனமலர்ச்சியின் முதல் நிலையே அன்பாகும். மக்கள் இயைந்து வாழவும் இணைந்து வாழவும் அன்பாகிய பிணைப்பு மிகவும் அவசியமாகும் நெஞ்சத்தில் அன்பில்லாத மக்கள் இவ்வுலகில் இருந்தும் பயனில்லை. தண்ணீரில்லாத குளம் எத்துணை பெரிதாயினும் அது பிறர்க்குச் சிறி தேனும் பயன் படுதல் இல்லை. அது போல, அன்பில்லாத மனிதன் ஏனைய துறைகளில் எத்துணை பெரியவனாக இருப்பினும் அவனால் மக்கட்கு யாதொரு பயனுமில்லை. ஈரம் மென்மை யாக இருந்து இரண்டு பொருள்களை ஒட்ட எவ்வாறு துணைபுரிகின்றதோ அது போல அன்பு மென்மையாக அமைந்து இரு உள்ளங்களையும் இணைக்கத் துணைபுரிகின்றது. எனவே, அன் பிற்கு ஈரம் என்று பெயர். அன்பில்லாதவனை நெஞ்சில் ஈரமில்லாதவன் என்கின்றோம். இராமலிங்க சுவாமிகள் இறைவனை வேண்டும் போது

'அப்பா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல்
வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்பு
செயல் வேண்டும்'

என்று அன்பையே உள்ளன்புடன் வேண்டு கின்றார். எனவே, வள்ளலார் நெறி அன்பு நெறி என்பது புலனாகும்.

அருள் நெறி: அன்பு நன்றாக மலர்ந்து நாற்றிசையிலும் தூய நறுமணம் பரப்பும்போது அருளாகக் காட்சி அளிக்கின்றது. அறிந்த வரிடத்தில் மட்டும் செல்லக் கூடிய பற்றுணர்ச்சி அன்பு எனக் குறிக்கப்படும். அறியாதாரிடத் தும் செல்லக் கூடிய பற்றுணர்ச்சி அருள் எனப் படும். அன்பு மலர்கின்ற பூ போன்றது. அருள் மலர்ந்து மணம் வீசுகின்ற பூ போன்றது. அன்பை அரைகுறையாகப் பழுத்த பழத்திற்கு ஒப்பிடலாம் அருளை நன்றாகப் பழுத்த கனிக்கு ஒப்பிடலாம் அன்பில்லா விட்டால் அருள் இல்லை அன்பின் நோக்கம் அருள்நிலையை அடைவதே. தன்னலம் பொதுநலம் ஆகிய இரண்டிலும் அமைந்தது அன்பு. பொது நலத் தின் அடிப்படையில் அமைந்தது அருள். வள்ளலார் நெறி அன்பில் தொடங்கி அருளில் முடிகின்றது. அருள் நெறியில் இறைவனை அடைந்த வள்ளலார்க்கு, இறைவன் அருள் ஒளியாகவே காட்சியளித்தான். வள்ளலார் கண்ட இறைவன்

அருட்பெருஞ் சோதி! தனிப்பெருங் கருணை! அவர் பாடியது திருவருட்பா—திரு அருள் பாட்டு)

இரக்கநெறி: பிற உயிர்கள் துன்பப்படுங் காலை இயல்பாக ஏற்படுகின்ற மனவருத்தத் திற்கு இரக்கம் என்று பெயர் பிறர் அல்லலைக் கண்டு அதன் பயனாக உள்ளத்தில் ஏற்படும் நெகிழ்ச்சியே இரக்கமாகும். எவனொருவன் பிறர் துயரைத் தன்துயர்போல் நினைத்து அதற் காக உளம் வருந்துகின்றானோ அவன்தான் உண்மையான இரக்கமுள்ள மனிதன். இரக்கம் என்னும் தூய உணர்ச்சி, சாதி, சமயம், மொழி, இனம், நாடு, ஆகிய எல்லாவற்றையும் கடந்து செல்லக் கூடிய ஆற்றல் வாய்ந்தது. உயர் திணையோடு மட்டும் அமையாது அஃறிணை யிடமும் விரைந்து செல்லக்கூடிய பாச உணர்ச்சியே இரக்கம் எனப்படும். வாடிய பயிரையும் வாடிய மக்களையும் கண்ட போது வள்ளலார் மனம் வருந்தினார்; மனம் நொந்தார்; மனம் வாடினார்; மனம் பதைத்தார்.

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுளம் துடித்தேன்

ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே
இளைத்தேன் ''
—திருவருட்பா

மக்களுக்கு இரக்க உணர்ச்சி வேண்டும் என்று வள்ளலார் நீண்ட அறிவுரை கூறினார் அல்லர். வள்ளலார் வாழ்ந்து காட்டினார். ஆயிரம் நீதிகளைப் பிறர்க்கு எடுத்துரைப்பவனைவிட ஒரே ஒரு நீதியையாவது செயலில் கடைப் பிடிப்பவனுக்கே உயர்வு மிகுதி. அடிகளார் சொல் வீரரல்லர்; செயல் வீரர். தம் வாழ்வினை கண்ணாடியே மேற்காட்டியுள்ள பாட்டாகத் திகழ்கின்றது.

அறிவுநெறி : பக்தி இருவகைப் படும். ஒன்று தெளிந்த பக்தி; மற்றொன்று குருட்டு பக்தி. அறவில் தெளிவும் உறுதியும் ஏற்பட்டு அதன் நற்பயனாக உள்ளத்தில் தோன்றுகின்ற தூயஉணர்ச்சியே பக்தி எனப்படும். அறிவு ஒளி மிகுதியாக மிகுதியாக அறியாமையாகிய மருள் நீங்கும் உயிர், உலகம், இறைவன் ஆகியவை பற்றிய உண்மைகளைக் கசடற அறிந்து, தெளிந்து, உணர்ந்து, மெய்ப்பொருளை அடைகின்ற நெறியே அறிவுநெறி (ஞான மார்க்கம்) எனப்படும். மாணிக்க வாசகர் ஞானமார்க்கத்தைப் பின்பற்றியவர். வள்ளலார் நெறியும் ஞானமார்க்கமேயாகும். எத்தகைய நல்ல செயல் செய்தாலும் நன்றாக எண்ணிச் செய்வது நல்லது. 'எண்ணித் துணிக கருமம்' என்பது திருவள்ளுவர் வாக்கு. எல்லாம் அறிந்து அறிவின் வடிவாக (Omniscient) இருக்கின்ற இறைவனை அறிவு நெறியில் அடைந்து உணர்வது சாலச் சிறந்தது எனக் கருதினார் வள்ளலார். எனவேதான் அவருடைய பாக்கள் அருட்பாவாக மட்டுமில்லாமல் அறிவுப்பாக்களாகவும் திகழ்ந்து கற்றோர் சிந்தையைத் தூண்டி வளரச் செய்த வண்ணமிருக்கின்றன வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆகிய ஆறுவகையான அறிவுக் கோட்பாடுகளின் இணைப்பின் சாரமே வள்ளலார் கண்ட சுத்த சிவ சன்மார்க்கமாகும். வள்ளலார் அறிவுக் கருத்துக்கள் எல்லாவற்றையும் ஒற்றுமை உணர்வுடன் இணைத்து சிந்தை ஒருமைப்பாடு (intellectual integration) ஏற்படுத்திப் பெரும் புரட்சி செய்துள்ளார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது,

'' வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின்
மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாகி
நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின்
நடுவாகி நவநிலைக்கு நண்ணு தாகி
மூதாண்ட கோடியெல்லாம் தாங்கி நின்ற
முதலாகி மனாதீத முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக் கமையா தென்றும்
மவுனவியோ மத்தினிடை வயங்குந்
தேவே ''

'' தோன்றுதுவி தாத்துவித மாய்வி சிட்டாத்
துவிதமாய்க் கேவலாத் துவித மாகிச்
சான்ற சுத்தாத் துவிதமாய்ச் சுத்தந்
தோய்ந்த
சமரசாத் துவிதமுமாய்த் தன்னை யன்றி
ஊன்றுநிலை வேறொன்றும் இலதாய் என்றும்
உள்ளதாய் நிரதிசய உணர்வாய்
எல்லாம்
ஈன்றருளும் தாயாகித் தந்தை யாகி
எழிற்குருவாய் தெய்வதமாய் இலங்குந்
தேவே ''
—மகாதேவமாலை

வள்ளலார் உணர்ந்துரைத்த பக்தி ஞான பக்தியேயன்றி குருட்டு பக்தியன்று. ஒளி பக்தியேயன்றி இருள் பக்தியன்று.

சமத்துவ நெறி : உலகத்திலுள்ள மக்களிடையே ஏழை-பணக்காரன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், படித்தவன்-படிக்காதவன். நண்பன்-பகைவன், முதலாளி-தொழிலாளி முதலிய வேறுபாடுகள் இருக்கின்றன இத்தகைய வேறுபாடுகள் சமுதாயத்தைச் சீர்குலைத்து அழித்து விடுகின்றன. மல்லிகை முல்லை முதலிய பூக்களிடையே எவ்வளவோ வேறுபாடுகள் இருக்கின்றன. எல்லாப் பூக்களையும் சேர்த்து முறையாகத் தொடுத்துப் பூமாலையாக ஆக்கியபின் அதன் அமைப்பு கண்ணிற்கு விருந்தளிக்கின்றது, மணம் மூக்கிற்கு இன்பம் பயக்கின்றது; பூக்களின் இணைப்பு மனத்திற்கு மகிழ்ச்சி அளிக்கின்றது. தனித்தனியே இருக்கும்போது பூக்களுக்கு இல்லாத அழகும் வலிமையும் மாலையில் இணைந்திருக்கும் போது ஏற்படுகின்றன. 'ஒற்றுமையே வலிமை' என்னும் பழமொழி இதைத்தான் உணர்த்துகின்றது. பூமாலையில் பூக்கள் அழகுற இணைந்திருக்கும்போது அவற்றடையேயுள்ள உயர்வு, தாழ்வு என்னும் வேற்றுமை மறைந்து சமத்துவம் காணப்படுவதைப்போல, செல்வம், தகுதி முதலியவற்றில் மக்களிடையே எவ்வளவு வேறுபாடு ருப்பினும் மக்கள் அனைவரும் உள்ளத்தால் ஒன்றுபட்டால் சமுதாயம் செழித்து வலிமையுறும் எல்லாவற்றிற்கும் மேலாகச் சமத்துவம் நிலைபெறும்

'' ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும்
எவரும்
ஒருமையுள ராகிஉல கியல்நடத்தல்
வேண்டும் ''

என்று உள சமத்துவத்தின் அவசியத்தை இராமலிங்க சுவாமிகள் நன்கு வலியுறுத்துகின்றார். பணக்காரன் நன்றாக உண்டு கொழுக்கவும், ஏழை பசியால் வாடவும், இவ்விரு வகுப்பிற்குமுள்ள ஏற்றத்தாழ்வையும் பிளவையும் கண்டு மனம் நொந்து பாடுகின்றார் வள்ளலார். பொருளாதாரத் துறையில் ஏற்றத்தாழ்வு நீங்கி முழு சமத்துவம் நிலைக்க வேண்டும் என்ற தூய எண்ணமும், அந்த எண்ணம் மிகவும் விரைவில்

நிறைவேற வேண்டும் என்ற தம் குறிப்பையும் மிகத் தெளிவாகப் பாட்டில் புலப்படுத்துகின்ருர்.

'' உள்ளலேன் உடையார் உண்ணவும்
வறியார்
உறுபசி உழந்துவெந் துயரால்
வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ
மற்றிதை நினைத்திடுந் தோறும்
எள்ளலேன் உள்ளம் எரிகின்ற துடம்பும்
எரிகின்ற தென்செய்வேன் அந்தோ
கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன்
இந்தக்
குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய் ''

மக்கள் உள்ளத்தில் சமத்துவ உணர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதே வள்ளலாரின் விருப்பம்.

நீதி நெறி : மக்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வரையறுக்கப்பட்ட வாழ்க்கைச் சட்டத்திற்கே நீதி என்று பெயர். நீதி என்பது எப்போதும் நன்னெறியையே குறிக்கும். நீதி தவறும் போது அநீதியாக மாறுகின்றது. வள்ளலார் வகுத்து வரையறுத்த வாழ்க்கைச் சட்டம் மக்கள் குலம் முழுவதற்கும் முற்றிலும் பொருந்துகின்ற நீதிநெறியாகக் காட்சியளிக்கின்றது மக்கள் அனைவரும் இயைந்தும் இணைந்தும் வாழ்கின்ற சன்மார்க்கமே நீதி நெறியாகும்.

''சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்
சண் டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணே நீர் அழிதல்அழ
கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடுந் தனித்தலைவர் ஒருத்தர்
அவர் தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்
றேன் உமையே ''

வள்ளலார் அருட்பாவில் காட்டியுள்ள நெறி நல்வாழ்விற்கேற்ற நீதிநெறி. நல்லொழுக்கத்தின் அடிப்படையில் அமைந்த நல்ல நெறி.

தூய நெறி : மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணத்திலும் முழுத்தூய்மையாக இருந்தால் வாழ்க்கை தூய்மையாகத் திகழும் என்பது ஒரு தலை. ஒரு வீதியில் ஒரு வீடு மட்டும் தூய்மையாக இருந்தால் போதுமா? சமுதாயத்தில் ஒரு மனிதன் மட்டும் தூய்மையாக இருந்தால் என்ன பயன்? அகமும் புறமும், மனமும் இனமும், நண்பரும் உற்ருரும் தூய்மையாக இருத்தல் வேண்டும். பூவோடு சேர்ந்த நார் மணம் பெறுவதைப் போல உத்தமர் மத்தியில் வாழ்கின்றவன் உத்தமனுகவே திகழ்வான்.

'' நல்லாரைக் காண்பதும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே– நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே
அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று ''

என்னும் ஔவையார் வாய்மொழியை நன்குணர்ந்த வள்ளலார் நல்லவர் உறவை விரும்பி வேண்டுகின்ருர். உடல் தூய்மையும் அத் தூய்மையின் நற்பயனும் உடல் நலமும் பெற வேண்டும். பொருளுக்காகவும் வயிற்றுப் பிழைப்புக்காகவும் மக்களைப் பாடாமல் இறைவனது பெரும்புகழைத் தூய மொழியால் பாடுதல் வேண்டும். பொய்ம்மை, மதம், ஆசை முதலிய குற்றங்கள் நீங்கிய தூயமனத்துடன் வாழ வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக உத்தமர் உறவு வேண்டும். சுருங்கக் கூறுமிடத்துத் தூயஉடல், தூயமொழி, தூயமனம், தூய இனம், ஆகிய நான்கும் வேண்டும். வள்ளலார் காட்டிய தூயநெறி இது தான்,

'' ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்
கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று
பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்
டும்பொய்ம்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத
மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்
டும்உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும்
நோயற்ற
வாழ்வில்நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்
வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவ
மணி
சண்முகத் தெய்வமணியே.

புரட்சி நெறி : வள்ளலாரின் திருவருட்பாவில் சீர்திருத்தக் கொள்கைகளும் புரட்சிக் கருத்துக்களும் மணம் வீசுவதைக் காணலாம் சாதி, வருணம், சமயம், மதம், இனம், சாத்திரம் ஆகியவற்றை வன்மையாகவும் திண்மையாகவும் கண்டித்து, சீர்திருத்த நோக்கத்துடன் புரட்சி நெறியில் பாட்டுக்களைப் பாடுகின்ருர் இராமலிங்க சுவாமிகள் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்னும் திருமூலர் கருத்தே வள்ளலாரின் கருத்தாகும்,

" நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ
விழித்திதுபார் என்றெனக்கு விளம்பிய சற் குருவே "

" இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப் புன்செயில் எருவாக்கிப் போட்டுத்
தெருட்சாரும் சுத்தசன் மார்க்கநன் நீதி
சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்
அருட்சோதி வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் சோதிஎன் ஆண்டவர் நீரே "

இப்பாட்டுக்கள் வள்ளலாரின் புரட்சி நெறியை நன்கு காட்டுகின்றன. ஊருக்கு மட்டும் உபதேசம் செய்யாமல் வள்ளலார் இப்புரட்சி நெறியைச் செயலிலும் கடைப்பிடித்தார்.

" சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன்
சாத்திரக் குப்பையும் தவிர்த்தேன். "

" சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் சோதி "

" இந்தச் சாதி இந்த மதம் எனும்
சழக்கையெலாம் தவிர்த்த சத்தியனே"

" சாதிகுலம் சமயமெலாம் தவிர்த்தெனை மேலேற்றித்
தனித்ததிரு வமுதளித்த தனித் தலைமைப் பொருளே "

இப்பாக்களை ஆராயுமிடத்துப் பழமை குறைவாகவும் புதுமை மிகுதியாகவும் இருப்பதைக் காணலாம்.

**பக்தி நெறி :** தமிழ்ப் புலவர்களில் பொருளுக்காகப் பாடியவர்களும் உண்டு. அருளுக்காகப் பாடியவர்களும் உண்டு. பொருளுக்காகப் பாடியவர்கள் ஆசையால் உந்தப்பட்டு வெறும் பாட்டைப் பாடினர்கள். அன்னார்தம் இயல்பைப்

" போற்றினும் போற்றுவர் பொருள்கொடாவிடின்
தூற்றினும் தூற்றுவர் சொன்னசொற்களை
மாற்றினும் மாற்றுவர் வன்கணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடியராவரே "

என்னும் பாடல் நன்கு விளக்குகின்றது. வள்ளலார் தூய பக்தியால் உந்தப்பட்டு அருள் உள்ளத்தோடு இறைவனைப் பாடினரே தவிர, வயிற்றுப் பிழைப்புக்காக மனிதரைப் பாடினர் அல்லர். செல்வத்திற்காகப் பாடுகின்ற பாட்டெல்லாம் செல்வம் செல்வகைப் போல கால வெள்ளத்தில் சென்று விடும். இறைவனைப் பற்றிய அருட்பாக்கள் என்றும் நிலைத்து நிற்கும். பக்திப்பாட்டே உண்மையான பாட்டு; நிலைத்த பாட்டு; அருள் பாட்டு; உயிரோடு கலக்கின்ற பாட்டு.

" நடராசர் பாட்டே நறும்பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு
சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு
அம்பலப் பாட்டே அருட்பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு "

என்று இனிதுபாடி வள்ளலார் தம் தூய பக்தி நெறியை நன்கு புலப்படுத்துகின்றார்.

**பொதுமை நெறி :** எம்மதமும் சம்மதம் என்பதே இராமலிங்க அடிகளாரின் கோட்பாடு. வேற்றுமையில் ஒற்றுமை காண்கின்ற பரந்த நோக்கத்தையும் பொதுமை உணர்ச்சியையும் வள்ளலார் பாட்டுக்களில் காணலாம்.

"எம்மத நிலையும் நின்னருள் நிலையில் இலங்குதல் அறிந்தனன்
எல்லாம் சம்மத மாக்கிச் சொல்கின்றேன்"

என்பது வள்ளலார் அருட்பா. ஒரே பொருளுக்குப் பல பெயர்கள் இருப்பதைப்போல ஒரே இறைவனுக்குப் பல பெயர்கள் உண்டு. பெயர்கள் பல; குறிக்கப்படுகின்ற பொருள் ஒன்றே ஆறுகள் பல, அவை சென்று கலக்கின்ற கடல் ஒன்றே. எல்லாச் சமயங்களுக்குமிடையேயுள்ள அடிப்படைக் கருத்தொற்றுமையை உணர்த்தி, நடுநிலை உணர்ச்சியுடன் பொதுமை நெறி உண்டாக்கிய பெருமை வள்ளலாரைச் சேரும்.

" பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகைஎன கணவர்திருப் பேர்புகல்என் கின்றாய்
அருகர்புத்தர் ஆதஎன்பேன் அயன் என்பேன் நாரா
யணன்என்பேன் அரன்என்பேன் ஆதி சிவன் என்பேன்
பருகுசதா சிவம்என்பேன் சத்திசிவம் என்பேன்
பரமம்என்பேன் பிரமம் என்பேன் பரப் பிரமம் என்பேன்
துருவுசுத்தப் பிரமம் என்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவம் என்பன்இவை சித்துவிளை யாட்டே "

**ஆன்மீக நெறி :** பிறரையும் தம்மைப் போல் எண்ணி அதற்கேற்ப ஒழுக வேண்டும் என்று கூறுவது மனித நெறி பிற உயிரையும் தம்முயிர் போல மதித்து வாழ வேண்டும் என்று உரைப்பது ஆன்மீக நெறி. மனித நெறியைவிட ஆன்மீகநெறி உயர்ந்தது. பிற உயிர்களையும் தம்முயிர்போல் எண்ணி, ஒத்த உணர்ச்சியுடன் மகிழ்ந்து வாழ்பவரின் தூய உள்ளத்தில் இறை

வன் குடிகொண்டிருக்கின்றான் என்று வள்ளலார் பாடுகின்றார்.

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ"

என்னும் அருட்பா ஆன்மீக நெறியையும் ஆன்மீக ஒருமைப் பாட்டையும் நன்கு இயம்புகின்றது.

"காக்கை குருவி எங்கள் சாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்"
"கொத்தித் திரியுமந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடுமந்தக் காக்காய்—அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா"
—பாரதியார்

ஆன்மநேய ஒருமைப்பாட்டை விளக்குகின்ற பாரதியார் கவிதைகளும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கன. உடம்பால் வேறு பட்டாலும் எல்லா உயிரினங்களும் உயிரால் ஒன்றுபட்டவர்கள் என்ற அடிப்படையான உண்மையைக் கொண்ட நெறியே வள்ளலார் கண்ட ஆன்மீக நெறி.

சமரசப் பெருநெறி: சமயம், சமுதாயம், அறிவு, ஆன்மீகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் வள்ளலார் ஒற்றுமையை நன்கு வலியுறுத்துகின்றார். அன்பு, அருள், இரக்கம், அறிவு, சமத்துவம், நீதி, தூய்மை, புதுமை (புரட்சி,) பக்தி, பொதுமை, ஆன்மநேயம் ஆகியவை நன்கு இயைந்து, எல்லோரையும் ஒன்றுபடுத்தி நல்வாழ்வு வாழ வள்ளலார் வகுத்த நன்னெறியே சமரசப் பெருநெறி. இன்றைய உலக ஒற்றுமைக்கு ஒரே ஒரு நெறிதான் உண்டு. அதுதான் வள்ளலார் வகுத்த சமரசப் பெருநெறி. வாழ்க சமரசம்; வாழ்க சன்மார்க்கம்.


நயமான விலை! புதிய ஜவுளி ரகங்கள்!!

உயர்ந்த ரக டெரிலின், சூட்டிங்ஸ் & சர்ட்டிங்ஸ், நைலான்,
டெரிகாட்டன், பிரிண்டெட் சேலைகளும், மற்றும் சோளிரகங்கள்
நம்பிக்கையாக வாங்க சிறந்த இடம்.

T. P. ராமலிங்கம்
ஜவுளி வியாபாரம்.

நெ. 8, ஆபீஸர்ஸ் லைன், வேலூர். வ. ஆ.

பென்னி மில், கோட்டிங், சர்ட்டிங்ஸ், மேட்டூர் மில் லாங்லாத் & மல்
கன்ட்ரோல் விலையில் கிடைக்கும்.

குறித்த நேரத்தில் சிறந்த தையல் வேலை செய்துகொடுக்கப்படும்.

# வள்ளுவரும் வள்ளலாரும்

வித்வான் டாக்டர் ந. சுப்ரமணியன்,
எம். ஏ., பி. எச். டி.,

வரலாற்று பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்



நம் நாட்டுப் பண்பாட்டு மரபில் "இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தம்இல் இன்பத்து அழிவில் விடும், நெறி அறிந்து எய்துதற்கு உரிய மாந்தர்க்கு உறுதி என உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள் "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும், அறத்து வழிப்படூஉம்..." ஆதலின் "சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாய "வீடு நீங்கலாக ஏனைய மூன்றனுள் அறமே சாலச் சிறந்தது என்பது பெற்றும். இச்சிறந்த அறத்தினையே கருதிச் செய்வார் அருள் வேண்டுவோர் என்னும் கருத்தினைக் கொண்டே "அறஞ் செய்தீமோ அருள் வெய்யோய்" என்றார் பரணரும். ஆதலால் அறத்திற்கும் அருளிற்கும் அடிப்படைத் தொடர்பு உண்மையும் பெற்றும்.

இத்துணையும் உள்ளத்திற் கொண்டு வள்ளுவனார் திருக்குறள் துறவறவியலில் அருளுடைமையை எல்லா விரதங்கட்கும் தவநிலைக்கும் அடிப்படையாகக் கூறிப் போந்தார். அன்றியும் அருளின் அளவிலாப் பெருமையைக் கூறுவார் "அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்" என்றார். இவ்வருள் தானும் அன்பால் வருவது "அருள் என்னும் அன்பீன் குழவி" என்றும் அவர் கூறிப் போந்தமையாற் பெறப்படும். இவ்வருள் தான் நீத்தாரின் தனிச்சிறப்பு." அறமுதற் பொருள்களை உலகிற்கு உள்ளவாறு உணர்த்துவார்" அந்நீத்தார் தாம் என்றார் பரிமேலழகியார். இஃது ஆன்றோர் சான்றோரைப் பற்றிக் கண்ட முடிவு.

இந்நிலையில் சென்ற நூற்றாண்டில் தமிழ் நாட்டில் தோன்றி அருட்பெருங்கடலாயும் தனிப்பெருங் கருணைக்கோர் ஆதரமாயும் விளங்கிச் சமரச சன்மார்க்கத்தைப் பல்பிணிச் சில்வாழ்நாள் சிற்றறிவனோர்க்குத் தமது அருட்பா என்னும் பாக்கடல் வாயிலாக எடுத்தோதி ஆதிபகவனைய சோதியில் கலந்தருளிய பெருந்தகையாய இராமலிங்க அடிகள் இம்மேற் கூறிய நீத்தார்க்கு ஓர் இலக்கணம் எனத் திகழ்ந்தவர். அவர் அறமுதற் பொருள்களின் சிறப்புத் தோற்றமான அருளின் பெருமையைத் தமது அருட்பாக்கள் மூலம் தோற்றுவித்தார்.

இவ்'அருட்பா' என்னும் சொற்றொடர்க்குப் பலர் பலவாறு பொருள் கூறுவர். இதனை "இறைவன் திருவருளால் வந்தபா" என்று பிறபொருள் கூறுதலும், "மருட்பா என்பதன் மறுதலை" என்று போலியுரை கூறுதலும் போற்றத் தக்கன அல்ல; மற்று இதன் பொருள் என்னை எனின், அருளை உலகினர்க்கு எடுத்து ஓதவந்தபா" எனவே பொருந்தும் என்க; ஏனெனில் வள்ளுவர் நீத்தார்க்கு வகுத்த இலக்கணப்படி, இதுவே அந்நீத்தார் தம் கடமையாகும். ஆதலால் இராமலிங்க அடிகளின் அருட்பாக்களின் உண்மைப் பொருளை விளக்கத் திருக்குறள் உதவுகின்றமை வள்ளுவர்க்கும் வள்ளலார்க்கும் இடையே உள்ள ஆன்மிகத் தொடர்பினை விளக்குகின்றது. இங்ஙனம் கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டாளர்க்குச் சிறந்த எடுத்துக் காட்டான மாரியே போன்று, தமக்கென வாழாப் பிறர்க்கு உரியாளராய நீத்தாருட் சிறந்த அடிகள் தம்மியல்பாலேயே கருணை மழை பொழிந்து மக்களைத் திருவருள் வாரியில் திளைக்கச் செய்த வள்ளன்மை காரணமாக அவர் வள்ளலார் ஆயினர் என்பதும் காண்க.

இஃதேயன்றி, வள்ளுவனார் 'சமயக் கணக்கர் தம்மதிவழி கூறாது உண்மைப்

பொருளிது' என்று கூறிய பெருமை, வல்லாளராலும் சொல்லாடப் போகாத கல்லாடத்தால் விளங்கும். இதனையே "எல்லார்க்கும் ஒத்தலின் பெரும்பான்மை ஆகிய பொது இயல்பு பற்றி" வள்ளுவர் கூறுகின்றார் என்று பரிமேலழகரும் உரைத்தார். அப்பொது நிலைக்கண்ணே நின்று மக்கட்கு உறுதிப் பொருள்களின் தன்மையை அறுதியிட்ட வள்ளலார் எம்மதமும் சம்மதம் என்னும் கொள்கையைப் பெரும்பாலும் மேற்கொண்டு, சைவநெறிக்கண் நின்றாரேனும் புறச் சமய கண்டனத்தில் ஈடுபடாமல் கருணைக்கோர் எடுத்துக் காட்டாயினர்.

இந்நாட்டில் சமயப் பொது நோக்கும், ஆத்திக நெறியையும் தழைத் தோங்கப் பக்தி நெறியோங்க மக்கள் உள்ளத்தைக் கடவுள் நெறிக் கண் நிறுத்தும் தவமேற் கொள்ளத் துறவு மேற்கொண்ட வள்ளலார், வள்ளுவர் கண்ட நீத்தார் இலக்கணத்திற்கு ஓர் இலக்கியம் என்க.

அருட்பெருஞ்ஜோதி  தனிப்பெருங்கருணை


ஸ்தாபிதம் : 1939 போன் : 193

வேலூர் கூட்டுறவு பால் சப்ளை யூனியன் லிமிடெட், No. C. 1325

நெ. 4, கவர்ன்மெண்ட் பென்ட்லண்டு ஆஸ்பத்திரி ரோடு,

வேலூர் (வ. ஆ.)

சுகாதார சூழ்நிலையில் கறவல் செய்த சுத்தமான பசுவின்பால், எருமைப்பால், தயிர், பால்கோவா இவைகளின் தேவைக்கு எங்களை அணுகுங்கள்.

நகரின் முக்கிய மருத்துவமனைகள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் ஆகியவைகளின் வினியோகஸ்தர்கள்.

ஜேம்ஸ் D, ஐசக்
தலைவர்.

M. காசிநாதன், B.Com.,
செயலாளர்.

Telegams : "PAINTSWARE" Phone : { Office : 34605 Res : 34806

## கே. கே. சபாபதி & கோ.,

பெயிண்ட் வியாபாரிகள்

318, ராசப்ப செட்டி தெரு, தபால் பெட்டி நெ. 546,

சென்னை-3.

நல்ல ரகமான எல்லாவித பெயிண்ட்கள், பிளாஸ்டிக் எமல்ஷன் பெயிண்ட், எனுமல்கள், வார்னீஷ்கள், பிரஷ்கள், ட்ரைகலர்கள், டிஸ்டெம்பர்கள், பினைல் முதலியவைகளின் ஸ்டாக்கிஸ்டுகள்.

ஓவியக்காரர்களுக்கான பிரஷ்கள், இன்னும் இதர சாமான்கள், ட்ரைகலர் போன்றவைகளை நேராக இறக்குமதி செய்வோர்.

வியாபாரிகளுக்கும், பொது வேலைப்பிரிவின் கண்டிராக்டர்களுக்கும், ஸ்டுடியோக்களுக்கும், பஸ், லாரிகளின் பாடிகளை அமைத்துக் கொடுப்போருக்கும் இவைகளை சப்ளை செய்வோர்.

ஆர்டர்கள் அக்கரையுடன் கவனிக்கப்படும்.

---

PHONE : 31496 GRAMS : "PEROXYL"

*For all your requirements of :*

**HOSPITAL WARE AND THEATRE EQUIPMENT, FURNITURE ETC.,**

CONTACT

## C. R. LINGAM & CO.,

152, Nainiappa Naick Street,
MADRAS-3.

Post Box No. 548

Serving the **Medical** and **surgical**
*needs of every hospital in these parts*

**SOLE DISTRIBUTORS FOR**

**LINCOF** (For coughs)
**LINPLEX** (For Vitamin deficiencies)
**LINPROTEIN** (The whole liver protein hydrol, sate)

Manufactured by :

**LINKSON PHARMA**
MADRAS.

# வள்ளலார் உரைநடை

இரா. நடராசன் பி.ஏ.,

துணையாசிரியர், தமிழ் கலைக் களஞ்சியம்.



அருட்பெருஞ்சோதி திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள், அருட் பெருங் கவிஞர் மட்டுமல்ல உயர்ந்த உரை நடையாசிரியரும் ஆவார். அவரது பாடல்கள் எந்த அளவுக்கு உள்ளத்தை உருக்கும் வண்ணம் எளிய சொற்களில் அரிய பல சமயக் கருத்துக்கள் அமைந்தன வாகவும், புராணக் கருத்துக்களுக்குப் புது விளக்கம் தருவனவாகவும் கவிதை நயம் தலைநிமிர்ந்து நிற்பனவாகவும் அமைந் துள்ளனவோ அதற்குச் சிறிதும் குன்றாமல் குறையாமல் அவரது உரை நடையும் எளிமையும் இனிமையும் கலந்து மிளிர் கின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் உரை நடைக்குச் சீரியதோர் எடுத்துக் காட்டு வேண்டுமானால், அதற்கு வள்ள லாரின் உரை நடையைத் தயக்கமின்றிக் கூறலாம்.

வள்ளலார் தாம் போற்றிப் பின்பற்றி வந்த சமரச சன்மார்க்கத்திற்கு ஏற்ற இனிமையும் மென்மையும் வாய்ந்த மொழி தமிழ் மொழியே எனக் கருதினார். அதனால் தான், சத்தியப்பெரு விண்ணப்பத்தில், "இடம்பத்தையும், ஆரவாரத்தையும் பிரயாசத்தையும். பெருமறைப்பையும், போது போக்கையும் உண்டு பண்ணு கின்ற ஆரியம் முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்ல வொட்டாது, பயிலுதற்கும், அறிதற்கும் மிகவும் இனிமை யுடையதாய் சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி (தமிழ்) யொன்ற னிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென் மொழிகளாற் வித்தருளினீர் பல் வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடு என்று இறைவனைத் துதிக்கின்றார். மேலும், "எந்தையுனைப் பாடிமகிழ்ந் தின்புறவே வைத்தருளிச் செந்தமிழின் வளர்க்கின்றாய்," என்று கூறித் தமிழ் நாட்டுச் சைவ, வைணவப் பெரியோர் தமிழிலேயே பாடவேண்டுமென உணர்த்து கின்றார்.

சமரச சன்மார்க்க நெறியையும், சீவகாருண்ய ஒழுக்கத்தையும் நாட்டு மக்களனைவருக்கும் உணர்த்தி அவர்களை அந்நெறிப்படுத்தி ஒழுகச் செய்ய வேண்டு மென விரும்பினார் வள்ளலார், இக்கருத் துக்களைக்கவிதையாக எழுதினால், அது எவ்வளவு தான் எளிமையாக இருப்பினும். எல்லோரும் படிக்க, அறிய இயலாது என்று கருதியே சீவகாருண்ய ஒழுக்கம், சமரச சன்மார்க்கநெறி முதலிய ஒழுக்க வழிகளை பாமரரும் புரிந்து கொள்ளும் எளிய உரை நடையில் எழுதியருளினார்.

"நடந்து நடந்து காலுஞ் சோர்ந்தது-கேட்டுக் கேட்டு வாயுஞ் சோர்ந்தது-நினைத்து நினைத்து மனமும் சோர்ந்தது இனி இப்பாவி வயிற்றுக்கு என்ன செய்வோம்? என்றெண்ணிக் கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே-ஜீவகாருண்யம்"

"பகற் போதும் போய் விட்டது-பசியும் வருத்துகின்றது-வேறிடங்களிற் போக வெட்கந்தடுக்கின்றது. வாய் திறந்து கேட்க மானம் வலிக்கின்றது-வயிறு எரிகின்றது உயிரை விடுதற்கும் உபாயந் தெரியவில்லை--இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்? என்று மனமும் முகமுஞ் சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல், உற்பாதச் சொப்பனங் கண்ட ஊமைபோல் மனம் மறுகுகின்ற மானிகளாகிய ஜீவகர்களுக்கு ஆகாரங் கொடுத்து மரணத்தைக் காப் பதுவே-ஜீவகாருண்யம்"

இதைப் படிக்கும் போதே கல்நெஞ்சும் கரைகிறது. உள்ளம் உருகுகிறது. கண் களில் நீர் சுரக்கிறது. காருண்ய உணர்வு நம்மை ஆட்கொள்கிறது.

குழந்தை இலக்கியங்கள் அண்மைக் காலமாகத் தான் வெளிவருவதாக நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இக் குழந்தை இலக்கியங்களுக்கு முதலில் வித்திட்டவர் இராமலிங்க அடிகள் என்று சொல்லலாம் காஞ்சிபுரம் சபாபதி முதலி யார் என்பார் அடிகளிடம் சிறுவர் சிறுமியர் படிப்பதற்கு ஏற்ற உரை நடை நூல் ஒன்றை இயற்றித் தரும்படி வேண்டினர். அதற்கிணங்க "மனுமுறை கண்ட வாசகம்" என்ற சிறந்த நூலினைச் செந் தமிழ்ச்சுவை நனிசொட்ட வள்ளலார் எழுதியுதவினர். "விதிவாதத்தை மதி வாதம் வெல்லும்" என்னும் உண்மையைப் புகட்டும் இந்நூல் இவரது தர்க்க அறிவினை யும், மொழிவளத்தினையும், பன்னூல் புலமையையும் காட்டுகின்றது.

மனுநீதி சோழ மன்னனின் 'ஒப்புயர் வில்லா அரசாட்சியிலே, பூவே பறிபடுவது;

புனலே சிறைபடுவது; காற்றே அலை படுவது; கல்லேகடின முடையது; மாவே வடுபடுவது; வாழையே குழைபடுவது; வண்டே மதுவுண்பது; பந்தே அடிபடுவது; பரியே கட்டுண்பது; மாதரிடையே குறை படுவது, தரித்திரமே தரித்திரப்படுவது; துக்கமே துக்கப்படுவது, பொய்யே பொய்படுவது." - என்று கூறும் போது உரை நடையைக் கவிதைத் தேனில் குழைத் தெடுக்கிறார் வள்ளலார்.

மனுநீதி மன்னன், பலகாலம் தவங் கிடந்து "அதிதியானவர் ஆதித்தனைப் பெற்றது போலவும், மல்லிகைக் கொடி மணமுள்ள மலரைப் பெற்றது போலவும்" பெற்றெடுத்த அருமைத் திருமகன் வீதி விடங்கன், திருவாரூர் தியாகராசப் பெரு மானை வழிபடுவதற்காக தேரில் தானைபுடை சூழ வீதிவலமாகச் செல்கிறான். அவனது தோற்றம் எப்படி இருக்கிறது ?

"வாசமுள்ள தயிலம்பூசி, மணமுள்ள மலர் மாலை சூழ்ந்து, வாழைப் பூவிதழ் போல வகிர்ந்து, குயில் முகம் போல் முடி யிட்டு, பளிங்குச் சிமிழ்க் குள்ளிருந்து தோன்றுகின்ற பருத்த நீலக்கல் போல் தாவள்யமான தலைச்சாத்துக் குள்ளிருந்து சிறுகத் தோன்றுகின்ற குடுமியும், பார்க் கின்றவரது பார்வைக்கு இன்பந் தருகின்ற தோற்றமும், மாருத மலர்ச்சியும், மனோரஞ் சிதமான அழகும், குளிர்ச்சியும் ஒளியும் பெற்றுச் செந்தாமரை மலர்போல் விளங்கும் முகமும், கருமை மிகுந்து செம்மை கலந்து காருண்யம் ததும்பி இங்கித மறிந்து சிறிதே இணைத்து மனோரம்மியமாய் மலர் போன்று நீண்ட கண்களும், ஒளி கொண்டு உயர்ந்து நீண்ட நாசியும், குண்டலமணிந்து நீண்டு அகன்ற செவியும், திரிபுண்டலந்தரித்து திலகந் தீட்டி, அழகு பெற்று அகன்று உயர்ந்த நெற்றியும், பவளம் போல் சிவந்துதிரண்ட உதடும், முல்லை அரும்பு கள் போலச் சிறுத்து நெருங்கிய ஒளி வீசும் பற்களும், குறுகிய வெண்மையாகச் சிவப் பேறிய நாவும் கண்டசரா முதலான ஆபர ணங்களை அணிந்து வளம்புரிச் சங்குபோல் திரண்ட கண்டமும் மத்தளம் போலத் திரண்டு, மந்தர மலைபோல் உயர்ந்து கண் டோர் கண்களையும் கட்டுகின்ற சுகுந்த மாலையணிந்த வெற்றியுள்ள தோளும், வீணைத் தண்டு போல நீண்டு தாழ்ந்து கடகமணிந்த கையும், தாமரை மலர்போல் சிவந்து மிருதுவாய் மழைபோற் சொர்ணம் பொழிகின்ற முன்கைகளும், விளக்க மிகுந்த பதக்க முதலானவை பணிந்து களபக்கஸ்தூரிகள் பூசிக் கண்ணாடிபோல் அகன்று மலைபோல உயர்ந்த மார்பும், சிறுத்துயர்ந்த வயிறும் ஆழ்ந்து அழகு பெற்ற உந்தியும், யானைத் துதிக்கை போன்று திரண்ட தொடையும், வாட்டந் தோன்ருது தசை கொண்டு செழிப்புள்ள முழங்காலும், திரண்டு நீண்ட கணைக் காலும், தாமரை மலர் போன்று வீரக் கண்டையணிந்த கால்களும், வரம்பு கட வாத வடப்பமுள்ள வடிவமுடைய இராச புத்திரன்" -என்று பாதாதி கேசம் வருணிக் கிறார் வள்ளலார். அம்மைந்தனின் எழில் கண்டு மையல் கொண்ட மங்கையர், "மணமுள்ள மலரை வண்டுகள் சூழ்ந்தது போலவும், இனிய சுவையுள்ள தேனை ஈக்கள் சுற்றியது போலவும் சூழ்ந்து கொண் டனர்." ஆடவர்களோ அந்த ஆணழகனை வாயாரப் போற்றுகின்றனர்.

"ஆ! ஆ!! இந்தப் புத்திரனே இராஜ புத்திரன். இவனுக்கு முன்மற்ற இராஜ புத்திரரெல்லாம் இராக்ஷச புத்திரரே! இவன் வடிவே வடிவு. இவன் வடிவுக்கு முன் மற்றவர் வடிவெல்லாம் மாவடிவே! இவன் கற்ற வித்தையே வித்தை. இவனுக்கு முன் மற்றவர் கற்ற வித்தையெல்லாம் மாயவித்தையே! இவன் குணமே குணம். இவனுக்கு முன்மற்றவர் குணமெல்லாம் வில்லின் குணமே! இவனே இளவரசு. இவனுக்கு முன் மற்ற இளவரசெல்லாம் பூவரசே! இவனே சீமான். இவனுக்கு முன்மற்றச் சீமான்களெல்லாம் கலைமான்களே! இவன் வீரமே வீரம். இவன் வீரத்துக்கு முன்மற்றவர் வீரமெல்லாம் சவ்வீரமே! இவன் யௌவனமே யௌவனம். இவன் யௌவனத்துக்கு முன் மற்றவர் யௌவனமெல்லாம் வெவ்வனமே! இவன் பாக்கியமே பாக்கியம். மற்றவர் பாக்கியமெல்லாம் நிர்ப்பாக்கியம்! இவனைப் பெற்றவரே பெற்றவர்; மற்றவரெல்லாம் பெண் பெற்றவர்!"

இளவரசன் வீதிவிடங்கனின் தேரில் அடிப்பட்டு பசுங்கன்று இறந்து பட்டதை மனுச் சோழன் அறிகிறான். தன் செங்கோலைப் பழித்துப் பலவாறு புலம்புகிறான்.

"சேங்கன்றைத் தெருவில் சிதைக்கவும் ஒருமித்திருந்த என் செங்கோலை, அளவு கோலென்பேனோ! அஞ்சனக் கோலென்பேனோ! எழுது கோலென்பேனோ! ஏற்றக்கோலென்பேனோ! கத்திரிக் கோலென்பேனோ! கன்னக்கோலென்பேனோ! குருடன் கோலென்பேனோ! கொடுங்கோலென்பேனோ! துடைப்பக்கோலென்பேனோ! துலாக்கோலென்பேனோ! மரக்கோலென்பேனோ! வைக்கோலென்பேனோ?"

இப்படிப் பரிதவித்து வருந்துகின்ற மனுச்சக்கரவர்த்தியிடம் அவனது அமைச்சர்கள் அணுகி, "அரசே இப்படித் துன்பப்படுவதை விடுத்து, உயிர்க்கொலை செய்ததற்காக, சாத்திரங்கள் கூறும் சாந்தியைச் செய்து விடுக!" என்று அறிவுரை கூறுகின்றனர். அது கேட்ட மனுமன்னன், அரசன் தவறு செய்தால்மனங்கலங்காமல் இடித்துக் கூறி நீதி உரைக்க வேண்டிய நீங்கள், "கரும்பு கசப்பென்றால் எட்டிக் காய்ப் போற் கசப்பென்றும், தாயைக் கொலை செய்வது தக்கதென்றால் வேதத்தின் முதற் காண்டத்தில் விதித்திருக்கிறதென்றும், வெள்ளத்திற் கல்மிதக்குமோ வென்றால் ஆற்றில் அம்மி மிதக்கக் கண்டோமென்றும், காக்கை வெளுப்பென்றால் நேற்றைப் பொழுதில் நிற்கக் கண்டோமென்றும், கல்லின் மேல் நெல்லு முளைக்கு மென்றால் கொத்நலாயிரங் குலையிலாயிரமென்றும், கள்ளனைப் பிடிக்கலாமோ வென்றால் பிடித்தால் பெரும் பாவமல்லவோ வென்றும், பொய் ஆயிர மட்டுஞ் சொல்லலாமோ வென்றால் ஐயா, ஐயாயிரமட்டுஞ் சொல்லலாமென்று விதியிருக்கிறதென்றும்...... சொல்லுகின்ற துர்மந்திரிகளைப் போல் நியாயம் பாராது நயிச்சிய வார்த்தைகளைச் சொன்னீர்கள்" என்கின்றான். ஆட்சியாளர்களின் செயல்களுக்கெல்லாம் 'ஆமாஞ்சாமி' போடாமல், தவறுகளைத் தயக்கமின்றிச் "சமுத்திரந்தடை மீறினும், மகமேரு நிலைகுலைந்தாலும் மனங் கலங்காது" கண்டிக்க வேண்டும் என்பதை இப்பகுதியில் இராமலிங்க அடிகள் வலியுறுத்துகிறார்.

வள்ளலார் தமது உரைநடையில் பழமொழிகளையும்உவமைகளையும் நிறையக் கையாள்கிறார். ஒரு கருத்தை விளக்கவும் வலியுறுத்தவும், ஒரே சமயத்தில் தொடர்ச்சியாகச் சரமாரியாகப் பல உவமைகளை அடுக்கிக் கொண்டே போவது அடிகளாரின் தனிப்பாணி.

தனக்கு மகன் பிறந்திருக்கிறான் என்ற செய்தியைப் பாங்கியர் மூலம் கேட்ட மனு மன்னன், "தூரதேசத்திற் போயிருந்த கப்பல் துறைமுகத்தில் வந்ததென்று சொல்லக் கேட்ட வர்த்தகனைப் போலவும், கூடிப் பிரிந்த மங்கையின் குரலோசையைக் கேட்ட நாயகனைப் போலவும், தாகங் கொண்டு தவிக்குங் காலத்தில் சமீபத்தே தண்ணீருண்டென்று சொல்லக்கேட்டதேச சஞ்சாரியைப் போலவும் மனங்குளிர்ந்து உடல் பூரித்து அளவிடப்படாத களிப்புடையவராய் பாங்கியருக்கு விலையுயர்ந்த பரிசுகளை வழங்கினார்."

'மனுமுறை கண்ட வாசகம்' சிறு நூலே என்றாலும் அதில் நூற்றுக்கும் மேற்பட்ட பழமொழிகளை அடிகளார் கையாண்டிருக்கிறார். காக்கையேறிப் பனம்பழம் விழுந்தது; இடியோசை கேட்ட நாகம்'

என்பன போன்ற அன்றாடம் பேச்சில் அடிபடும் பழமொழிகளை மட்டுமின்றி, பேயைத்தாயென்று பிள்ளை வரம் கேட்டானும்,' கொல்லை ஆட்டாட்டியைக் கூலி கேட்க வந்தானும்,' மலையை எடுத்துண்டு வயிறு நோகின்றவனுக்குச் சுக்கிடித்துக் கொடுத்தால் சொஸ்தப்படுமோ?''வாதியை மாத்திரம் வரவழைத்துக் கொண்டு நடுக் கொள்ளைக்காரன் நியாயந் தீர்த்தானும்' என்பன போன்ற தமது சொந்தப் பழமொழிகளையும் அவர் நூல் முழுவதிலும் கையாண்டிருக்கிறார்.

வள்ளலார் தமது சீடர்களுக்கும், அன்பர்களுக்கு எழுதிய கடிதங்களும் அவரது சிறந்த உரை நடைக்குச் சான்று பகர்கின்றன. அடிகளார் அன்பர் ஒருவர் தாம் இருமல் நோயால் வருந்துவதாக எழுதியிருந்தார். அவருக்கு எழுதிய கடிதத்தில் வள்ளலார் அந்நோய்க்கு மருந்தும், சிகிச்சை முறையையும் தெரிவித்திருக்கிறார்.

"முசுமுசுக்கை சமூலங் கொண்டு வந்து இருமலுக்குப் பசும்பாலில் ஊற வைத்து, உலர்த்தி, இடித்துச் சூரணமாக வைத்துக் கொண்டு, நித்தியம் காலையில் தேயிலைத் தண்ணீர் காய்ச்சிச் சாப்பிடுவது போல், ஜலத்தில்போட்டுச்சுண்ட வைத்துப் பசும்பாலில், சர்க்கரை மிளகுப்பொடி கலந்து கொஞ்சங் கொஞ்சமாகச் சாப்பிட்டு வரவேண்டும். இதைச் சுவாமிகளுக்குத் தெரிவித்துஅவாளைக்கொண்டு செய்வித்துச் சாப்பிட்டு வரவேண்டும். உத்தியோகம் தடையாயிருந்தால் அதை விடுத்து தேகத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள். தேகம் பக்குவமான பின்பு சிவானுக்கிரகத்தால் உத்தியோகம் சம்பாதித்துக் கொள்ளலாம்."

'ராயல் ஓட்டல்' வேலு முதலியார் என்பவர் இராமலிங்க சுவாமிகளுக்கு நெருங்கிய நண்பர். சுந்தரமுதலி. கந்த முதலி என்னும் இருவர் அவரை மோசத் செய்து பண இழப்பை உண்டு பண்ணினர். இதைப் பற்றி வருந்தி அடிகளார்க்கு வேலு முதலியார் எழுதினர். அவருக்கு வள்ளலார் எழுதிய ஆறுதல் கடிதம்.

'அன்பு அறிவு இரக்கம் ஈஸ்வர பக்தி முதலிய நற்குணங்களாற் சிறந்து, எனக்கு நற்றுணையாக விளங்கிய தங்கள் சமூகத்திற்கு வணக்கஞ் செய்து வரையும் விண்ணப்பம். தங்கள் சுபசரித்திர விவரங்களை அடிக்கடிக் கேட்டு மகிழ விருப்பமுள்ளவனாக இருக்கிறேன்......சுந்தரமுதலி, என்பவரும் கந்தமுதலி என்பவரும் பேரால் பெரியவர்களாகக் காண்கிறார்கள். இவர், தற்காலத்தில் செய்த மோசஞ் சிறிது துன்பஞ் செய்வது. ஆனால் இது பெரிதல்ல. இனி, உடனே தங்களுக்கு உண்டு பண்ணிய நஷ்டத்துக்கு ஈடாக இந்த இருவரும் மோசம் போய் நஷ்டப்பட-அதைக் கண்டு தங்களுக்கு நேரிடும் துன்பமே பெரிதாகக் காணுமென்று உண்மையைச் சொல்ல மாட்டுவேன். "மோசஞ் செய்வதவர் நாசமடைவார்கள்" என்கிற உலக வழக்கு வீண் போகாது..."

தம் சீடர்களிடம் வள்ளலார் எத்தகைய அன்பும், தாய்ப் பாசமும் கொண்டிருந்தார் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு இந்தக் கடிதம்.

"......அன்புள்ள என் கண்மணி போன்ற தாம் இனி இதனடியில் எழுதுகின்ற வண்ணம் செய்யப் பிரார்த்திக்கின்றேன். அதாவது, 'இந்தப் பாடல்கள் பங்கியில் அனுப்பி என்னிடம் சேருகின்ற பரியந்தம் நான் ஒரு வேளை போஜனந் தான் செய்வேன்' என்று எழுதியதைப் பார்த்த பின்பு, நான் சாப்பிடுகிற சாதம் உடம்பில் பொருந்த வில்லை. பட்டினி கிடந்தவனைப் போல் இருக்கின்றேன். ஆதலால், என்னை நிம்மதியுள்ளவனுக்க எண்ணங் கொண்டு ஒரு வேளை போஜனங் கொள்கிற நிபந்தனையை நீக்கி உடனே தபாலில் எனக்குத் தெரிவித்தால் அல்லது நான் சலிப்பைத் தவிறேன் இது சத்தியம். என்மேல் ஆணை."

அன்பர்கள் தன்னை 'சுவாமிகள்' என்று அழைத்ததை வள்ளலார் விரும்பியதில்லை. இதை அவர், "இராமலிங்க சுவாமியென்று வழங்கு விப்பது என் சம்மதமன்று. என்னை–ஆரவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்றுதலில்–இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும்" என்று ஒரு அன்பருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்விதமாக, தமிழ் உரைநடைக்கு வள்ளலார் பெருந் தொண்டாற்றினர். முக்கியமாக பத்தொன்பதாம் நூற்றுண்டில் உரைநடை வளம் பெறுக அவரது மனு முறை கண்ட வாசகமும், சமரச சன்மார்க்க சீவகாருண்ய ஒழுக்கநெறி விளக்கவுரைகளும் உறுதுணை செய்தன. ஆனல், தமிழ் உரைநடை வளர்ச்சி பற்றி ஆராயும் அறிஞர்கள் ஏனே வள்ளலாரின் உரைநடை நூல்களை ஒதுக்கியே வைத்திருக்கிருர்கள். ஏணிந்த ஓரவஞ்சம் என்பது புரியாத புதிராக இருக்கிறது. பள்ளிப் பாட நூல்களில் திருக்குறள் கட்டாயமாக இடம் பெறுவது போல், இனிமேல் உரைநடைப் பகுதியில் வள்ளலாரின் உரைநடைப் பகுதிகள் கட்டாயமாக இடம்பெற கல்வித் துறையினர் ஆவன செய்தல் வேண்டும்.




அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை



சன்மார்க்க சங்கங்களின் அங்கீகாரம் பெற்றதும் திருமுருக கிருபானந்தவாரி அவர்களால் திருத்தப்பட்டதும் பூசைக்குறிய உட்கார்ந்த சொரூபமான வள்ளலாரின் திரு உருவப் படம் பல வர்ணங்களால் தீட்டப்பட்டவை. நம்மிடம் கிடைக்கும்.

தனிப்படம்

| 20 × 14 | 14 × 10 |
|---|---|
| 1-00 | 0-25 |

மொத்தமாக ரூபாய் 50/-க்கு மேல் தேவைக்கு 100 க்கு 20% சதம் கழிவு உண்டு.

தேவைக்கு :-

**V. K. E. குமார் படம் வியாபாரம்**

**வேலூர் N. A.**



# நான் கண்ட வள்ளல்

தவத்திரு சாந்தானந்த அடிகள்

ஆனந்தாஸ்ரமம் சித்தூர்.

திருமிகு தெய்வத் தண்டமிழ் நாட்டில் தவப்பெருஞ் செல்வர்கள் பலர் திகழ்ந்து வாழ்ந்தார்கள். ஆயினும் அண்மையில் அவதரித்த அருட்பிரகாச வள்ளலைப் போல் அருண்ணெறியைப் போற்றி அவனிக் களித்த அருட்பெருஞ் செல்வரைப் போல் காண்பதரிது.

வந்தவர்கட்கிலையெனாது தந்துதவிய பொருள் வள்ளல்களைச் சரித்திர வாயிலாகச் சிலரைக் கண்டனம். ஆனால் தன்னை அடைந்தவர்களும், அடையாதவர்களும், அகில உலகமும் அருட்பெருஞ்செல்வத்தை அனைவரும் பெற்று, அகமகிழ்வுற்றோங்கு தலைக் காண அவாவுற்று, அல்லல் பட்டாற்றாது அழுங்கிய வள்ளலே நான் கண்ட வள்ளல்! இதற்கு அகச்சான்று கீழ்க் காணும் அருட்பாவேயாகும்.

"கள்ள வாதனையைக் களைந்து அருள்
நெறியைக்
காதலித் தொருமையிற் கலந்தே
உள்ளவாறிந்த உலகெலாங் களிப்புற்றோங்
குதலென்று வந்துறுமோ
வள்ளலே யது கண்டடியனே னுள்ளம்
மகிழ்தலென்றோ வெனத் துயர்ந்தேன்
ஒள்ளியோய் நினது திருவுள மறிந்தது
உரைப்பதென் அடிக்கடி யுனக்கே

என்று எல்லாம் வல்ல இறைவனிடத்து ஏங்கி முறையிட்டுக் கொண்டார்கள்.

" அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்
பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள."

எனவும்,

" நல்லாற் றானாடி அருளாள்க பல்லாற்றான்
தேரினு மஃதே துணை."

என்ற வள்ளுவர் வாய்மொழிக் கிணங்க அருட்பெருஞ் செல்வத்தைப் பெற்று, இருள் சேர்ந்த இன்னா வுலகம் புகாது, மருள் நெறியை மாய்த்து, மாண்புடன் வாழ்ந்து, மாமனிதனாகி, இன்புற்றியைதலைக் காண விழைந்தார்கள். எந்நாட்டினர்க்கும், எச் சமயத்தவர்க்கும், எக்காலத்தவர்க்கும் பொதுநெறியாக விளங்குவது அருள்நெறி யே யாகும். நீண்ட காலமாக நிலவிவரும் அருள்நெறி, மக்கள் அறியாமை காரண மாக மாசுபட்டழிவதைக் கண்ட வள்ளல் மனம் பொறாது, " சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்" எனும் பெயரால் பழம் பெரு நெறியை யோம்பினார்கள். அஃதும் தன்னை ஆட்கொண்ட தனி நடராசனது ஆணையால் வகுத்ததெனக் கூறுகின்றார் கள்.

" பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடு
மோர் பவநெறி
இதுவரை பரவிய திதனாற்
சென்னெறி யறிந்திலர் இறந்திறந்துலகோர்
செறியிருள் அடைந்
தனராதலின் இனிநீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி
யெனும் வான்
புத்த முதருள்கின்ற சுத்த சன்மார்க்கத்
தன்னெறி செலுத்துக வென்ற வென்னரசே!
தனி
நடராசவென் சற்குருமணியே"

எனச் சாற்றித் துதித்தார்கள்.

அதுமட்டுமல்ல, "சமரச சுத்த சன் மார்க்க சத்திய ஞானசபை" எனும் கோயிலையும் கண்டார்கள்; வழிபடும் முறை களையும் வகுத்தார்கள். வழிபாடாற்ற வரும் மக்கள் வயிறோம்பக் கூழ்சாலையெ னும், சமரச சுத்த சன்மார்க்கசத்திய தருமச் சாலையும் கட்டுவித்தார்கள். அவித்தை

யைப் போக்க வித்தியாதான வேதபாரா யணமும் விளங்க வைத்தார்கள். இன்னும் எத்துணையோ வகைகளில் ஆருயிர்கட்கு அன்புகாட்டி அருள்பெறும் நிலையை அகல் ஞாலம் போற்ற ஆக்குவித்து அருட்பிரகாச வள்ளலாய் நம் அகத்தமர்ந்த தன்மையை என்னென்போம். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது திருமூல ரருளிய திருமந்திரமே யாகும். அருளாளர் களது ஆழ்ந்த திருவுள்ளமும் அதுவே. தான்பெற்ற அருட்பேற்றினைத் தமதுகமாய் விளங்கும் திருவருட் பாவென்னும் அழகியபா மலர்களைக் கொண்ட பனுவலில் காணலாம் ஒருவரது உள்ளத்தை உணர்த்துவது அவர் களது அருள் மொழியேயாகும். திருவள்ளு வரை உணர அவரருளிய திருக்குறளே சான்று. எல்லாம் வல்ல ஆண்டவன் அருட்டிறத்தைத் தேனென இனிக்கும் தீந் தமிழில் எவர்க்கும் விளங்கும் எளிய நடை யில் எவரே பாடினுர்கள்.

"நானுரைக்கும் வார்த்தை யெலாம் நாயகன் சொல் வார்த்தை
யன்றி நானுரைக்கும் வார்த்தை யன்று
நாட்டீர் நானேனுரைப்பேன் நானு ரெனக் கென ஓர்ஞான
உணர்வேது சிவம் உளனுடி நில்லாவுழி"

என்ற

திருப்பாடலை நோக்கின் ஜீவபோத மழிந்து, சிவனுடைமையாய், சிவமாய் விளங்கிப் பொங்கிய அருள் வெள்ளமே அருட்பாவாகும்.

"ஏனுரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத் தேன் கண்டீர்
யானடையும் சுகத்தினை நீர்தான் அடைதல் குறித்தே"

என்று உளம்கனிந்து வாய்மலர்ந்த உண்மையை உன்னுங்கால் நம்மை நாம் அறியோமன்றோ.

அருட்பெருஞ் செல்வத்தால் தாம டைந்த பெரும் பேற்றை ஆங்காங்கு அள விலா தெடுத்துரைத்தார்கள். நம்மையும் அறைகூவி அழைத்தார்கள்.

தூக்கமுந் துயரு மச்சமு மிடருந் தொலைந்தன தொலைந்தனவென
விட்டேக்கமும் வினையு மாயையும் இருளுமிரிந்தன
வொழிந்தன முழுது மார்க்கமு மருளு மறிவு மெய்யன்பு
மழிவுரு வுடம்பு மெய்யின்ப வூக்கமு மெனையே யுற்றன
வுலகீ ருண்மையிவ் வாசக முணர்மின்"
என்றுரைத்து

அவ்வுயர் நிலையை உலகமடைய கசிந்து கண்ணீர் மல்கி அருட்பெருஞ்சோதி தனிப் பெருங்கருணையெனும் மகாமந்திரத்தை மாநிலம் போற்ற மாதவமாற்றித் தந்தருளிய மாண்பினை மக்களாயின் நாம் மறத்தல் கூடுமோ!

தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ் சோதி ஆண்டவனது திருவருட் பேறும் பெற்றுப் பேரின்ப சித்திப் பெருவாழ்வை பெற்றதற்கு அடிப்படையாகக் கொண்ட முதல்வழி ஆண்டவனிடத்துக் கொண்ட அளவிலாப் பற்றேயாகும்.

"உன்னை மறந்திடுவேனே மறப்பறியேன் மறந்தால் உயிர்
விடுவேன் கணந்தரியேன் உன்னுணை யிது நீ என்னை
மறந்திடுவாயெனில் யானென்ன செய்வேன் எங்குறுவேன்
எவர்க்குரைப்பேன் எந்தாய் அன்னையினுந் தயவுடையாய் நீ
மறந்தாயெனினும் அகிலமெலா மளித்திடும் நின் அருள்
மறவாதென்றே இன்னுமிகக் களித்திங்கே யிருக்கின்றேன்
மறவேல் இதுதருணம் அருட்சோதியெனக்கு விரைந்தருளே"

என்ற உறுதி மொழிப் பாடலை நோக்கின் உண்மை விளங்கும்.

மக்களது உடம்பில் உலாவும் உயிரானது தெய்வீக மணத்தொடு கமழ வேண்டுமென்பதே வள்ளலது வாய்மொழி யாகும். ஒரு சிறிது நீங்கப் பெறுமானுல் உடல் போர்வை கொண்ட நடைப்பிணமே எனலாம். மற்றோரிடத்தில் "உன்னை மறக்கில் எந்தாய் உயிரென்னுடம்பில் வாழுமோ" என்று கசிந்து உருகுகிருர்கள்.

"அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்பு தோல் போர்த்த வுடம்பு"

என்று வள்ளுவர் வாய்மலர்ந்ததையும், "என்னுயிர்தான் உயிரிரக்கந்தான் ஒன்றதே இரண்டிலை இரக்க மொருவில்

என்னுயிரும் ஒருவும் என் உள்ளத் தொருவனே நின்பதத்தாணை'' என்ற வள்ளலார் திருவுள்ளத்தையும் நோக்கின் மனிதவுடம்பிலுள்ள உயிர் தெய்வத் திறத் தோடும், அன்பிரக்கத்தோடும் அளவளாவி ஆண்டவனது அருண்மேனியாக விளங்க வேண்டுமென்பதே.

ஆண்டவன், அன்பு, இரக்கம் தயை என்பன வெல்லாம் ஒன்றே. ''தேர் விலாச் சிறிய பருவத்திற்றுனே தெய்வமே தெய்வமே'' என்ற அரும்பாடலின் முறை யீட்டை நோக்கின் இளமையில் ஏங்கிய ஏக்கம் எவர்க்கும் விளங்கும். காதலாகிக் கசிந்துகண்ணீர்மல்கி முறையிட்டவர்களது குறை பாடுகளைத் தீர்க்க வல்லவனன்றோ ஆண்டவன். ஞானசபைத் தலைவனுக்கு நல்ல பிள்ளை நானேயென்று கூறியதற் கிணங்க ஆண்டவனது அருட்குழந்தை யாகவே வளர்ந்தார்கள். அருளமுதம் உண்டு அருள் வாழ்க்கையில் அகத்தும், புறத்தும் தனக்கான யாவும், தான் பெற் றனவும் எல்லாம் தனிப்பெருங்கருணை ஆண்டவனுக்கே யாக்கி வாழ்க்கை ஒழுக்கமே கடவுள் வழிபாடெனக் காட்டி எந்தையாம் இறைவனை தந்தையெனக் கொண்டு ''யானுனக்கு மகனலனோ! நீ யெனக்கு வாய்த்த தந்தை அலவோ! எனச்சொந்தம்பாராட்டி, தந்தை வாழ்க்கை வேறு, தனயன் வாழ்க்கை வேறென்பதை தகர்த்து, ''தந்தை தன்மையே தனயன் தன் தன்மையென்று சாற்றுதல் சத்தியம் கண்டீர்''என்றஅருட்பாடலில் என்னப்பன் றன்மை என்றன்மையென்று

அறியுங்களென அறிவுறுத்தி ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையை உணர்த்தி,

> ''அருட்சோதி யானனென் றறையப்பா முரசு
> அருளாட்சி பெற்றேனென் றறையப்பா முரசு
> மருட்சார்பு தீர்ந்தேனென் றறையப்பா முரசு
> மரணந் தவிர்ந்தேனென் றறையப்பா முரசு''

என்று வெற்றி முரசு முழக்கி, மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்று,

> ''வையகத்தீர், வானகத்தீர், மற்ற கத்தீர் நுமது வாழ்க்கையெலாம் வாழ்க்கையென மதித்து மயங்காதீர் மையகத்தேயுறும்மரண வாதனையைத் தவிர்த்த வாழ்க்கையதே வாழ்க்கை யென மதித்திடுமின்''

என்று மண்ணுலகோர் அன்றி விண்ணுல கோர்கும் வியந்தோதி, நித்திய வாழ்வைப் பெறுதற்கெனவே சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தை நிறுவி,

> ''உற்றமொழி யுரைக்கின்றேன் ஒருமை யினுலுமக்கே
> உறவனன்றிப் பகைவனென வுன்னதீ ருலகீர்
> கற்றவருங் கல்லாரு மழிந்திடக் காண்கின்றீர்
> கரணமெலாங் கலங்கவரு மரணமுஞ் சம்மதமோ
> சற்றுமிதைச் சம்மதியாதென் ''னந்தானுமது தன் மனந்தான் கன்மனமோ வன் மனமோ அறியேன்
> இற்றிதனைத் தடுத்திடலா மென்னோடு சேர்ந்திடுமின்
> என் மார்க்க மிறப்பொழிக்கும் சன்மார்க்கம் தானே''

எனக்கூறி என்னோடு சேர்ந்திடுமின் என்று நம்மையும் அழைத்த வள்ளலே நான் கண்ட வள்ளல்.

நான் அறிவு சிறிது பெற்றதும்; திருவருட்பாவை வழிபடும் நூலாகக் கொண்டனன், கொண்டுள்ளேன். வள்ள லார் மரபெனவே மதித்து, வாயாரப் போற்றி மகிழ்கின்றேன், இப்பேரவா காரணமாகவே என் புன்மொழிகளோடு எமை வாழ்விக்க வந்த வள்ளலாரது நன்மணிகளை—திருவருட்பாவெனும் பெருங் கருணைக் கடலல் ஒரு சிலவற்றை—யெடுத்து சிறுகட்டுரையாகததொகுத்துத் தொரப்பாடி சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தவர்கள், எமதாருயிரன்பர்கள் ஆர்வத்தோடாற்றும் சமரச சுத்த சன்மார்க்க சங்க நூற்றுண்டு நிறைவு விழா அகமகிழ் அருள் மண மலர்க்கு அன்புகாணிக்கையாக அற்பணிக் கின்றனன். எல்லாம் வல்ல இறைவனருள் கூடுக.

# சைவசமய குரவரும் இராமலிங்க அடிகளும்



பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் M.A.,
தமிழ்த்துறைத் தலைவர் கிருத்துவக் கல்லூரி, தாம்பரம்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனுர், மாணிக்க வாசகர் என்ற சைவசமய குரவர் நால்வரையும் இராமலிங்க அடிகள் தமது ஞானசிரியர் களாகக் கொண்டார் என்பது அவரது திருப்பாடல்களால் அறியலாகும் உண்மை யாகும். அடிகளார் பாடியருளிய ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை, ஆளுடைய அரசு அருண்மாலை, ஆளுடைய நம்பிகள் அருண்மாலை, ஆளுடைய அடிகள் அருண்மாலை என்ற நான்கு பதிகங் களும் அடிகளார் சமயகுரவர் நால்வர் மீது கொண்டுள்ள அன்பினை எடுத்துக் காட்டும் சான்றுகளாக அமைந்துள்ளன. தேவார திருவாசகப் பாடல்களை அடிகளார் அன்போடு கற்று அப்பாக்களில் திளைத்து விளங்கினுர் என்பது புலனுகும்.

"முன்னோர் மொழிபொருளேயன்றி அவர்
மொழியும்
பொன்னே போற் போற்றுவ மென்பதற்கு"

ஏற்ப, அடிகளார் நால்வரின் வாக்கையும் போக்கையும் தழுவியுள்ளார். தேவார திருவாசகங்களின் கருத்துக்களையும் அவை களில் பயின்றுள்ள அரிய சொற்களையும் அடிகளாரின் பாடல்களிலும் காணலாம். அவற்றுள் சிலவற்றை இனி ஆராய்வோம்.

திருவாவடுதுறையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமானைத் திருநாவுக்கரசர் பாடியருளிய திருத்தாண்டகத்தினை முதற்கண் நோக்கு வோம்.

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே"

இத்திருப்பாடலில் திருநாவுக்கரசர் தம்மை வல்வினைநோய் அடையாவண்ணம் காக்க வேண்டும் என்று இறைவனை வேண்டு கின்றுர். ஈண்டுத் திருநாவுக்கரசர் இறை வனைப் போற்றும் முறை படித்து இன்புறத் தக்கதாகும். திருநாவுக்கரசர் இறைவனைத் திருவே என்றும் செல்வமே என்றும், தேனே வானோர் செழுஞ்சுடரே, சோதி மிக்க உருவே என்றும் என் உறவே, என் ஊனே, ஊனின் உள்ளமே உள்ளத்தி லுள்ள கருவே என்றும், கற்பகமே, கண்ணே, கண்ணிற் கருமணியே, அமரர் ஏறே என்றும் பாடி, சிவபெரு மானின் அரிய பண்புகளை எடுத்துக் கூறு கின்றுர். இறைவன் திருவருளான் நாம் புண்ணியம் பெறுதலின் "திருவே" என்றுர். இறைவன் எல்லா இன்பங்களை யும் நமக்கு அளித்தலால் "செல்வமே" என்றுர், திருஞான சம்பந்தப் பெரு மானுக்குச் சிவபெருமான் திருவாவடு துறையில் ஆயிரம் பொன் அளித்திருப்ப தால் 'செல்வமே' எனக் கூறுதல் பொருந்துவதாகும்.

"கழுமல ஊரர்க்கு அம்பொன் ஆயிரம்
கொடுப்பர் போலும்
ஆவடுதுறையனுரே" எனத் திருநாவுக்கரசர்
திருநேரிசையில்

கூறுவது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. அடியவர் உள்ளத்தில் இறைவன் எப்போதும் தித்தித்தலின் 'தேனே' என்றுர். தேவர்களுக்கு அரிய ஆற்றலை அளித்துக் காத்தலின் 'வானோர் செழுஞ் சுடரே" என்றுர். அடியவர் திருவுள்ளத்

தில் அவர் நினைத்தவண்ணம் உண்மை வடிவில் தோன்றுதலின் "நற்சோதி மிக்க உருவே" என்றார்.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

என்ற திருக்குறளுக்கு உரை எழுதப் போந்த பரிமேலழகர் அன்பான் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேரலின் "மலர்மிசை ஏகினான்" எனக் கூறியது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. அடியவர்களின் கருத்து அறிந்து அவருக்குத் திருவருள் புரிதலின் 'உறவே' என்றார். அவன் அருளால் உடலையும் உள்ளத் தினையும் பெற்றதால் "என் ஊனே, ஊனின் உள்ளமே" என்றார். நமது உள்ளத்திலிருந்து பல உணர்வுகளைத் தோற்றுவித்து அந்த உணர்வுகளுக்கு இறைவன் வித்தாக அமைதலின் "உள்ளத்தினுள்ளே நின்ற கருவே" என்றார். அடியவர் வேண்டிய பொருள்களை அவர் வேண்டியாங்குத் தருதலால் "கற்பகமே" என்றார். இறைவன் சிறந்த பொருளாக இருத்தலின் "கண்ணே கண்ணிற் கருமணியே" என்றார். இறைவன் தேவர்களுக்கெல்லாம் தலைவனாதலின் "அமரர் ஏறே" என்றார். இத்திருப்பாடலில் அப்பர் சுவாமிகள் சிவபெருமானது அரிய பண்புகளை எல்லாம் எடுத்துக் கூறித் தமது கொடிய வினைகளைப் போக்கியருள வேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றார்.

திருநாவுக்கரசர் சிவபெருமானைத் தமது ஞானசிரியராகக் கொண்டு அவரைப் போற்றியது போல் இராமலிங்க அடிகளாரும் திருஞான சம்பந்தப் பெருமானைத் தமது ஞானசிரியராகக் கொண்டு போற்றியுள்ளார் என்பதைக் கீழ்க்காணும் பாடல் விளக்குதல் காண்க.

"சீரார் சண்பைக் கவுணியர்தந் தெய்வ மரபிற் றிகழ்விளக்கே
தெவிட்டா துளத்தில் தித்திக்கும் தேனே பழியாச் செல்வமே
காரார் மிடற்றுப் பவளமலைக் கண்ணின் முளைத்த கற்பகமே
கரும்பே கனியே யென்னிரண்டு கண்ணே கண்ணிற் கருமணியே
ஏரார் பருவ மூன்றிலுமை யினிய முலைப்பா லெடுத்தூட்டும்
இன்பக் குதலை மொழிக்குருந்தே யென்னு ருயிருக் கொருதுணையே
பேரார் ஞான சம்பந்தப் பெருமா னேநின் றிருப்புகழைப்
பேசு கின்றோர் மேன்மேலும் பெருஞ்செல் வத்திற் பிறங்குவரே"

(ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை)

முன்பு காட்டியுள்ள திருத்தாண்டகத்தில் வந்துள்ள செல்வமே 'தேனே' செழுஞ் சுடரே, கற்பகமே, கண்ணே கண்ணிற் கருமணியே என்ற தொடர்களை அடிகளார் தாம்திருஞானசம்பந்தரைப் போற்றியுள்ள, திருப்பாடலில்விளக்கே, தேனே, கற்பகமே கண்ணே, கண்ணிற் கருமணியே என அமைந்துப் பாடியிருத்தலைக் காண்க. திருஞான சம்பந்தர் சீர்காழியில் கவுணியர் கோத்திரத்தில் திருவவதாரம் செய்தமையால் "கவுணியர்தந் திருவிளக்கு" என்றார். தேனே என்பதற்கு அடிகளே பொருள் விளக்கியுள்ளார். இறைவன் அடியார் உள்ளத்தில் தித்திப்பதால் தேனே என்றார். திருஞான சம்பந்தர் முருகப் பெருமானின் திருவவதாரம் என்பர். எனவே அடிகளார், திருநீலகண்டத்தினையும் செம்மேனியையும் உடைய சிவபெருமானின் திருக்குமாரர் திருஞானசம்பந்தர் எனக்கூற வந்தவர் "காரார் மிடற்றுப் பவளமலைக் கண்ணின் முளைத்த கற்பகமே" என்றார். நினைக்குந் தோறும் நினைக்குந்தோறும் சிறந்து விளங்குவதால் "கண்ணே கண்ணிற் கருமணியே" என்றார். திருஞான சம்பந்தர் தமது திருப்பாடல்களால் மக்களுக்கு அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானம் தந்தருளுவதால் "என் ஆருயிர்க்கு ஒரு துணையே" என்றார். இதே கருத்தினைக் கொண்டு திருநாவுக்கரசர் இறைவனைப் பாடும்போது "என் உறவே" எனப் பாராட்டினார்.

இராமலிங்க அடிகளார் திருநாவுக்கரசரைத் தம் குருவாகக் கொண்டார் என்பது கீழ்க்காணும் பாடலால் விளங்கும்.

"தேர்ந்தவுளத் திடைமிகவுந் தித்தித் தூறுஞ் செழுந்தேனே சொல்லரசாந் தேவே யெம்மை
சார்ந்துதிகழ் அப்பூதி யடிகட் கின்பந் தந்தபெருந் தகையேயெந் தந்தை யேயுட்
கூர்ந்தமதி நிறைவேயென் குருவே யெங்கள் குலதெய்வ மேசைவக் கொழுந்தே துன்பந்
தீர்ந்தபெரு நெறித்துணையே யொப்பி லாத செல்வமே யப்பனெனத் திகழ்கின் றோனே"

(ஆளுடைய அடிகள் அருண்மாலை)

இத்திருப்பாடலில் அடிகள் திருநாவுக்கரசனைத் தேனே என்றும் தேவே என்றும், பெருந்தகையே, தந்தையே, குருவே, குலதெய்வமே, சைவக் கொழுந்தே, செல்வமே என்றும் பாராட்டி அவர் நமக்கெல்லாம் 'அப்பனுக'த் திகழ்கின்ருர் என்பதையும் குறிப்பிட்டுள்ளார். எனவே அடிகளார் திருநாவுக்கரசரைத் தமது தந்தையாகவும் தேவனுகவும் குருவாகவும் கருதினுர் என்பது பெறப்படுகின்றது.

சிவபெருமான் சுந்தரர் திருப்பாட்டில் மிகவும் விருப்பம் கொண்டவர் என்பதை அடிகளார் சுட்டியுள்ளார்.

இன்பாட்டுத் தொழிற்பொதுவி லியற்றுகின்ற
வெம்பெருமான்
உன்பாட்டுக் குவப்புறல்போ லூர்பாட்டுக்
குவந்திலரென்று
என்பாட்டுக் கிசைப்பினுமென் னிடும்பாட்டுக்
கரணமெலாம்
அன்பாட்டுக் கிசைவதுகா ணருட்பாட்டுப்
பெருந்தகையே''
(ஆளுடைய நம்பிகள் அருண்மாலை)

சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருப்பாட்டில் மிகவும் விருப்பம் கொண்டவர் என்பதைத் தாம் அறிந்து கொண்டதாகச் சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான் மணிமாலையில் கூறியுள்ளார். சுந்தரர் திருப்பாட்டில் மிக்க விருப்பம் கொண்ட சிவபெருமான் சுந்தரரைத் தடுத்தாட் கொண்டது மன்றி அவருக்காகப் பரவையாரிடம் இருமுறை தூது சென்ருர். அன்றியும் அவர் திருக்கச்சூர் என்ற ஊரில் தாம் பிச்சை எடுத்துச் சுந்தரருக்குச் சோறு போட்டார். இதனுல் சுந்தரரின் திருப்பாட்டில் சிவபெருமானுக்கு மிக்க அன்பு உண்டு என்பதைத் தாம் தெரிந்து கொண்டதாகக் கூறுகின்ருர். சிவப்பிரகாச சுவாமிகள், அதனைக்கீழ்வரும்திருப்பாடலில் காண்க.

படியிலா நின்பாட்டி லாரூர நனிவிருப்பன் பரம
னென்பது
அடியனே னறிந்தனன்வான் றொழுமீச னிணைத்
தடுத்தாட் கொண்டு மன்றித்
தொடியுலா மென்கைமட மாதர்பா னினக்காகத்
தூது சென்று
மிடியிலா மனைகடொறுமிரந்திட்டுமுழன்றமையால்
விளங்கு மாறே.
(நால்வர் நான்மணிமாலை)

இராமலிங்க அடிகளார் மாணிக்க வாசகரையும் தமது ஞானசிரியராகக் கொண்டார். மாணிக்க வாசகரின் திருவாசகத்திலுள்ள ஒரு மொழியே இராமலிங்க அடிகளை இறைவனிடம் சேர்ப்பிக்கும் என்றும் ஆதலால் தமக்கு இனிக் கவலையில்லை யென்றும் அடிகள் கீழ்க் காணும் திருப்பாடலில் பாடியது, படித்து இன்புறுதற்குரியதாகும்.

வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே யென்னையுமென் னுடையனையு
மொன்றுவித்துத்
தருமொழியா மென்னிலினிச் சாதகமேன்
சஞ்சலமேன்
குருமொழியை விரும்பியயல் கூடுவதேன்
கூறுதியே
(ஆளுடைய அடிகள் அருண்மாலை)

இதுகாறும் கூறியவற்ருல் இராமலிங்க அடிகள் சைவ சமய குரவர் நால்வரையும் தமது ஞானசிரியராகக் கொண்டார் என்பது சுருக்கமாக விளக்கப்பட்டது. நாம் இராமலிங்க அடிகளின் பாடல்களைப்பாடுவதோடு நின்றுவிடாமல் அவர் குருவாகக் கொண்ட சைவ சமய குரவர் நால்வர்களின் திருப்பாடல்களையும் படித்து அவைகளில் திளைத்துப் பயன் பெறுவோமாக. இறைவன் திருவருள் கூட்டுவதாக.

*With best compliments of*

**Phone No. 353**

**GHANI & SONS**

HARDWARE & PAINT MERCHANTS

AMBUR, N.A. Dt.

வள்ளல் பெருமான் வகுத்து தந்த

சமரச சுத்த சன்மார்க்க சங்க

100 ஆண்டு விழாவில் கலந்து கொள்ளும்

அனைவர்கட்கும் எங்கள் நல் வாழ்த்துக்கள்.

# திரு முருகன் மரக்கடை

சுவால்பேட்டை

அரக்கோணம்

த. பஞ்சாட்ச்சரம்

உரிமையாளர்.

அருட் பெருஞ்சோதி                                    அருட் பெருஞ்சோதி

தனிப் பெருங்கருணை                                    அருட் பெருஞ்சோதி

வேலூர் தாலுக்கா தொரப்பாடி வழி, அரியூர் போஸ்டு.

# குப்பம் அருட்ஜோதி நிலையம்

## (சிறுவர்களுக்கு) சன்மார்க்க குருகுலம்.

## 1. கட்டிடங்களின் விவரம்

1. அருட் ஜோதிக் கல்வி நிலையம்

என்ற கட்டிடம் 3 ஆசிரியர்களுக்கும் 100 பிள்ளைகளுக்கும் போதுமான 40' X 20' அளவில் மங்களூர் ஒடு போட்ட பக்கா கட்டிடம் கட்டி இதில் 10-10-64 முதல் ஜோதி அமைக்கப்பட்டு வழிபாடு நடந்து வந்தது. பிறகு எதிரில், கட்டப்பட்டு வரும் அருட் ஜோதி நிலையத்தில் 21-9-65 தேதி ஜோதியை நிரந்தரமாக மாற்றி அமைக்கப்பட்ட பின்னர் இதில் 13-10-65 முதல் ப. பூ. பள்ளி இயங்கி வருகிறது. இதைச் சார்ந்தாப் போல் ஒரு குளிக்கும் அறையும், தோட்டமும், கக்கசும் எதிர் புறத்தில் 27' X 58' கொண்ட விளையாடுமிடமும் உண்டு. இதில் 14' X 14' அளவில் ஒரு வெளியரங்கு மேடையும் அமைக்கப்படும்.

2. அருட் ஜோதி நிலையம்.

மேற் கண்ட பள்ளிக் கட்டிடத்திற் கெதிரில் விளையாடுமிடத்தைச் சேர்ந்தாப் போல் 12' X $7\frac{1}{2}$' அளவில் 3 அறைகளும் 40' X 18' கொண்ட கூடமும் உடையது. சேர்ந் தாப் போல் ஒரு சமையலறையும், ஒரு குளிக்கும் அறையும் ஒரு கக்கசும் கட்டப்பட்டு வருகிறது. தோட்டத்திற்கும் சிறிது இடமுண்டு. இதில் ஒரு கிணறும் வெட்டப் பட்டுள்ளது. தேவைப்படும் போது கூடத்தில் ஒரு பகுதி 4-ம் ஆசிரியருக்குப் பயன்படு மாறும் அமைக்கப்பட்டுள்ளது. இவை முழுதும் காம்பவுண்டு சுவர்களால் மூடப் பட்டுள்ளது.

3. அருட் ஜோதி நிலையத்தின் மத்திய அறையில் 21-9-65 முதல் ஜோதி அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் ஜோதி பிரகாசித்து வர, பூஜை பாராயணம் நடந்து வருகிறது. இதற் கெதிரிலுள்ள கூடத்தின் மத்திய பகுதியில் பிள்ளைகள் உட்கார்ந்து வழிபாடு செய்யவும் பாராயணம் செய்யவும் சன்மார்க்கப் பயிற்சி பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4. அருட் ஜோதி நிலையத்தில் தற்சமயம் ஜோதி அறை மட்டும் முற்றிலும் கட்டி முடிந் துள்ளது. மற்றவை யெல்லாம் பொருட் குறைவால் ஒவ்வொன்றும் அரை குறையா யுள்ளன. விரைவில் முடிவு பெற ஆண்டவர் அருள் புரியுமாறு இறைஞ்சுகிறோம்.

5. இந்நிலையமானது, சிறுவர்களுக்கு மட்டுமன்றி பெரியோர்களும் எந்த நேரத்திலும் திரைக் குள் கண்ணாடி விளக்கில் பிரகாசிக்கும், ஜோதியை திரை நீக்காமலும் கம்பிக்கதவை திறக்காமலும், ஜோதி வணக்கம் செய்யுமாறு வசதி அளிக்கப்பட்டுள்ளது.

அங்கு வருபவர்கள் கால் கை, சுத்தம் செய்து கொள்ள தண்ணீரும், அருந்த குடித் தண்ணீரும், அணிவதற்கு திருநீறும் பாராயணம் செய்ய அருட்பா புத்தகங்களும், வழி பாட்டு கூடத்திலும் வெளியறையிலும் வைக்கப்பட்டுள்ளன.

## II. பயிற்சி விவரம்

### A. தினசரி வழிபாடும் பயிசியும்

i. காலை.

1. வீடுகளில் படிப்பதற்கு விளக்கு வசதியும், படுக்க இடவசதியுமில்லாத பிள்ளைகள், இரவில் பள்ளிக்கட்டிடத்திலும் அருட் ஜோதி நிலையக் கூடத்தின் ஒரு பகுதியிலும் தங்கி வாசித்து விட்டுப் படுத்துக் கொள்ளலாம். இந்த பிள்ளைகள் காலையில் 5 மணிக்கு எழுந்து கால் கை முகங்கழுவிக் கொண்டு ஜோதியின் முன் திருப்பள்ளியெழுச்சி பாடி தியானம் செய்யப் பழக்கப்படும். வீடுகளில் படுக்கும் சில பிள்ளைகளும் இவர்களுடன் வந்து கலந்து கொள்ளுகிறார்கள்.

2. பிறகு வீடுகளுக்கும் நிலங்களுக்கும் போய் பெற்றோர்களுடைய வேலைகளில் கலந்து உதவி செய்துவிட்டு வரும் சில பிள்ளைகளும் இங்கேயே குளிக்கவும் துணிகளை துவைக்கவும் உலர்த்திக் கொள்ளவும் பழக்கப்படும். இதற்கு துணி வசதியில்லாதவர்களுக்கு துணிகளும் வழங்கப்படும்

3. இவ்வாறு காலைக் கடன்களை வீடுகளில் செவ்வனே முடித்து வந்த பிள்ளைகளும் இவர்களும் கலந்து திருநீறணிந்து கொண்டு சுமார் அரைமணி நேரம் திருவடிப்புகழ்ச்சி பாடி அருட்பா பாராயணமும் செய்து தியானம் பழகி 7மணிக்குள் வீடுகளுக்குப் போய் உணவு உண்டு பள்ளி நேரமான 9 மணிக்குப் பள்ளிக்கு வருகிறார்கள். இவ்வூரிலுள்ள அரியூர் உயர் தர ஆரம்பப் பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் அங்கு செல்லுகிறார்கள்.

4. பிறகு பள்ளி முறைப்படி ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடல்களை அனைவரும் கலந்து பாடிய பின் பள்ளி வேலை ஆரம்பமாகிறது.

5. மேற்கண்ட பயிற்சியாவும் அருட் ஜோதி நிலையத்தில் சன்மார்க்கப்பற்றுள்ள தாயன்புடைய சிலரைக் கொண்டு அளிக்கப்பட்டு வருகிறது

2. இடை வேளை.

6. மத்தியானம் பள்ளி விட்டதும், சன்மார்க்க ஒழுக்கப் பயிற்சி பெறும் பிள்ளைகள், கால் முகங்கழுவிக் கொண்டு திருநீறணிந்து கடவுள் வணக்கம் செய்தபின் வீடுகளுக்குப் போய் உணவு அருந்தி திரும்பி வந்து, பள்ளி நேரத்தில் பள்ளியிலளிக்கப்படும் கல்விப் பயிற்சியைப் பெறுகிறார்கள். ஏழைப்பிள்ளைகள் பள்ளிலயிளிக்கப்படும் இடைவேளை உணவை உண்டு, இங்கேயே தங்கி ஓய்வெடுத்து பள்ளி நேரத்தில் மற்றவர்களுடன் கலந்து கொள்ளுகிறார்கள்.

3. மாலை.

7. மாலை பள்ளி விட்டதும், சிலர் விளையாடவும், சிலர் வீடுகளுக்கும், நிலங்களுக்கும் போகவும் பிரிந்து பெற்றோர்களுக்கு உதவி புரிந்து, தாங்களும் சிறிதளவு வீட்டு வேலைகளிலும். பயிர் வேலைகளிலும், தோட்ட வேலைகளிலும் பயிற்சி பெற்று பயனடைகிறார்கள்.

8. பிறகு 6 மணிக்கு நிலையத்துக்கு வந்து அரை மணி நேரம் ஜோதி வழிபாடும் பாராயணமும் தியானமும் செய்து விட்டு வீடுகளுக்குப் போய் பாடங்களைப் படித்துவிட்டு உணவு அருந்தி உறங்குகிறார்கள் .சிலர் நிலையத்தில் வந்து உறங்குகிறார்கள்.

## B. வார வழிபாடும் பயிற்சியும்

1. புதன்கிழமை மாலை 6 – 7 மணிவரை ஒரு மணி நேரம் அருட்பா வாசிக்கவும் கீர்த்தனைகள் பாடவும் பயிற்சி தரப்பட்டு வருகிறது. அப்போது இடையிடையே சில விளக்க உரைகளும் அறஉரைகளும் வழங்கப்படுகின்றன.

2. வியாழக்கிழமை காலை 5 மணிக்கு வழக்கப்படி நடைபெறும் தினசரி வழிபாட்டுடன் மௌனத் தியானம் பழகவும் அகவல் பாராயணம் செய்யவும் பயிற்சி யளிக்கப்படுகின்றன

3. ஞாயிற்றுக்கிழமை காலை 10 – 12 மணிவரை மகாதேவமாலை, அகவல் உள்பட பாராயணம் பயின்றபின் பிள்ளைகளுக்கும், மற்ற அற்றாருக்கும் பாயசம் போன்ற நீராகாரம் மூலமாகப் பசிதீர்க்கப்பட்டு வருகிறது.

4. அன்று வேலூர் மாசிலாமணி முதலியார் இலவச மாணவ இல்லத்தில் வாசிக்கும் பிள்ளைகளில் சிலர் ஒரு முறை விகிதப்படி 6 முதல் 12 பேர் வரையில் வந்து கலந்து கொள்ளுகிறார்கள். மற்றும் அரியூர், செம்பேடு, ஊசூர் கிராமப் பிள்ளைகளில் சிலரும், சில பெரியோர்களும் வந்து கலந்து கொள்ளுகிறார்கள்

## C. விழாக்கள்

1. வருடந்தோறும் திருவருட் பிரகாச வள்ளலாரின் பிறந்த நாள் விழா புரட்டாசி மாதம் சித்திரை நாளிலும்

2. வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்ட தை மாதம் பூசம் நாளில் தை பூச விழாவும்

3 சத்திய தருமச் சாலை நாள் விழா வைகாசி மாதம் 11 நாளிலும் நடைபெறுகின்றன. அச்சமயங்களில் சக்திக் கேற்ப ஓரளவுக்கு அற்றார் அழிபசி தீர்க்கப்பட்டு வருகிறது.

A. முனிசாமி நாயுடு
ஓய்வு பெற்ற ஜில்லா கல்வி அதிகாரி
தலைவர், குப்பம் சன்மார்க்க குருகுலம்.



திருவருட்பிரகாச வள்ளல் பெருமான் திருக்காப்பிட்டுக் கொண்ட
சித்திவளாகத் திருமாளிகை

# அருட்பெருஞ்ஜோதி !

என். எஸ். சிதம்பரம்

இராகம் : சிம்மேந்திரமத்திமம். தாளம் : ஆதி

பல்லவி

இராமலிங்க குருவே ! சரணம் !
இன்பக் கருணைத் திருவே ! சரணம் ! ...(இ)

அநுபல்லவி

காமக் கருங்கடல் கடந்தமெய்ந் நிலையே !
கற்பூர மணசுகம் கமழ்பெருங் கலையே ! ...(இ)

சரணம்

சாந்தமே பொங்கிடும் சற்குண நிறையே !
சன்மார்க்க நெறி சாற்றிய இறையே !
காந்தமே அருட்பா மலர்ந்த வேந்தே !
கனிச்சுவை அமுதமே! காட்சிதந்தாள்வாய் !...(இ)

○

துள்ளலை விட்டு ஞானச்
சுடர்தரு மன்றி லாடும்
வள்ளலைக் கண்டேன் என்றும்
மரணமில் பெருவாழ் வெய்த
கள்ளமில் அருட்சன் மார்க்கம்
காண, வம் மினென்றும் சொன்ன
வள்ளலாம் இராமலிங்க
மாமணி யே ! ஆள் வாயே !

சாதிகள் சாத்தி ரங்கள்
சடங்குகள் கோத்தி ரங்கள்
வீதிகள் மதங்கள் பேதம்
விளைத்திடும் அநேக கோடி
சேதிகள் யாவும் பொய்யே,
தெளிகுவீர் என்றுரைத்த
சோதிநல் இராம லிங்கத்
தூமணி யே ! ஆள் வாயே !

என்னுயிர் இரக்கம் என்றும்
இந்தமண் ணுலகமீதில்
மன்னுயிர் படுந்துன் பத்தை
மனத்தினுல் கண்ணி னுல்நான்
உன்னுதல் செய்யப் பார்க்க
ஒருகணம் சகியேன் என்றும்
சொன்னமெய் இராம லிங்கச்
சுடர்மணி யே! ஆள் வாயே!

ஆருயிர்க் கெல்லாம் அன்பே
ஆற்றிட வேண்டு மென்றும்
பாருயிர் அனைத்தும் ஞானப்
பதியுடைச் சபையே யென்றும்
சீருயர் ஆன்ம நேயம்
செழித்திட வென்றும் சொன்ன
ஏருயர் இராம லிங்க
இறைமணி யே! ஆள் வாயே!

சத்திய ஞான சுத்த
சமரசப் பெருஞ்சன் மார்க்க
நித்திய சங்கங் கண்ட
நிறை குணக் கடலே! தெய்வ
சித்திகள் யாவும் பெற்றுச்
செகத்துயிர் வாட்டம் தீர்த்த
வித்தக இராம லிங்க
வியன்மணி யே! ஆள் வாயே!

○

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

இனி யார் பாடுவார்? இராமலிங்கம் போலவே
இருட்சாதிவேற்றுமைகள் எங்கெங்கும் தீரவே-(இ)

அநுபல்லவி

கனிபோலும் தமிழில் கருத்தும் இனித்திடவே
கருணை யருட்சோதிக் கடவுளை நினைத்திடவே –(இ)

சரணம்

வன் மரணப் பாவி வந்திடுவான் என்றே
வளந்தரும் சன்மார்க்க வழிசார்வீர் என்றே
இன்ப அருள் வாழ்வில் எவ்வுயிரும் தழைக்க
இணையில்லா ஞான இயல்பினிலே செழிக்க –(இ)

அகஇருள் களைந்திடும் அருட்பெருஞ் ஜோதி!
சுகமணம் பரப்பிடும் சுகிர்தநல் ஜோதி!

ஆணவ மலந்தவீர் அருட்பெருஞ் ஜோதி!
வீணவ மாயையை விலக்கிடுஞ் ஜோதி!

இன்பமெய் விளக்கென இலங்கிடுஞ் ஜோதி!
அன்புறு நெஞ்சொளிர் அருட்பெருஞ் ஜோதி!

ஈறிலாப் பதந்தரும் இதமுறு ஜோதி!
மாறிலாச் சத்திய மார்க்கமாம் ஜோதி!

உலப்பிலா ஒன்றென உலவிடும் ஜோதி!
கலப்பிலா ஞானமெய்க் காட்சியாம் ஜோதி!

ஊக்கமும் ஆக்கமும் உதவிடும் ஜோதி!
ஆக்கையின் பயன்தரும் அருட்பெருஞ் ஜோதி!

எண்ணிய வண்ணமே இனிதருள் ஜோதி!
புண்ணியப் பொற்சபை பொலிந்திடும் ஜோதி!

ஏதமற் றவர்தமை ஏந்திடும் ஜோதி!
ஆதர வாகிய அருட்பெருஞ் ஜோதி!

ஐயமற் றவர்தமை அணுகிடும் ஜோதி!
வையமேல் சமரசம் வழங்கிடும் ஜோதி!

ஒருமையின் பரட்டினை உரைத்திடும் ஜோதி!
கருணையின் வடிவெனக் கனிந்திடும் ஜோதி!

ஓங்கிடு பாவெளி உற்றிடும் ஜோதி!
பாங்குடன் வானிடைப் பரவிடும் ஜோதி!

ஔவியம் அற்றவர் அறிவொளிர் ஜோதி!
கவ்விடு வினைகளைக் கடிந்திடும் ஜோதி!

அனைத்துயிரும் சிவம் ஒளிரும்
அரியபெருஞ் சிற்சபையாய்
நினைத்திடுமோர் நெஞ்சினுள்ளே
நிறையும் அருட் பெருஞ்ஜோதி!
வினைப்பகைமைத் திரைவிலக்கி
வெய்யவினை யிருள்கருக்கிச்
சுனையருவி மலைவிளங்கும்
சுயஞ்ஜோதி போற்றுவமே!

ஆனமத பேதமற்ற
அருளிடத்தே மலர்ஜோதி!
நானெனுமோர் அகந்தையற்ற
நல்லுளத்தே வளர்ஜோதி!

வானமுத மதிப்பாலின்
மண்டலத்தே மிளிர்ஜோதி !
ஞானமணி மன்ருடும்
நடுஜோதி போற்றுவமே !

இங்குமங்கும் எங்குமுறும்
இராமலிங்கர் பகர்ஜோதி !
தங்கமெனக் குணஞ்சாரும்
சன்மார்க்கப் பெருஞ்ஜோதி !
துங்கமுறு சங்கமதில்
துலங்குமொரு சிவஜோதி !
திங்களென்றும் கதிரென்றும்
திகழ்ஜோதி போற்றுவமே !

ஈனமனக் குரங்கடங்க
இயம்புகின்ற குருஜோதி !
மோனமுழு முதற்பொருளாய்
முகிழ்க்கின்ற வளஜோதி !
தேனமுதாய்த் தீங்கரும்பாய்த்
தித்திக்கும் சுகஜோதி !
ஊனமிலா ஒளிகாட்டும்
உயர்ஜோதி போற்றுவமே !

உயிரையெலாம் சிவவடிவாய்
உன்னிடவே செயுஞ்ஜோதி !
பயிரையெலாம் சன்மார்க்கப்
பயிராக்கும் தயைஜோதி !
துயரையெலாம் போக்கிஉயிர்த்
துணையாக வரும்ஜோதி !
உயரமலை உச்சியுறும்
ஒருஜோதி போற்றுவமே !

ஊட்டுவிக்கும் தயைபடைத்த
ஒப்பில்லாத் திருஜோதி !
ஆட்டுவித்தே சீவர்களை
ஆளுகின்ற அருள்ஜோதி !
காட்டுவித்தே இறவாத
கதிகூட்டும் கலைஜோதி !
பாட்டுவிக்கும் கனகசபைப்
பதிஜோதி போற்றுவமே !

எத்துணையும் பேதமுரு
இதயமதில் உறைஜோதி !
சித்துருவாய்ச் சமரசமாய்ச்
செறிந்திலங்கும் நிறைஜோதி !

சத்தியநற் சபைவிளக்கம்
சாற்றுகின்ற அறஜோதி!
நித்தியமாய் நிர்மலமாய்
நிறைஜோதி போற்றுவமே!

ஏதமின்றித் துரியவெளி
இயங்குமொரு சுடர்ஜோதி!
நீதமுடன் நல்லான்ம
நேயமதைத் தருஞ்ஜோதி!
நாதமுடன் ஆடுமொரு
நடராஜப் பரஞ்ஜோதி!
ஆதிசிவப் பொருள்காட்டும்
அருள்ஜோதி போற்றுவமே!

ஐயமச்சப் பிணிகளெலாம்
அறநீக்கும் அணிஜோதி!
வையமிசை மேலேற்றும்
வான்கருணை மணிஜோதி!
மையமெனும் புருவமத்தி
வயங்குமொரு கனல்ஜோதி!
மையெழுந்த மனங்காணு
மதிஜோதி போற்றுவமே!

ஒருமையுடன் நினைப்போரை
உறவாக்கும் புகழ்ஜோதி!
இருமைக்கும் இரங்குகின்ற
இன்பவடி வுறுஞ்ஜோதி!
அருமையினும் அருமையென
அமைந்தமண அருள்ஜோதி!
தருமமுறு சன்மார்க்கத்
தனிஜோதி போற்றுவமே!

ஓடுகின்ற நாள்காட்டி
உணர்த்துமொரு நெறிஜோதி!
கூடுவிட்டால் எங்கே நீர்
குடியிருப்பீர் எனும்ஜோதி!
தேடுகின்ற அன்புருவாம்
சிவங்கூட்டும் கதிர்ஜோதி!
ஆடுகின்ற அம்பலத்தே
அமைஜோதி போற்றுவமே!

○

இராகம் : திலங். தாளம் : ஆதி.

பல்லவி

ஜோதியைப் பாடிய வள்ளலைப் பாடியே
சுகிர்தம் அடைவீர் உலகீர்! அருட்பெருஞ்
...(ஜோ)

அநுபல்லவி

ஆதியைப் பாடிய அறிவொளிர் மேதையை
அருள்வடலூர்ப்பதி அமர்ந்திடும் தாதையை
...(ஜோ)

சரணம்

அமிழ்தநல் மழையென அருட்பா பொழிந்த
அன்பெனும் அண்ணலை அருங்குண மணியினைத்
தமிழ்ப்பெரும் நாட்டின் தவமாய் உதித்த
தருவினைக் கருணைத் திருவினை நாளும் ...(ஜோ)

உள்ளம் உருகச் செய்யும்!
ஊனும் இனிக்கச் செய்யும்!
கள்ளம் கருகச் செய்யும்!—கிளியே,
கனிதமிழ் அருட்பா காண்போம்!

இன்பத் தமிழில் நல்ல
இனிய அருட்பா தந்த
அன்பொளிர் இராமலிங்கம்—கிளியே,
அவர் உரை மேவி வாழ்வோம்!

ஞான வடலூர் தன்னை
நாடி நாமும் சென்றே
ஆனந்தம் பொங்கிடவே—கிளியே,
அருள்ஜோதி கண்டிடுவோம்!

மனத்திரை யகற்றி மிக்க
மாண்போங்கும் சன்மார்க்க
இனத்துடன் கூடிப் பாடிக்—கிளியே
என்றென்றும் மகிழ்ந்திடுவோம்!

இருள்நெறி அகன்றே எங்கும்
இன்பது தழைத்து ஞான
அருள்நெறி பயின்று மக்கள்
அன்பினில் ஓங்க ஜோதிப்
பொருள்நெறி இசைத்த தெய்வப்
புண்ணிய இராம லிங்கர்
தெருளுடன் அளித்த பாவைச்
சீருடன் தெளிந்தே உய்வோம்!

இராகம் : கேதாரகௌள.  தாளம் : ஆதி.

பல்லவி

சன்மார்க்கத் தந்தையைப் போற்றுவோம் !-ஞான
சமரசப் பயிர்வளர்த்த இராமலிங்க வள்ளலாம்
...(ச)

அநுபல்லவி

துன்மார்க்கம் யாவும் தொலைந்தேகச் செய்யும்
தூயநற் சங்கமாம் சற்சங்கம் நிறுவிய ....(ச)

சரணம்

கண்மூடி வழக்கம் மண்மூடிப் போகவும்
கலையுரைத்த கற்பனை நிலைபெருதேகவும்
பண்மேவும் தமிழ்மணம் பாரெங்கும் வீசவும்
பல்லுயிர்கள் வாழவும் நல்லுரை செய்திட்ட....(ச)

○

இராகம் : மணிரங்கு.  தாளம் : ஆதி

பல்லவி

ஆன்ம நேய ஒருமைப் பாடாய்
அவனி மிசையே வாழ்வோம் ! நாளும்...(ஆ)

அநுபல்லவி

பான்மையுடனே வடலூர் வள்ளல்
பகர்ந்த உண்மைப் படியே தூய ...(ஆ)

சரணம்

ஆருயிர்க் கெல்லாம் அன்பே புரிந்து
ஆண்டவன் செயலாய் அனைத்தையும் தெரிந்து
சீருயர் சமரசச் செந்நெறி கண்டு
சீவநல் இரக்கமும் சிந்தையில் கொண்டு...(ஆ)

○

# ஜோதி இராமலிங்கர்

பூவண்ணன்

பாடப் பாட வாய்ம ணக்கும்
பாடல் தந்தவர்—அருட்
பாடல் தந்தவர்
வாட வாடப் பயிரைக் கண்டு
வாடி நொந்தவர்—மனம்
வாடி நொந்தவர்
தேடத் தேடக் கிடைத்தி டாத
செல்வம் போன்றவர்—பெருஞ்
செல்வம் போன்றவர்
ஈடிலாத எங்கள் வள்ளல்
இராம லிங்கரே—ஜோதி
இராம லிங்கரே

எந்த மதமும் சொந்த மதமே
என்று சொன்னவர்—உண்மை
கண்டு சொன்னவர்
கந்த கோட்ட நாத னுக்குச்
சிந்தை தந்தவர்—தம்
சிந்தை தந்தவர்
வந்த வினைகள் விலகி ஓட
வழிகள் கண்டவர்—பல
வழிகள் கண்டவர்
இந்தி யாவின் சமய ஜோதி
இராம லிங்கரே—ஜோதி
இராம லிங்கரே.

—○—

# உலக சமுதாயம்

—தேவிதாசன்

1. மண்ணுல கச்சுக வாழ்வினைக் காண
விண்ணுல கச்சுவை வேள்வியைக் காணப்
பண்ணுடன் நல்லயப் பாட்டிசைந் தாற்போல்
நண்ணுதல் வேண்டுமே நல்லுளத் தன்பே!

2. சாதியும் அற்றது சார்சம யத்தின்
பீதியும் அற்றது பேயெனுங் கட்சிச்
சேதியும் அற்றது சிந்தையில் வாழும்
சோதியைக் கண்டது தூயுளத் தன்பே!

3. அத்தகு மாட்சியாம் அன்பினைப் போற்றல்
அத்தகு போற்றியில் ஆருயிர் பேணல்
அத்தகு பேணலில் அய்யனைக் காணல்
அத்தகு காட்சியை ஆசையில் விட்டோம்!

4. நேர்மையி லாச்செயல் நிந்தனை கொண்டோம்
கூர்மையி லாமதி கொண்டறம் கொன்றோம்
பேர்மையற் பட்டுழற் பித்தராய் அன்புச்
சீர்மையில் வாழ்தலைத் தேட,ம றந்தோம்!

5. கோயிலைப் பூட்டிய கோட்டையைப் போலே
வாயிலைப் பூட்டிட வந்தவர் நிற்கத்
தீயினைப் போல்மொழி செப்புதல் கொண்டோம்
ஆயிரம் தீவினை அள்ளிட வீழ்ந்தோம்!

6. மானிட ரானநம் வாழ்க்கையின் பாங்கு
தேனடை பிய்த்திடும் தேர்ச்சியில் உண்டு
கானிடை வாழ்விலங் காய்ப்புவி வாழ
ஊனுடல் காப்பதோ, ஒப்புர வற்றே?

7. இல்லறம் மன்பதை இன்னரும் நாடு
வல்லமை பேசிடும் வையகம் யாவும்
சில்லறை யாகவே சீர்குலைந் தன்பின்
நல்லறம் விட்டன, நாரதச் சொல்லால்!

8. பஞ்சமுற் றேவளம் பாழடைந் தாலும்
நெஞ்சுரம் அற்றதால் நேர்பயத் தாலும்
தஞ்சமாய் மற்றவர் தாள்பணிந் தாலும்
அஞ்சிட வைப்பதோ, ஆர்த்தெழும் போரால்?

9. இந்நிலை நீள்வதால் எங்கிலும் அச்சம்
அந்நியன் நம்மவன் அப்பிரி வெண்ணம்
இந்நிகழ் வேளையில் ஏற்படல் தீமை
எந்நிலை வந்திடின் ஏவரும் ஒன்றே !

10. வெண்ணிற மேனியன் வேலியைக் காப்போன்
கண்ணிய வாணிகன் கைத்தொழி லாளன்
கண்ணிறை ஓவியன் காவியம் செய்வோன்
பண்ணிசைப் பாடகன் பாரினில் ஒன்றே!

11. யாவரும் தம்தொழில் ஆற்றலி னாலே
பாவமும் புண்ணியப் பாணியில் வேறாய்ச்
சீவனம் செய்வது தேவியின் கூற்றோ ?
கூவமும் கங்கையாய்க் கோலமு றாதோ ?

12. சீருயர் இந்திய திக்விஜ யத்தால்
ஆருயிர்த் தோழராய் ஆர்வமும் மேவப்
பாருயர் நாட்டவர் பாரதத் திட்டம்
சேருயர் தொண்டினைச் செய்யவும் உள்ளார் !

13. மக்களின் வேற்றுமை மாய்த்திட ஏழை
மக்களின் வீட்டினில் வாழ்வொளி யேற்றத்
தக்கதோர் நற்சம தர்மமாம் கொள்கை
மிக்கவர் செய்கையில் வெற்றியே திண்ணம் !

14. சத்திய வள்ளலார் சாற்றிய தஃதே
அத்திரு வாட்சியை ஆக்கிடக் கொஞ்சம்
பத்தியம் போல்மனப் பக்குவங் கொள்ள
நித்தியம் ஏற்படும் நிம்மதி தானே !

15. அவ்வுல கச்சமு தாயமே கண்டால்
கவ்வுதல் ஏதினிக் காப்பதும் ஏது ?
எவ்வுயி ரும்புவி எங்கிலும் இன்பம்
துவ்வுதல் உண்மையே சோதரர் என்றே !



- தங்கள் கட்டிடங்களுக்கு -

- உறுதியான செங்கல் -

- எம்மிடம் கிடைக்கும் -

# சோதி செங்கல் வாணிபம்

தொடர் சூளை செங்கல் உற்பத்தியாளர்கள்

கரும்புத்தூர் அஞ்சல்

வேலூர்

இ. வெ. மூர்த்தி,
தலைமைக் கணக்கர்,
கூட்டுறவு மத்திய பாங்கி,
வேலூர்












தயாரிப்பாளர்கள்

சோடா மிஷின்களும்
உறுப்புக்களும்
மெட்ரிக் எடை கற்கள்
(இரும்பு & பித்தளை)
எங்கள் தயாரிப்பில்
"SIW"
என்ற குறிப்பீடு விளங்கும்.

A Pioneer in the Manufacture of :
**AERATED WATER MACHINES**
and Parts and a leading Manufactures of
**METRIC WEIGHTS**
**in Cast Iron & Brass**
**Our products carry the**
**hall Mark of quality**
**"SIW"**
R. Ramakrishna Mudaliar

Phone No. 671

# Service Industrial Works

BRANCH
278, WALLTAX ROAD
**MADRAS-3**

HEAD QUARTERS
33/2, KATPADI ROAD
**VELLORE (N.A.)**


Printed at PAJVASS PRINTER, Madras-2 Phone: 82576